


# காந்திமாஸ்டர் 19.12.92 வைரவிழாமலர்

370
கந்தை
SLPR

T/ Sri Ganesha Press

ஓம்

# திரு. பொ. கந்தையா

(காந்தி மாஸ்டர்)

அவர்களின்

# 75வது பிறந்த தின

# வைர விழா

# மலர்

**19-12-1992**

தொகுப்பாசிரியர்


கலைவிருதன், கலாவிநோதன்

**த. அமரசிங்கம்**



வெளியீடு

சாந்தி மாஸ்டர் வைரவிழா மலர்

11, சாரதா வீதி,

திருக்கோணமலை.

ஓம்

## திரு. பொ. கந்தையா

(காந்தி மாஸ்டர்)

அவர்களின்

# 75வது பிறந்த தின

# வைர விழா

இடம்:-

ஸ்ரீ சண்முகவித்தியாலய மண்டபம், திருக்கோணமலை

காலம்:-

19-12-92 சனிக்கிழமை மாலை 3.00 மணி.

தலைமை:-

ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தாஜீ

தலைவர் இராமகிருஷ்ண, மிஷன்கொழும்பு.

ஓம்

# நிகழ்ச்சி நிரல்

**மாலை 3.00** ஆலயவழிபாடு

ஆலடிப் பிள்ளையார் கோயில், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில் தொடர்ந்து கோவிலிலிருந்து விழா மண்டபத்திற்கு அழைத்து வருதல்.

3.30 மங்கள விளக்கேற்றல்

ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா.
அருட்செல்வி மாரி புளோறன்ஸ்.
(தலைவி-புனிதவளனார் கன்னியார் மடம்
பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்.
ஸ்ரீலஸ்ரீ மு. சுந்தரலிங்க தேசிகர்.
தொண்டர் இ. சண்முகராசா.
திரு. மு. கோ. செல்வராசா.
திருமதி. கந்தையா இராசநாயகி.

1. இறை வணக்கம்

தஷிணகான சபா மாணவிகள்.

2. வரவேற்புரை:-

திரு. நாகலிங்கம் புவனேந்திரன்.
மேலதிக அரசாங்க அதிபர், திருக்கோணமலை.

3. தலைமையுரை

4. கவிதை - திரு. தாபி. சுப்பிரமணியம்

5. கதர் ஆடை போர்த்தலும் பொற்கிழி வழங்கலும்

சுவாமி ஆத்மகனானந்தாஜீ.

வைரவிழா மலர் சமர்ப்பணம்

மலராசிரியர் திரு. த. அமரசிங்கம்.

7. மலர் வெளியீடு - ஆய்வுரை

சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேல்

8. முதல் பிரதி பெறுபவர்

திரு. சு. நவரத்தினம்

9. பாராட்டுரைகள்

(அ) திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை.
(ஆ) சிவயோக சமாஜம்.
(இ) ஸ்ரீ முருகன் தொண்டர் சபை.
(ஈ) ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி.
(உ) ஸ்ரீ இராமகிருஷ்ண சேவா சங்கம்.
(ஊ) ஸ்ரீ சண்முக மாணவர் இல்லம்.
(எ) அன்பு இல்லம்.
(ஏ) சிவானந்த தபோவன இல்லம்.

01. இசை மழை

பாட்டு

இசைக்கலைமணி

திருமதி. சத்யராணி - ஆனந்தபிரசாத்

வயலின்

இசைக் கலா வித்தகர்

திருமதி. தேவிகாராணி - முருகுப்பிள்ளை

உதவிக் கல்விப்பணிப்பாளர் - சங்கீதம்

மிருதங்கம்

மிருதங்க கலா வித்தகர்

திருமலை எஸ். காண்டீபன். BSC

11. சிறப்புரைகள்

(அ) அருட்செல்வி திரேஸ்ராணி.

(ஆ) சுவாமி தந்திரதேவா

(இ) தமிழ்மணி திருமதி. பாலேஸ்வரி நல்லரெத்னசிங்கம்.

(ஈ) திரு. நாகராஜா கணபதிப்பிள்ளை.

(உ) ஜனாப் O. L. M. இஸ்மயில்.

(ஊ) திரு. துரைசிங்கம் குலவீரசிங்கம்.

(எ) திரு. தம்பிமுத்து அமரசிங்கம்.

(ஏ) திரு. காங்கேசன் விநாயகசோதி.

(ஐ) அருட் திரு. பயஸ் பத்மராஜா.

(ஒ) தமிழ்மணி திரு. இராசையா நாகலிங்கம் (அன்புமணி)

(ஓ) திரு. சி. க. வேலாயுதபிள்ளை.

(தலைவர், அகில இலங்கை காந்தி சேவா சங்கம்)

12. காந்தி ஐயாவின் ஆனந்த உரை

13. நன்றியுரை:- திரு. சு. நவரத்தினம்

14. இறைவணக்கம்.

நன்றி

வைர விழாக் குழுவினர்

சு. நவரெத்தினம், நா. கணபதிப்பிள்ளை, க. விநாயகசோதி

நா. புவனேந்திரன், த. அமரசிங்கம்.

11, சாரதா வீதி, திருக்கோணமலை.

# ஸ்ரீ சண்முக மாணவர் இல்ல

## வரவேற்புப்பா

இராகம்: மோகனம்

தாளம்: ஆதி

1. சத்தியத்தின் சோதனையால் சாதிமத பேதமின்றிப்
பக்தியுடன் பணிபுரியும் உத்தமரே காந்திஐயா
உத்தமியாம் இராச நாயகியும் முருகனுடன்
எத்திசையும் புகழ்விளங்க இன்பமுடன் வருகஐயா

2. காவியுடையின்றிக் கதருடையே அணிந்து என்றும்
காலில் செருப்பின்றி கைப்பையே கமண்டலமாய்
பாவிக்கும் ஏழைக்கும் பண்புடைய பெரியோர்க்கும்
சேவிக்கும் தவக்கோலச் செம்மலே வருகஐயா

அன்புடனே கைகூப்பி ஆனந்தம் என்று பிறர்
துன்பம் துடைப்பதற்குத் துடியாய்த் துடித்தென்றும்
பண்போடும் பணிவோடும் பரிவோடும் பணிபுரிந்து
இன்ப முறும் கர்மயோகி வருக வருக வாழ்கவே

(ஆர் வி)


ஓம்

# காந்தி ஐயாவின் அன்னை



திருமதி. பொன்னையா நன்னிப்பிள்ளை

கோணேசர் ஆலயம்




ஓம்

Kumarasamy Somasundaram
President
Colombo Tamil Sangam,
7, 57th Lane, Colombo - 06.
Telephone No:- 2363759

காந்தி மாஸ்டர் குடும்பம்



... ர்காமநாதன், (முருகன்) காந்தி மாஸ்டர், மனைவி இராசநாயகி.



ENQUIRE "WHO AM I"! KNOW THE SELF!!! AND BE FREE!!!

# The Yoga Vedanta Forest University

ANANDA KUTIR. RISHIKESH (INDIA) HIMALAYAS.

Tat Twam Asi

WHEREAS, by the Grace of God, the Fountain of Eternal Bliss, and by The Will of the Almighty, it has been recognised that Sri P. Kandiah, TRINCOMALEE is worthy of being awarded The sacred title of Sraddha Ratna in appreciation of Meritorious services rendered in the field of Nishkamya Seva and A firm devotion to Truth, Love and Purity I hereby make this award In token of such recognition, with my best wishes and devout prayers To the Lord to bless the recipient hereof with health, long life, peace, prosperity Eternal Bliss, success in all undertakings, Vidya, Tushti, Pushti and Divine Aiswarya

This 8th day of February 1955.

Chancellor

# காந்தி மாஸ்டர் வைரவிழா மலர் 19-12-92


01. குடியிருந்த கோயில் (தாயின் படம்)
02. கோணேசர் கோவில் படம்
03. காந்தி மாஸ்டர் குடும்பம்
04. பொருளடக்கம்
05. ஏன் இந்த மலர் மலர் ஆசிரியர்
06. ஆசியுரை சுவாமி ஜெகதீஸ்வரானந்தா
07. ,, சுவாமி தந்திரதேவா
08. ,, சுவாமி ஓங்காரானந்தா
09. ,, வண. பிதா. ந. ஸ்ரான்லி ஜெயராஜ்
10. ,, திரு. மு. கோ. செல்வராசா
11. ,, கலாநிதி. A. T. ஆரியரெட்ன
12. ,, சிவஸ்ரீ. சோ. ரவிச்சந்திரகுருக்கள்
13. ,, சிவஸ்ரீ. மு. சுந்தரலிங்கதேசிகர்
14. , இ. சண்முகராசா
15. ,' தங்கம்மா அப்பாக்குட்டி J. P
16. ,, ஜனாப். உ. மு. இஸ்மாயில்
17. ,, து. குலவீரசிங்கம்
18. ,, வண. பிதா. பத்மராஜ்
19. ,, கனகராஜா J.P

கட்டுரை கவிதை

20. கண்ணார நான் கண்ட காந்தி
பண்டிதர் அ. ஆறுமுகம்
21. இலட்சிய வாழ்வு
திரு. பொ. கந்தையா
22. காந்தி மாஸ்டரின் பலதோற்றங்கள் (படங்கள்)
23. நடமாடும் வாசிகசாலை
திருமதி. பா. நல்லரெட்டினசிங்கம்
24. திருமணவிழாவில் தலைமையுரை
பண்டிதர் கா. பொ. இரத்தினம்
25. நல்ல சமுதாயம்
திரு. பொ. கந்தையா
26. காந்தி ஆசிரியர் எளிதில் மறக்கமுடியாதவர்
தொல்புரக்கிழார் தமிழ்மணி
நா. சிவபாதசுந்தரனார்

27. நான் கண்ட காந்தி மாஸ்டர்
சுழிபுரம் சிவத்தமிழ்மணி பண்டிதை
பொன். பாக்கியம்
28. மத மாற்றம்
திரு. பொ. கந்தையா
29. காந்தி உபாத்தியாயர்
திரு. R. கந்தையா B. A.
30. காந்தி ஐயா
திரு. நாகராஜா கணபதிப்பிள்ளை
31. நான் கண்ட காந்தி மாஸ்டர்
வீணை வேந்தன்
32. வையத்துள் வாழ்வாங்கு வாழும் உத்தமர்
பண்டிதர் - அ. சரவணமுத்து
33. கதிர்காமம் கால்நடை
திரு. பொ. கந்தையா
34. காந்தி மாஸ்டர்
திரு. வே. நா. சிவராசா
35. எனது சிந்தனையில் ஐயா அவர்கள்
பண்டிதர் வ. கதிரித்தம்பி
36. ஆனந்தம் காந்தி ஐயா
திரு. வ. பு. ஸிப்பிரியான் பெர்னான்டோ
37. திரு. பொன் அம்பலம் கந்தையா
திரு. சு. நவரத்தினம்
38. தொண்டனுக்குத் தொண்டன்
திரு. கா. விநாயகசோதி
39. வீடும் நாடும் அன்னையரிடத்தில்
திரு. பொ. கந்தையா
40. காணுவான்
தாமரைத்தீவான்
41. செவ்வி கர்மஜோகி
பண்டிதர் இ. வடிவேல்
42. கந்தையா ஆசிரியன் கண்டவொரு வாழ்வு முறை
அமரர் அண்ணாவி தில்லையம்பலம் (சங்கீத) மாஸ்டர்
43. தற்கொண்டார்
திருமதி கந்தையா இராசநாயகி
44. ஒளவையார் அருளிய ஆத்திசூடி

45. காந்திய வழியில் நின்ற காந்தி மாஸ்டர்
ஆத்மஜோதி நா. முத்தையா

46. ஆனந்தம் ஆனந்தம் ஐயா வணக்கம்
திரு. எம் தேவன்

47. யாரால் முடியும் இந்தச் செயல்
திரு. கணபதிப்பிள்ளை

48. சமூக சேவையாளர் காந்தி ஐயா
திரு. செல்லப்பா சிவபாதசுந்தரம்

49. காந்தி ஐயா
திரு. சி. க. வேலாயுதபிள்ளை

50. உள்ளத்தால் பொய்யாத ஐயா
திரு. அ. சிவலோகநாதன்

51. எனது ஆசிரியன்
திரு. நா. புவனேந்திரன்

52. பொருள் வழங்கிய உள்ளங்கள்

53. நன்றி



அட்டைப்படம் திரு நாகராஜா கணபதிப்பிள்ளை

# ஏன் இந்த மலர்

''வையத்துள் வாழ்வாங்கு வாழுவதன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

ஒருவன் தன் வாழ்க்கை முறையினால் தன்னை உயர்த்திக் கொள்ளவும் முடியும் தாழ்த்திக் கொள்ளவும் முடியும். வசதிபடைத்தவனால் தான் உயர்ந்த வாழ்க்கையும், வசதி அற்றவனால் தாழ்ந்த வாழ்க்கையும் தான் வாழ முடியும் என்பதல்ல. வசதி படைத்தவனால் உயர்ந்த வாழ்க்கை வாழ முடியாமலும், வசதியற்றவனால் தாழ்ந்த வாழ்க்கைதான் வாழவேண்டும் என்பதல்ல என்பதற்கான பல சான்றுகள் உண்டு. அதில் ஒன்று தான் காந்தி மாஸ்டர்.

வசதி என்பது பணம்தான் என்பது பலர் அபிப்பிராயம். ஆனால் வசதி என்பது மனம் என்பதுதான் அடியேனின் கருத்து. உயர்ந்த வாழ்க்கை (வாழ்வு) என்பது; கார், பங்களா, ஆடை, ஆபரணம் என்பது தான் இன்றைய பொருள். அது அல்ல. நிறைந்த உள்ளம், போதும் என்ற மனம், எல்லோரும் இன்புற்றிருத்தல் என்ற எண்ணம், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நோக்கு.

''உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வைரமுடைய நெஞ்சு வேண்டும் - இது
வாழும் முறமையடி பாப்பா''

என்ற பாரதியாரின் சிந்தனைக்கு ஒப்பான மன உணர்வே உயர்ந்த வாழ்வு.

எனவேதான் உயர்ந்த வாழ்வு வாழ்ந்த - வாழும் உத்தமர்களை ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டும் என்பது எமது ஆசை.

காசு பணமின்றி, கார் பங்களா இன்றி உயர்ந்த வாழ்வு வாழவேண்டுமானால் அது சாத்தியப்படக்கூடிய விசயமல்ல. அப்படி வாழமுடியுமா? அதுக்கென்று பிறக்க வேண்டும் ..........? என்ற பெருமூச்சொலி எழுவதை உணரமுடிகின்றது.

ஒரு காந்தி, ஒரு இயேசு, ஒரு புத்தர், ஒரு முகம்மது நபி இவர்களால் தான் வாழ முடியும் என்று வாதிடலாம். அவர்களால் மட்டுமல்ல எல்லோரும் வாழலாம். எப்போதும் வாழலாம் எங்கும் வாழலாம் என்று, எமது காலத்திலேயே, எம்மோடு வாழ்ந்து கொண்டு ஒரு சரித்திரத்திரத்தையே படைத்துக் கொண்டிருப்பவர்தான் காந்தி மாஸ்டர்.

ஆடைக்குள் தன் உடல் மறைத்து, அழுக்கனைத்தும் தன் உள்ளத்துள் மறைத்து, நிலத்தில் கால் படாமல் வலம் வந்து, பஞ்சமா பாதங்களை அஞ்சாமல் செய்து, பக்தி என்ற போர்வையிலே சத்தியத்தைக் கொன்று, உத்தமன் என்ற பேரிலே உ............ மலிந்த இந்தக் காலத்தில் கூட.........

எட்டு முழத்துண்டை இரண்டாக்கித் தன் உடம்பை மட்டும் மறைத்து - திறந்த உள்ளத்தோடு, மண்ணில் கால் படிய, கொட்டும் மழையென்ன, கொதிக்கும் வெய்யிலென்ன, கையில் குடையோடு பையில் பல நூல்கள் சுமந்து, கோவிலெங்கும் தான் இருந்து, விற்றும், கடன் கொடுத்தும் வீடெல்லாம் நூல் பரப்பி, கற்கும் பல பிள்ளைகட்குக் கல்விக்குத் துணை நின்று, இல்லை என்போர்க்கு இல்லை எனாது இருப்பதைத் தான் கொடுத்தும், இருப்பவரிடம் இரந்து கொடுத்தும். நோயுற்றபோது தாயாகி துணையற்றோர்க்குப் பிணையாகி, துயர் உற்றோர்க்குத் துணிவாகித் துன்பம் துடைத்து, 'ஆனந்தம்' 'ஆனந்தம்' என்று எல்லை இல்லா ஆனந்தப் பெருவெள்ளத்தில் தன்னோடு உலகைச் சேர்த்து ஆனந்தம் கூத்தாடும் பித்தன்போல், (அ)வன் செயலால் ஆன பிள்ளைகளின் துயர் துடைக்க இருக்கை கண்டு இரும்பாகக் குணவளித்துத் தந்தையாய், தாயாய், ஆசானாய், ஆனதொண்டுகள் பல செய்து ஆதரித்துப் பராமரித்து, ஆண்டவன்முன் ''எல்லோரும் இன்புற்றிருப்பதல்லால் வேறொன்றறியேன் பராபரமே'' என உளம் உருக வேண்டுதல் செய்து, போதனை சிறிதாக்கிச் சாதனை பல செய்து, சத்தியவானாய், சன்மார்க்கனாய், உத்தமனாய், உயர்ந்தோனாய்,

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்தில் எல்லாம் உளன்''

என்ற வள்ளுவனின் பொய்யா மொழிக்கு இலக்கணமாய், இலக்கியமாய் வாழ்ந்து மலை உச்சியில் ஊற்றெடுக்கும் அருவியானது தான் செல்லும் இடமெல்லாம் செழிப்பாக்கி கங்கையில் வீழ்ந்ததும், தன்னைப் புனிதமாக்கி, தன்னுள் வந்தவர்களையும் புனிதமாக்கிச், செல்வதுபோல்,

மாதகலில் பிறந்து மனிதகுல மேம்பாட்டிற்காக உழைத்து, மகாத்மாகாந்தியின் சத்தியசோதனையில் மூழ்கி, திருக்கோணமலை மண்ணில் கால்வைத்துத் திசையெல்லாம் தொண்டாற்றி, வள்ளுவர் வாசுகி போன்று எளிய இல்லற வாழ்வின் இனிமை கண்டு இன்புற்றிருக்கும் காந்தி ஐயா! உங்களை முழுமையாக யார் உணர்ந்தார்? உங்கள் பெருமையை யாரறிவார்?

ஆனை கண்ட குருடர் போன்ற நாம் தங்களின் முழுமையை நுகரவே இந்த மலர் படைத்தோம் இதை இந்த உலகம் உணரவே இந்த மலர் படைத்தோம்.

இந்த மலர் இன்றைய சமுதாயத்திற்கு மட்டுமல்ல............

ஐயா! தாங்கள் ஏழையாய் பிறந்து எழிய வாழ்க்கையில் வாழ்ந்திருந்தால் அதனால் எந்தப் பெருமையும் தங்களுக்கு இருந்திருக்காது. ஆனால் வசதி படைத்த சராசரி குடும்பத்தில் பிறந்து, வசதியோடு வாழ வழியிருந்தும் அதை வெறுத்து உதறித்தள்ளி, எழிய வாழ்க்கை வாழும் மன உறுதியையும், இலட்சியப் பற்றையும் என்னென்று போற்றுவோம்.

ஐயா, உலகத்தோர் கண்ணில் (ஏன் என் கண்ணில் கூட) நீங்கள் ஒரு பிச்சாந்தேகியாகவே காட்சி தந்தீர்கள். இரந்து கொடுத்து இந்ரது வாழ்வது போல் எங்கள் புறக்கண்ணில் பட்டீர்கள்.

ஒவ்வொரு விசயத்திலும் நாம் எல்லாம் ஆனை கண்ட குருடர்கள் என்பது எவ்வளவு உண்மை. தங்கள் விசயத்திலும் அது பொருத்தம் என்பதை இம்மலரை நுகர்ந்த போதுதான் தெரிந்தது.

தங்களோடு நீணட காலம் பழகியவர்கள், படித்தவர்கள் - உழைத்தவர்கள் - ஆன்றோர்கள் - சான்றோர்கள் ஆகியோரின் படைப்புகளை மலரில் நுகரும் போதுதான் உங்கள் பூரணத்துவம் ஓர் அளவு புரிகின்றது.

ஐயா, உயர்ந்த இலட்சியங்களை உதட்டளவில் கொள்ளாது, உள்ளத்தின் உள்ளே ஆத்மாவோடு இரண்டறக் கலக்க வைத்து அதற்காக எத்தகைய இன்னல்களையும், இடயர்களையும், துன்பங்களையும் சுடு சொற்களையும் தாங்கிக் கொண்டீர்கள். எந்த நிலையிலும் உங்கள் குறிக்கோளுக்குக் குந்தகமில்லாமல் இன்று வரை வாழ்ந்து காட்டியுள்ள பெருமைகளை மலர் மூலம்தான் அறியமுடிந்தது.

இந்த மலர் மூலம் உங்கள் ஒவ்வொரு சேவைகளையும் அறியும் போதுதான், எப்பேர்ப்பட்ட மகானுபவாளை இது நாள் வரை உணராதிருந்தோமே என உள்ளம் வருந்துகின்றது.

ஐயா! உம்மைப் போற்றும் தகுதி எமக்கில்லை.
இருந்தும்............
நீர் வாழ்க! நின் பணி வாழ்க!
நீர் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு வாழ்கவென நல்லோர், வல்லோர் சார்பில் இறைவனை வேண்டுகின்றேன்.
ஐயா! உம்மை உணர்ந்த இம்மலர் வேண்டும்.

எமது இன்றைய சமுதாயத்துக்குமட்டுமல்ல - வருங்கால சமுதாயம் தங்களை அறிவதற்காக மட்டுமல்ல - ஹரிச்சந்திரா நாடகத்தைப் பார்த்த மகாத்மா காந்தியும், சத்திய சோதனை கண்ட தாங்களும் எப்படித் தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டீர்களோ அதே போன்று இம்மலர் மூலமாகப் பல உள்ளங்கள் திருந்த - தங்களுக் கென்று ஒரு இலட்சியப் பாதையை அமைக்க - ஒரு மானசீக குருவை அடைய இம்மலர் உதவும் என்ற நம்பிக்கையிலும்,

''நன்றி ஒருவர்க்குச் செய்தகால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாகலே தான் தருதலால்

என்ற ஒளவையாரின் பாட்டின் பொருள் இம்மலரால் உயிர்பெற வேண்டும் என் றும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி விடைபெறுமுன்,

சத்திய சோதனையின் சாரத்தை தன் வாழ்க்கைத் தத்துவமாக்கிய மகாணின் இம்மலரை நுகரும் உத்தம உள்ளங்கள் இதன் ஒவ்வொரு இதழையும் சத்திய சோனை செய்து நுகர்ந்து அனுபவிக்கும்படி வேண்டுகின்றேன் - நன்றி.


வணக்கம்.


21, ஒளவையார் வீதி,
திருக்கோணமலை.
07-12-1992

கலைவிருதன் - கலாவிநோதன்
த. அமரசிங்கம்.
தொகுப்பாசிரியர்

## காந்தி ஐயாவின் பல தோற்றங்கள்









ஓம்

# சிவயோக சமாஜம்

SIVAYOGA SAMAJAM
Main Street
TRINCOMALEE
Branch:- Sivayogapuram
Kanniya

பிரதான வீதி, திருக்கோணமலை
கிளை:- சிவயோகபுரம்
கன்னியா

— ஒன்றே குலம் ஒருவனே தேவன் —

காந்தி மகான் தனது அன்றாட உலகியல் செயல்களின் மூலம் ஆத்மீக சத்தியத்தை உணர்வதற்காக தனது வாழ்க்கையை தியாகங்கள் நிறைந்ததாக மாற்றி அமைத்ததைப் போல், நாம் அன்புடன் காந்தி ஐயா என்றழைக்கும் திரு. பொன்னம்பலம் கந்தையா அவர்கள், தனது சொந்த சுகங்களையும் சந்தோசங்களையும் புறக்கணித்து தனிப்பட்ட மனிதனுடைய பிரச்சனைகளிலிருந்து சமூகப் பிரச்சனைகள் வரை எதுவித பிரதிபலன்களையும் எதிர்பாராது தீர்த்து வைப்பதற்காக தனது அன்றாட கருமங்களை ஆற்றி வருவதோடு மட்டுமல்லாமல் திருக்கோணமலையில் உள்ள பல கல்வி சமய பொதுநல ஸ்தாபனங்களின் முன்னேற்றத்திற்கும் அயராது தனது பங்களிப்பைச் செய்து வருகின்றார். சிவ யோக சமாஜத்தின் நலன்களில் அக்கரை கொண்டு அதன் பணிகளில் பங்குபற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிறருக்காகவே வாழ்ந்து வரும் காந்தி ஐயாவின் 74 வருடகால பொதுநல சேவைகளை பாராட்டு முகமாக விழா நடந்தேற இருப்பது மிகவும் பொருத்த மானதே. திரு. கந்தையா அவர்கள் மேலும் மேலும் தளராது சேவை செய்ய அவருக்கு எமது குருதேவராகிய சுவாமி கெங்காதரானந்தா மகராஜ் அவர்களின் அருளாசிகளும், பரமேஸ்வரனின் திருஅருள் கடாட்சமும் இருப்பதாக.

சுவாமி ஜெகதீஸ்வரானந்தா

புத்தகக் கடைகளில் கிடைப்பது அருமை. எல்லோராலும் தூர இடங்களிலும், இந்தியாவிலிருந்தும் புத்தகங்களை வரவழைத்து வாசிக்க முடியாது. இந்தக் குறையை நிவர்த்திப்பதற்காகத்தான் அந்தப் பெருந்தகை அவ்வாறு செய்கின்றார். எப்படியான ஆழ்ந்த நோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

அவரைப் போன்ற ஒருவரை ஒப்பிட்டுப் பார்க்கலாமென நெடுநேரமாகச் சிந்தித்தேன். எனக்கு வேறொருவர் தென்படவில்லை. அவருக்கு இணை அவரே தான் என்ற முடிவுக்கு வந்தேன்.

இப்பெரியார் தனது 74 வயது வரை மக்கள் மத்தியில் ஆற்றிய பொதுப் பணிகளுக்காக, நாம் எதைச் செய்தால் இணையாகும். இந்த மலர் வெளியிடுகின்ற சிறிய கைங்கரியத்தையாவது செய்வதற்கு இச்சபையினர் எடுத்துள்ள முயற்சியை நான் மிகவும் பாராட்டுகின்றேன். அதற்காக எனது சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் அவர்களுக்கு நன்றியையும் நல்லாசியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்துக்கள் மத்தியில் ஆன்மீகப் பணி புரியக் கூடிய மக்கள் மிகவும் குறைவு. இக்காரணத்தினால் தான் இந்து சமயத்தவர்கள் பலவிதமான ஏமாற்றங்களுக்கும் ஆளாகின்றார்கள். இதை நான் மட்டும் கூறவில்லை. எல்லோரும் இன்று உணர் கிறார்கள். ஒரு காந்தி மாஸ்ரர் மட்டும் போதுமா? நம் நாட்டில் எத்தனையோ ஆயிரம் புத்த பிக்குமார் புத்த மதத்தை மக்களுக்குப் போதிக்கின்றார்களே. எத்தனையோ 'பாதர்மார்' 'பிறதர்கள்' 'சகோதரிகள்' கிறிஸ்து மதத்தைப் போதிக்கிறார்கள். இந்து மதத்தைப் போதிக்க இலங்கையில் எத்தனை துறவிகள் இருக்கின்றார்கள். சற்றுச் சிந்தியுங்கள். அப்படி இல்லாமலிருப்பதற்குரிய காரணத் தையும் ஆராயுங்கள். ஏதும் குறைபாடிருந்தால் நிவர்த்தி செய்ய முயலுங்கள்.

உங்கள் மத்தியிலும் எத்தனையோ காந்தி மாஸ்ரர் தொண்டர்கள் துறவிகள் தோன்ற வேண்டுமெனப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

உள்ள ஒரு காந்தி மாஸ்ரரும் தன்னுடைய தொண்டை இத்துடன் முடித்துக் கொள்ளாது, நூறு வருடங்களாவது இருந்து இத் தொண்டைச் செய்ய முருகப் பெருமான் அவருக்கு நல்ல உடல் நலத்தையும் நீண்ட ஆயுளையும் எல்லா நலன் களையும் நல்க வேண்டுமென்று மேன்மேலும் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

ஓம் தத் ஸத்

14-10-1992

புதிய கல்லடி
மட்டக்களப்பு

# THE METHODIST CHURCH, SRI LANKA

Rev. N. Stanley Jeyaraj B. Th. B. D. (Seram)
*Minister*
Chaplain Eastern University

அன்பர் காந்தி ஐயாவை கடந்த இருபது ஆண்டுகளாக நான் தெரிந்திருக்கிறேன் என்று கூறுவதிற் பெருமைப்படுகிறேன். இதுவரை எங்கள் இருவரில் சமயம் பற்றிய எந்தவித வேறுபாடும் இருக்கவில்லை. எங்கள் இருவருக்கும் சமயங்களை துதிக்கவும், மதிக்கவும் தெரியும் என்பது உண்மையாய் இருந்தாலும் எமக்கிடையில் 'அன்பு' இருந்த தினால் இவ்வுலகின் பல கட்டுகளுக்கு வேறுபட்டவர்களாக நாம் இருக்கின்றோம்.

ஐயா அவர்களும் அவர் அன்புத் துணைவியாரும், பல வருடங்களாகச் சேவை செய்து வருகிறார்கள். அவர்கள் சேவை இன்னும் வலுப்பெற எல்லாம் வல்ல இறைவன் துணை செய்வாராக.

இவர்கள் இருவரும், அவர்களைத் தெரிந்த யாவருக்கும், நண்பர்களாய், அன்பராய் நல்லாசிரியராய், மந்திரியாய், நல்வழிகாட்டிகளாய் இருந்திருக்கிறார்கள். அவர்கள் சேவையால் நாம் பலனடைகின்றோம்.

வண. ந. ஸ்ரான்லி ஜெயராஜ

19/3, Farm Rd,
Mattakulia,
COLOMBO - 15
23-11-1992

ஓம்

# காந்தி மாஸ்ரர் என்ற
# திரு. பொ. கந்தையா

## வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலையின் வரலாற்றுப் பாதையில் தித்திப்பான செய்தி திரு. பொ. கந்தையா ஆசிரியர் அவர்களுக்கு பாராட்டுச் சிறப்பு மலர் வெளியீடு என்ற செய்தி அம் முயற்சியை பாராட்டுகின்றேன்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்ற வள்ளுவன் கூற்றுக்கு மேலாக மக்கள் மத்தியில் வாழும் போதே மக்களிடம் உறையும் தெய்வமாக காண முயலும் பாங்கினை திரு. கந்தையா அவர்கள் அறியும் போது அவரது தொண்டுள்ளம் சாந்தி பெறும் என்பது திண்ணம்.

காந்தி என்றால் கந்தையா எனவும் ஆனந்தம் என்றால் கந்தையா மாஸ்ரர் எனவும் தனக்கு என்ற ஓர் இடத்தைப் பெற்று விட்டார் காந்தி மாஸ்ரர் அவர்கள். காந்தியடிகள் பிறந்த பொன்னாட்டில் கூட காந்தி மாஸ்ரர் எனப் பெயர் பெற்றவர் எவரும் இல்லை என்று துணிந்து கூறுவே

அத்தகைய சிறப்புப் பெற்றவரை நாம் மனதார பாராட்டத்தான் வேண்டும். நகைச்சுவையுடன் கருத்துக்களை ஆழமாக மக்கள் மத்தியில் பதித்துவிடுவார். நாவினால் சுட்டவடு ஆறாதே என்பதை உணர்ந்து நயம் பட உரைக்கும் நல்லோன் கந்தையா மாஸ்ரர் என்ற வல்லோன். அவர் உயிருடன் உள்ள போதே நன்றி கூறி விழாக்களை முயலவேண்டும் என்ற செயற்பாட்டை வெளிப்படுத்தும் பெருமைக்குரிய வெளியீட்டாளர்களை பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன். நன்றி கூறுகின்றேன்.

சட்டத்தரணியும் நொத்தாரிசும்
அகில இலங்கை சமாதான நீதவான்
திருகோணமலை.
23-11-92

**மு. கோ. செல்வராசா**
தலைவர், திருக்கோணேச ஆலய
பரிபாலன சபை.

**LANKA JATHIKA SARVODAYA SANGAMAYA (Inc.)**

SARVODAYA CENTRAL OFFICE:
98, Rawatawatte Road, Moratuwa, Sri Lanka Telephone 507159, 505255, 507194
FAX: 94-1-507084 MORATUWA, SRI LANKA.

**Mr. S. Navarathinam.**
11, Saradha Street,
Trincomalee.

30th october 1992

Dear Mr Navarathinam,

Thank you for your letter received here on 13th october. I am pleased to send you the following message:-

"It is easy to accept an idealogy and principles conforming with the ideology. But it is very difficult to continue to live upto the ideology and its principles and put them into practical implementation throughout one's life.

Gandhian principles and programmes are particularly difficult to be followed in a materialistic world. Mr, ponnambalam kandiah or Gandhi Aiyya as we call him has been and continues to be a very great Gandhian and a truly inspiring force to me personally. whenever I meet him in Trincomalee or in some other place of common interest, I feel as if my entire personality is re-charged spiritually to continue on my Sarvodaya mission.

On his 75th Birthday it is my great pleasure and privilege to send him greetings and best wishes from tens of thousands of our workers in Sarvodaya Shramadana Movement. I wish him great health and long life to continue with his noble Gandhiam service to mankind."

with best wishes to you.
yours sincerely,

Dr. A. T. ARIYARATNE.
President

ஓம்

S. RAVICHCHANDRA KURUKAL
CHIEF INCUMBENT
Sri Pathirakali Amman Kovil
Trincomalee.
T: Phone 2760

சிவ ஸ்ரீ சோ. ரவிச்சந்திர குருக்கள்
ஆலய பிரதமகுருவும் ஆதினகர்த்தாவும்
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில்
திருக்கோணமலை.
தொலைபேசி இல 2760

# காந்தி மாஸ்டர் என அழைக்கப்படும்
## திரு. பொ. கந்தையா அவர்கள்

திரு. பொ. கந்தையா ஆசிரியர் அவர்கள் நீண்ட காலமாகத் திருக்கோணமலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர் என்பதை நான் அறிவேன். சிவபதம் அடைந்த எனது தந்தையார் பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த ஐயர் அவர்கள் இவரைப்பற்றி நன்கு அறிந்தவர். ஆசிரியர் அவர்கள் கற்பித்த காலத்தில் நான் சிறுவனாக இருந்தேன்.

ஆயினும் இவரது சமூக சமயப்பணிகளைப் பற்றி நான் வளர்ந்த பின் நிறையக் கண்டும் கேட்டும் உள்ளேன். மகாத்மா காந்தியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தன் வாழ்க்கையை சமூகப்பணிக்கு என அர்ப்பணித்தவர் இவர்.

இவரது சேவையில் மிகவும் போற்றப்பட வேண்டியது இவர் எமக்கெல்லாம் அறிவூட்டும் நடமாடும் நூல் நிலையமாக செயற்படுவதெனக் கூறலாம். கடையில் கிடைக்க முடியாத பெறுமதி வாய்ந்த நூல்களை இவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இவர் தனது எழுபத்தைந்தாவது வயதில் கால் வைக்கும் வேளையில் இப்படி ஒரு பாராட்டைப் பெறுவது சாலவும் பொருத்தமே. இவ்வேளையில் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் இவருக்கு பூரண சுகத்தையும் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து சேவை செய்யும் ஆற்றலையும் அளித்தருள வேண்டும் என மனதாரப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

இவ்வண்ணம்
சோ. ரவிச்சந்திரக் குருக்கள்

25-11-1992

உ
விநாயகர் துணை

# திரு. பொ. கநதையா

## காந்தி மாஸ்டருக்கு எமது நல்லாசிகள்

திரு. பொ கந்தையா மாஸ்டர் ஈழத்துக் காந்தி என மதிக்கப்படுபவர். நம்மில் காந்தீயம் பற்றிப் பேசுபவர்கள் நிறைய உள்ளனர். நடைமுறையில் அனுசரிப்பவர்கள் விரல் விட்டு எண்ணும் அளவுக்கு இல்லை. ஈழத்தில் விரல்காட்ட ஒருவர் இருக்கிறார் என்றால் திரு. பொ. கந்தையா ஆசிரியர் அவர்களே!

ஆசிரியர் அவர்களை அறியாதார் இல்லை, சிறுவர்களும் பெரியவர்களும் "காந்தி ஐயா" என்றே அழைப்பர். அவ்வளவுக்குக் காந்தீயத்தில் ஊறி விட்டார்.

அவரது சேவை சிறந்து பெருகட்டும் "ஆயுள் மர்வலிமணலினும் பல்லாண்டு வளரட்டும்" அவரது தேகம் உறுதியும் வனப்பும் பெற்றுச் சிறக்கட்டுமென எம்பெருமான் ஆலடி விநாயகர் மலரடிக்கு ஆயிரம் ஆயிரம் மலரிட்டு வேண்டுகின்றேன்.

சுபம்

மு. சுந்தரலிங்க தேசிகர்,
சுத்த கணித சோதிடர்,
ஜோதிட சித்தாந்த சேகரம்

ஆலடி விநாயகர் தேவஸ்தானம்
திருக்கோணமலை,

ஓம்

திருச்சிற்றம்பலம்

''சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக''

**இளைஞர் அருள்நெறி மன்றம்**

**திருக்கோணமலை. (இலங்கை) ஸ்ரீலங்கா**

மன்ற அமைப்பாளர்;

திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள்

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்) அவர்கள்

**ILAINGNAR ARULNERI MANTRAM**

**THIRUKONAMALAI (Sri Lanka)**

# அறத்தின் அடிச்சுவட்டில் ஒரு உத்தமன்

சர்வ வல்லமையுங் கொண்டு அளவற்ற கருணையும், நிகரற்ற அன்பும் அருளி விண்ணரசுக்கும், மண்ணரசுக்கும் மாண்புடையோனாகிய இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களுள் முதன்மையாக விளங்கியருளுவது திருத்தில்லைச் சிற்றம்பலம். மனிதகுல ஆன்மாக்கள் இறைவனின் திருவருளை நினைந்து ''தில்லை தில்லை'' என்று சொன்னாலே வாழ்வில் 'இல்லை இல்லை' என்கின்ற அச்சமும் அவலமும் நீங்கும். அச்சமும் அவலமுந் தான் இன்று மனிதகுலத்தை வாட்டி வதைக்கும் துர்க்குணங்களுள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. இந்த இழிநிலைகளினின்று மனிதகுலம் விடுதலை பெறுதல் வேண்டும் இப்படியான விடுதலை ஒரு ஆன்மீக விடுதலையெனலாம். இப்படியான விடுதலையின் பேறுதான் சாந்தி, சமாதானம் ஆகியன. சாந்தியும் சமாதானமும் ஈர்க்கப்படல் வேண்டும். ஈர்க்கும் சக்தி காந்தியத்தில் உண்டு. 'காந்தி காந்தி' என்று சொன்னாலே 'சாந்தி சாந்தி' யென்கின்ற சக்தி பிறக்கின்றது. நமது மூச்சினிலே. சாந்தி சமாதானத்தின் மூச்சில் சக்தியென்று மனிதகுலத்துக்குப் பணியாற்றும் பண்பாளனாக, உத்தமனாக வாழ்ந்து வழிகாட்டுகின்றார்கள் நமது காந்தி ஐயா உயர்திரு. பொன் கந்தையா அவர்கள். காந்தி ஐயா அவர்களின் வாழ்வே சாந்தி சமாதானத்தின் அடிச்சுவடு பற்றியது. அவ்வடிச்சுவடு பற்ற நாம் தயாராக வேண்டும்,

இத் தயார் நிலைக்கு காந்தி ஐயா அவர்களின் சாதனா செல்வம் அனைவரையும் 'இல்லை' 'இல்லை' என்கின்ற இல்லாமை நிலையினின்று நீங்கச் செய்யும். இல்லாமை என்ற மனநிலை மாற்றம் பெற்றால், இருக்கின்றது 'இருக்கின்றது' என்ற நன்னிலைக்கு ஏற்றம் உண்டல்லவா? சிந்தியுங்கள். சிந்தனையைச் சாதனையாக்கி வாழ்வியலில் சாதனா நிலையிற் சந்திக்க வையுங்கள். இப்படியான சந்திப்புக்கள் தான் அறத்தின், இறைவனின் விண்ணரசினை தரும நீதியின் அடிச்சுவடு பற்றியன.

அறத்தின் அடிச்சுவடு பற்றிச் சாதனையாளராகச் சாந்தி, சமாதானத்தின் திரு வுருவாக விளங்கும் நமது காந்தி ஐயா அவர்களின் வழிகாட்டல் யாவருக்கும் நற் கதியாக அமைந்து விளங்க வேண்டும். காந்தி ஐயாவின் பொற்காலம் மேன்மேலும் நற்காலமாக அனைவருக்கும் வாய்க்க வேண்டும். அண்டமுற நிமிர்ந்தாடும் திருச்சிற்றம் பலத்து இறைவனின் திருவருட் பெருங்கருணை வழிகாட்டியருளுமாக பிரார்த்திக்கின்றோம் சிவ, சிவ.

திருச்சிற்றம்பலம்.

வணக்கம்.

இளைஞர் அருள் நெறி மன்றம்
திருக்கோணமலை
(இலங்கை)
06-11-1992.

திருவடியேன்
இ. சண்முகராசா
மன்ற அறக் காவலர்
குழு சார்பில்

உங்களுடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுங்கள் நமக்குத் தேவை இரும்பைப் போன்ற தசைகளும் எஃகைப் போன்ற நரம்புகளும் தம் காலமெல்லாம் அழுது கொண்டிருந்தது போதும் இனி அழுகை என்ற பேச்சே இருக்கக் கூடாது சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

-இராமகிருஷ்னனின் அருளுரைகள்-

உ
தேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## தெல்லிப்பழை
## SRI DURGA DEVI DEVASTHANAM TELLIPPALAI, Sri Lanka.
T. Phone:-243.

# வாழ்த்துரை

வாழ்த்த வேண்டியவர்களை வாழ்த்தத் தான் வேண்டும். இது எமது தலையாய கடமை. இதனை அவ்வப்போது அறிந்து நிறைவேற்றுவதனால் எமது சமூகமும் பணிகளினாலும் பண்பாட்டினாலும் ஏற்றம் அடைகிறது. இந்தவகையில் திருக்கோணமலையில் பல்லாண்டு காலமாகப் பணிபுரியும் காந்தி மாஸ்டர் அவர்கள் எமது வாழ்த்துக்கும் வணக்கத்துக்கும் உரியவராகிறார் ''ஆனந்தம் ஆனந்தம்'' என்று சொல்வது இப்பெரியாரது அருள்வாக்காகும். புன்முறுவலும் பொறுமையும், எதையும் தாங்கும் இதயமும் எல்லோரிடமும் காட்டும் கருணையும் இப்பெரியவரை ஒரு மகானாக எமக்கு உணர்த்தி நிற்கிறது. எழுபத்திநான்கு ஆண்டு நிறைவை எய்தும் இம்மகானை அறியாதார் எமது தமிழ் மண்ணில் இருக்கமாட்டார்கள். ஊருக்கு உபகாரியாக விளங்கும் பெற்றியை முற்றாகத் தன்னகத்தே கொண்டவர் இவர்.

''பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்!


என்றார் வள்ளுவர். எனவே இவர்களைப் போன்றவாகளால் தான் உலகம் நிலை பெறுகிறது என்பது ஆன்றோர் நம்பிக்கையாகும்.

நாம் உயிர் வாழ்வதற்கு உரிய உரிமை மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றும் போதுதான் கிடைக்கும். இந்த உண்மையை உணர்ந்து பணியாற்றிய பெருந்தகை எங்கள் காந்தி ஐயா அவர்கள். ''அன்பு ஒன்றைத்தான் குருடர் பார்க்கலாம். செவிடர் கேட்கலாம்'' என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து நிற்பவர் இப்பெரியார். அருளாளர் ஒருவர் பின் வருமாறு கூறுகிறார்.

''வாழ்வு என்னும் பயணம் தொடர்ந்து போய்க் கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு கணப்பொழுதிலும் நீ அதை ஒழுங்குபடுத்துவாயானால் அது மங்களமாக முற்றுப்பெறும் ''

இந்த அருள்வாக்குக் கேற்ப தனது வாழ்வை அமைத்துக் கொண்ட இப்பெரியாரின் எழுபத்துநான்கு ஆண்டு நிறைவு இந்நாட்டு நலன் விரும்பிகள் அனைவரையும் ஊக்குவிக்கும் ஒரு பெரு விழாவாக அமைய வேண்டும். திருக்கோணமலையிலே மட்டுமல்ல; யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் இப்பெரியாரின் அருமை பெருமைகளை தெரிய வைக்க வேண்டும் என்று வேண்டி இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து எங்கள் காந்தி ஐயா எமக்கு வழிகாட்ட வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

சிவத் தமிழ்ச் செல்வி.
25-10-92
**தங்கம்மா அப்பாக்குட்டி J.P** தலைவர்



சட்டத்தரணி:
**ஜனாப் உ. மு. இஸ்மாயில்**
25, சனல் ஒழுங்கை,
திருக்கோணமலை.

# கிண்ணியா மக்களால் மறக்க முடியாதவர்

## ஆசிச் செய்தி

**இரண்டாம்** உலக மகாயுத்தம் ஏற்பட்டதன் காரணமாக, இலங்கையில் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடும், அவைகளின் உச்சவிலையேற்றமும் மக்களுக்குப் பெரும் கவலையளித்தன. அவ்வேளையில் கிண்ணியாவில் கடமையாற்றிய திரு. பொ. கந்தையா (மாஸ்டர்) போன்ற பெரியார்களின் தீர்க்கதரிசனத்தாலும், விடாமுயற்சியாலும் பல கூட்டுறவுப் பண்டகசாலைகள் நிறுவப்பட்டன. அவைகள் இன்றுவரைக்கும் அப்பகுதி மக்களுக்கு உன்னத சேவை நிலையங்களாகப் பிரகாசிக்கின்றன.

அன்று கல்வியில் பின்தங்கியிருந்த கிண்ணியா, பிரதேசத்தை தட்டி எழுப்பும் பரந்த மனப்பான்மையுடன், நமது அன்புக்குரித்தான திரு. த. காசிநாதர் (ஐயா), அவர்களின் தளபதியாகச் செயற்பட்டு, கிண்ணியாவின் மூலைமுடுக்கெல்லாம் சென்று, கல்வியின் பெருமையை மக்களுக்கு எடுத்துக்கூறி, அப்பகுதியைத் திருக்கோணமலையின் ஏனைய பகுதிகளுடன் சரிசமமாக நின்று போட்டியிடுமளவிற்குச் செயற்பட்ட திரு. கந்தையா (மாஸ்டர்) அவர்களை கிண்ணியா மக்கள் ஒருபோதும் மறக்கமுடியாது.

கிண்ணியாவிலிருந்து திருக்கோணமலைக்குத் திரு. கந்தையா (மாஸ்டர்) இடமாற்றம் பெற்று வந்தது இந்நகர் வாழ் மக்களின் பாக்கியம் என்று தான் கூறவேண்டும். மக்கள் சேவையிலேயே முற்றாக ஈடுபட்டு, அவர்களது கவலையைப் போக்குவதிலும், கண்ணீரைத் துடைப்பதிலும் தமது வாழ்நாளை அர்ப்பணித்த அன்னாரின் தன்னலமற்ற சேவையும், தியாகமனப்பாண்மையும், இருள் சூழ்ந்த உலகில் ஒளிமயமான நம்பிக்கை அலைகளை எழுப்பும் அபாரசக்தி வாய்ந்த ''ஆனந்தம் ஆனந்தம்'' என்னும் மூலமந்திரமும், மக்கள் மனதைக் கவர்ந்து, அவர்கள் அன்பையும், மதிப்பையும், நன்றியையும் பிரதிபலிக்கும் ''காந்தி மாஸ்டர்'' என்னும் அர்த்தம் பொதிந்த நாமத்தைப் பொன்னாடையாகப் போர்த்திக் கௌரவிக்கச் செய்தன.

இணையற்ற வாழ்க்கைத்துணைவியின் பூரண ஒத்துழைப்புடன் ''மககள சேவையே மகேசனின் சேவை'' என்னும் உயர்ந்த உணர்ச்சியால் உந்தப்பட்டு, தமது எழுபத்தைந் தாம் வயதை எட்டிப் பிடிக்கும் ''காந்தி மாஸ்டர்'' தொடர்ந்தும் அவர்களின் பயனுள்ள பணியைப் பல்லாண்டுகள் ஆற்ற, குன்றாத தேக ஆரோக்கியத்தையும், மங்காத மனோ திடத்தையும் வாரி வழங்க வேண்டுமென வல்லோனைப் பிரார்த்திக்கின்றேன்.

29-11-1992

ஜனாப் உ. மு. இஸ்மாயில்

ஓம்

# சாந்தமே வடிவான காந்தி ஐயா

கதர் வேட்டியும், கதர் போர்வையும் அணிந்து, காலில் பாதணிகள் இல்லாமல் கறுத்தக் குடையுடன் திருக்கோணமலை வீதிகளில் தினமும் காணப்படும் ஒரு தொண்டர் எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டுமென்று விரும்பும் ஒருவர், எல்லோரும் தன்னை நல்லவர் என்று சொல்லவேண்டும் என்ற லட்சியத்துடன் உழைப்பவர். எல்லோரும் நல்லதைக் கற்கவேண்டுமென்ற விருப்பால் நல்ல நூல்களைத் தாமே சுமந்து சென்று வைபவங்களில் நியாய விலையில் விற்பவர். கையில் பணம் இல்லாதவர்களுக்குக் கடனுக்குக்கூடக் கொடுப்பவர். பயனுள்ள வைபவங்களில் பங்குகொள்பவர். சிவானந்த தபோவன மாணவர் இல்லத்திற்குப் பொறுப்பாக இருந்து தம்மால் இயன்றவரை அதை நடாத்தி வருபவர். இன்றும் பலபல தொண்டுகளை அமைதியாகவும், விளம்பரமின்றியும் தம் அளவில் செய்து வருபவர். எல்லாவற்றுக்கும் மேலாக ''ஆனந்தம்'' என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தி ஆனந்தமாக உலவுபவர். ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்து வாழ்பவர். சுருங்கச் சொல்லின் எளிமையான வாழ்வும் உயர்ந்த எண்ணங்களும் கொண்டவர். காந்தியடிகளின் போதனைகளைத் தன் வாழ்வில் வாழ்ந்து காட்டுபவர். நன்மை தீமைகளுக்கு அப்பாற்பட்டு அனைவரையும், வாழ்த்தும் மனப்பாங்குடையவர். இவர் தான் திருக்கோணமலை மக்கள் மத்தியில் ஒரு தியாகியாக, லட்சியவாதியாகப் பலருக்கும் பயன்படுமொரு நல்ல மனிதராக எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் காந்தி மாஸ்ரர். இவரது பெயரான கந்தையாவைவிட காந்தியத்தைக் கைக்கொண்டு பெற்றுக் கொண்ட சிறப்புப்பெயரது.

சஞ்சலமே தீண்டாத காந்தி ஐயா, சாந்தமே வடிவான காந்தி ஐயா, சலிக்காமல் தொண்டு செய்யும் காந்தி ஐயா, அன்பையும் ஆனந்தத்தையும் பரப்பும் காந்தி ஐயா மனித சமுதாயத்துக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கும் காந்தி ஐயாவின் தொண்டுகள் தொடர அவருக்கு நீண்ட ஆயுளும், நல்ல ஆரோக்கியமும் அருளவேண்டிக் கோணமா மலையிலே கோயில் கொண்டு அருளும் கோணேசப் பெருமான் திருவடிகளை வேண்டி அவரது 74 வருடகால சேவையைப் பாராட்டுமுகமாக வெளியிடப்படும் மலருக்கு இச் சிறிய பங்களிப்பை மனமுவந்து வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**து. குலவீரசிங்கம்**
உதவிச் செயலாளர்,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
திருக்கோணமலை.

26-11-1992

St. Mary's Cathearal,
TRINCOMALEE·
(Sri Lanka)
13-12-1992

# ஆசியுரை

அனாதை, விதவை, ஏழை, அந்நியர்கட்கு செய்யும் சேவையில் தெய்வீகம் கலந்துள்ளது என்று வேதம் கூறுகிறது. தன்நலம் மறந்து, தானும் ஏழையாகி, ஒரு காந்தி ஐயா அவர்கள் அனாதை, விதவை, ஏழை, அந்நியர்கட்கு செய்யும் மகத்தான சேவையை திருக்கோணமலை வாழ்மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்

அன்னாரை வாழ்த்தும் இந்நாளில், ஆண்டவன் அவரை பல் மடங்கு ஆசீர்வதித்து காத்து, வழிநடாத்த வேண்டுமென பரலோக தந்தையை இயேசுவின் இனிய நாமத்திலே கேட்கிறேன்.

வண. பிதா. T. பயஸ் பத்மராஜா.

ஓம்

# காந்தி வாத்தியார்

சிவநெறிப் புரவலர் **க. கனகராஜா ஜே. பி.**

உலகம் போற்றும் உத்தமரான மகாத்மா காந்தியடிகள் 1927ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தின் பல பாகங்களையும் சுற்றிப் பார்த்துத் தமது வர்த்தா கல்விக் கழகத்துக்கு நிதியும் திரட்டிப் போனார்.

அக்காலத்தில் நம்மவர் பலர் பொன்னாகவும், காசாகவும், உபகரித்ததோடு சிலர் தம் வயமிழந்து காந்திப் பக்தர்களானார்கள். காந்தி சின்னத்தம்பி, காந்திப் பொன்னையா காந்தி வைரத்தினம், காந்தி துரைராஜசிங்கம் முதலானோர் கதராடை அணியத் தொடங்கினார்கள்.

காந்தீயம் என்றொரு நாகரீக இயக்கம் படிப்படியாக வேர்கொண்டு பரவியது. அந்தப் பாரம்பரியத்தில் இளைஞர்களாய் வேலாயுதபிள்ளை, தம்பிப்பிள்ளை, கந்தையா என்னும் பெயர் பெற்ற மூவர், துரைசிங்கம் முதலானோர் சொல்லாலும், செயலாலும் காந்தீயம் பரப்புவராயினர். இவர்களுள் ஒருவர் அவரும் கந்தையா என்னும் பெயரினர். ஆனால் அவரின் இயற்பெயர் மங்கிமறைய காந்திவாத்தியார் என்னும் பெயர் பரவுமாறு பணிசெய்தவர் தூய வெண்ணிறக் கதராடை அதிலும் சட்டைதரிப்பதை அறவே கைவிட்டு வேட்டியும் சால்வையும் மாத்திரம் தரிப்பவராயினார்

அவரின் ஆசாரசீலம், இதமான போக்கு, இனிமையான பேச்சு, எந்த நேரமும் புன்னகைத் ததும்பிய முகம், குறுகிய கருமையான அருமையான தோற்றம் அவரைப் பெரியவராக்கின. பண்பாட்டுக் கோலமாக பண்புகள், தவமும் பண்பியாக அவர் மாணாக்கர் மத்தியில் உலாவியமையினால் மாணாக்கர் மனிதராக உருவானார்கள்.

திணைக்கள உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள் தங்கள் மனைகளில், பணியகங்களில் ''உள்ளே'' ''வெளியே'' எனக் குறிக்கும். In, Out பலகை தொங்கவிடுதல் நவநாகரிகம்

காந்தி வாத்தியார் சில காலம் கொக்குவிலில் படிப்பித்த காலத்தில் தனிமையாகவே வாழ்ந்தவர். அவரைத் தேடித் தினமும் பலர் போவார்கள். அவர் காலைக் கடன் கழித்தல், குளித்தல், சமைத்தல் முதலிய கருமங்களுக்கு அப்பால் போய்விட்டால் தாம் இன்னதுக்காக இன்ன இடத்தில் நிற்பதாக எழுதித் தொங்க விட்டுப் போதல் வழக்கம்.

அவர் திருக்கோணமலையில் சேவை செய்த காலத்தில் தமது இருப்பிடத்தை விட்டுப் பள்ளிக்கூடத்துக்கு முதலில் தெருவில் கால் வைப்பவர் அவரேயாய் இருந்தார். பாடசாலையைத் திறந்து சகல ஆயத்தங்களும் தானே செய்து மாணாக்கரையும், ஆசிரியர்களையும் வரவேற்பவரும் அவரேயாய் இருந்தார். அவ்வாறே பாடசாலை விட்டு பின்பும் எல்லோரையும் போகவிட்டு இறுதியாக கடைசியாக வெளியேறுபரும் அவரேயாய் இருந்தார். சுருங்கச் சொன்னால் அவர் பணி செய்யப் பிறந்தவர். கூடும் அன்பினில் அன்பர் பணி செய்தவாறே பலரைத் தொண்டுள்ளம் கொள்ளுமாறு பழகியவர். அவருடைய வாழ்வும் பணியும் வெள்ளி விழா, பொன்விழா, வைரவிழாக் கண்டு இன்று பவளம் பழுக்கிற விழாவாக முற்றி முதிரும் போது அவரை எத்திறம் வாழ்த்துகிறது. போற்றுகிறது என்று தெரியாது அவரை வணங்கி அவர் ஆசிபெறக் குனிகின்றேன் கும்பிடுகின்றேன்.

வாழ்க நீ எம்மான்.

உ
சிவமயம்



# கண்ணார நான் காணும் காந்தி

பண்ணாகம் பண்டிதர்:- அ. ஆறுமுகம்

உலகம் போற்றும் காந்தி மகான் வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்திருக்கிறேன் என்பது குறித்துப் பெருமிதம் கொள்ளுவேனாயினும், அந்த மகாத்மாவைக் கண்ணார நான் காணப்பெற்றிலேன். சத்திய விரதராகிய அந்தக் கருணை வள்ளலின் அடிச் சுவட்டில், வாழ்வாங்கு வாழுபவரான காந்தி ஆசிரியர் திரு. பொ. கந்தையா அவர்களை, இனிய நண்பராகப் பெற்று, ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அவரைக் கண்ணாரக் காணவும், அவரின் அரிய உரைகளைக் கேட்டு மகிழவும் வாய்ப்புப் பெற்றதில், மனம் நிறை வெய்துகின்றேன். மிகப் பெருமிதம் கொள்ளுகின்றேன்.

**அவரின் சேவைக்கு வாய்த்த திருக்கோணமலை.**

சைவசமய முதற் குரவராகிய ஞானசம்பந்தப் பெருமானார் அருளிய தேவாரப் பதிகம், அருணகிரி நாதரின் திருப்புகழ், ஏனைய அருளாளர் பலரின் திருப்பாடல்கள் பெற்ற தெய்வீகத்தலம் திருக்கோணமலை. இது தென்கைலாசம் எனப்படும் புனித புண்ணிய பூமி. இங்கு பரந்து வாழும் மக்கள் பலரும் கண்ணியம், அருள் கொடைக் குணம், அறிவு கொண்ட நல்லவர்களாக விளங்குவதைக் கண்டும் கேட்டும் அறிந்து கழிபேருவகையுறுகின்றோம். ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை''. எனவே கோணேசர் கோவிலோடு அம்மைதலம், விட்டுணுதலம், பாவநாசதீர்த்தம் என்பனவும் அந்தக் காலத்தில் கோணமலையில் இடம்பெற்றிருந்தமை அறியப்படும். பொல்லாத காலம், காரணமாக அவை இன்று விளக்கம் தருவனவாயில்லையாயினும், அருள்மிகு முத்துக் குமாரசுவாமி கோவில், பத்திரகாளி கோயில் போன்ற திருவருட் பிரகாசம் பொலியும் கோவில்கள் பல அமைந்து பிரகாசம் செய்கிறது. பலவகை நலங்களும் வாய்ந்த இத் திருக்கோணமலையில், தொடர்ந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து, பலதிறப்பட்ட பொதுப்பணிகளில் ஈடுபட்டுள்ளவர் எங்கள் காந்தி ஆசிரியர் திரு. பொ. கந்தையா அவர்கள்.

## அவரின் பிறப்பும் இளமையும்

யாழ்ப்பாண நகரிலிருந்து வடமேற்குத் திசையில் ஏறக்குறைய 15கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பது மாதகல் என்னும் ஊர். அந்த ஊரின் மேற்குப் பாகமாய் அமைந் திருப்பது நுணசை என்னும் குறிச்சி. சைவத் தமிழ்ப் பண்பாடுகளைப் பேணுபவர்களும், விரதம் தவம் தியானம் என்ற தவ ஒழுக்கங்களில் ஈடுபட்டவர்களும், ஆகிய நல்லோர் பலரின் உறையுள் அந்த நுணசைக் குறிச்சி. அங்குள்ள கந்தசுவாமி ஆலயம் விழாக் காலங்களில், பல் நூற்றுக்கணக்கான ஆடவர்கள் அங்கப் பிரதட்சணமும், பெண்கள் அடியளித்தலும் செய்து, மிக்க பக்திசிரத்தையுடன் வழிபாடு செய்யவும், பறவைக்காவடி, தூக்குக்காவடி, செடிற்காவடி, கூத்துக்காவடி எனப்பலப்பல காவடிகளை எடுத்து அடியார்கள் நேர்த்தி செய்து வழிபடும், இடமாய் அமைந்த சிறப்புடையது. கந்தபுராண கலாச்சாரம் சிறந்து ஒளிரும் யாழ்ப்பாணத் தலங்களுள், நுணசைத்தலம் முன்வைத் தெண்ணப்படும் சிறப்பினையுடையது. அத்தகைய அருள்விளங்கும் மண்ணிலே, ஆறுமுகம் பொன்னம்பலம் என்ற தந்தையாருக்கும், அவரின் உறவுத் தொடர்பு உடையவராய் அயலில் சுழிபுரத்தில் வாழ்ந்த, இராமுப்பிள்ளை என்பவரின் மகள் நன்னிப்பிள்ளை என்ற தாயாருக்கும், இரண்டாவது பிள்ளையாக 19-12-1918 இல் உதித்தவரே எங்கள் காந்தி ஆசிரியர். நுணசைக் கந்தரைச் சிந்தையில் இருத்தி வந்தனை செய்து பெற்றதனாற் போலும், அப்பெற்றோர் தம் பிள்ளைக்குக் கந்தையா என்று பெயரிட்டனர். கந்தையாவின் தமையனார் செல்லையா சின்னப்பிள்ளை என்ற தங்கையும். தில்லைநாதன் என்ற தம்பியும் பின்வந்த சகோதரர்கள், தந்தையார் பொன்னம்பலம் திரைகடலோடியும் திரவியந் தேடவேண்டி, மலாயா நாடு சென்று தொழில் புரியுங்காலத்தில் அங்கேயே காலமானார். அப்போது திரு. கந்தையா அவர்களுக்கு வயசு ஏழு. அவரது அன்னையாரே அனேக கஷ்டங்களின் மத்தியில், பிள்ளைகளை வளர்த்து ஆளாக்க வேண்டியதாயிற்று

## கல்விப் பேறு

இவர் தமது ஆரம்பக் கல்வியை நுணசை முருகமூர்த்தி வித்தியாசாலை, மாதகல் விக்கினேசுவர வித்தியாசாலை என்பவற்றிலும், உயர்கல்வியைப் பண்ணாகம் மெய் கண்டான் மகாவித்தியாலயம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் என்பவற்றிலும் பெற்று, சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திர (S. S. C) பரீட்சையிற் சித்தியடைந் தார். அப்போது 1935 - 1937 ஆம் ஆண்டுகளில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபராயிருந்த கலாநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் இவரைச் சிறிது காலம் அங்கு ஆரம்ப ஆசிரியராக அமர்த்தியிருந்தார்.

## ஆசிரிய சேவை

திரு. கந்தையா அவர்கள் சுயமாகக் கற்று 1936 ஆம் ஆண்டில் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தினர். 1938 ஆம் ஆண்டில் வவுனியா கருங்காலிக்குளம் அரசினர் பாடசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்பு மட்டு / ஏறாவூர்,

திரு/கிண்ணியா, திரு/திரியாய் என்ற இடங்களில் உள்ள அரசினர் பாடசாலைகளிலும் சேவை செய்து, 1947 இல் யாழ்/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலைக்கு நியமனம் பெற்றார். கொக்குவிலிற் படிப்பிக்குங் காலத்திலேயே, நான் அடிக்கடி அவரைக் கண்டு உடனுறைந்து ஒட்டியுறவாடும் வாய்ப்பு மிகுதியும் ஏற்பட்டது.

கொக்குவிற் சேவையின் பின்பு திருக்கோணமலை இராமகிருஷ்ண கோணேஸ்வர வித்தியாலயம், திரு/தம்பலகமம் சாரதா வித்தியாலயம், திரு/அர்ச் சவேரியார் பாடசாலைகளிலும் ஆசிரிய சேவை செய்தவர். பொது நலப்பணிகளில் முழுமையாக ஈடுபடுவதற்கு, பாடசாலைச் சேவையில் வசதிகள் குறைவாயிருந்ததனால், 30-09-1962இல் ஆசிரிய சேவையில் நின்றும் விலகி, ஓய்வூதியம் பெறுவாராயினர்.

### தூய சைவ வாழ்வு.

சைவ சமய நெறியினராகிய பெற்றோருக்கு மக்களாகப் பிறந்தாலும், மச்சமாமிசம் மதுபானம் விலக்கிச் சைவ ஆசாரமுடையவர்களையே நம்மவர் சைவர் என அழைப்பர், சைவக் கொள்கைக்கு மதுமாமிசம் விலக்காகும். திரு. கந்தையா அவர்கள் அரிவரி வகுப்பிற் படிக்குங் காலத்தில் ஒருநாள், பாடசாலைக்கு வந்த சைவப் பெரியார் ஒருவரின் பிரசங்கத்தைக் கேட்டதிலிருந்தே, மச்சமாமிசம் புசித்தலைக் கைவிட்டுத் தூய சைவ உணவு உண்ணுதலை விரதமாகக் கொண்டார். சைவக் கோயில்களில் தாசிகள் நடனம். உயிர்ப்பலியிடுதல் போன்றனவும், சைவத்துக்கு இழுக்குத் தருவனவேயாம். கொக்குவிலிற் படிப்பிக்கும் காலத்து, அங்குள்ள மனோன்மணி அம்மன் ஆலய விழாக்களில், சதுர்க் கச்சேரி நடத்துதலைத் தவிர்க்க வேண்டி, திரு. கந்தையா அவர்கள் 1952 ஆம் ஆண்டில் ஒருகிழமை உண்ணாவிரதம் மேற்கொண்டு கோவிலின் புனிதத்தைப் பாதுகாத்தார்.

### திரு. கந்தையா காந்தி வாத்தியாரானார்.

பதினைந்து வயது மாணவனாக இருந்த காலத்தில் திரு. கந்தையா அவர்கள் காந்தியடிகள் எழுதிய சுயசரிதையாகிய சத்திய சோதனையைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. சத்தியம், அன்பு எவரிடத்தும் மதிப்புப் போன்ற உத்தம பண்புகள் இயல்பிலேயே அமையப் பெற்ற கந்தையா அவர்கள், காந்தியடிகளைப் போலத் தாமும் வாழச் சங்கற்பம் செய்வாராயினார். நண்பர்களும் பிறரும் அவரை அந்தக் காலத்திலிருந்தே காந்தி வாத்தியார் என்று அழைத்து வரலாயினர்.

1941 ஆம் ஆண்டு முதல் வெள்ளிக்கிழமைகளில் உபவாசம் இருப்பதோடு, இடையிடையே மௌனவிரதமும் அனுட்டித்து வருகின்றார்.

1945 ஆம் ஆண்டிலிருந்து தேநீர், கோப்பி அருந்துதலையும், 1947 இல் இருந்து காரம் சேர்ந்த உணவுகள் உண்பதையும், 1952 முதல் சோடாப் பானங்கள் பருகுதலையும் கைவிடலாயினர். உயிர் வாழ்வதற்காக உண்ணுவதேயன்றி, சுவைபட உண்பதற்காக உயிர் வாழுவதில்லை என்ற காந்தீய தத்துவத்தை உறுதியாகக் கடைப்பிடித்து

வருகின்றார். மனிதகுலம் மேம்படுவதற்குக் காந்தீய வழியே மேலான வழி என்பதை எல்லோரும் அறிந்தும், உணர்ந்தும் ஒழுக வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு 1949 ஆம் ஆண்டில் நீர்வேலி சி. க. வேலாயுதம்பிள்ளை, பண்டிதர் செ. துரைசிங்கம், ஹன்டி ச. பேரின்பநாயகம், முதலியார் செ. சின்னத்தம்பி போன்ற பெரியோர் பலரை உறுப்பினராகக் கொண்ட, அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தை உருவாக்க உறுதுணையாயிருந்தார். அந்தச் சங்கத்தின் மூலம் உருத்திரபுரம் காந்தி நிலையம், கோணாவில் தொழிற்பயிற்சிக்கூடம், தருமபுரம் மகளிர் இல்லம், போன்ற தாபனங்களைத் தோற்றுவித்துப் பணி பல செய்யும் வாய்ப்பினை அளித்தார்.

## திருமணமும் மகப்பேறும்

காந்தியாசிரியர் அவர்கள் பொதுப்பணிகள் புரிவதற்குத் தனித்து வாழும் பிரமசரிய வாழ்க்கையே வாய்ப்பும் வசதிகளும் உடையதென்று கருதி, திருமணம் பற்றிய பேச்சுக் களுக்கு மறுப்புத் தெரிவித்துக் காலம் கடத்தி வந்தார். திருக்கோணமலையிற் கற்பிக்குங் காலத்தில், தம்மைப் போலவே காந்தீயக் கொள்கைகளில் நிலைத்த பற்றும், பொதுச் சேவைகளில் நாட்டமும் கொண்டவரும், கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரம் அவர் களின் தங்கையும் ஆகிய திருமிகு. இராசநாயகி என்ற ஆசிரியையின் போக்கில் இவா மனம் பதிந்தது. திருவருள் வழிப்பட்ட விதியும் அவ்வாறு இருந்ததனாற் போலும் அந்த அம்மையை வாழ்க்கைத் துணைவியாக்கச் சம்மதம் தெரிவித்தார். 28-05-1953 இல் தமது திருமணத்தைச் சர்வோதய முறைப்படி தமது ஆசிரியர் பண்டிதர் கா. பொ இரத்தினம், ஆத்மசோதி நா. முத்தையா, தியாகி காந்தி இராஜகோபால் என் போரின் வழிப்படுத்துதலில் நடத்திக் கொண்டார். நகமும் சதையும் போல ஒருமித்த கருத்தும் சொல்லும் செயலும் கொண்ட தம்பதிகளின் வாழ்வில் கிடைத்த மைந்தனுக்கு கதிர் காமநாதன் என்று பெயர் சூட்டினர். முருகன் என்றே அழைத்தனர்.

## காந்தி ஆசிரியர் செய்துவரும் தொண்டுகள்

### சமயத் தொண்டு

தூய சைவசமயத்தவரான அவர் சமய வெறியோ துவேஷமோ இல்லாதவர். எவரும் தமது பெற்றாரின் சமயத்தையே கைக்கொண்டொழுகும் கடப்பாடுடையவர். எல்லாச்சமயங்களும் இறைவனையடையும் வழிகளாகவே உள்ளன. அந்த வழிகள் வெவ்வேறு அமைப்புடையனவாக இருக்கலாம். எல்லாச்சமயங்களும் சமமானவை என்று கூறுதல் பொருந்தாது. ஆனால் எல்லாச் சமயங்களையும் மதிக்கும் பண்பு அறிவுடையோர்க் குண்டு. சமரசமனப் பான்மையுடைய தாயுமானவர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இராமலிங்க அடிகளார், காந்திமகான், சிவானந்தர் போன்ற அருளாளரைப் போன்று காந்தி ஆசிரியரும் சமரசசைவக் கொள்கையுடையவர்.

இந்தச் சமரசக் கொள்கையை மக்கள் மத்தியில் பரப்புதலை நோக்கமாகக் கொண்டு மேற்காட்டிய அருளாளரின் போதனைகளையும், கருத்துக்களையும் கொண்ட நூல்களைப் பல இடங்களிலுமிருந்து தருவித்து இங்குள்ள மக்கள் இலகுவாகப் பெறக் கூடிய முறையில் விற்பனை செய்து பிரசாரம் மேற்கொண்டு வாழுகிறார்.

1959 ஆம் ஆண்டு குடும்பமாகக் கால் நடையாகத் திருக்கோணமலையிலிருந்து காட்டுக்கரையோரப் பாதை வழியாக 224 மைல் தூரம் நடந்து கதிர்காமத்தையடைந்து கந்தவேளை வழிபட்டார். 5 தடவைகள் அவ்வாறு அவர் கதிர்காம கால்நடை யாத்திரை செய்துள்ளார்.

**ஆன்மீகத் தொண்டு**

திருக்கோணமலையில் சிவானந்த மகரிஷியின் சீடரான மாதாஜீக்குத் துணையாக நின்று சிவானந்த தபோவனத்தையமைக்க உதவியதோடு, அனாதை மாணவச் சிறுவர் இல்லத்தை நடத்தும் தர்மகர்த்தாக்களுள் ஒருவராக இருந்து தொண்டு செய்து வருகின்றார்.

சுவாமி கெங்காதரானந்தர் அவர்கள் அமைத்த சிவயோக சமாசத்திலும், சத்திய சாயிசேவா சமித்தியிலும் பங்குபற்றி தொண்டு புரிந்து வருகின்றார்.

**மக்கள் தொண்டு**

எங்கள் காந்தி ஆசிரியருடன் அருளாளர், அதிகாரிகள், பொதுமக்கள் பலரும் அடிக்கடி தொடர்பு கொள்ளுவார்கள். சிறிய பிணக்குகளைச் சமாதானமாகத் தீர்த்து வைத்து மக்கள் மத்தியில் அன்பையும், மகிழ்ச்சியையும் வளர்த்து வருகின்றார். இளையவர்கள், முதியவர்கள் என்ற பேதம் இல்லாது எல்லாரையும் ஐயா, அம்மா என அன்பு கனிய அழைப்பார். இதமாகவும் பேசுவார். 'ஆனந்தம் ஆனந்தம்' என்று கூறி விடை கொடுப்பார்.

'உற்றவர் நாட்டவர் ஊரார் தமக்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம் - இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்று மில்லை''
''பக்கத் திருப்பவர் துன்பம் - தன்னைப்
பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி''

என்று மகாகவி பாரதியார் கூறியாங்குப் பலருக்கும் உதவி, இனிமையாய் நடக்கும் காந்தியாசிரியர் பெரிய தவமுனிவரேயாவார்.

## அண்டினோரை ஆதரித்த அண்ணல்

காந்தியாசிரியர் அவர்கள் பணவசதி படைத்தவராகவோ, வீடுவாசல் சொத்துச் சுகங்கள் எதுவும் உடையவராகவோ இல்லை. எனினும் அவரை அண்டிப் பலவகை உதவிகள் பெற்றோர் மிகப்பலர். தம்மிடம் வந்தவர்க்குத் தம்மால் இயன்ற உதவியை செய்யத் தவற மாட்டார். அவரிடம் பண உதவி பெற்றோர் பலர். தமது கைவசத்தில் பணமில்லையாயின் பிறரிடம் கடன்பட்டும் அவர் உதவி செய்தவர். அத்தகைய உதவியைப் பெற்றவர்களிற் பலர் ஊர்விட்டுப் போயினர். பலர் கடனைத் தீர்க்காது விட்

டனர். இவரோ தாம் கடன் எவ்வெவரிடமெல்லாம் பெற்றாரோ, அவ்வவர்க்கெல்லாம் முதலும் வட்டியுமாகக் கொடுப்பதென்ற உறுதியில் திறம்பினாரல்லர். அதனால் சில இலட்சம் ரூபாய்களுக்குக் கடனாளியானார். சென்ற சில ஆண்டுகளாகக் கடன் சுமையில் தத்தளித்த காந்தி ஆசிரியர்க்கு அவரின் அன்புக்குரிய உறவினர், நண்பர், நல்லவர்கள், இயன்றவரையில் அக்கடனில் பெரும் பகுதியைத் தீர்க்க உதவினர். இன்னும் ஒருபகுதிக் கடன் இருந்தே வருகிறது. தாராள மனமுடைய நல்லோர்கள் அதனையும் விரைவில் தீர்க்கச் செய்து, அவர் மேலும் ஆர்வத்துடன் பொதுச் சேவையில் ஈடுபட வைப்பார்கள் என்று நம்புகிறோம்.

## இதோ அவர் காட்சி தருகின்றார்

நடுத்தரமான உயரத்திலும் சிறிது கட்டையான தோற்றம். தேகமோ ஒல்லி யென்றோ ஊதியதென்றோ கூறமுடியாதபடி நடுத்தரமான தேகம். அழகு அலங்காரங் களை விரும்பாத போக்கு, குப்பாயம் என்னும் சட்டையை அவர் தரித்ததை எந்த வேளையிலாவது நான் காணவில்லை. இடுப்பில் நாலுமுழ வேட்டி, இன்னொரு நாலுமுழ வேட்டியைச் சால்வையாக மேனியில் போர்த்திருப்பார். அவருடைய வேட்டி மடியில் பலபல கூட்ட அழைப்புக்கள், கணக்கு விபரங்கள் எழுதிய துண்டுகள் காசு முதலியன நிறைய இருக்கும். கணக்குகளை எழுதி வரவு செலவு விபரம் காட்டுவது அவருக்குக் கைவந்தகலை.

## வாழும் வேளையிலே நல்லவர்களை இனங்கண்டு கௌரவிப்போம்

மறைந்த பின்னரே பெரியோர்களை மதித்துப் போற்றும் முறை முந்தையோர் கொண்டது. இன்றோ வாழும் காலத்திலேயே பெரியோரைக் கௌரவிக்க நல்லவர்கள் பலர் முனைகின்றனர். எங்கள் காந்தி ஆசிரியரை நாம் காலந்தாழ்த்தாது கௌரவித்து நன்றி மறவாத நல்லோர் என்னும் பாராட்டுதலைப் பெறுவோம். அந்த முயற்சியில் ஈடுபடும் அனைவருக்கும் எனது இனிய ஆசிகள் உள. நன்றி.

இளைஞர்களே! எழுந்திருங்கள். தேசமுன்னேற்றம் என்னும் சக்கரத்தை நகர்த்துவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள். இந்த வாழ்க்கை எவ்வளவு காலத்துக்கு நிலைத்திருக்கப் போகிறது? இந்த உலகத்துக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். உங்களுக்குப் பின்னால் நீங்கள் வாழ்ந்ததற்கு அறிகுறியாக உயர்ந்த வீரச்சின்னம் எதையாவது விட்டுச் செல்லுங்கள். அப்படியில்லாவிட்டால் இந்த மரம், கல் முதலியவற்றுக் கும் உங்களுக்கும் என்ன வேறுபாடுண்டு.

—பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்—

# இலட்சிய வாழ்வு

## பொ. கந்தையா (காந்தி) ஆசிரியர்

எல்லோரும் வாழுகிறார்கள், விலங்குகளும் பறவைகளும் வாழ்கின்றன. மரஞ்செடிகளும் வாழ்கின்றன. விலங்குகள் இயற்கையை யொட்டியே வாழ்ந்து வருகின்றன. நம்மை அண்டிச் சீவிக்கும் விலங்குகள் கூட இயற்கையிலிருந்து அதிகம் விலகிவிடவில்லை. மரங்களும் அப்படியே. ஆனால் அரிதான மானிடப்பிறவியை தாங்கி வந்த மக்கள் இன்று இயற்கையை விட்டு இன்னல் வாழ்க்கையில் இறங்கித் தவிக்கின்றனர். இறங்கிய வழியையும் கண்டிலர்; ஏறும் விதத்தையும் தெரிந்திலர். ஐயோ! பரிதாபம். ஆனால் வாழ்வுக்கு வரைவிலக்கணம் சொல்லுவதில் - எழுதுவதில் மகாவித்துவான்களாகவும் காட்சியளிக்கின்றனர். இயற்கை வாழ்வு வாழும் மனிதனைக் கிராமச் சந்தையில் மட்டுமல்ல, தேசச் சந்தையிலே கூடக் காணமுடியவில்லை. அப்படியானால் சித்திரத்திலே தான் கீறிப் பார்க்க வேண்டும்.

அன்று வாழ்ந்த இயேசு கிறிஸ்துவைச் சித்திரத்தில் பார்க்கிறோம். இலட்சிய வாழ்வை அங்கே காண்கிறோம். கற்பனை செய்கிறோம். ஆனால் அப்படி வாழமுடியாது என்று உடனே முடிவு கட்டி விடுகிறோம். புத்தர் பெருமானின் பெருந்துறலைப் படிக்கிறோம். அவரது ஞான ஒளியைப் பார்த்துக் கடவுளின் அற்புதத்தை வியக்கிறோம். அரசிளங்குமாரனான புத்தர் ஞான குருவான சரித்திரத்தைப் படித்த பின்பும் நமது வாழ்வுப் பாதையில் நாலடி வைக்க நாணுகிறோம். பேசவிட்டால் பேச்சு வேண்டாமென்று கதாப்பிரசங்கமாகவே புத்தர் சரித்திரத்தைச் சொல்லி விடுவோம். அப்படியே நபிகள் நாயகத்தின் பெருமைகளைப் பேசுவதிலும் நாம் பின்நிற்பதில்லை.

இராமகிருஷ்ண பரமகம்சரை, அவர் சீடர் விவேகானந்த சுவாமிகளை நம்மவர் சிலர் நேரில் கண்டனர். கூடி வாழ்ந்தனர். அவர்களும் மறைந்து விட்டனர். மிக அண்மையில் விடைபெற்ற பகவான் ரமணரைப் பார்த்தோம். பகவான் அரவிந்தரைக் கண்டோம். நாம் செய்து கொண்ட மாற்றங்கள் என்ன? இலட்சிய புருஷர்களைப் பார்ப்பதும் அவர்களோடு பழகுவதும், மறைந்தபின் அவர்களைப் புகழ்வதும், அவர்களுக்குக் கோயில் கட்டுவதும் தான் எமது இலட்சியங்களாய் விட்டன.

கடைசியாக காந்தியடிகளின் வாழ்க்கையை நோக்குவோம். அவர் யோகத்தில் ஆழ்ந்து கிடக்கவில்லை. மோனத்தில் மூழ்கிக் கிடக்கவில்லை. தரித்திர நாராயணர்களுடன் சேர்ந்து வாழ்ந்தார். அவர்கள் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டனர் எங்களால் ஹரிசனங்கள் படும் இன்னல்களைக் கண்டு இரங்கினர். தானும் ஓர் ஹரிசனனாகவே வாழ்ந்து அவர்களை இலட்சிய வாழ்வுக்கு இட்டுச் சென்றார். காந்திவழி செல்லுகிறோம் என்று கதர் உடுத்து மற்றவர் கண்ணுக்குக் காட்சியளிக்கும் நாம் ஹரிஜனங்களுக்குச் செய்ததென்ன? இன்னும் பாடசாலைகள் வழிவிடவில்லை. கோயிற்கதவுகள் திறக்கப்படவில்லை. ஹோட்டல்கள் அவர்கள் பசியைப் போக்கவில்லை. பெரிய பதவிகள் அவர்களை சேர்க்கவில்லை வேற்றுமைகள் இருந்தபடி இருக்கின்றன. ஹரிசனங்களுக்கில்லாத உரிமைகளை நாம் அனுபவிக்க மறுக்க வேண்டும். காந்தியடிகளை யாவது இயற்கையோடியைந்து வாழவிட்டோமா? எமது பிற்போக்குச் சக்தியும் சுயநலப்போக்கும் ஒரு கோட்ஸேயாக உருவெடுத்துக் காலத்துக்குமுன் காந்தியடிகளைக் கடவுளடி சேர்ந்தன.

வாழ்வுக்குமுன் பல சொற்களைச் சேர்த்துப் பேசுகிறோம். இலட்சியவாழ்வு, அமர வாழ்வு, சுதந்திரவாழ்வு, சுபீட்சவாழ்வு, சத்தியவாழ்வு, அன்புவாழ்வு என்றெல்லாம் கூறிவிட்டு மனம்போன போக்கெல்லாம் போகிறோம். இலட்சியவாழ்வு மனிதனின் கடமையென்பதை மறந்து விடுகிறோம். நமது பிழைகளை ஒப்புக் கொள்வதற்குப் பதிலாக அவற்றை மறுக்க முற்படுகிறோம். பஞ்சமாபாதங்களை பச்சையாகவே செய்ய கங்கணங் கட்டி நிற்கிறோம். கடைகெட்ட கைலஞ்சத்தையும் சீர்கெட்ட சீதனத்தையும் நாகரீகத்தின் சின்னங்களென்று கைக்கொள்கிறோம். பலருடைய உதவியும் பெற்றுக் கட்டிய பொது ஸ்தாபனங்களை நம்மில் பணம் படைத்தார் சிலர் அபகரித்துக்கொண்டு நாம் ஆட்சி செலுத்தி அனுபவிப்பதோடு நின்று விடாமல் நமது சந்ததிக்கும் உரிமை யாக்கி அழியாப்பழியை அநியாயமாகச் சம்பாதிக்கிறோம். இவ்வாறு எல்லோரும் நரக லோகத்துக்கு நடைகட்டுகிறார்கள். சுவர்க்கலோகத்தைச் சிந்திப்பதற்கோ சிலர்தானும் இல்லை. எல்லோரும் பாலைவனத்தில் பரிதவிக்கிறார்கள். பசுந்தரைகளைப் பார்த்து மகிழ மனிதர் எவருமில்லை.



(1972ம் ஆண்டு சதுர்க்கச்சேரியை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தபோது எடுத்த படம்)

வாழ்க்கையின் இலட்சியங்களை ஒவ்வொன்றாக எழுத இச்சிறு கட்டுரை இடந்தராது. ஆகவே இலட்சிய வாழ்வை வாழ்ந்து எம்கண்முன் நின்ற மகாத்மாவை மனதிலிருத்துவோம். இலட்சிய புருஷர்களின் வாழ்க்கை வரலாறுகளையெல்லாம் பிறர்எழுதி வைத்தனர். அவ்வாறு வாழ முடியாதென்று கூறி அவர்கள் உபதேசங்களை வாய்ப்பாடஞ் சொல்லுமளவில் நின்று விட்டோம். இதுமட்டுமல்ல மதத்தின் பேரால் போர்களையும் தொடுத்தோம். மதம் மனிதனை அழிக்கும் அணுகுண்டு எல்லைக்கும் வந்துவிட்டது. கடவுள் இந்நிலையில் காந்தியடிகளை அனுப்பியதோடு அவர் சரித்திரத்தை அவரையே எழுதவும் செய்து ஓரேமதம், ஒரேகடவுள், ஓரேமக்கள், ஒரே உலகம் என்ற சமரசஞானத்தையும் மக்கள் குலத்திற்கு உணர்த்தினார்.

# வைர விழா

காந்தியடிகளின் சுயசரித்திரமான சத்திய சோதனைதான், இலட்சியவாழ்வை நமக்களிக்கக்கூடிய ஒரே ஔடதம். இதனால் நமது உடல் உள நோய்கள் தீரும். சத்திய வேட்கை, அன்பாசை ஆகிய பசிகள் ஏற்படும். இவற்றுக்குக் கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் உணவாகக் கொள்ள வேண்டும். அப்போது இலட்சிய வாழ்வுக்கான விதிகள் நமது மனச்சாட்சியிற் புலனாகும். அதன் வழி செல்வோம். அது தனி வழி அன்று! புதுவழியுமன்று. அன்று அரிச்சந்திரன் சென்றவழி. இன்று காந்தியடிகள் சென்ற வழி. வள்ளுவர் வகுத்த வழியும் இதுவே. இன்னும் எத்தனையோ பெரியோர்கள் சென்று சென்று சிறப்புற்றிருக்கும் வழியுமாகும். ஆதலால் நாம் பயமின்றி அந்த இலட்சிய வழியிலே செல்லுவோம்.

சத்திய சோதனையாகிய சாத்திர கூடத்தில் நமது இளைஞர்கள் வாழ்க்கைப் பரிசோதனை தொடங்க வேண்டும். பெற்றோர்களும் பெரியோர்களும் இலட்சிய வாழ்வைச் சிறுவர்களுக்கு வாழ்ந்து காட்ட வேண்டும். இதற்கேற்றபடி கல்வி, தொழில், பழக்கம் எல்லாம் கொடுக்கப்படல் வேண்டும். மாணவர்களைப் பரீட்சையில் சித்தியெய்தப் பண்ணுவது மட்டும் பாடசாலையின் இலட்சியமாக இருக்கக்கூடாது. எத்தனை இலட்சிய புருஷர்களை எத்தனை இலட்சியப் பெண்களை உற்பத்தி செய்திருக்கிறது என்பதிற்றான் ஒரு பாடசாலையின் வளர்ச்சியும் உயர்ச்சியும் தங்கியுள்ளன. காந்தியடிகள் தாயாருக்கு சத்தியம் செய்து கொடுத்து இங்கிலாந்து சென்று தம் வாழ்க்கையைப் பேணியது போல நமது இளைஞர்களும் பெற்றோருக்கோ ஆசிரியருக்கோ சத்தியஞ் செய்து கொடுத்துப் பிற்கால வாழ்வில் அதனைப் பேண வேண்டும். தெய்வத்தன்மை மிக்க இளஞ்சிறுவர்களிடம் இப்படிச் சத்தியம் கேட்பதற்கு பெற்றோரும் ஆசிரியரும் தம்மைத்தகுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். இலட்சியவாழ்வு வாழும் ஆசியர்கள்தான் பாடசாலைகளில் அமர்த்தப்பட வேண்டும். மற்றவர்கள் தாமாகவே இந்தப் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வது கௌரவம் என்பதோடு சமூகத்துக்கும் தேசத்துக்கும் செய்யும் பெரிய தர்மமுமாகும். இலட்சிய வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக பாடசாலைகளும் ஆசிரியர்களும் அமையும் போதுதான் மக்களிடையே நாளடைவில் இலட்சிய வாழ்வு முளை கொள்ளும்.

இலட்சிய வாழ்வே இயற்கை வாழ்வு

(நன்றி - பண்ணாகம் மெய்கண்டான் வெள்ளி விழாமலர் - **1950.**)

ஓம்

**திருமதி. பா. நல்லரெட்ணசிங்கன்**
(ந. பாலேஸ்வரி)
தமிழ்மணி
T. P:-026-22168

157, டைக் வீதி,
திருகோணமலை.
25-11-92

## நடமாடும் வாசிகசாலை
# காந்தி ஐயா

திருக்கோணமலையில் ஒரு நடமாடும் வாசிகசாலை சேவையில் உள்ளது என்றால் அது காந்தி ஐயா என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. பொ. கந்தையா ஆசிரியர் அவர்கள் தான்.

இவர் விதிவசத்தால் யாழப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் இவரது சேவை முழுவதும் திருக்கோணமலைக்கே சொந்தமாகிறது. இவரது வாழ்க்கையின் பெரும்பகுதி திருக்கோணமலையிலேயே கழிந்துவிட்டது. அவரை இந்த மண்ணுடன் பின்னிப்பிணைக்க அவரது திருமணமும் ஒரு காரணியாக இருந்திருக்கலாம் திருக்கோண மலையைச் சேர்ந்த இராஜநாயகி பொன்னையா என்பவரை சர்வோதய முறைப்படி மணந்து அதன்பின் தன் வாழ்க்கையை இந்த மண்ணிற்கே சொந்தமாக்கி விட்டார்.

இவர் ஒரு ஆசிரியராகச் சேவை செய்து பொதுத் தொண்டில் கூடுதலான நாட்டம் இருந்ததன் காரணமாக ஓய்வு பெறும் வயதெல்லையை அடையுமுன்பே தொழிலில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். பொதுவாழ்வுக்கு தொழில் ஒரு தடங்கல் என்பதை உணர்ந்து சுயநலமின்றி சேவையில் ஈடுபட்டார் இவரது சேவைகள் பல தரப்பட்டனவாக இருந்தாலும் எதிர்கால இளைஞர்களிடை வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்கள் அறிவைப் பெருக்கவும் பொதுவாகப் பிரயோசனப்பட்டது. எங்கெங்கு விழாக்கள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் தன் புத்தகங்களை பரப்பி தன் சேவையை ஆரம்பித்து விடுவார்.


இவரது சமயப் பணிகளும் அளப்பரியன. ஆலயங்கள் தர்ம ஸ்தாபனங்கள் போன்றவற்றிற்கு எவரையாவது பிடித்து உதவி பெற்றுக் கொடுப்பதில் இவர் நிபுணர்.

சிவானந்த தபோவனச் சிறுவர் இல்லத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களில் ஒருவராக இருக்கும் இவர், அந்த இல்லத்தைப் பலவருடங்களாக நடாத்தி வருகிறார்.

செய்தி இன்பமாக இருந்தாலும் துன்பமாக இருந்தாலும் இவர் தன்னை மறந்து 'ஆனந்தம்' என்று கூறிவிடுவார். அந்த அளவுக்கு இவர் மனம் பக்குவப்பட்டுள்ளது. இவரை இதன் காரணமாகப் பலர் ஆனந்தம் என்றும் அன்பாக அழைப்பதுண்டு.

கால்களில் பாதரட்சையின்றிப் பலதூரம் நடந்து சேவை செய்ய இவர் ஒருவரால் தான் முடியும். இந்த வயதிலும் புத்தகக்கட்டைத் தூக்கிக் கொண்டு தெருத்தெருவாக அறிவொளி பெருக்கும் ஐயா அவர்கள் இன்னும் பலகாலம் வாழ்ந்து சேவையைத் தொடர எல்லாம் வல்ல இறைவன் அவருக்குப் பூரண ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் நல்க வேண்டும் என இறைஞ்சுகிறேன்.

திருமதி. பா. நல்லரெட்ணசிங்கன்



ஸ்ரீ சண்முக மாணவர் இல்ல 35 வது ஆண்டு நிறைவு விழாவில் காந்தி மாஸ்டர் உரையாற்றும் போது எடுத்த படம்.

ஓம்



# கந்தையா - இராசநாயகி திருமண விழாவில்

வித்துவான், பண்டிதர்.
திரு. கா. பொ. இரத்தினம்
எம். ஏ. பி. ஓ. எல். அவர்கள்
நிகழ்த்திய

## தலைமையுரை

இன்று இத்திருமண விழாவுக்குத் தலைமை தாங்குவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. 'சர்வோதய' முறைப்படி நடக்கும் திருமணக் காட்சி யாவர்க்கும் இன்பமளிக்கத் தக்கதன்றோ! பொதுநலத் தொண்டுக்காக அல்லும் பகலும் உழைத்து வருபவர் காந்நீய வழியினைப் பின்பற்றி நடப்பதால் 'காந்தி ஆசிரியர்' என அன்பர்களாற் போற்றப்படுபவர் - திருமணஞ் செய்யும் பொழுது எல்லார்தம் உள்ளமும் இன்பமடைவது இயல்பே. இத்தகைய அன்பர் என்னுடைய மாணவர் என்று என்னும் பொழுது யான் அடையும் இன்பத்திற் கெல்லையில்லை. தனக்கென முயலாது பிறர்க்கென முயலும் பணியில் ஈடுபடுவதற்குத் துறவறமே சிறந்த நெறி எனக் கருதி, அதனை மேற்கொள்ள நினைத்தவர், இல்லறத்தின் சிறப்பையான் நினைவூட்டியதனாலும், காதலின் தூய்மையையும் சிறப்பையும் அறிந்ததாலும், இல்லறம் புக முடிவுசெய்து, இன்று அவ்வறத்தை மேற்கொள்ளுதல் கழிபேருவகை பயக்குஞ் செயலாகும். மேலும் இல்லறமே இயற்கை நெறி என்று மக்களுக்கு உணர்த்திய திருவள்ளுவர் தம் திருநாளிலே, இம்மாநகரில் திருக்குறள் மாநாடு நடக்கும் இந்நாளிலே - பல நாட்டறிஞர்களுங் குழுமிய இந்தப் பேரவையிலே இத்திருமணம் நிகழ்வதை நினைக்க நினைக்க மகிழ்ச்சி மிகப் பெருகுகிறது.

இல்லறமும் துறவறமும் ஒன்றற்கொன்று மாறானவை எனுங்கொள்கை இடைக் காலத்தேற்பட்டது. பல்லாயிர ஆண்டுகளாகச் சிறப்புடன் வாழ்ந்து வந்த தமிழ்மக்கள் போற்றிய நல்லறம் - இயற்கையோடிசைந்த அறம் - இல்லறமேயாகும். இந்த இல்லறத்தின் பெருமையைத் தமிழ்மறை தந்த திருவள்ளுவர்பெருமான் மிகச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

''இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை''

என்பது அவர்தம் வாய்மொழி இயற்கை நெறியாகிய இல்லறத்தில் வாழ்ந்து தொல்காப்பியனார் கூறுவதுபோல், 'காமஞ் சான்ற கடைக்கோட்காலை' மேற்கொள்ளும் அறமே தமிழர் கண்ட துறவறமாகும்.

இறவாத இன்ப அன்பைப் பெறுவதற்கு வழியாகவுள்ளது இல்லறமே. ஓர் ஆண் மகனும் ஒரு பெண்மகளும் காதலினால் ஒன்றுபட்டு ஈருடற்கு ஓருயிராக இணைந்து வாழும் அன்புவாழ்வை - இன்பவாழ்வைவிடச் சிறந்த வாழ்வு வேறுளதோ? அன்பினால் இன்பமடையும் இவ் வாழ்வின் உயர்ந்த நிலையை

காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத் துளோருயிர் கண்டனம் யாமின் றியாவையுமாம்
ஏகத் தொருவன் இரும்பொழில் அம்பல வன்வலையில்
தோகைக்குத் தோன்றற்கும் ஒன்றாய் வருமின்பத் துன்பங்களே,

என மணிவாசகப் பெருமானார் விளக்குகிறார்.

ஒருவருக்கு வரும் இன்பத்தையும் துன்பத்தையும் மற்றவரும் தமதாகக் கொண்டு மங்கல வாழ்வை நடத்திவரும் காதலனுங் காதலியும்,

''பெறுமவற்றுள் யாமறிய தில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற''

என வள்ளுவர் பெருமான் உயர்த்திக் கூறும் மக்கட் பேற்றைப் பெறுகின்றனர். தம் மக்களின் இன்பத்துன்பங்களையுந் தமதாகக் கொள்கின்றனர். காதலர்தம் அன்பும், உறவும், உள்ளமும் விரிகின்றன. படிப்படியாக மக்கள், சுற்றத்தார், அயலார், ஊரவர், உலகத்தவர் என்பேரிடத்து அன்பு செலுத்துகின்றனர். உயிர்கள் எல்லாவற்றிடமும் அவர்களுக்கு அருள் பிறக்கிறது; அவர்தம் காதலன்பு வளர்ந்து வளர்ந்து, விரிந்து விரிந்து, அருளாகிறது தன்னலம் மறைகிறது; பிறர் நலத்துக்கு உழைக்கும் மனப்பான்மை தோன்றுகிறது ''எல்லாரும் வாழவேண்டும்'' எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என விழைகின்றனர். அவர்தம் வாழ்வு அன்பிற் றொடங்கித் துறவறத்தில் முடிகிறது-

இன்பம், துன்பம் என யாம் கருதுவனயாவும் நமது மன நிலையைப் பொறுத்தனவே காதலன்பினால் துன்பந்தையும் இன்பமாகக் கொள்ளும் மனநிலை ஏற்படுகிறது ''நும்மொடு துன்பம் துணையாக நாடின் அதுவல்லது இன்பமும் உண்டோ எமக்கு'' என்று ஒரு மங்கை நல்லாள் கேட்கிறாள். காதலருள், ஒருவர் மற்றவருக்காக வாழும் வாழ்க்கை ஏற்படத் தியாக உணர்ச்சி உண்டாகும். இந்தத் தியாக உணர்ச்சியே உண்மைக் காதல் வாழ்வின் உச்சநிலை. இஃது ஏற்பட்டால் வையகம் வானகமாக மாறிப் பேரின்பத்தை அளிக்கும். மக்களிடை மாத்திரமன்றி விலங்குகளிடத்துங்கூட, இந்தத் தியாக உணர்ச்சி உண்டென நமது புலவர் பெருமக்கள் பாடியுள்ளர்.

ஒரு கலைமானும் அதன் பெண்ணும் தண்ணீர் தேடிச் செல்கின்றன; ஒரு சுனையைக் காண்கின்றன. அதில் மிகக் கொஞ்ச நீர்தான் இருக்கிறது; ஒரு மானுக்கே போதாது. அந்நீர் முழுவதையும் பெண்மானையே குடிக்கச் செய்ய விரும்பியது அந்த ஆண் மான். தான் குடிக்காவிடின் தன் பெண் மானுங் குடிக்காது என்பதை அது நன்கு அறிந்துளது. ஆதலினால், தானுங் குடிப்பதுபோலக் கள்ளஞ்செய்து நீர் முழுவதையும் பெண் மானையே குடிக்கச் செய்கிறது. எவ்வளவு உயர்ந்த தியாகம்! தன் தலைவன் குடித்தாற்றான் தானுங் குடிக்கும் இயல்புடைய பெண்மானின் திண்மை நிலைதான் என்னே!

இந்தக் கதையை மாறன் பொறையன் எனும் புலவருடைய பாட்டொன்று கூறுகிறது.

''சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதுஎன்று எண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி''

என்பதே அப்பாட்டு.

ஒருவர் மற்றவருக்காகத் தியாகஞ் செய்யும் வாழ்வு - அன்பினால் இன்பம் அடையும் வாழ்வு - கருத்தொருமித்த காதலரிடையே தான் சிறந்து விளங்கும். இன்று இங்கே நடக்கும் திருமணம் காதல் மணம் என்பதை அன்பர்கள் அறிவார்கள். உயர்ந்தது, சிறந்தது, இனியது எனத் தமிழர் கண்ட மணம் காதல் மணமே. நம் பண்பாட்டின் சிறப்புக்கு, பழமையின் புதுமைக்கு, கலைகளின் தோற்றத்துக்கு, வாழ்வின் உயர்வுக்குக் காரணமாயிருந்தது காதல் மணமே இத்தகைய காதல் மணத்தை இக்காலத்தில் நம் நாட்டில் காண்பதே அருமையாகிவிட்டது. உண்மைக் காதலுக்கு இனி இடமில்லை என்று கூறத்தக்க நிலை உண்டாயிருக்கிறது. பணம் பதவி, குலம்குடி முதலிய காரணங்களாலேயே திருமணங்கள் நடைபெறுகின்றன. இதனாலே, நம் நாட்டுக் குடும்பங்கள் பலவற்றிலே அன்பையும் இன்பத்தையுங் காணமுடியாதிருக்கிறது பிரிந்து வாழுதற்கு விரும்பி, நீதிமன்றங்களுக்குச் சென்று முறையிடும் கணவர், மனைவிமார்தம் தொகை, நாளுக்குநாள் கூடிக்கொண்டே போகிறது. ஆகவே; பணத்துக்கும் குலத்துக்கும் அடிமையாகி இன்ப வாழ்வைச் சிதைக்கும் மடமையை நம் நாட்டிலிருந்து அகற்ற வேண்டும்; காதல் வாழ்வை நன்கு மலரச் செய்தல் வேண்டும்.

மேலும், காந்தியடிகள் வகுத்த சர்வோதய முறைப்படி இன்று நடக்கும் இத் திருமண முறை நம் நாடெங்கும் பரவுதல் நன்று. அறியாமையாலும் அகங்காரத்தாலும் அளவின்றிப் பணத்தைச் செலவு செய்து திருமண விழாக்களை நடத்தும் வழக்கத்தை ஒழித்துவிடல்வேண்டும். திருமணச் செலவுக்காகக் கடன்பட்டுப் பின்னர் கஷ்டப்படுங் குடும்பங்களைக் கணக்கிட முடியுமா? அளவின்றி ஆடை அணிகளுக்குச் செலவு செய்துவிட்டு அவலப்படுவோர் எத்தனை பேர்? திருமண நாளன்று அணியுங் கூறையை நூற்றுக் கணக்கில் பணத்தைக் கொட்டி வாங்கிப் பின்னர் அதனையெடுக்காது பெட்டிக்குள் வைத்துப் போற்றும் மடமைதான் என்னே! 'வாழ்க்கைத் துணை' என வள்ளுவர்

போற்றும் பெண்கள் பலர் இக்காலத்திலே ''வாழ்க்கைப்பார''மாக இலங்குகிறார்கள். குடும்பச் சிறப்புப் பெண்ணையே பொறுத்துளது.

''இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை''

என்பது தமிழ் மறை.

பெண்களுக்கு வேண்டியன பலவகைப் பட்டாடைகளும் ஆபரணங்களுமல்ல; மனை மாட்சியும், வருவாய்க்குத்தக்க வாழுதலுமே என்பதைப் பலர் மறந்துவிட்டனர். அன்பு மலர்ந்து இன்பம் பெருகி அருள் ஓங்குவதற்குச் சிக்கன வாழ்வும் இன்றியமையாதது.

நமது காந்தியாசிரியர் திருவாளர் கந்தையா அவர்கள் எளிமையான தூயவாழ்வு நடத்துபவர். அவருடைய வாழ்க்கைத் துணைவியாகிப் பொதுநலத் தொண்டு புரிவதற்கு முற்பட்ட திருநிறைச்செல்வி இராசநாயகியின் பெருங்குணம் போற்றத்தக்கது. ஆடம்பரத்தையும் ஆரவாரத்தையும் நாகரிகம் என்றெண்ணி அலைபவர்களுக்கு ''வையத்தில் வாழ்வாங்கு'' வாழும் முறையை இவர்களுடைய காதல் வாழ்வு புலப்படுத்தும் என்றெண்ணுகிறேன். ஒன்றுபட்ட உள்ளத்துடன் தொண்டு செய்யும் பணியில் ஈடுபட்ட காதலரின் வாழ்வில் அன்புண்டு, அறமுண்டு, அழகுண்டு, இன்பமுண்டு, எல்லாமுண்டு என்பதை இவர்களுடைய குடும்பவாழ்வு எடுத்துக் காட்டுவதாக, இவ்விருவரும் சிறப்பாக இல்லறம் நடாத்தி, விரும்பிய பேறுகளைப் பெற்றுப் பல்லாண்டு வாழ்வாராக.

வாழ்க கந்தையா—இராசநாயகி!

வாழ்க தமிழ் மறை!

வாழ்க உலகம்!

திருகோணமலை. 28-05-1953

மனிதனும் அவனுடைய செயல்களும் வெவ்வேறானவை. நல்ல செயலைப் பாராட்ட வேண்டும். தீய செயலைக் கண்டிக்க வேண்டும். செயலைச் செய்யும் மனிதர் நல்லவராயிருப்பினும் தீயவராயிருப்பினும் செயலின் தன்மைக்கு ஏற்றவாறு மரியாதைக்கும் பரிதாபத்திற்கும் உரியவராகின்றார். பாவத்தை வெறுப்பாயாக; ஆனால் பாவம் செய்தவரை வெறுக்காதே என்பது உபதேசம். இது புரிந்து கொள்ள இலகுவாயும், நடைமுறைப்படுத்த அரிதாயுமுள்ளது. இதனாலேயே பகைமை என்ற நஞ்சு உலகத்தில் பரவுகின்றது.

—காந்தி அடிகள்—


# நல்ல சமுதாயம்

பொ. கந்தையா காந்தி ஆசிரியர்.

நல்லார ஒருவர உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை. நல்லவர் ஒருவருக்காகப் பெய்த மழையை நாட்டிலுள்ள எல்லோரும் பயன்படுத்தித் தாமும் நல்லவராகலாம்.

நல்லவர்கள் பலர் சேரும் போது தான் நல்ல சமுதாயம் உருவாகும். நல்லவர்கள் யார்? நல்லவர்கள் என்று அவர்கள் ஏன் அழைக்கப்படுகிறார்கள்? நல்லவர்களாய் வாழ்வது எப்படி? இக்கேள்விகளுக்குத் தக்கபதில் கண்டு பிடிப்பதில் தான் நல்ல சமுதாய அமைப்புத் தங்கி இருக்கிறது.

ஒரு கருமத்திலும் ஈடுபடாது தானும் தன்பாடுமாய் இருக்கும் ஒரு சிலரையும நல்லவர்கள் என்று அழைக்கிறார்கள். இது தவறாகும். நல்ல சமுதாயத்தை அமைப் பதற்காகத் தனது உடல் பொருள் ஆவி அத்தனையும் தியாகம் செய்பவனே நல்லவன். மனிதப்பிறவி இதற்காகவே கிடைத்தது. தியாகச் செயலே சிறந்த தெய்வ வழிபாடாகும்.



(1947ல் கொக்குவில் இராமக்கிருஷ்ன மிசன் பள்ளியில் புலவர் வகுப்பு ஆசிரியர், மாணவர்களுடன் எடுத்த படம் இடது கோடியில் இருப்பவர் காந்தி ஆசிரியர்)

எல்லா உடலும் இறைவன் ஆலயமே. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி இன்பத்துக்காக இயன்றது செய்வதே சேவை. 'சேவை செய் அல்லது செத்துமடி' என்றார் பெரியோர். தேச சேவையே சிறந்த தர்மம். துன்பம், கவலை, ஆபத்து இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள மனிதன் விரும்புகிறான். இதற்கு வழி தர்மம் செய்வது மாத்திரமே. தாமம் தலை காக்கும்.

நல்ல சமுதாயத்தை உருவாக்க உபதேசித்த ஔவைப்பிராட்டியார் ''அறஞ் செய விரும்பு'' என்றார். அத்தோடு ''ஆறுவது சினம்'' என்றார். கோபம் பாவம். சினத்தினால் தர்மம் பலனற்றதாகிவிடும். இவ்விரு அறிவுரைகளும் நல்ல சமுதாயத்தை அமைக்கப் போதுமானவை.

''இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'' என்று இரு சாதிகளைப்பற்றி ஔவையார் குறிப்பிட்டார். நாம் இன்று பல சாதிகளை உருவாக்கி, அவற்றைப்பேசி வேறுபட்டு, பகைகொண்டு தீய சக்திகளை வளரவிட்டு நல்ல சமுதாயத்தை உருவாக விடாது தடை செய்து கொண்டிருக்கிறோம்.

ஈயாத பணக்காரன் உண்மையில் வறியவன். பரிதாபத்துக்குரியவன். பொருளிருந்தும் தர்மம் செய்து புண்ணியத்தைத் தேடாத பாவியாகிறான். பணம் காக்கும் பூதமாகிறான் கொடுக்கும் வறியவன் உண்மையில் செல்வந்தன்; செல்வம் என்பது சிந்தையின் நிறைவே. இயன்ற தர்மத்தைச் செய்து புண்ணியவான் ஆகிறான்.

தர்மம் செய்யாதவனையும், தீயவழியில் சம்பாதிப்பவனையும், தீயபழக்கங்கள் உடையவனையும் வேறு காரணங்களுக்காகச் சமுதாயம் உயர்த்தி வைக்கிறது. இதனால் சமுதாயத்தில் தர்மம், நேர்மை, நற்பழக்கம் இவற்றின் முக்கியத்துவம் அற்றுப் போகிறது பணமும் பதவியும் மிகப்பெரிதென்றும், அவற்றை எப்படியும் தேடிக் கொள்ளலாம் என்றும் பலர் கருதும் அளவுக்குச் சமுதாயம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

தனிமனிதன் தனது உயர்வுக்காக உழைக்கிறான்; முன்னேறுகிறான். அதே நேரத்தில் சமுதாயத்தில் பின்தங்கியவர்களுக்காகவும் சமுதாயத்தின் பொது நலனுக்காகவும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். தனி மனிதன் சுயநலத்தைக் குறைத்துப் பொது நலத்தைக் கூட்டிச் செல்வதில்தான் நல்ல சமுதாயம் அமைகிறது. பொது நலத்தில் தன்நலம் அடங்கி விடுகிறது.

தனிமனிதன் தனது அறிவு, சிந்தனை, உழைப்பு இவற்றை ஆண்டவனுடைய சொத்தாக ஏற்றுக் கொண்டு, தான் அவற்றின் தர்மகர்த்தாவாக நடந்து கொள்ள வேண்டும். அவற்றைத் தனக்காகவும் சமுதாயத்துக்காகவும் பகிர்ந்து கொள்ள வேண்டும். பல நல்லவர்கள் தமது அறிவு ஆற்றல் உழைப்பு இவற்றைப் பொது நலனுக்குத் தியாகம் பண்ணும் போதுதான் நிச்சயம் நல்ல சமுதாயம் உருவாகும்.

சமுதாயத்தின் பொது நலன்கள் இப்போது சரியாகப் பேணப்படவில்லை கோயில், பாடசாலை, வாசிகசாலை வைத்தியசாலை, பண்டசாலை, வீதி, விளையாட்டிடம் இவற்றைச் சரியாகக் கவனித்து நல்ல நிலையில் மக்களுக்கு உதவச் செய்ய வேண்டும், இன்று இவை அநாதைப்பிள்ளைகள் போல் காட்சியளிக்கின்றன. எதற்கும் அரசாங்கத்தை எதிர்பாராது மக்கள் தமது உழைப்பைக் கொண்டு இவற்றை ஆக்கவும் நிர்வகிக்கவும்

வேண்டும். குடியிருக்கும் வீடுகள், வயல்கள், தோட்டங்கள், தொழிற்சாலைகள் எல்லாம் சமுதாயத்தின் தேவைக்காக அமைய வேண்டும் அப்போது வீடற்றவர், காணி அற்றவர். தொழில் அற்றவர் என்று யாரும் இருக்க மாட்டார்.

உழைப்பின் பெரும் பகுதி சமுதாயப் பொது நிதிக்கு வந்து சேர வேண்டும். அதைக் கொண்டு பிள்ளைகளின் கல்வி, தேகசுகம், தொழில் என்பன கவனிக்கப்பட வேண்டும். உற்பத்தியைத் தூண்டி உற்பத்திப் பொருட்களைச் சமுதாயம் உபயோகித்து ஆதரிக்க வேண்டும். உழைக்க ஆளில்லாத குடும்பங்கள், முதியோர்கள், வலது குறைந்தவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மக்களின் மிகக் குறைந்த தேவைகளாவது பூர்த்தி செய்யப்படவேண்டும்.

முதலில் சுமார் பத்துக் குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து தாங்கள் கூட்டாக முன்னேற ஒரு திட்டத்தை வகுத்து அதன்படி ஒழுகவேண்டும். ஒவ்வொரு குடும்பத்தின் வரவு செலவுத்திட்டங்களும் ஆராயப்பட வேண்டும். எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழ்ந்து சேமித்துப் பொது நிதியைப் பெருக்கி ஆக்க வேலைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும். பின் சுமார் நூறு குடும்பங்கள் ஒன்று சேர்ந்து புது யுகம் காண வேண்டும். இப்படியாக ஒரு கிராமம் முழுவதும் சேர்ந்து முன்னேற வேண்டும். பொய், களவு, குடி, பொறாமை, இலஞ்சம், மோசடி போன்ற தீய பழக்கங்களை முற்றாக ஒழிக்க வேண்டும். பொலிஸ் நிலையம், கோடு இவற்றின் உதவியை நாடாது சமாதான சபைகளை அமைத்து நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்ட வேண்டும்.

சமுதாயத்தில் உள்ள தலைவர்கள், பெரியோர்கள், அதிகாரிகள் ஆசிரியர்கள்' ஊழியர்கள் எல்லோரும் நல்லவர்களாய் வாழ வேண்டும். முன்மாதிரியாக வாழ்ந்து மற்றவர்களுக்கும் வழிகாட்ட வேண்டும். வெறும் பேச்சால் உபதேசத்தால் பயனில்லை. ஒழுக்கம் உயிரினும் மேலாக மதிக்கப்பட வேண்டும். தர்மசிந்தனை, ஒழுக்க வாழ்வு இவற்றால் தனிமனிதனையோ, சமுதாயத்தையோ மதிப்பிட வேண்டும்.

நல்ல சமுதாயத்தில் சாதி, சமயம், பாஷை இவற்றால் சண்டைகள் ஏற்படாது. ஒவ்வொருவரும் தமது பண்பாட்டைக் காத்துக் கொண்டு மற்றவர்களையும் மதித்து ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழவேண்டும். பணக்காரர், வறியவர், படித்தவர், பாமரர் என்ற வித்தியாசமின்றிச் சகோதரர்களாய் வாழவேண்டும். கெட்டவர்களைக் கழித்துவிடாது நாளடைவில் அவர்களைத் திருத்தி நல்லவர்களாக்க வேண்டும். ''கடையனுக்கும் கடைத்தேற்றம்'' என்ற சர்வோதயக் கொள்கை சமுதாயத்தில் வேரூன்ற வேண்டும். காந்தியடிகளின் சீடரும் நல்ல சமுதாய சிற்பியுமான வினோபா அடிகளின் கருத்துக்களைப் படித்துச் சிந்தித்துச் செயலாற்றி சர்வோதய சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

## வைர விழா

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்றார் பாரதியார். இன்று உத்தியோகத்துக்கு வந்தனை நடக்கிறது. உத்தியோகத்தரைக் காத்துக் கொண்டு பல்லாயிரக் கணக்கான பெண்கள் விவாகம் செய்யாதிருக்கின்றனர். உழவும் தொழிலும் உள்ள உத்தமர்களை விவாகம் செய்யப் பெண்மணிகள் முன்வர வேண்டும். அதே நேரத்தில் சீதனமற்ற உத்தமிகளை விவாகம் செய்ய ஆண்கள் முன்வர வேண்டும் அப்போது நல்ல சமுதாயம் ஏற்படும்.

உடல் நலம்பெறக் காற்று அவசியம். அதுபோல் உயிர் நலம்பெறத் தெய்வ நம்பிக்கை அவசியம். தெய்வத்தை நம்பிவாழும், தெய்வநீதிக்கு அமைந்து வாழும் ஓர் சமுதாயம் வேண்டும். எவ்வளவு பொருள் இருந்தும் பட்டம் பதவி, வாழ்க்கை வசதி இருந்தும், தெய்வநம்பிக்கை இல்லாதவிடத்து ஒருவன் நிம்மதியாய் வாழ்வதற்கில்லை. எவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும், வறுமையின் நிழலிலும் தெய்வநம்பிக்கை உள்ளவன் நிம்மதியாய் ஆனந்தமாய் வாழ்கிறான்.

சமயத்தின் பேரால் நடக்கும் சடங்குகளும், அவற்றுக்கான அதிக செலவுகளும் மட்டுப்படுத்தப்பட வேண்டும். சடங்குகளால் மாத்திரம் சமயவாழ்வு பூர்த்தியாகாது. சமயகுருமார்கள் மக்களை தெய்வீகத்தில் ஈடுபடுத்த வேண்டும். ஆச்சிரமங்களோடு தொடர்பு கொண்டு மக்கள் தெய்வீக வாழ்க்கையைத் தேடவேண்டும் 'சமயமில்லாத வாழ்க்கை வேர் இல்லாத மரத்துக்குச் சமம் என்றார் காந்தியடிகள். சமயவாழ்வுள்ள சமுதாயம் உயிருள்ள மரம் போல ஓங்கிவளரும்.

நல்ல சமுதாயமே நாட்டில் செல்வம்.


'தனசக்தி'
திருக்கோணமலை,
03-03-1971.

நன்றி - பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயச் சிறப்புமலர் 1971 பங்குனி.

ஆன்ம சாதனப் பயிற்சியோ முழுக்க முழுக்க உபாத்தியாரின் வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் பொறுத்தது. ஓர் உபாத்தியாயர் குழந்தைகளின் நடுவில் இருக்கும் போதும்சரி. தனியாக இருக்கும் போதும் சரி தம்முடைய குணத்திலும் செயலிலும் எப்பொழுதும் அதிகக் கவனத்துடன் இருக்க வேண்டும்.

—மகாத்மா காந்தி—

ஓம்



காந்தி ஆசிரியர் எளிதில்

# மறக்க முடியாதவர்

● நால்புரக்கிழார் பொருணூல் விற்பன்னர், தமிழ்மாமணி,
புலவர்: நா. சிவபாதசுந்தரனார்.

காந்தி ஆசிரியர் என்று குறிப்பிடும் திரு. பொ. கந்தையாவுக்குப் பாராட்டு விழாவை, அவரை அறிந்த மக்கள் திருக்கோணமலையை மைய இடமாகக் கொண்டு நடாத்த முயல்கின்றனர். அடியேனும் அவர்களுள் ஒருவனாக ஒன்றுகின்றேன். அவ்விழா மலருக்கு அவரைப் பற்றிய சில செய்திகளைத் தருவதில் பெருமை பெறுகின்றேன்.

## அகப் புறததோற்றமே காந்தி ஆசிரியரானது.

திரு. பொ. கந்தையா ஆசிரியர் உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய காந்தியடிகளைக் கண்ணால் காணாதவர். 'இனியொரு விதி செய்வோம் அதனை எந்த நாளும் காப்போம்' என்று எண்ணித் துணிந்து சத்தியம், அகிம்சை முறைகளில் தன் கரும வாழ்வைச் சீருறச் செயற்படத் தொடங்கினார். நாலுமுழ வேட்டி உடுத்தல், மற்ற நாலுமுழ வேட்டியைச் சட்டையாக்காது உடலின் மேற்பகுதியைப் போர்த்தல், இவ்வாறு புறத்தோற்றத்தில் மாற்றம் புரிந்தது போலத் தான் உண்ணும் உணவிலும் மாற்றம் செய்ய விரும்பி அரிசி, காய்வகைகள் எல்லாவற்றையும் ஒன்றாக்கி அவியலில் ஒருமுறையே தன் சமையலாய் சாப்பிடும் முறையைக் கடைப்பிடித்தார். இந்தக் கடைப் பிடிப்பு நாவடக்கம், புலனடக்கம் மேற் கொள்ள ஏதுவாயிற்று. இவ்வாறு புறக்கவர்ச்சி அகக்கவர்ச்சிகளில் தம்மை விடுவிப்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்த கந்தையா ஆசிரியரைக் காந்தியாசிரியர் என்று எல்லோரும் அழைத்துக் கொண்டனர்.

## பிறப்பும் கல்விச் சிறப்பு.

"யான் வாழும் ஊரோ ஆன்ற விந்து அடங்கிய சான்றோர் பலர் உண்டு." என்று பிசிராந்தையர் கூற்றைப் போல காந்தி ஆசிரியர் தான் பிறந்த மாதகல் நுணசைப் பகுதி ஊரை வாயூற உரைப்பார். இத்தகு சான்றோர்களில் ஒருவரே ! பெரியார் ஆறுமுகம் பொன்னம்பலமாவார். சுழிபுரம் இராமுப்பிள்ளை மகள் நன்னிப்பிள்ளையம் மையை மணந்து மகப்பேறு உறுகையில் இரண்டாவது மகப்பேற்றில் தோற்றியவரே காந்தியாசிரியராம் திரு. பொ. கந்தையா என்பவர்.

இவர் நுணசை முருகமூர்த்தி பாடசாலை, மாதகல் விக்னேஸ்வர மத்திய வித்தியாசாலை, பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளிற் கல்வி கற்றார். இவர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்ற போதுதான் நானும் கற்றதனால், இவரின் பள்ளித் தோழனாய் விட்டேன். இவரின் கல்விச்சிறப்பை உணர்ந்த அதிபர் கா. பொ. இரத்தினம் அவர்கள் கந்தையாவான தலைமை மாணவனைப் பள்ளியில் சிறிது காலம் படிப்பிக்கப் பணித்து வைத்தார். இதுநிகழ்ந்தது 1935 - 1937ம் ஆண்டு

## இராமக்கிருஷ்ண வித்தியாலயத்தில்

### காந்தி ஆசிரியர்

கொக்குவில் இராமக்கிருஷ்ண சங்க வித்தியாலய அபிவிருத்துச் சங்கம், வித்தியாலய வளர்ச்சியில் ஊக்கமும் ஆக்கமுங் காட்டிச் செயலாற்றிய போது அதிபராகக் கடமையாற்றியவர் திரு. இ. கந்தையா அவர்கள், வித்தியாலய அபிவிருத்தி விடயமாக அமைக்கப்பட்ட குழுவினரில் ஒருவராக, அவ்வித்தியாலயத்திற்கு சுவாமி நடராஜானந்தாவால் நியமிக்கப்பட்ட ஆசிரியர் பொ. கந்தையாவும் பணியாற்றினார்.

வித்தியாலயத்தில் கற்று வெளியேறிய பெண்பிள்ளைகளுக்குத் தமிழ்க் கல்வி விளக்கமடைவதற்கு ஒரு காவிய வகுப்பு நடாத்துவதில் திரு. பொ. கந்தையா ஆசிரியர் ஊக்கம் காட்டினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் வகுப்பில் கற்று வெளியேறி வந்த என்னை அவ்வகுப்பு இயக்கும் பொறுப்பாசனாக நியமித்து ஊதியத்தோடு தான் உண்ணும் சர்வோதய உணவில் பகுத்துண்ண வைத்து அப்பணியில் வெற்றியுற்றார். அத்துடன் மகாத்மாகாந்தி, பகவான் இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் என் போரின் பெரு விழாக்களையும் எடுப்பித்து பள்ளியையும் பள்ளிச் சூழலில் உள்ள கொக்குவில் பொதுமக்களையும் ஒன்ற வைத்தார்.

### அகில இலங்கை காந்தி சேவா சங்கக் கால் கோளர்

காந்தி அடிகளாரின் கலை, தத்துவங்கள் பரப்புவதில் அதிபர் திரு இ. கந்தையாவும் காந்தி ஆசிரியர் கந்தையாவும் ஒத்த ஆர்வமுடையவராய் இருந்தனர். இவர்களோடு நானும் இணைந்தேன் இவ்வேளையில் நீர்வேலி சி. க. வேலாயுதம்பிள்ளையும் வந்து காந்தியாசிரியரை காந்தி சேவா சங்கம் அமைக்க வேண்டினார். சனி, ஞாயிறுகளில் காவிய வகுப்புக்குப் போகும் நானும் திரு சி. க. வேயின் வேண்டுகோள் நற்கருமமான தினால் அதன் கால் கோள் கூட்டம் இவ்வித்தியாலத்தில் தாங்கள் வாழும் சிற்றில்லில் கூடுவோம் என்ற என் பெருவிருப்பை வெளிப்படுத்தியதும் அதிபர் திரு இ. கந்தையவும் இசைவு அளிக்கவே காந்தீயவாதி ஹன்டி பேரின்பநாயகம் பெருந்தலைவராகவும் என்னை உப தலைவராகவும், திரு. சி. க. வேலாயுதபிள்ளை காரியதரிசியாகவும் காந்தியாசிரியர் திரு. பொ. கந்தையா தனாதிகாரியாகவும் அப்போது சமூகம் தந்தவர்கள் நிருவாக உறுப்பினராகவும் தீர்மானிக்கப்பட்டது. காந்தி சேவா சங்க நிறுவலுக்கு மூல புருடன் காந்தி ஆசிரியரே. என்னைப் பொறுத்தவரை அவர் மறக்க முடியாத மாமனிதனாய் நிலைத்துள்ளார்.

ஓம்

# நான் கண்ட காந்தி மாஸ்டர்.

சுழிபுரம், சிவத்தமிழ்மணி பண்டிதை
பொன். பாக்கியம்

1955 ஆம் ஆண்டு மார்கழி மாசம் ஒரு நாளில் அஞ்சற் பொதியொன்று எனது கைக்கு வந்தது. அதை அனுப்பியவரின் முகவரியைப் பார்த்தேன்; மகிழ்ந்தேன். பின்பு பொதியைப் பிரித்தேன். அதனுள் சேலையொன்றும் அதற்குப் பொருத்தமான சட்டைத் துணியும் இருந்தன. அதனை அனுப்பியவர் திருமதி. கந்தையா இராசநாயகி ஆசிரியை, தனசக்தி, திருக்கோணமலை இந்த இராசநாயகி யார்? இவர் இப்பொதியை எனக்கு ஏன் அனுப்பினார் என்று சிந்தித்தேன். நான் ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டமைக்கான மகிழ்ச்சிப் பரிசில் அது.

அதனை அனுப்பிய ஆசிரியையின் இலட்சியக் கணவர் திரு. பொ. கந்தையா காந்தி மாஸ்டர் அவர்கள். காந்தி மாஸ்டரின் இலட்சிய நோக்கிற்கு இணங்கி வாழ ஆசைப்பட்ட துணைவியாகிய அக்காவின் அன்புப் பரிசில் என் வாழ்வில் விலைமதிக்க லாகாத நினைவுப் பரிசிலாகும்.

காந்தி மாஸ்டர் எங்கள் சுழிபுரம் கிராமத்துக்கும் மாதகல் கிராமத்துக்கும் உரித்தானவர். எங்கள் உறவினர், எனது கணவரின் ஒன்றுவிட்ட அண்ணர். இந்த வேளையில் காந்தி மாஸ்டரில் எனக்கு ஏன் மிக்க மதிப்பும் அன்பும் ஏற்பட்டன என்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

நான் சிறுமியாக இருந்த காலத்தில், எங்கள் வீட்டின் அயலிலுள்ள வீட்டுக்கு காந்தி மாஸ்டர் இடையிடையே வந்து போவதுண்டு. அந்த வீடு அவருடைய சிறிய தாயாரின் வீடு. அங்கு அவர் வந்து போகும் வேளைகளில் நானும் அந்த வீட்டுக்குச் சென்று விடுப்பூக்கத்துடன் அவரைப் பார்ப்பேன். இடுப்பில் நாலு முழக் கதர் வேட்டி, மேலே உடம்பினைப் போர்த்து இன்னொரு கதர் வேட்டி. இரண்டு கைகளிலும் தூக்க முடியாத அளவுக்குப் புத்தகங்கள் நிரம்பிய பைகள் இரண்டு. மிகவும் சந்தோஷமாகச் சிரிப்பார். எப்பொழுதும் எல்லாம் ''ஆனந்தம்'' என்றே சொல்லுவார். இருதயத்தைத் திறந்து காட்டும் பரிபூரண ஆனந்தமான சிரிப்பு, சிறுமியாகிய என்னையும் அவர்பால் ஈர்த்தது.

என்னை ஆளாக்கிய பண்ணாகம் மெய்கண்டானில் என்னைக் கற்பித்த ஆசிரியர் பண்டிதர் அ. ஆறுமுகம் ஐயாவின் இனிய நண்பர் என்ற பரிச்சயம் உறவு முறையையும் விட மேலோங்கி நின்றது. அக்காலத்தில் எனக்கிருந்த இலட்சிய வேட்கை காரணமாக, காந்தி மாஸ்டர் மீது மிகுந்த மதிப்பும் அன்பும் ஏற்பட்டதில் வியப்பு இல்லை.

காந்தி மாஸ்டரின் மிகுந்த எளிமையான வாழ்வும், இறுக்கமான கொள்கையும், அன்பு நிறைந்த உரையாடலும், காந்தீயப் பற்றும் பலரை அவர்மீது ஈடுபாடு கொள்ள வைத்தன. வாயால் காந்தீயம் போதித்துவிட்டு வாழ்க்கையில் மாறான வேஷம் போடும் மக்கள் நிறைந்த சமுதாயத்தில், சொல்லும் செயலும் ஒன்றேயாக வாழ்ந்து கொண்டிருக்கும் பெருந்தகையாளரைப் பற்றி நினைக்கும் பொழுதே நாம் மிக்க பெருமையடைகின்றோம். அகிம்சை, தீண்டாமையொழிப்பு, சத்தியம், தியானம் என்ற காந்தியடிகளின் இலட்சியங்களைப் பேணி நடப்பவர், அவர் எவராவது எவ்விதத்திலாவது துன்பப்பட்டால் அதனைக்கண்டு துடிதுடித்து உதவி செய்யும் பண்பு காந்தி மாஸ்டரின் தனிப் பண்பாகும்.

அவர் தமது வாழ்க்கைத் துணைவியைத் திருக்கோணமலையில் கைப்பற்றிய காரணத்தால் அங்குதானே குடியிருப்பையும் அமைத்துக் கொண்டார். பொதுத் தாபனங்கள் பலவற்றில் பங்குபற்றிச் செயலாற்றுகின்றார் அநாதர்கள், வசதியற்றோருக்குத் தொண்டு செய்வதை மிக்க மனமகிழ்ச்சியோடு ஏற்று வாழ்ந்து வருகின்றார். எத்தனையோ பல வருடங்கள் ஆசிரியப் பணியாற்றக் கூடிய வயசும் வாய்ப்பும் இருந்தும் 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற இலட்சியத்தை மேற்கொண்டதினால் பொதுச் சேவை செய்வதற்காகவென்றே ஆசிரியப் பணியில் நின்றும் ஓய்வு பெற்றார்.

காந்தியடிகளுக்கு ஏற்ற கஸ்தூரிபாயைப் போன்று அவரது மனைவியாரும் நோக்கங்களுக்கெல்லாம் ஒத்துழைக்கும் இலட்சியத் தாயாக விளங்குகின்றார். தமக்கெனப் பொன்னையோ பொருளையோ பூமியையோ அவர்கள் தேடிக்கொள்ளவில்லை. காந்தி மாஸ்டர் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தொடர்ந்து சமூகத் தொண்டு புரிய வேண்டும். அன்னாரின் அன்புத் துணைவியாருக்கும், அருமை மகனுக்கும் நீண்ட ஆயுளும் மனநிறைவும் கிடைக்க வேண்டும். இதுவே எமது பிரார்த்தனை.

வணக்கம்

மத சம்பந்தமான விஷயங்களில் நம்பிக்கைகள் மாறுபடுகின்றன அவரவரின் நம்பிக்கை தான் அவரவர்களுக்கு மேலானதாகும். மத சம்பந்தமான விஷயங்களிலெல்லாம் எல்லோருக்கும் ஒரே விதமான நம்பிக்கை இருக்குமானால் உலகில் ஒரே ஒரு மதம் தான் இருக்கும்

-மகாத்மா காந்தி-

ஓம்

# மத மாற்றம்

திரு. பொ. கந்தையா (*காந்தி*) ஆசிரியர்

மனிதனை மனிதனாக்குவது மதம்; மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்துவது மதம். நிலையற்ற உலக விஷயங்களிலிருந்து மனிதனை மீட்டு நிலையான விண்ணுலகப் பெருவாழ்வுக்கு அழைத்துச் செல்வது மதம். மதத்தை ஸ்தாபித்தவர்கள் பெரிய ஞானிகள், கடவுளின் அடியார்கள், கடவுளின் தூதுவர்கள், கடவுளின் அவதாரங்கள். இத்தகைய மதத்தைவிட்டு ஒருவரும் ஓடத்தேவையில்லை. கையில் கற்கண்டை வைத்துக்கொண்டு சீனியைத்தேடி ஏன் ஓடவேண்டும். கற்கண்டும் சீனியும் ஒன்றுதானே!

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனிசிறந்தனவே' என்பது பாரதி வாக்கு. இதுபோல் நாம் உதித்த மதமும் பெருமதிப்புக்குரியதேயாகும். பணத்துக்கும், படிப்புக்கும், பட்டத்திற்கும், உத்தியோகத்திற்கும், திருமணத்திற்கும், உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும், உறங்கும் குடிசைக்கும் மதம் மாறும் மக்கள் இருக்கிறார்கள். இதற்கு மேலும் கொடுத்தால் இன்னுமொரு மதத்திற்கு மாறுவார்கள் இந்த மதமாற்றம் அறியாமையையும், அவர்கள் அஞ்ஞான இருளில் இருப்பதையும் குறிக்கின்றது. இவர்களை அறியாமையிலிருந்து அறிவுடைமைக்கும், இருளில் இருந்து ஒளிக்கும் கொண்டு வரவேண்டும். இருக்கும் மதத்தில் மனப்பக்குவத்தையும் மனமாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

மதம் மாறுவதால் ஒரு மனிதன் வாழ்க்கையில் மேம்பாடடைய முடியாது. தன் மதத்தை ஆழ்ந்து ஆராய்ந்து நன்கு படித்து தனது மதகுருவின் வழிகாட்டலில் நம்பிக்கை வைத்து வாழ்ந்தால், மேல்நிலை அடையலாம். எல்லா மதங்களும் ஒரே கடவுளைப் பற்றியும் அவரை அடையும் வழிமுறைகளைப் பற்றியும் நிறையப் போதிக்கின்றன. அப்படியிருக்க ஒரு மதத்தை விட்டு இன்னொரு மதத்திற்கு ஏன் மாறவேண்டும்.

பசுக்கள் பல நிறங்களில் இருக்கலாம். ஆனால் அவற்றின் பால் எல்லாம் ஒரே நிறமாக, ஒரே குணமாகவே உள்ளது. அதுபோல் மதங்கள் பலபெயரில் இருந்தாலும் அவை தெரிவிக்கும் உண்மை ஒன்றே. பாலுக்காகக் கறுத்தப் பசுவை விற்று விட்டு வெள்ளைப் பசுவை வாங்குவது அவசியமில்லை. எல்லா மதங்களிலும் உயர்ந்த கருத்துக்கள் இருக்கும் போது மதம்மாற அவசியமில்லை.

பிறரை மதம் மாற்றுவதில் ஈடுபடுவோர் குளிக்கப் போய்ச் சேறு பூசுகிறார்கள். தன் மதத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் மதத்தைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ எவ்வித அறிவும், ஞானமும் இல்லாதவர்களாக இருக்கையில், அவர்களைத் திருத்தி, அவர்களுக்குப் போதித்து, அவர்களைத் தெய்வத் தன்மைக்கு உயர்த்தாது, அவர்களை அஞ்ஞான இருளில் மூழ்கவிட்டு புது ஆட்களை மதத்திற்குச் சேர்க்கப் புறப்படுகிறார்கள். இப்படி மதத்துக்கு எண்ணிக்கையைக் கூட்டுவதால் எவருக்கும் பயன் இல்லை.

மதகுருமார்கள் தம்மதத்தில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்தையும் அணுகி மதத்தின் உயர்வையும், கடவுளின் மேன்மைகளையும், மத அறிவினால் மத ஒழுக்கத்தினால் மனிதன் தெய்வம் ஆகலாம், என்ற உண்மையையும் எடுத்து விளக்கி அவனை அஞ்ஞான இருளில் இருந்து ஞான ஒளிக்குக் கொண்டு வந்தால் அதுவே பெரிய சேவையாகும்.

எல்லா மதங்களும் அடிப்படைக் கொள்கைகளைப் புறக்கணித்து விட்டன. சடங்குகளும், சம்பிரதாயங்களுமே மிஞ்சிக் கிடக்கின்றன. மதக் கொள்கைகள் நல்லவைகள் தான். ஆனால் அவற்றைக் கைக்கொள்ள முடிவதில்லை என்கிறார்கள். அத்தோடு நாகரிகத்தின் பேரால் வேண்டாத பழக்கங்களையும் பண்பாடற்ற நடையுடை பாவனைகளையும் கட்டித்தழுவும் சமுதாயம், எப்படிக் கடவுளைத்தேட - கடவுளை அடைய முடியும்.

புகையிரதம் தண்டவாளத்தை விட்டு விலகினால், புகையிரதமும் பழுதாகி பிரயாணிகளும் உயிரிழக்க - காயப்பட நேரிடும். அதுபோல் மதஒழுக்கத்தை - மதவாழ்க்கையை விட்டு விலகிய சமுதாயம் தானும் அழிந்து மதத்தையும் அழித்து விடுகின்றது. ஒவ்வொருவரும் தான் பிறந்த மதத்திலேயே உறுதியாக நிலை பெற்று நின்று அம்மதத்தில் ஈடேற்றப் பாதையினைத் தெரிந்து கடவுளைச் சென்றடைய வேண்டும். கடவுளை அடைவதற்கு மதமாற்றம் துணை செய்யாது சமயகுருமார்கள் ஒவ்வொரு மனிதரையும் வேறு சமயத்துக்குச் செல்லவிடாது, தன் மதத்தின் சிறப்புக்களை எடுத்துக்கூறி, அம்மதத்தில் நம்பிக்கையை உண்டாக்கி, பேரின்பமாகிய தெய்வீக நிலைக்கு உயர்த்த வேண்டும்.

நல்லதைச் செய்தால் நல்லதை அடையலாம் என்பதைக்கூறி, நம்பிக்கை அற்றவனுக்கும் நம்பிக்கையை ஊட்டி, அவனது வாழ்க்கையைப் பேரின்பமாக்குவதே உண்மை மதத்தின் உயரிய கொள்கை. ''மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்'' என்பது பழமொழி. மந்திரத்திலும் மனப்பக்குவமே மேலானது. கடவுளுடைய நாமத்தை மந்திரத்தைச் சொல்வதால் மனப்பக்குவம் ஏற்படும். ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார். எல்லா மதத்திற்கும் இவை பொருந்தும். எனவே மதம்மாறி அலையவேண்டியதில்லை. தன் அயலில் உள்ள கடலில் முத்திருக்கும்போது தூர உள்ள கடலுக்குச் சென்று முத்தைத் தேடவேண்டியதில்லை. ''இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை'' கடவுள் எங்கும் இருக்கிறார். எமக்குள்ளேயும் இருக்கிறார். அவரைக்கண்டு கொள்வதே மதம்.

மதமாற்றம் என்பது ஒரு போலிப்புறச் சடங்காகும் அதனால் புறத்தூய்மையோ அகத்தூய்மையோ ஏற்படாது மதம் மாறிய சிலர் மனதில் ஒருமதம், வெளியில் ஒரு மதமாக அலைவதைப் பார்க்கிறோம். இரண்டு தோணியில் கால் வைத்தவன் பிரயாணம் என்னவாகும்? நாம் பிறந்திருக்கும் மதத்தில் பொதிந்திருக்கும் உண்மைகளைத் தெரிந்து உயர்நிலையை அடைய முயற்சிப்பதே நமது கடமை. எமது மதத்தில் குற்றமுண்டு, எனவே பிறமதத்தைத் தழுவுவோம், என்று அதில் சேர்ந்து அதிலும் குறைகண்டு வாழ்க்கையை வீணாக்கக் கூடாது. இரண்டு முயல்களைத் துரத்தி ஓடும் வேடன் ஒருவனால், ஒன்றையும் பிடிக்க முடியாது. அது போன்று மதம் மாறியவன் இரு மதத்தையும் இழக்க நேரிடும்.

மதகுருமார்கள் தமது மத ஒழுக்கங்களை தம் மக்களிடையே நடைமுறைப்படுத்தியிருந்தால், மக்கள் இன்றுள்ள அவல நிலைக்குள் அகப்பட்டிருக்க மாட்டார்கள். மத வாழ்க்கைக்கும் இன்று நடப்பவற்றுக்கும் பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. மதவாழ்வு வாழ்பவன், பாவச்செயல்களில் ஈடுபடமாட்டான். இன்று பாவச்செயல்களில் ஈடுபட்டவர்கள் மதத்திலும் இருக்கிறார்கள். மத குருவிடமும் செல்கிறார்கள். ஆலயத்திற்கும் போகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். மதத்திலும் அன்றாட வாழ்விலும் அரசியலிலும் நீதி ஒழுக்கம், உண்மை என்பன கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மதச் சண்டைகள் நடைபெறுகின்றன. மதம் சண்டை பிடிக்கச் சொல்கின்றதா? சண்டையைத் தூண்டுகிறதா? மதவெறி வேண்டாம். மத அபிமானம் இருக்கலாம். தெய்வம் இக்மேல், ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு. எல்லா நதிகளும் ஒரு சமுத்திரத்தைச் சென்றடைவது போல எல்லா மதங்களும் ஒரே கடவுளைச் சென்றடைகின்றன. அப்படியானால் மதச் சண்டைகள் எதற்கு? சமய சமரசத்தையும், சமய ஒற்றுமையையும், சமய சகோதரத்தையும் அண்மையில் வாழ்ந்து வழிகாட்டிய மகாத்மா காந்தியடிகளும், வடலூர் இராமலிங்க சுவாமிகளும், ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சரும், இமயஜோதி சுவாமி சிவானந்த மகரிஷியும், குருமகராஜ் அவர்களும், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்களும் இன்னும் பல மகான்களும் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். ''எல்லோரும் இன்புற்று இருப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'' என்றார் தாயுமானார். இப்படி வாழ்ந்தால் மண்ணுலகம் விண்ணுகம் ஆகும்.

இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க

(நன்றி:- திருக்கோணமலை ஸ்ரீ முருகன் தொண்டர் சபை. மடாலயத் திறப்பு விழா மலர் - 1989)

ஓம்

# காந்தி உபாத்தியாயர்

திரு. R. கந்தையா B. A.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்துக்கு இரண்டு பாடசாலைகள் உண்டு. ஒன்று சுவாமி விவேகாநந்தர் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்த ஞாபகமாக இருக்கும் வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர வித்தியாலயம். மற்றது கொக்குவில் மக்களால் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்துக்கு என உபகரிக்கப்பட்ட நிலத்தில், அப்போதைய சங்கப் பாடசாலைகளின் முகாமையாளராக இருந்த சுவாமி விபுலாநந்தரால் 1938 இல் திறந்து வைக்கப்பட்ட ''ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை'' இந்த பாடசாலை இப் பொழுது ஊரவர்களால் மேலும் விஸ்தரிக்கப்பட்ட இரண்டு ஏக்கர் நிலத்தில் ஸ்ரீ இராம கிருஷ்ண ஸ்ரீ சாரதா சைவப்பெண்கள் மகாவித்தியாலயமாக நடக்கிறது. அரசாங்கம் பாடசாலைகளை 1962ல் எடுக்கும்வரை மிகவும் சிறந்த முறையில் இந்தப் பாடசாலை களை இராமகிருஷ்ண சங்கம் நடத்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது. 1938ல் இருந்து இருபத்தைந்து ஆண்டுகள் வரை இப்பாடசாலைத் தலைமையாசிரியராக இருக்கும் வாய்ப்பும் இக்கட்டுரை ஆசிரியருக்கு இருந்தது. வாழ்க்கையில் மறக்க முடியாத அந்தச் சிறப்பான நல்ல காலங்கள் இனி எங்கே!

இற்றைக்கு 46, 47, ஆண்டுகளுக்கு முன் ஒருநாள், அந்தப்பாடசாலைக்கு ஒரு ஆசிரியர் வந்தார். அப்பொழுது சுவாமி நடராஜானந்தா பாடசாலைகளின் முகாமை யாளராக இருந்தார். மட்டக்களப்பு ஆசிரியர் ஒருவரை கொக்குவிலிலிருந்து மாற்றுவ தாகவும், யாழ்ப்பாணத்து மாதகலைச் சேர்ந்த ஒரு ஆசிரியரை அந்த இடத்துக்கு அனுப்புவதாகவும் சுவாமிகள் எழுதியிருந்தார். வந்த ஆசிரியரைப் பார்த்தேன். அவர் கொண்டு வந்த கடுதாசிகளையும் பார்த்தேன். அவரும் என்னைப் போலச் சற்றுக் கருமைதான், உயரமும் எம்மை ஒத்தது, பெயரும் கந்தையா, உடையும் கதர் வேட்டியும் சால்வையும், ஒரு வேறுபாடு அவர் எம்மைப் போலச் சட்டைபோடவில்லை. பற்கள் நல்ல வெள்ளை என்பதையும் அவர்சிரிப்பில் கண்டேன். அமைதியாகவும், இனிமை யாகவும் கதைத்தார். மகாத்மாகாந்தியையும், விணோபாவையையும், புலுசுசாம்பமூர்த்தி யையும், சர்தார் வேதரத்தினத்தையும் படங்களில் பார்க்க எமக்கு அவரை விளங்கியது. ஏனைய ஆசிரியர்களும் பிள்ளைகளும் என்னையும் அவரையும் பார்த்தனர். அவர்களுடைய பார்வை எமக்கு விளங்காமலுமில்லை.

முகாமையாளர் அனுப்பிய ஆசிரியருக்கு நேரசூசி கொடுக்கப்பட்டது. இந்தப் பாடசாலையில் இராமகிருஷ்ண சங்க சுவாமிகள் வருங்காலங்களில் தங்குவதற்கென, ஒரு நல்ல குடிசையும் இருந்தது. சுவாமி விபுலாநந்தர், அப்போதைய மிஷன் தலைவர் சுவாமி அசங்கானந்தா, மற்றும் சுவாமி கேதாரேஸ்வரானந்தா, சுவாமி நிஷ்காம

நந்தா, சுவாமி நடராஜானந்தா போன்ற யாழ்ப்பாணம் வரும் சுவாமிகள் இந்தக் குடிசையில் தங்கியுள்ளார்கள். சுவாமிகள் வராத காலங்களில் ஒரு ஆசிரியர் தங்குவதும் வழக்கம். புதுக்க வந்த திரு. பொ. கந்தையா ஆசிரியரும் இங்கு தங்க விரும்பினார் மிகவும் சந்தோஷமாக நாமும் ஒப்புக் கொண்டோம். அந்த வாரத்தில் ஊருக்குள் பெற்றோர் சிலரைக் கண்டேன். எமது ஆசிரியர்களும் எம்முடன் கலந்து பேசினர். எல்லாம் பரவாயில்லை அவர் ஒரு சட்டை போட்டால் என்ன? எனப் பொதுவாக எல்லோரும் கூறினர். பிள்ளைகள் தமக்குள் கதைப்பதாகவும் கூறினார்கள். கொக்குவில் பட்டினத்தை அண்டிய கிராமம் ஆங்கிலந் தெரியாதவர்களும் காற்சட்டை போடும் வழக்கம் வந்த பின்பும் ஒரு ஆசிரியர் சட்டையில்லாமல் வருவது சரியல்ல என்பதுதான் அவர்களுடைய கருத்தாகும். நான் பலருக்கும் ''மகாத்மாகாந்தி'' ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரைச் சந்திக்கப்போன பொழுதும் வேட்டியுடுத்து, சால்வையால் போர்த்தபடி போனதைக் கூறிச் சமாதானப்படுத்தினேன். காலங்கள் கடந்தன.

திரு. பொ. கந்தையா ஆசிரியர் பிள்ளைகளுடனும், பெற்றோருடனும், சகல ஆசிரியர்களுடனும் மிகவும் அன்பாகப் பழகிவந்தார். அந்தப் பள்ளியில் எங்களிருவரையும் விட மூன்றாவது ஒரு கந்தையா ஆசிரியரும் இருந்தார். பாடசாலை பிள்ளைகள் மிகவும் கெட்டிக்காரர்கள், ஒவ்வொரு ஆசிரியரையும் நன்கு நிதானித்து விடுவார்கள் உபாத்தியார்களுக்குப் பிள்ளைகளை அறிய உளநூல், கல்விநூல், பிரம்பு போன்ற பல வேண்டும் குழந்தைகள் இயல்பாக தெய்வாம்சம் பொருந்தியவர்கள். அவர்களுக்கு எல்லாம் நன்கு விளங்கும், உள் உணர்ச்சி குழந்தைகளுக்குக் கூட எனலாம். வகுப்பில் சில பிள்ளைகள் கதைப்பதைக் கவனித்த போது மூன்று கந்தையா உபாத்திமாரையும் பிரித்துக் கூறவகை செய்து விட்டார்கள். பெரிய உபாத்தியார், வி. க. உபாத்தியார், காந்தி உபாத்தியார்'' என பாடசாலை மாத்திரமல்ல. ஊரும் சொல்லுவதை அவதானிக்க முடிந்தது. ''காந்தி உபாத்தியார்'' என்ற சொல் பாடசாலையிலும், கொக்குவிலிலும் நன்கு பரவிய தெனலாம் யாழ்ப்பாணத்தில் அந்தப் பெயர் பரவ அதிக நாட்கள் செல்லவில்லை. திருக்கோணமலையும் மட்டக்களப்பும் கொழும்பும் இரண்டு, மூன்று ஆண்டுகளில் அந்தப் பெயரை விளங்க ''அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம்'' பெரிதும் உதவியதெனலாம்.

மகாத்மா காந்தி 1948 ல் மறைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்த காந்திய அன்பர்கள் கூடி ''அகில இலங்கை காந்திய சேவா சங்கம்'' தொடங்கினர். ''காந்தி உபாத்தியார்'' அந்தச் சங்கப் பொதுக்காரியதரிசி எனக் கடமை ஏற்றனர். காலஞ்சென்ற பெரியார்கள் திருஹன்டி. பேரின்பநாயகம், முதலியார் செ சின்னத்தம்பி, திரு. ஆ. மார்க்கண்டன், பண்டிதர் துரைசிங்கம் தம்பநிகள், திருக்கோணமலை தியாகி இராஜகோபால், ஆ. ம. செல்லத்துரை போன்ற பல பெரியோர்கள் அந்தச் சங்கத்தில் இருந்தனர். பேராசிரியர் கே. நேசையா, காந்தீயம் வேலாயுதபிள்ளை, பண்டிதர் ஆறுமுகம், வித்துவான் பொன். கனகசபை வித்துவான் நா. சிவபாதசுந்தரம், சோ. க. தம்பிப்பிள்ள போன்ற காந்திய பக்தர்கள் இன்னும் அங்கத்தவர்களாயுள்ளனர். திருஹன்டி பேரின்பநாயகத்தைத் தலைவராகக் கொண்டு இலங்கை முழுவதும் கிளைகளை அமைத்து அச்

சங்கத்தை வளர்க்க ''காந்தி உபாத்தியாயர்'' மிகவும் துணையாயிருந்தார். விருத்திபுரம், காந்தி நிலையம், தருமபுரம் கஸ்தூரிபாய் நிலையம், அக்கராயன் காந்தி கிராமம், ''காந்தீயம்'' பத்திரிகை போன்ற பல பணிகள் அக்காலத்தில் தொடங்கி வளர்ந்தன. இன்று நாட்டின் நிலமைகள் சீரில்லாமையால் அவையெல்லாம் புகையில் நெருப்புப் போலப் பதுங்கி விட்டன. காந்தி உபாத்தியாயர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் நிறுவிய அருள்நெறி மன்றம் திருகோணமலை மாதாஜீயின் தொண்டுகள், சிவயோக சமாஜம் போன்ற பல பணிகளில் ஈடுபட்டு இன்றும் பணியாற்றி வருகிறார்கள். காந்தீய நூல்களை இலங்கை முழுவதும் பரப்பிய பெருமையும் அவருக்குண்டு. கடந்த 50 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், திருக்கோணமலை அவருடைய பல விதமான சேவைகளையும் நன்கு கண்டுள்ளதெனலாம்.

ஸ்ரீ சுப்பிரமணியபாரதியார் கண்ணனைப் பலவிதமாகப் போற்றியுள்ளார். ''கண்ணன் - என் சேவகன்'' பாடல் பிரசித்தி பெற்றது சேவகரின் பல தன்மைகளைக் கூறிய பின் ''எங்கிருந்தோ வந்தான்'' என்று தொடங்கும் பகுதியில் சில வரிகள் எங்கள் காந்தி உபாத்தியாருக்கும் மிகவும் பொருத்தமானவை. அவருடைய சேவை உள்ளம் மிகவும் நயக்கத்தக்கது. பாடசாலையில் சேவை, பிள்ளைகளுக்குச் சேவை, பெற்றோருக்குச் சேவை, ஊருக்குச் சேவை, இனத்துக்குச் சேவை, மொழிக்குச் சேவை எல்லாம் அவருடைய மொழியில், சேவைதான். இரவிற் பகலிலே எந்நேரமானாலும் சிரமத்தைப் பார்ப்பதில்லை'' ''கட்டுறுதி உள்ள உடல், கண்ணிலே நல்ல குணம் ஒட்டுறவே நன்றாய் உரைத்திடுஞ் சொல்'' ''நெஞ்சிலுள்ள காதல் பெரிதெனக்குக் காசு பெரிதல்ல'' ''என்ற போக்கு'' ''கண்ணை இமையிரண்டும் காப்பது போல், வாய் முணுத்தலில்லாமல் சேர்ந்தாரைக் காப்பாற்றும் பண்பு'' ''நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் பண்ணிலே தெய்வமாய்ப் பார்வையிலே ஒரு சேவகனாய்'' தொண்டு செய்வதைத் தமது இலட்சியமாகக் கொண்ட ஒரு நல்ல மனிதர். கொக்குவிலில், காந்தி உபாத்தியாயரைத் தெரியாதவர்களில்லை. பிள்ளைகளுக்குப் புதுப்புத்தகங்களுக்கு உறை போட்டுப் பெயர் எழுதுதல், பாடசாலையில் படிப்பித்தலுடன் சுத்தம் பேணல், சங்கீதம் பேச்சு, கட்டுரைப் போட்டிகள், கொண்டாட்டங்கள், பண்டித வகுப்புகள் எல்லாம் நடத்துதல், ஊரில் சிரமதானம், கூட்டங்கள், கோயிலில் சதுர் நிறுத்தம், திருவிழா ஒழுங்கு எல்லாம் உபாத்தியாயர் பங்குபற்றுபவை திருக்கோணமலை அவரைக் கவர்ந்தது. புலவர் சிவசேகரம் அவர்களின் சகோதரியுடனும் முருகனுடனும் திருக்கோணமலையிலும் ''காந்தி உபாத்தியாயர்'' நல்ல பணிகளில் ஈடுபட்டு வாழ்ந்து வருவதை நேரில் கண்டும்' கேட்டும் மகிழ்கிறோம். 'அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தானே வந்தெய்தும்'' என்ற நம்பிக்கையுடன் இன்று போல் அவர் என்றும் ஆனந்தமாக வாழ இறைவன் திருவருள் கூட்டுவாராக.

ஓம்



(காந்தி மாஸ்டருடன் கட்டுரை ஆசிரியர் நா. கணபதிப்பிள்ளையும், கலைமகள் ஆசிரியர் அமரர் கி. வா. ஜகன்நாதன் அவர்களும்)

# காந்தி ஐயா

அன்பன்

நாகராஜா கணபதிப்பிள்ளை

தாங்கள் பலருக்கு பல பல விதங்களில் நல்லவராக இருக்கலாம். உத்தமராக இருக்கலாம். காந்தி மாஸ்ரரிடம் பணம் வாங்கினால் திருப்பிக் கொடுக்கத் தேவையில்லை என்ற எண்ணம் கொண்டவர்களும் இல்லாமலில்லை. உதவி செய்கின்ற நோக்கத்தோடு, தாங்கள் பலரிடம் வட்டிக்குப் பணம் வாங்கி, அதே வட்டியோடு, பல சமயங்களில் வட்டி இல்லாமல் கூட பலருக்கு கொடுத்த பணத்தை திருப்பி பெறமுடியாததினால் பல லட்சங்களுக்கு கடனாளியாகிவிட்டீர்களே? அது மட்டுமா? தாங்கள் வட்டிக்குப்பணம் வாங்கியவர்களிடம் ஒழுங்காகப் பணத்தை திருப்பிக் கொடுப்பதினால், பலர் !கேட்காமலேயே வேணுமா வேணுமா என்று கேட்டு பணம் தந்து தங்களைத் துன்பத்தில் ஆழ்த்தியவர்களும் இல்லாமலில்லை. தாங்கள் ஈடுசெய்யமுடியாமல் துன்பப்படுகின்ற நேரங்களில் பல நல்லவர்களும் தங்களுக்கு உதவாமலில்லை. இப்படியெல்லாம் பணத்தைப்பெற்று பலருக்கு உதவுவீர்களே, அவர்களில் பலர், கொடுத்த பணத்தைத் திருப்பித்தராவிட்டாலும், தாங்கள் அவர்களை கடனாளியாகப் பார்க்காமல், கருணையுடன் பார்ப்பதனால், அப்படிப்பட்டவர்களுக்குங்கூட தாங்கள் ஒரு கொடையாளியாகவும் இருக்கலாம். தங்கள் செயல்களைப் புரியாதவர்கள், உண்மையை அறியாதவர்கள், தங்களை ஒரே விதமாகக்கூட பார்க்கிறார்கள். இவைகள் எல்லாம் தங்களுக்கு ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தம்!!! அடியவனுக்கும் இவைகளுக்கும் ஒரு தொடர்புமே இல்லை ஐயா. இல்லாவிட்டாலும், நானும் பல தடவைகளில், இந்த வட்டிக்கு வாங்கி அதே வட்டிக்குக் கொடுக்கும் இந்தப் பெரிய சுமையை ஏன் சுமக்கின்றீர்கள் என்று குறைபட்டுள்ளேன். எது எப்படியானாலும், ஐயா இந்த அடியவனுக்கு தாங்கள் ஒரு மனிதராகத்தான் தெரிகின்றீர்கள்

சென்னை மாநகரிலே அந்தப் பைத்தியகாரன், பட்டப்பகலிலே, கையிலே விளக்கு ஒன்றை ஏந்திக்கொண்டு, பல நாட்களாக, எதையோ ஒன்றைத் தேடிக்கொண்டு, அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்தான். தெருவில் போகின்றவர்கள் வருகின்றவர்கள் எல்லோருக்கும் அருகில் சென்று, விளக்கைப்பிடித்து முகத்தைப் பார்த்துவிட்டு, ஒவ்வொருவரையும், நாய், பேய், கரடி, சிங்கம் என்று ஏசிக்கொண்டும்; புலம்பிக்கொண்டும் அலைந்தான். எல்லா மனிதர்களும் அவன் கண்களுக்கு நாய்களாகவும் பேய்களாகவும் தான் தெரிந்தனர். மக்கள் அவனைப் பைத்தியகாரன்என்ற காரணத்தினால், ஒன்றும் செய்யவில்லை. ஆத்திரம் கொண்டாலும் சகித்துக் கொண்டார்கள்.

ஒரு நாள், தூய வெண்நிற ஆடையால், தன் உடல் முழுவதையும் மறைத்துக் கொண்டு நடந்து வந்து கொண்டிருந்த ஒருவரை அந்தப் பைத்தியகாரன் வெகுதூரத்திலிருந்தே கண்டுவிட்டான். அவன் ஆடினான், பாடினான், குதித்தான், ஓடோடிவந்து அந்த மனிதனின் கால்களிலே விழுந்தான், தரையிலே புரண்டான், புலம்பினான். நான் இதுவரைக்கும் ஒரு மனிதனைத் தேடினேன், தேடிய மனிதனை இன்று தான் கண்டேன், கண்டுபிடித்து விட்டேன் என உரக்கக் கத்திக் கொண்டே ஆனந்தக் கண்ணீர் விட்டான். அவன் கண்டு கொண்ட அந்த மனிதன் யார்? அந்த மனிதன் தான்,

> ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
> உத்தமர் தம் உறவு வேண்டும்
> உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
> உறவு கலவாமை வேண்டும்
> பொய்மை பேசாதிருக்க வேண்டும்.
> பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
> மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
> மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
> ஆருயிர்களுக்கெல்லாம் நான்
> அன்பு செய்ய வேண்டும்''

என்று திரு அருட்பா பாடிய தயாநிதி வடலூர் இராமலிங்க அடிகளார். அவர் தான் அந்த மனிதன் வள்ளலார் என அழைக்கப்படுபவர். அவரைக்கூட இந்த உலகம் மதித்ததா? ''கடைவிரித்தேன் வாங்குவாரில்லை மூடிவிட்டேன்'' என்று பெறுவதற்குப் பெறுமதியில்லாத மக்களிடமிருந்து மூடிவிட்டுப் போய்விட்டார். அவர் போனபின்பு இன்று புகழ்பாடுகின்றார்கள்.

அந்த மனிதனின் அடிச்சுவட்டிலே, அப்பெருமானாரின் நற்குணங்களுக்கமைய வாழ்ந்துகொண்டிருக்கின்ற பொன்னம்பலம் கந்தையா 'காந்தி' ஐயா அவர்களே. அரிதிலும் அரிது மானிடப்பிறவி. அந்த உயர்ந்த மனித நிலையை அடைய மக்களாகப் பிறந்திருக்கின்றோம். தாங்கள் அடைந்து விட்டீர்கள். அந்த உயர்ந்த மனிதனைத்தான் இந்த அடியவன் தங்களிடம் கண்டுகொண்டேன். காண்கின்றேன். தாங்கள் வாழ்ந்து கொண்

டிருக்கும் போதே தங்களைக் காணக்கிடைத்ததற்கு, அன்பாகப் பழகக்கிடைத்ததிற்கு இது எனக்குக் கிடைத்த மாபெரும் பேறு ஐயா. தங்களுக்குத் தெரியாமலேயே தங்கள் தாபங்களைத் தொட்டு, அந்தப் புனித பாதங்களில் கிடைக்கின்ற புனித உணர்வினை, பல தடவைகளில் உணர்ந்திருக்கின்றேன். தங்கள் ஸ்பரிசம் என்னை சுகப்படுத்தும். இந்தச்சக்தி மனிதப் பிறப்பெடுத்த எல்லாரிடமும் இல்லை. துன்பம் வரும் போது ஆறுதலுக்காக தங்களிடம் ஓடி வருவேன். தங்களைப் பார்த்து எல்லாவற்றையும் தங்களிடம் ஒப்புவித்து விட்டால் என்னை அறியாத ஒரு சாந்தி எனக்குக் கிடைப்பதை எத்தனையோ தடவைகளில் உணர்ந்திருக்கின்றேன், ஐயா. எத்தனையோ மக்கள் தங்கள் ஆறுதல் நிழலில் சுகமடைந்திருக்கின்றார்கள், அடைந்து கொண்டிருக்கின்றார்கள்.

இறைவனின் இரகசியமே ஒற்றுமையும், அன்பும்தான். இறைவனோ அல்லது உண்மையோ அது ஒன்றைத்தான் குறிக்கும். சமயங்கள் ஒன்று, மனிதவர்க்கம் ஒன்று, உலகம் ஒன்று, வாழ்க்கை ஒன்று, வழ்க்கையின் நோக்கம் கூட ஒன்றுதான். முடிவான அந்த உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ளுதல் ஒன்றேதான் அந்த இரகசியம். இந்த உண்மை இரகசியத்தில் தாங்கள் வாழ்கின்றீர்கள்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் என்னும் பேச்சு எல்லோருக்கும் பொருந்தாது தங்களைப் போன்றோர்க்கே பொருந்தும். தாங்கள் அதில் வாழ்கின்றீர்கள். புலாலை மறுக்கின்றீர்கள். எத்தனையொ சமயப் பெரியார்களும், புனிதமான சமயம் எங்கள் சமயம் என்று மேடைகளில் வீரமுழக்கம் செய்கின்ற பல இந்து சமய சங்கங்களின் அங்கத்தவர்கள், பல இந்துக்கோயில்களின் தர்மகத்தாக்கள்கூட, இந்தப்புலாலை விடமுடியாமல் நாவின் உருசிக்கு அடிமைப்பட்டு வாழ்கின்றகாலம் இது. மிருகங்களையும், பறவைகளையும் கூடுகளிலே அடைத்து அவைகள் சந்தோஷமாக இருக்கின்றன என்று அறியாமையில் வாழ்கின்ற மக்கள் இனம். இவர்கள் எப்படி உயிர்கள் மேல் அன்பாக இருக்க முடியும்? இப்படிப்பட்டவர்களுக்கும்கூட தங்கள் செயலாலும், போதனைகளினாலும் தவறாமல் தொண்டு செய்கின்றீர்கள்.

தங்கள் சமய வாழ்வு, தாங்கள் பிறந்த சமயத்திற்கு மதிப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல், எல்லா சமயங்களையும் ஒன்றாக மதித்து, இறைவன் ஒருவனே என்ற தத்துவத்தை எல்லோரும் உணரும்படியாக கிறஸ்தவர்களின் ஆலயமாக இருந்தாலும் பௌத்த விகாரையானாலும் இஸ்லாமியர்களின் மசூதியானாலும், இந்துக்கோயில்கள் ஆனாலும் அழைக்கப்பட்ட எல்லா இடங்களிலும் இருப்பீர்கள். வழிகாட்டுவீர்கள். இது மட்டுமா, யார் இறந்தாலென்ன, எங்கு இறந்தாலென்ன, எந்த நிலையில் இருந்தாலென்ன சாதிமதபேதமில்லாமல் அங்கெல்லாமிருப்பீர்கள். காந்தி மாஸ்ரர் வந்தால் அவர்களுக்கு ஒரு ஆறுதல். தள்ளாத வயதிலும்கூட இறுதிவரை கையில் சேமக்கலத்துடன் சிவபுராணம் பாடிக்கொண்டு காடு வரை சென்று வழியனுப்பாமல் திரும்பமாட்டீர்கள்! தங்களுக்கு சுகயீனத்தினால் விரைவாக நடக்க முடியாத நிலை ஏற்பட்டதும் சேமக்கலச்சத்தத்தையும், சிவபுராணத்தையும் கேட்காது தவிக்கின்றோம். யார் இந்தச் சேவையை தொடரப்போகின்றார்கள்.

தானம், எல்லோரும் தானம் கொடுக்கின்றார்கள். கன்னிகாதானம், கோதானம், பூதானம், அன்னதானம், வஸ்திரதானம். இப்படி பல பல தானங்கள். தாங்கள் வீடு, வீடாகச் சென்று, திருத்தலங்களுக்கெல்லாம் சென்று, பாடசாலைகளுக்குச் சென்று, எங்கெங்கே எந்தச் சிறு நிகழ்ச்சிகளோ, பெரிய விழாக்களோ நடந்தால் கூட அங்கங்கெல்லாம் சென்று, தாங்கள் அறிவுத்தானம், ஞானதானம், ஆம் அந்த சிறந்த சமய அறிவு நூல்களின் தானம், கொஞ்சம் கூட இலாபத்தைக் கருதாமல் கொடுத்துக் கொண்டிருக்கின்றீர்களே. தாங்கள் ஒரு நடமாடும் நூலகம். ஒரு சிறிய சன்லைட் பெட்டி தங்கள் தோளில் இருந்தால், அது ஒரு புத்தகப் பெட்டி. எங்கேயோ ஒரு நல்ல நிகழ்ச்சி நடைபெறப் போகின்றது என்று தெரிந்து கொள்வோம். தங்களின் இம்மா பெரும் சேவையினால், திருக்கோணமலையில், அது கீதையாக இருந்தாலென்ன, சிவபுராணமாக இருந்தாலென்ன, கிருஷ்ணனைப் பற்றியோ, கிறிஸ்துவைப்பற்றியோ, புத்தரைப் பற்றியோ, அல்லாவைப்பற்றியோ இருந்தாலென்ன, பஞ்சாங்கமானாலென்ன, தங்கள் நூல் இல்லாத இல்லம் இல்லையென்றே சொல்லலாம் யாரால் இதைச் செய்ய முடியும் தொடரமுடியும்?

அடியவன் தங்களிடம் கண்ட குணாதிசயங்களைக் கூறித்தான் ஆகவேண்டும். தங்களுக்குக் கோபம் வந்ததை, தாங்கள் சினம் கொண்டதை, நான் ஒருக்காலும் காணவில்லை ஐயா. மனிதர்களின் கற்பனைக்குட்பட்ட தெய்வங்களெல்லாம் கோபம் கொண்டதாக சமய நூல்களே கூறுகின்றன. ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி! என்று கூறுகின்ற எத்தனையோ சமயத்துறவிகள்கூட கோபத்திற்கு அடிமைப்பட்டு, வாழ்கின்ற நோக்கத்தைக்கூட மறந்து, கஷ்டப்படுவதையும் பார்க்கின்றோம். ஆனால் தாங்கள் கோபங் கொள்ளாதிருப்பதோடு மட்டுமல்லாமல், மற்றவர்களையும் அந்த நல்ல நிலைக்குக் கொண்டு வர முயற்சிக்கும் ஒரு உன்னத ஆத்மா.

பொறுமைக்கு இலக்கணம் தாங்கள். பூமாதேவியைத்தான் பொறுமைக்கு உதாரணமாகக் கூறுவார்கள். ஆனால் தாங்களோ, அந்தப்புனிதத்தாயின் பொறுமையைக் கூட சோதிக்க விரும்பாத அற்புத மனிதர். அவளுக்கு சிறிதுகூட நோ ஏற்படக்கூடாது என்றா அல்லது அவளுக்கு களங்கம் ஏற்படுத்திவிடக்கூடாது என்ற காரணத்திலா, அல்லது அவளுக்கு மரியாதை செய்யவேண்டுமென்றா, தாங்கள் அவர் மீது நடக்கும் போது பாதரட்சைகள் இல்லாமலேயே நடக்கின்றீர்கள். கோணைநாதனின் சிவபூமியிலே, அடிக்கொருலிங்கம் கொண்ட திருக்கோணமலையில் நெருப்பாக எரிகின்ற வெய்யிலிலும் கூட, செருப்பு இல்லாமல் மழலைக்குழந்தை காலை மெதுவாக எடுத்து வைத்து நடப்பது போன்ற தங்கள் நடை இன்னும் எமக்கு ஒரு பாடமாக அமையவில்லையே! கோயில் வீதிகளில் கூட அறிவுடையவர்கள் என்று கூறிக்கொள்ளும் மக்களும், ஏன் பூசகர்களும் சிப்பந்திகளும் கூட செருப்புகளுடனும், சப்பாத்துக்களுடனும் நடக்கின்ற நிலையைப் பார்த்து கண்ணீர்விட வேண்டியுள்ள காலம் இது. ஆனால் தங்கள் செயலோ பவித்திரமானது.

தங்கள் பொறுமையை அடியவன் நேரில் கண்டு அனுபவித்த ஒரு காட்சி என்னால் மறக்க முடியாதது.

சிவாநந்த சச்சிதானந்த மாதாஜி திருக்கோணமலை ஈன்ற முதல் பெண் துறவி. ரிஷிகேசத்தில் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தை ஸ்தாபித்த சுவாமி சிவாநந்த மகராஜின் சிஷ்யை. தன் சொத்துக்களையெல்லாம் அர்ப்பணித்து, உப்புவெளியில், திருக்கோணமலையில் சிவாநந்த தபோவனத்தை அமைத்து தெய்வீகத் தொண்டுடன் வசதியற்ற, தாய் தந்தையர்களற்ற குழந்தைகளுக்கு இல்லம் அமைத்து, அவர்களைக் காப்பாற்றி வருகின்ற தாய்க்கு, (மாதாஜிக்கு) பக்கபலமாக நின்று உழைத்த, இன்னும் உழைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு ஆத்மா - காந்தி மாஸ்டர். ஒரு நாள் - மாதாஜியும் கணபதிப்பிள்ளையும் (அடியவன்) ஏதோ பேசிக் கொண்டிருக்கின்றார்கள். உள்ளே நுழைகின்றார் காந்தி மாஸ்டர். அவர் தான் மாதாஜியின் தபோவனக் கணக்குகளை எழுதி பதிவேடு செய்பவர். இது மாதாஜியால் அவருக்குக் கொடுக்கப்பட்ட சேவை. உள்ளே வந்தவரைப் பார்த்து, மாதாஜி, முறைப்பாக, ''காந்தி நீர் எல்லாத்துக்கும் ஆனந்தம் ஆனந்தம் என்றால், நான் இந்தக் கணக்குகளை எல்லாம் முடித்து ஒடிற்றுக்குக் கொடுக்கவேனும், இதை எப்ப காணும் முடிக்கப் போறீர் எப்ப காணும் கொடுக்கிறது?

காந்தி மாஸ்டர் மிக அமைதியாக; ''பொறுத்ததோடு பொறுங்கள், இன்னும் இரண்டு நாளைக்குள் முடித்துக் கொண்டு வருகிறேன் அம்மா, எனக்கு வேறு எந்த வேலையும் இது முடிவதற்குள் தந்து விடாதீர்கள், இப்பவே போகிறேன் அம்மா'' என்று மாதாஜியோடு ஏதேதோ விடயங்களைப்பற்றி கதைத்து விட்டு, புறப்படுகின்றார். மாதாஜி உள்ளே செல்கின்றா. என் கண்களில் நீர் பெருகின. பொறுமைக்கு எல்லை உண்டா? கிடையவே கிடையாது.

மாதாஜி வெளியே வருகின்றா. அந்தத் துறவித்தாய் கூறுகின்றார்; ''இந்த காந்தி மாஸ்டர் யார் மகனே? இப்படி ஒரு பொறுமைசாலியை, தொண்டனை, உத்தமனை, காண்பது மிக மிக அரிது. பாவம், ஏன் இந்த மனிதன் வீணாக கடன் வாங்கி கடன் கொடுக்குது. தேவையில்லாமல் மாட்டிக் கொள்ளுது. நான் அறிய பலர் வாங்கிய கடனை ஒழுங்காகத் திருப்பிக் கொடுக்கிறதாயில்லை. இதைவிடச் சொன்னாலும் விடுகுதும் இல்லை'' அந்தத்தாயின் கண்கள் கூட கலங்கியிருந்ததைப் பார்த்தேன். இது ஒரு தெய்வீக நாடகம் என்பதை இப்பொழுது தான் என்னால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

அந்தத் தாயார் மாதாஜி, இவ்வுலகைவிட்டுப் போய்விட்டார். அந்தத் தொண்டினை, அந்த சிவாநந்த தபோவனத்தின் குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டை தாங்கள் நடக்கமுடியாது படுக்கையில் இருந்த காலங்களிலும், இன்றும் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். திருக்கோணமலையே இருள் சூழ்ந்திருந்த காலங்களிலும், அந்தச் சிறார்களின் இல்லம், தபோவனம் முற்றாக வன்செயலினால் அழிக்கப்பட்டிருந்தும், அச் சிறார்களை அனாதைகளாக்காமல், எங்கெல்லாமோ இருப்பிடம் தேடிக் கொடுத்து, அரசிடமும், பல அன்பர்களிடமும் உதவிகளைப் பெற்று வழி நடத்திக் கொண்டிருக்கிறீர்களே, ஏனெனில் அந்தத்தாயும் கண்ட ஒரே ஒரு மனிதர் தாங்கள் தான் என்பதனால் தானே? இத்துடன் ஐயா, தாங்கள் தங்கள் வீட்டிலும் அல்லவா ஒன்றன்பின் ஒன்றாக குழந்தைகளை வளர்த்து தொண்டராக்குகின்றீர்கள்.

இது மட்டுமா? தாங்கள் திருக்கோணமலையில் எத்தனை தவச்சாலைகளுக்கு, வேறும் பல குழந்தைகள் இல்லங்களுக்கு, ஆன்மீகப் பெருமக்கள் வாழ்கின்ற பனிமனைகளுக்கு, வழிபாட்டுத்தலங்களுக்கு, வைத்தியசாலைகளுக்கு, கல்விக்கூடங்களுக்கு, தொண்டர் சபைகளுக்கு, மற்றும் பலவகைப்பட்ட சங்கங்களுக்கு தொண்டு புரிந்துள்ளீர்கள், புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். இத்தொண்டுடன் மக்களின் சுக துக்கங்களிலும் பங்கு கொள்கின்றீர்கள். தாங்கள் இல்லாத திருமண வைபவமா? காந்தி ஐயா வந்து வாழ்த்தவேண்டுமென்று மணமக்களும் அவர்களின் பெற்றோர்களும் வேண்டிக் கொண்டேயிருப்பார்களே! இதற்கெல்லாம் தங்களுக்கு எப்படி ஐயா நேரம் கிடைக்கின்றது. ஆண்டவனை கும்பிடுவதற்குக்கூட நேரமில்லை நேரமில்லை என்று புலம்புகின்றவர்களுக்கு தாங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றீர்கள்.

திருக்கேதீஸ்வரம் என்று ஒரு தலம் இருக்கின்றது, அங்கு பாலாவியும் ஓடுகின்றது வாருங்கள் தரிசிப்போம் என்று எல்லோரையும் அழைத்துச் செல்வதுடன், கேதீஸ்வரப்பெருமானுக்கு திருக்கோணேஸ்வரரின் பூமியில் வாழும் மக்களைக் கொண்டு திருவிழாவும் செய்து வைப்பீர்களே, இந்தச்சேவையை யாரையா செய்வார்கள். கதிர்காமத்திற்கு காட்டுப்பாதையால் தங்கள் தலைமையில் பல தடவைகள் யாத்திரை செய்தோமே. இந்தப்பேறு எளிதில் கிடைக்குமா?

ஐயா, திருக்கோணமலை செய்த பாக்கியம், தாங்கள் இங்கு வாழ்வது. மாதகலில் பிறந்தீர்கள், யாழ்ப்பாணப் பகுதிகளிலும் திருக்கோணமலையிலும் ஆசிரியராகக் கடமையாற்றினீர்கள். கடமையோடு பொதுநலச்சேவையும் செய்தீர்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய பூரண வாழ்க்கை ஏதோ ஒன்றிலிருந்துதான் தொடங்கும். தங்கள் பூரண வாழ்க்கையின் தொடக்கமே மகாத்மா காந்தியடிகளின் ''சத்திய சோதனை'' தான். அடியவன் அறிய தங்கள் வாழ்க்கை முழுவதுமே சத்திய சோதனை தான். உண்மைத் தொண்டன் விரும்புவதும் அதையேதான். பிறப்பின் இரகசியமும் அதுதான். ஏனெனில் ஆண்டவன் தொண்டனுக்கு மட்டுமல்லவா அடியவன். இதை அறியாதவர்கள் தள்ளாத வயதிலும் கூட எது எதற்கெல்லாமோ அடிமைகளாக வாழ்கின்றார்கள்.

தங்கள் வாழ்வின் இரகசியமும், எல்லாமே இறைவன் திட்டப்படியே. தங்கள் திருமணம் திருக்கோணமலைக்கே ஒரு சிறப்பான வைபவம் காந்தீயத் திருமணம் மறக்க முடியவில்லை.

உலகத்திலேயே, சங்ககாலத்திலல்ல நிகழ்காலத்தில், (என் அறிவுக்கு எட்டிய) முதல் முதலில், திருவள்ளுவருக்கு கழகம் அமைத்து, திருவள்ளுவர் தந்த திருக்குறளுக்கு முதல் மாநாடு நடாத்திய ஒரு நகரம், கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த திருக்கோணைநாதன் வாழ்கின்ற திருக்கோணமலையென்றால் யாராவது நம்புவார்களா? முற்று முழுதாக கழகத்தின் அங்கத்தினர்களான சிறியவர்களாலேயே நடாத்தப்பட்டபெருவிழா ''திருக்குறள் மகாநாடு''. தமிழகத்து அறிஞர்களும் திருக்கோணமலை அறிஞர்களும் விழாவில் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்ததே எங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாதவொன்று மேலும் மறக்கமுடியாத மற்ற நிகழ்ச்சி, சிறார்களாகிய எங்கள் திருவள்ளுவர் கழகத்திற்கு எங்களுக்கு வழிகாட்டியாக, கலங்கரை விளக்காக, கழகப் புலவராக செயலாற்றிய எங்கள் ஆசிரியப் பெருந்தகை பெ. பொ. சிவசேகரனார் அவர்களின் சகோதரிக்கும் தங்களுக்கும் திருக்குறள் மகாநாட்டு அன்று திருமணம் சிறப்பாக நடந்தது,

சுவாமி சச்சிதானந்த யோகிராஜ், சிலம்புச் செல்வர் சிவஞானக்கிராமணியார், பேராசியர் அ. ச. ஞானசம்பந்தன், தியாகி இராஜகோபால் ஆகியோர் வாழ்த்த, பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில், ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா அவர்கள் திருமுறைகள் ஓத, தங்களுக்குத் திருமணம் நிறைவேறியது. தாங்கள் எப்பவோ முடிந்த காரியம், யாமறியோம், முழுதும் உண்மை, ஒரு பொல்லாப்பும் இல்லை என்ற யோகரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்து கொண்டீர்கள் போலும்.

இராசநாயகி அம்மாள் தங்களைத் திருமணம் செய்து கொண்ட பேறு பெற்ற மாதாசி அன்னை கஸ்தூரி பாயைப் போலவே, ஒரு தொண்டனுக்கு செய்ய வேண்டிய அத்தனை கடமைகளையும், அமைதியாகச் செய்து கொண்டு, ஆனந்தக் கண்ணீர் பெருக, பூலோகத்திலேயே வானுறையும் தெய்வத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அந்தத் தாயின் நாவிலும் கூட தங்கள் பரிபாஷையாகிய ஆனந்தம், ஆனந்தம் தான் வருகின்றது. அத்தோடு ஒரு ஞானி தங்கள் இல்லத்தில் வாழ்கின்றார். குழந்தையாகவே இருக்கின்றார். தங்களுக்கு மகனாகப் பிறக்கக் கொடுத்துவைத்தார். கதிர்காமநாதனாகிய வரை முருகா என்று அழைக்கின்றீர்கள். மானுடவாழ்க்கை எத்தனை விநோதமானது. புரிகின்றதா நிலையா இன்பத்தில் மூழ்கியிருப்பவர்களுக்கு!!!

ஐயா, பல தடவைகளில் தங்களை என் குருநாதனிடம் ஞான தீட்சை பெறும் படி கேட்பேன். தாங்களும் மறுக்கமாட்டீர்கள். பார்ப்போம் என்பீர்கள். நாங்களும் குருமகராஜீயின் கூட்டங்களுக்கு தங்களை அழைக்கத்தவறுவதில்லை. தாங்களும் வரத் தவறுவதில்லை. தாங்கள் ஏன் இன்னும் ஞான அறிவு பெறவில்லை எனச் சிந்தித்தேன் இது என் செயல் அல்லவென்பதை நினைத்து ஆறுதலடைந்தேன். அடியவன் தங்களைப் புரிந்து, கொண்டவகையில் தாங்கள் ஒரு முதிர்ந்த காவிகட்டாத கதர் மட்டும் கட்டும் காந்தீய ஞானி. சத்தியம் தங்கள் வாழ்க்கையில் ஞான ஒளி. மகராஜியின் அன்பர்கள் ஒரு தியான மண்டபம் கட்டும் முயற்சியில் ஈடுபட்டார்கள் கேட்காமலேயே நல்ல காரியங் களுக்குக் கொடுத்துப்பழகிய சில அன்பர்கள் கட்டிடம் நிறைவெய்த உதவினார்கள். தாங் களும் தங்கள் அன்புக்காணிக்கையை செலுத்தினீர்ள். அடியவன் என் குருநாதனின் அன்பை, என் எண்ணம் நிறைவேறியதை நினைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டேன். இது தான் அடியவன் தங்களிடம் கண்ட ஆனந்தம்.

ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தம்!. இந்த ஆனந்தத்தின் விளக்கத்தை, பெருமையை, எப்படிப்பட்டது என்பதனை ஒருவராலும் விளக்கவும் முடியாது. அறியவும் முடியாது. அனுபவிக்க மட்டும் தான் முடியும். சச்சிதானந்தம் - சத் - உண்மை. சித் - அறிவு இதனூடாக வருகின்ற பெரும் பேறு ஆனந்தம். இறைவன் பூரணமானவன். நித்திய ஆனந்தத்திலே இருக்கின்றான். இறைவனோடு சார்ந்திருக்கின்ற மனிதன் ஒரு வனால் மட்டும்தான், அந்த ஆனந்தத்தில், அந்த பரமானந்தத்தில், திளைத்திருக்க முடியும் இந்த ஆனந்தத்தில் தாங்கள் இணைந்து வாழ்கின்றீர்கள். ஆனந்தமாக அனு பவித்து வாழ்கின்றீர்கள். இந்த ஆனந்தம் ஆனந்தம் என்று தாங்கள் அடிக்கடி எதற்காகச் சொல்கின்றீர்கள், ஏன் சொல்கின்றீர்கள், என்பதனை தங்களைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கிய பிற்பாடுதான், இப்பொழுதுதான், மெல்ல மெல்ல புரியத் தொடங்கியிருக்

கின்றோம். தாங்கள் மேலும் நீடூழி வாழ்ந்து சச்சிதானந்தத்தின் இரகசியத்தை எங்களுக்கும் கொஞ்சம் புரியவையுங்கள். ஆனந்தம்.

தூங்காமல் தூங்கி சுகம் பெறும் காந்தி ஐயா. தங்கள் 74வது நிறைவு பூர்த்தி விழாவில், வைரவிழாவின் ஆரம்பநாளில் தங்களை வாழ்த்த தகுதி உடையனோ எனக்குத் தெரியாது. சிரம் தாழ்த்தி வணங்கி வாழ்த்துகின்றேன். கருணையுடன் ஆனந்தமாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

என் நன்றிக் கடன்கள் தங்களுக்கு மட்டுமல்ல, தங்கள் பெருமையை உணர்ந்து தங்களுக்கு இப்படியொரு பெருவிழா, தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே எடுக்க வேண்டுமென்ற தூய்மையான எண்ணத்தை உருவாக்கிய அன்பர்களான திருவாளர்கள் அமரசிங்கம், நவரெத்தினமாஸ்ரர், வினாயகசோதி, புவனேந்திரன் மற்றும் இந்த நற்பணியை செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்த பலருக்கும், அத்தோடு இந்த புனிதப் பணிக்கு மனமுவந்து ஊக்கமும் ஆக்கமும் அளித்தோருக்கும் கூட என் உள்ளம் கனிந்த நன்றிகள்.


வணக்கம்

## காந்தி மாஸ்டர் வைரவிழா மலர் வெளியீட்டுக் குழு

திருவாளர்கள் :-

சு. நவரெத்தினம், நா. கணபதிப்பிள்ளை, க. வினாயகசோதி, நா. புவனேந்திரன், த. அமரசிங்கம்.

## ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தாஜியுடன் காந்தி மாஸ்டர்



(முன்வரிசை இ-வ திருமதி [ரெ. இராமச்சந்திரன், காந்தி மாஸ்டர், சுவாமி அஜராத்மானந்தாஜி, அருட்செல்வி, திரேசாராணி-செவ்வி. வ. கணபதிப்பிள்ளை, மேலதிக அரசாங்க அதிபர் திரு .நா. புவனேந்திரன், சுரேந்திரநாதன், திருமதி. ஜி. மதியழகன்) பின் வரிசை ஆசிரியர்கள். புனித மரியாலய கல்லூரியில் எடுத்த படம்)



# நான் கண்ட காந்தி மாஸ்டர்

"வீணைவேந்தன்"

ஒரு கையில் குடையிருக்கும்
மறுகையில் புத்தகப்பை
இரு காலும் செருப்பில்லை
இரு துண்டுக் கதருடுப்பார்.

பொய் இல்லா வாழ்வும்
போதும் என்ற மனமும்
வள்ளுவர்க்கு வாய்த்த
வாசுகிபோல் (இராச) நாயகியும்.

சிவனுக்கு ஒரு முருகன்
இவருக்கும் ஒரு முருகன்
அவனும் ஒரு பித்தன்
இவரும் ஒரு பித்தர்.

கேட்ட வரங்கொடுத்துச்
சிவனாரும் மாட்டிக்கொள்வார்
கேட்போர்க்குக் கடன் கொடுத்து
கேடுகளைத் தான் சுமப்பார்.

மைல்கணக்காய் தான் நடப்பார்
மனம்சிறிதும் தளரமாட்டார்
எவர்வரினும் உதவிசெய்ய
எள்ளவும் தயங்கமாட்டார்.

சத்திய சோதனையின்
சாரமதை வாழ்க்கையிலே
நித்தியம் கடைப்பிடிக்கும்
உத்தமர்தான் காந்திமாஸ்டர்.

புத்தரையும், காந்தியையும்,
யேசுவையும், நபிகளையும்,
இன்றும் பலர் ஏற்கவில்லை
இவரையா இனி ஏற்பர்?

சுத்த மனத்தோடு சூதுவாதின்றி
புத்தர் யேசு காந்திபோன்று
உத்தமனார் இவர்செய்பணி
உலகுள்ளவரை ஒளிர்விடுமே.

25-11-1992

ஓம்

# வையத்துள் வாழ்வாங்குவாழும் உத்தமர்

பண்டிதர். அ. சரவணமுத்து B. A.

மக்கட் சமுதாயம் இன்பமாக வாழ வழிவகுத்துக் காட்டுவது காந்தி மகான் போதித்து வாழ்ந்து காட்டிய காந்தீய தத்துவம். பாரத நாட்டு மக்கள் இன்பமாக வாழ காந்தீயக் கொள்கையே சிறந்த மார்க்கம். ஆனால், காந்தியடிகள் பிறந்த நாட்டிலே, இப்போது நடந்ததென்ன? சமயத்தின் பேரால், சாதியின் பேரால், மொழியின் பேரால் எங்கு பார்த்தாலும் சண்டை. காந்தியக் கொள்கைக்கு மாறாக நடந்து கொண்டு காந்தீயம் என்று மேடைகளில் பேசுவதில் என்ன பயன்!

எல்லோரும் இன்புற்றிருக்க காந்தீய தத்துவமே உகந்த நெறி என்பதனை உளமார உணர்ந்து அந்நெறியையே இன்றுவரைக்கும் கடைப்பிடித்து ஒழுகுகின்ற ஓர் உத்தமர் தான். காந்தி உபாத்தியாயர். ''கந்தையா'' என்ற அவரது இயற்பெயர் மறைந்து ''காந்தி உபாத்தியாயர்'' என்ற பெயரே வழங்கக் காரணமும், அவரது காந்தீய வாழ்க்கை முறையே என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். அவருடைய சொல்லும் செயலும் ஒன்று. சொல்வதைத் தான் செய்வார். செய்வதைத்தான் சொல்லுவார். சொல் ஒன்று, செயல் வேறொன்று என்ற பேச்சுக்கே அவரது அகராதியில் இடமில்லை.

தன்னலங் கருதாத பெருந்தகை. துன்பத்தைக் கண்டு வெருண்டு ஓடுபவர் அல்லர்; இன்பத்தைக் கண்டு அணைத்துக் கொள்பவருமல்லர். இன்ப துன்பத்தைச் சமமாக நோக்குமியல்பினர். இன்பமே எந்நாளும் துன்பமில்லை. மறந்தும் பிறர் குற்றம் பேசாத பண்பாளர். தன்னைப் போல் பிறரை நேசிக்குமியல்பினர். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்ற குற்றங்களை அறவே களைந்தவர். அவர்களின் வாழ்க்கைமுறை ஞானிகளின் வாழ்க்கை முறைக்கு ஒப்பானது..

''என்செயலால் ஆவது யாதொன்றுமில்லை, இனித் தெய்வமே
உன் செயலே என்று உணரப் பெற்றேன்''

என்ற பட்டினத்தடிகள் திருப் பாடலுக்கு ஏற்ப வாழ்கின்றார்.



(நடமாடும் நூல் நிலையத்துடன் காந்தி மாஸ்டர்)

காந்தி உபாத்தியாயரின் வாழ்க்கைமுறை எல்லோருக்கும் முன் மாதிரியானதொன்று. படாடோபம் என்பது எள்ளளவேனு மற்ற எளிமையான வாழ்க்கை. நான்குமுழக் கதர் வேட்டி, அந்த வேட்டியின் அளவுள்ளதுதான் மேலில் போர்த்திக்கொள்ளும் சால்வையும். அதாவது வேட்டிதான் சால்வை; சால்வைதான் வேட்டி. அவரது உள்ளத்தைப் போல் அவை என்றும் தூய்மையாயிருக்கும். கால்களிற் செருப்பில்லை. மடியில் ஒரு பொக்கற் மணிக்கூடு. பெருந்தொகைப் பணமானாலும் தடித்த கடதாசி மட்டையினாலான பணப்பை. உள்ளத்திலிருந்து வந்த உவகைச்சிரிப்பு. வாயிலிருந்து ''ஆனந்தம் ஆனந்தம்'' என்ற அன்பு கனிந்த வார்த்தைகள். கையில் புத்தகக் கட்டு. இவை தாம் அவர்களின் தோற்றப் பொலிவு.

''மற்றவர்களை வெல்ல என்னிடம் அன்பைத்தவிர வேறொரு ஆயுதமுமில்லை'' என்று காந்தியடிகள் கூறிய உண்மைமொழி, காந்தி உபாத்தியாருக்கும் நன்கு பொருந்தும். காந்தி உபாத்தியார் பெரிய கல்விமான் அல்லர். பெரும் பணக்காரருமல்லர். ஆனால் அவரை பெரிய கல்விமான்களும், பெரிய பணக்காரரும் போற்றி மதிக்கின்றனர். காந்தம் இரும்பைக் கவருவது போல எல்லோரையும் கவரக் கூடிய அபாரசக்தி ஒன்று அவரிடத்துண்டு. அதுதான் ''அன்பு'' என்னும் காந்தசக்தி. அன்பென்னும் காந்த சக்தியினால் எல்லோருடைய இருதயங்களையும் கவர்ந்துள்ளார்.

எல்லாச் சமயங்களும் அன்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டன. அன்பு தான் - கடவுள், கடவுள்தான் - அன்பு.

''அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரு மறிகிலார்
அன்பே சிவமாவது ஆருமறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''

என்பது திருமூலர் திருவாக்கு. சமயசின்னங்களணிந்து நித்தியமும் ஆலய வழிபாடு செய்து சிவபூசை ஆற்றி பிறருக்குச் சமய உபதேசஞ் செய்து தாம் ஒரு சமயத் தொண்டன் என்று பிறர் மதிக்க வாழ்கின்றவரல்லர் காந்தி உபாத்தியாயர். அன்புதான் அவரது சமயசின்னம், உள்ளமே பெருங் கோயில், மக்கள் சேவையே சிவபூஜை, தூயவாழ்வே சமய உபதேசம். கல்வியைக் கற்று

கல்விச் செருக்குற்று தருக்கஞ் செய்து பிறரை வெல்வதற்காகக் கல்வி கற்க இல்லை. கற்ற படி வாழ வேண்டுமென்பதே அவர்களின் குறிக்கோள்.

"எனக்குத் திருக்குறளில் பல பாட்டுக்கள் பாடமில்லை. எத்தனை பாட்டுக்கள் பாடமோ அவற்றை வாழ்க்கையில் அநுட்டித்த பின்னரே மற்றைய பாட்டுக்களைப் பாடமாக்குவேன்'' என்று நண்பர்களுக்கு அடிக்கடி கூறுவார்.

"எல்லாம் இறைவன் செயல். எச்செயலைச் செய்தாலும்
ஈசுவரார்ப்பணமாகச் செய். பலன் கருதாமற் கருமத்தைச் செய்''

என்பது பகவத்கீதை போதிக்கும் உண்மை. இவ்வுண்மை காந்தி உபாத்தியாயரின் வாழ்க்கையிற் பிரதிபலிப்பதைக் காணலாம். "கர்ம யோகி எல்லாச் செயல்களைச் செய்து கொண்டிருந்தாலும் தாமரையிலையில் தண்ணீர் போல, செய்யும் கருமங்களாற் பாதிக்கப்படுவதில்லை'' என்று கண்ணபிரான் அருச்சுனனுக்கு உபதேசித்தார். இந்த உபதேசத்தின் அடிப்படையிலேயே காந்தி உபாத்தியாயர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். காந்தி உபாத்தியாயர் ஒரு சாதாரண மனிதன். ஆனால் தெய்வீக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்ஸருக்கு தூய அன்னை சாரதாமணிதேவியார் போல, காந்தியடிகளுக்கு அன்னை கஸ்தூரிபாய் போல் காந்தி உபாத்தியாயரின் மக்கட் சேவைக்கு அவரது அன்பு மனைவியார் உறுதுணையாயிருந்து உதவுவதும் இறைவனது திருவருட் செயலேயாகும்.

காந்தி உபாத்தியாயரும் அவரது குடும்பத்தினரும் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து மக்கள் சேவை செய்ய எல்லாம் வல்ல பரம்பொருள் திருவருள் புரிய வேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

வணக்கம்.

சச்சிதானந்த பிரம்மம் இப்படிப்பட்டது என்று ஒருவராலும் அறியமுடியாது. அதனால்தான் இறைவன், பாதி புருஷனாகவும், பாதி பெண்ணாகவும், அர்த்தநாரீசுவர வடிவம் எடுத்தான். பிரகிருதியும், புருஷனும் தானே என்பதைக் காட்டவே, அவ்வித வடிவம் தாங்கினார். அதே சச்சிதானந்தக் கடவுள், இன்னும் சிறிது கீழ்நிலைக்கு வந்து, பல புருஷர்களாகவும், பல பிரகிருதிகளாகவும் விளங்குகின்றான்.

—பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்-

ஓம்

# கதிர்காமம் கால்நடை யாத்திரை

**பொ. கந்தையா** *(காந்தி) ஆசிரியர்*

**13-06-59** சனி. திருவருளை முன்னிட்டு இன்று கதிர்காமம் கால்நடை யாத்திரை புற பட்டோம். கோணேசர் கோயிலில் இருந்து யாத்திரை ஆரம்பமானது நானும் எனது மனைவியும் நாலரை வயதுள்ள முருகன் என்று அழைக்கப் படும் மகன் கதிர்காமநாதனும், ஜோதிச்சாமியும் மொத்தம் 14 பேர் புறப் பட்டோம். பஜனையுடன் எல்லாக் கோயில்களையும் தரிசித்துச் சென்றோம் மத்தியானம் சீனன் வாடி பிள்ளையார் கோயிலில் அன்னதானம் நடை பெற்றது. இரவு கிண்ணியா போய்ச் சேர்ந்தோம். அன்பர் வேலுப்பிள்ளை வீட்டில் தாங்கினோம்.

**14-06-59** ஞாயிறு. உப்பாறு கெங்கைத்துறை கடந்தோம். அங்கு கண்டாக்கர் பங் களாவில் சமைத்துச் சாப்பிட்டோம் பின்னேரம் மூதூர்த்துறை கடந்து மூதூர் சென்றோம். பிள்ளையார் கோயிலில் தங்கினோம் நொத்தாரிசு ஏரம்பமூர்த்தி உணவு தந்து உபசரித்தார்.

**15-06-59** திங்கள். மத்தியானம் பட்டித்திடலில் அன்னதானம். இரவு கிளிவெட்டி கோயிலில் தங்கினோம்.

**16-06-59** செவ்வாய். வெருகல் கோயிலை அடைந்தோம்.

**17-06-59** புதன். இன்று முழுவதும் வெருகல் முருகன் கோயிலில் தங்கி வழிபட்டோம். எல்லோரும் தீர்த்தம் ஆடினோம்.

**18-06-59** வியாழன். மத்தியானம் திரை வெளி அடைந்தோம். இரவு வாகரைக் கோயிலைச் சேர்ந்தோம். கோயிலில் ஐயர் வரவேற்றுச் சாப்பாடும் தந்தார் கோயிலில் பிரார்த்தனையும் சமயப் பேச்சும் நடந்தது.

**19-04-59** வெள்ளி. பனிச்சாங் கேணித்துறையைக் கடந்து P. W. D. ஓவசியர் பங்களாவை அடைந்தோம். சமைத்துச் சாப்பிட்டோம். ஓவசியரும் உதவிகள் செய்தார். இரவு மாங்கேணி சென்று பிள்ளையார் கோயிலில் தங்கினோம் மழைகாற்றினால் கஷ்டப்பட்டோம். மழைவிட்டபின் R. C. பாடசாலையில் போய்த்தங்கினோம். அங்கும் ஒழுக்கு மண்நிலம் இரவு கழிந்தது.

20-06-59 சனி. காலையும் மழை. ஆசிரியர் உதவியுடன் சமைத்துச் சாப்பிட்டோம். 10 மணிபோல் புறப்பட்டு வாழைச்சேனைப் பாலத்தைக் கடந்து பிள்ளையார் கோயிலை அடைந்தோம். கதிர்காம யாத்திரிகர் மடத்தில் சாப்பிட்டோம். திரு. வேல்முருகன் ஆசிரியர் வீட்டுக்குப் போனோம். அவரும் நல்லதம்பி ஆசிரியரும் உணவுகள் தந்தனர். ஜோதிச்சாமி வேல் முருகன் குடிபுகுந்த புதுவீட்டில் உருக்கமான பஜனை நடத்தினார்.

21-06-59 ஞாயிறு. யேமன் சுவாமி கூட்டம் போன லொறியில் சாமான்களை ஏற்றி வந்தாறு முலைக்கு அனுப்பினோம். நாங்கள் சித்தாண்டி முருகன் கோயில் சென்று பூசை கண்டு தங்கிப் பின்னேரம் வந்தாறுமுலை சேர்ந்தோம். அங்கு மனைவியின் சகோதரி, தாயாரிடம் தங்கினோம். இங்கும் ஜோதிச் சாமி பிரார்த்தனை நடாத்தினார்.



(கதிர்காம பாதயாத்திரை - தி. கோணேசர் ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட போது எடுத்த படம்.) (இடமிருந்துவலம், மாதாஜீ, திருமதி காந்தி மாஸ்டர். சோதிச்சாமியார் காந்தி மாஸ்டர் (பின்னால் நிற்பவர் காந்தி மாஸ்டரின் சகோதரர். தில்லைநாதன் - திருமயில்வாகனம் O. A கீழே நிற்பது காந்தி மாஸ்டரின் மகன் முருகன்)

22-06-59 திங்கள். ஏறாவூரைக் கடந்து மத்தியானம் பிள்ளையாரடி ஏற்றம் போய்ச் சேர்ந்தோம். இவ்விடத்தைச் சேரமுன் ஒருமைல் தூரம் கடுமையான வெயிலில் அகப்பட்டோம். மட்டக்களப்பைத் தாண்டி இரவு கல்லடி உப்போடை பிள்ளையார் கோயிலில் தங்கினோம். அன்பர் நடராஜன் மாஸ்டரும், தியாகி இராஜகோபால் அவர்களும் உபசரித்தனர்.

23-06-59 செவ்வாய் காலை இராமகிருஷ்ணமிஷன் சுவாமி நடராஜானந்தர்ஜீ அவர்களைச் சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டு மத்தியானம் ஆரப்பற்றை கந்தசாமி கோயிலை அடைந்தோம். திரு. தம்பிராசா ஆசிரியர், திரு. மு. கணபதிப் பிள்ளை ஆசிரியர் ஆகியோர் உபசரித்தனர். இரவு குருக்கள் மடம் கோயில் போய்ச் சேர்ந்தோம்.

24-06-59 புதன் மத்தியானம் களுவாஞ்சிக்குடிப் பிள்ளையார் கோயிலை அடைந்தோம். உதவி வித்தியாதரிசி திரு. சபாபதி அவர்களும் அன்பர்களும் உபசரித்தார்கள். திரு. இராசமாணிக்கம் M. P. அவர்களும் விருந்தில் கலந்து கொண்டார். இரவு கல்லாறு சேர்ந்தோம். திரு. சபாரெத்தினம் ஆசிரியர் வரவேற்று உபசரித்தார். கோயிலில் தங்கினோம்.

25-06-59 வியாழன் காலை திரு. சபாரெத்தினம் ஆசிரியர் வீட்டில் ஜோதிச்சாமியின் கூட்டுப் பிரார்த்தனை நடந்தது. அங்கு சாப்பிட்டோம். வழியில் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் கோயிலை வழிபட்டுக் கொண்டு மத்தியானம் கல்முனை சேர்ந்தோம். கல்முனையில் திரு. D. R. K. மகாலிங்கம் உபசரித்தார். இரவு காரைதீவு சேர்ந்து கண்ணகை அம்மன் கோயிலில் தங்கினோம். திரு. இ. கருணாகரம் ஆசிரியர், திரு. அ. சின்னத்தம்பி ஆசிரியர் ஆகியோர் உபசரித்தனர்.

26-06-59 வெள்ளி மத்தியானம் பாலமுனை R. C. பாடசாலையில் தங்கினோம். சமைத்துச் சாப்பிட்டோம். இரவு அக்கரைப்பற்றை அடைந்து கோயிலில் தங்கினோம், R. K. M. பாடசாலையைப் போய்ப் பார்த்தோம். அது தெய்வ லோகமாகக் காட்சியளித்தது. அதிபர் அன்பர் நடராஜன் மாஸ்டரின் தியாக சேவையை அங்கு கண்டோம்.

27-06-59 சனி மத்தியானம் திருக்கோயில் போய்ச் சேர்ந்து கோயிலில் தங்கினோம். சமைத்துச் சாப்பிட்டோம், மாலை கோயிலில் தீக்குளிப்பு நடந்தது. ஜோதிச் சாமியும் தீக்குளித்தார்.

28-06-59 ஞாயிறு மத்தியானம் சங்கமான் கண்டிப் பிள்ளையார் கோயிலை அடைந்தோம். இரவு கோளாவில் பாடசாலையில் தங்கி சமைத்துச் சாப்பிட்டோம்.

29-06-59 திங்கள் மத்தியானம் தென்னந்தோட்டம் ஒன்றில் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு இரவு பொத்துவில் கோயில் சேர்ந்தோம். திரு. இரத்தினசபாபதி ஐக்கிய சங்கம் பரிசோதகர் உதவியோடு பாடசாலை தங்கினோம். காட்டு வழிக்குத் தேவையான சில சாமான்களை இங்கு வாங்கிக் கொண்டோம்.

30-06-59 செவ்வாய் மத்தியானம் நாவலாற்றில் தங்கிச் சமைத்துச் சாப்பிட்டோம். ஆற்றுக்குளிப்பு எல்லோருக்கும் ஆனந்தமாக இருந்தது. இரவு காட்டுப் பாதை தொடங்கும் பாணமை போய்ச் சேர்ந்தோம். மடத்தில் தங்கினோம். இங்கு தேவையான அரிசி, தேங்காய், மரக்கறி, மண்ணெண்ணை ஆகிய சாமான்களை வாங்கினோம். திரு. மார்க்கண்டு ஆசிரியர் உதவிகள் செய்தார்.

01-07-59 புதன் திருகோணமலையில் இருந்து 161 மைல் நல்ல வீதிகளால் நடந்து வந்து பாணமை சேர்ந்தோம். இனிமேல் பாணமையில் இருந்து காட்டு வழியே 63 மைல் நடந்து கதிர்காமம் சேரவேண்டும். பாணமையில் இருந்து 22 மைல் தூரமான கூமுனை என்னும் இடத்துக்கு 22ரூபா கூலி கொடுத்து ஓர் மாட்டு வண்டி பிடித்தோம், மத்தியானம் சமைத்துச் சாப்பிட்டபின் வண்டியில் சாமான்களை ஏற்றினோம். பாணமையில் இருந்து பதினேழு அடியார்கள் புறப்பட்டோம். 5 மைல் நடந்து சந்நியாசிமலை சென்றோம் அங்கு அவர் வைத்துக் கும்பிட்டு தீர்த்தமாடி 5 மைல் நடந்து உகந்தை மலை அடைந்தோம். அங்கு இருபெரிய மலைகளிலுள்ள 32 தீர்த்தங்களையும் அள்ளி ஊற்றி ஆடிக்கொண்டு கீழே இறங்கினோம்; இங்கு ஓர் பிரபல முருகன் ஆலயம் உண்டு. இங்கு தங்கினோம். காட்டு காவல்காரரின் காரியாலயமும் விடுதியும் மட்டும் அண்மையில் உள்ளன.

02-07-59 வியாழன் காலை புறப்பட்டு காட்டுவழியே 5 மைல் சென்று வாகுதிரை வெட்டை (வாகரை வெட்டை) யில் தங்கிச் சமைத்துச் சாப்பிட்டோம் இங்கு ஒரு கிணறு உண்டு. காட்டு வழியில் உள்ள இத்தகைய சில கிணறுகள் யாத்திரை வாசிகளுக்காக தர்மசீலர்களால் கட்டப்பட்டதாகத் தெரியவந்தது. மரநிழலில் தங்கிவிட்டு மாலை 22 வது மைலில் உள்ள கூடமுனை சேர்ந்தோம். இங்கு சுமார் 25 சிங்களக்குடிகள் உள. அவர்களுக்கு தமிழ் நன்கு தெரியும். இங்கு சிறிய சிங்களப் பாடசாலை உண்டு. பாடசாலையில் இரவு தங்கினோம். இங்கிருந்து 32 மைல் தூரத்திலுள்ள கட்டகாமம் வரை சாமான் ஏற்ற சிங்கள அன்பர் மூலம் சிறிய மாட்டுவண்டி ஒன்று 25 ரூபா கூலிக்குப் பிடித்தோம். அடியார்களின் அடப்பங்களை இவ்வண்டியில் ஏற்றினோம்.

03-07-59 வெள்ளி சிறிது தூரம் போய் குமுக்கன் ஆற்றைக் கடந்தோம். ஆற்றில் எல்லோரும் குளித்துவிட்டு வண்டியுடன் 5 மைல் சென்றோம். வண்டிக்காரர் வெகு கஷ்டப்பட்டு காட்டினுள் நுழைந்து கால் மைல் சென்று மலை ஒன்றில் சிறு நீர்த்தேக்கத்தைக் கண்டார். அங்கு சென்று சமைத்துச் சாப்பிட்டோம், இரவு நாவலடி மடுவில் ஓர் குளக்கரைக்குச் சென்றோம். குளத்தண்ணீர் மிக மோசம் சுடவைத்துக் குடித்தோம். நாலு பக்கமும் தீ போட்டு நடுவில் படுத்தோம். காட்டு மிருகங்கள் வராது தடுக்கவே தீ போடுவது.

14-07-59 சனி வண்டியுடன் புறப்பட்டு ஓர் வெட்டையில் செல்லுகையில் வண்டி சேற்றில் மாண்டுவிட்டது. முன்சென்ற அடியார் கூட்டத்தினர் வந்து வண்டியை இழுத்து எடுத்து விட்டனர். கடும் வெயில், தண்ணீர் விடாய், தூரம் நடந்த களை இவற்றால் எல்லோரும் வாடிய நிலையில் தண்ணீர் கிடைக்காது அலைந்து எட்டு மைல் நடந்தபின் சின்ன வியாளை ஆற்றைக் கண்டோம். தண்ணீரில் சிறிது உப்புக் கலந்திருந்தது. நாம் இருந்த நிலைக்கு இது அமிர்தம். நிறையக் குடித்தோம். மரநிழல் இல்லை, மந்தாரம் போட்டது. ஆற்றோரத்தில் சமைத்தோம் சாப்பிட்டோம் வண்டியை தனியாக அக்கரைப்படுத்தினோம். சாமான்களை தலைச்சுமையில் அக்கரை சேர்த்தோம். மகன் முருகன் எனது தோளில் ஏறி அக்கரை வந்தான். இரவு பெரிய வியாளை போய்ச் சேர்ந்தோம். பெரிய ஆறு. எல்லோரும் குளித்தோம். இங்கு நூற்றுக்கு மேல் அடியார்கள் இருந்தனர். சிலர் தீக்குளித்தனர். காரில் வந்த சிலர் இதனைப் படம் பிடித்துச் சென்றார்கள். ஜோதிச் சாமி பிரார்த்தனை நடத்தினார்.

15-07-59 ஞாயிறு மத்தியானம் கதிரைமலை கண்ட இடம் சேர்ந்தோம். கொண்டு சென்ற அவலைப் படைத்துக் கும்பிட்டு வழிபட்டு அவலைச் சாப்பிட்டோம் மலைகண்ட இடம் கட்டகாமத்தில் இருந்து 4 மைல் கதிர்காமத்தில் இருந்து 12 மைல். மாலை கட்டகாமம் சேர்ந்தோம் வண்டிக்காரனை திருப்பி அனுப்பினோம். தெய்வாதீனமாக ஒரு பொலிஸ் ஜீப் வந்தது. சாமான்களைக் கதிர்காமம் கொண்டு செல்ல இசைந்தனர். ஓர் அடியாருடன் பாரமான சாமான்களை அனுப்பினோம். கட்டகாமக் குளத்தில் ஓர் ஆனை நின்றது. சமைத்துச் சாப்பிட்டு பக்கத்திலுள்ள காவல் பங்களாவில் தங்கினோம்.

16-0759 திங்கள் காலை புறப்பட்டு 10 மணிக்கு கதிர்காமக்கந்தன் சந்நிதியை அடைந்தோம். இன்று தான் கொடியேற்றம். கொடியேற்றத்துக்கு முன் சேர்ந்தது எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி 24 வது நாள் 223 மைல்களை நடந்து கதிர்காமத்தை அடைந்தோம். 15 திருவிழாக்களும் பார்த்தோம். நகுலேஸ்வர சுவாமியுடன் சேர்ந்து முருகனும் ஜோதிச்சுவாமியும் காவடி எடுத்தார்கள். ஒரு நாள் செல்லக்கதிர்காமம் போய் தீர்த்தமாடி சர்க்கரை அமுது பொங்கிச் சாப்பிட்டு வந்தோம்.

ஒரு நாள் கதிரைமலை போய் வந்தோம். பிள்ளையார் மலையில் ஓர் சாமியின் உதவியால் மத்தியானம் சாப்பிட்டோம். உச்சியிலும் மழைக்கு ஓர் சாமியின் குடிசை உதவியது. இராமகிருஷ்ண மடத்தில் தங்கினோம். பெரிய கோயில் வாசலில் தீ மிதிப்பு நடந்தது.

20-07-59 திங்கள் சுவாமி மாணிக்ககங்கையில் தீர்த்தம் ஆடினார். ஆயிரக்கணக்கான மக்களும் தீர்த்தமாடி ஆனந்தமடைந்தனர். மலைக்குப் போய் வந்தபின்

மாரடைப்பால் ஒரு அன்பரும் தீர்த்தத்தன்று இரவு வலியினால் ஒரு அன்பரும் மறுவுலகடைந்தனர்.

21-07-59 செவ்வாய் மத்தியானம் புறப்பட்டு பஸ்சில் அப்புத்தளை வந்து இரவு பண்டாரவளை சேர்ந்தோம்.

23-07-59 வியாழன் அப்புத்தளை வந்து றெயினில் நாவலப்பிட்டி வந்தோம். ஆத்ம ஜோதி நிலையத்தில் தங்கினோம். அங்கு திரு முத்தையா ஆசிரியர் அவர்களும், தம்பி திரு அருமைநாயகம் ஆசிரியர் அவர்களும் உபசரித்தனர் ஜோதிசுவாமியின் பஜனை நடந்தது.

24-07-59 வெள்ளி பஸ்சில் கம்பளை சேர்ந்தோம் ஓவசியர் கனகரெத்தினம் அவர்களிடம் மத்தியானம் சாப்பிட்டோம். பஸ்சில் புறப்பட்டு இரவு கண்டி தென்னக்கும்பற சச்சிதானந்த தபோவனத்தை அடைந்தோம் ; அங்கு சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களதும் சுவாமி விமலானந்த மாதாஜி அவர்களதும் அசியைப் பெற்றோம்.

25-07-59 சனி பின்னேரம் மடத்தில் குருபூர்ணிமாதினம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது: பலமதப் பெரியார்களும் அநுரை வழங்கினார்கள். சுவாமிஜீ நன்றி கூறும்படி என்னைப் பணித்தார்கள்.

26-07-59 ஞாயிறு அதிகாலை சுவாமிஜீ தனது காரில் எங்களை ஏற்றிவந்து திருக் கோணமலை பஸ்சில் ஏற்றி வழியனுப்பி வைத்தார்கள். மத்தியானம் திருக்கோணமலை வந்து சேர்ந்தோம். உடனே கோணேசர் கோயிலுக்குப் போய்த் தரிசித்து அங்கு தொடங்கிய யாத்திரையை அங்கு முடித்து அவன் அருளால் 44வது நாள் வீடு சேர்ந்தோம்.

சிலகுறிப்புகள்

மூதூர் திருக்கோணமலையில் இருந்து கடல்மார்க்கம சுமார் 10மைல். மூதூருக்கு நடந்து செல்லப்பாதை இருப்பதால் கடல்பாதை தவிர்க்கப் பட்டது. தரைப்பாதையாக கிண்ணியாத்துறை, உப்பாறுத்துறை, கெங் கைத்துறை, மூதூர்த்துறை ஆகிய நாலு துறைகளையும் வள்ளத்தில் கடந்து 18மைல் நடந்து மூதூருக்குச் சென்றோம்.

திருக்கோணமலையிலிருந்து மட்டக்களப்பு கரைப்பர்தை பிரதான்வீதி 84 மைல். மட்டக்களப்பிலிருந்து பாணமை 161மைல். பாணமை கதிர்காமம் காட்டுப்பாதை 62மைல். மொத்தம் 223மைல். வருடத்தில் 6000 பேர்வரை



**நல்லொழுக்கம்.**

நல்லொழுக்கக் குறைவால் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் துயரம் கடவுளே! கடவுளே! என்று சொல்லிக் கொண்டிருப்பதால் மட்டும் தீர்ந்து விடாது. நற்செயலால் மனதைப் பரிசுத்தப்படுத்தும் பொழுது எல்லாம் சுகமாய் முடியும்.

-கொங்காதரனேந்தஜ

கரையாத்திரை செய்திருக்கிறார்கள் என காட்டுக்காவல் நிலையங்களில் கணக்கிட்டிருக்கிறார்கள்.

கதிர்காமம் சென்றடையும வரை 94 நாட்களும் மதயாத்திரையில் அடியார்கள் பஜனை, கூட்டுப்பிரார்த்தனைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டனர். பல ஆலயங்களைத் தரிசித்து வழிபாடு செய்தனர். பல புண்ணிய தீர்த்தங்கள் ஆடினர். நடைபாதையில் ஏற்பட்ட கஷ்டங்களை அனுபவித்தனர். இதனால் பக்தி மேலிட்டு யாத்திரையில் ஊக்கமடைந்தனர். கதிர்காமம் சேர்ந்ததும் கஷ்டங்களை மறந்து ஆனந்தம் அடைந்தனர்.

கட்டகாமத்துக் கிழவிக் கதிர்காமம் போனகதை என்று ஒரு பேச்சு உண்டு. எட்டு மைல்தானே கிட்டத்தானே போகலாந்தானே என்று கிழவியின் காலமும் போய்விட்டது. கிழவி கதிர்காமம் போக அமைப்பில்லை. கடவுள் சித்தமில்லை, யாத்திரைக்கு எமது முயற்சியுடன் கடவுள் சித்தமும் வேண்டும்.

எல்லோரும் வாழ்க, இன்பமே சூழ்க,

ஓம்

# காந்தி மாஸ்டர் திருவாளர் பொன்னம்பலம் கந்தையா அவர்கள்

**வே. நா. சிவராசா**

நடமாடுங் கோயில் என்று நம்பிரான் திருமூலர் குறிப்பிடுகின்றார். அத்தகைய சான்றோர்களில் ஒருவர் காந்தி மாஸ்டர். என் வாழ்நாளில் மறக்க முடியாத மனிதர் அவர். ''ஆனந்தம்'' ''ஆனந்தம்'' என்ற மகாவாக்கியமே அவர்களது புனிதவாய் மலர்ந் தருளும் மந்திரம். புனிதமான உள்ளத்திலிருந்து வருகின்ற அன்பு என்னும் தேனில் தோய்ந்து வருகின்ற அந்த அருள்வாக்கு கேட்பவர்களை ஆனந்தம் அடையச் செய்யும்.

இவர்களோடு அண்மித்துப் பழக வாய்ப்பு அருளியது சிவயோகசமாஜம். சுவாமி கெங்காதரானந்தாஜி அவர்களுடன் கதிர்காமத்திற்குக் கரைப்பாதையால் பாதயாத்திரை செய்யும் பக்கியம் பெற்ற பெரியார்களுள் ஒருவர் கந்தையா மாஸ்டர். சமாசத்திற்குப் பல வழிகளில் அருந்தொண்டாற்றிய மாஸ்டர் அவர்கள், 1960ஆம் ஆண்டு ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மாலையில் ஒரு பஜனைப் பாடலை சமாஜச் சிறுவர்களுக்கு ஒழுங் காகச் சொல்லிக் கொடுத்து வந்தார்கள். பூசை அறையினைப் பார்த்த வண்ணம் பிள் ளைகள் ஒரே வரிசையாக இருப்பார்கள். மாஸ்ரர் சொல்லச் சொல்ல அவர்கள் சேர்ந்து சொல்ல ஒரு அற்புதமான அனுபவம் ஏற்படும். பின்னால் போய் அமர்ந்து நானும் இச்சத்சங்கத்தில் சேர்ந்து பஜனை செய்தது உண்டு. இதே மாதிரி உப்புவெளி ஆச்சிரமம் வேறு நிலையங்கள் ஆகியவற்றிற்கும் சம நிலைநின்று சேவை செய்துள்ளார் என்பதை யாம் அறிவோம். தன்னலமற்ற சேவை.

உப்புவெளி சியாமளா வைத்தியசாலையில் ஒருவர், இடுப்பு முறிந்து, குப்புறப்படுத்த வண்ணம், உடம்பில் இடுப்பின் கீழ்ப்பகுதி செயலற்ற வண்ணம் பல நாட்கள் இருந்து சிகிச்சை நடந்தது. சுவாமி கெங்காதரர் அவர்கள் அங்கு சென்று சில நிமிடங்கள் தியானத்தில் அவர் அருகில் அமர்ந்துவிட்டு, ஆறுதல் கூறுதலை வழமையாகக் கொண் டிருந்தார். நோயாளியின் முகத்தில் ஒருவித ஒளிவீசத் தொடங்கியது. உடல்வேறு தான் வேறுஎன்று உணர்ந்து விட்டார். இவர்களை ஆசுப்பத்திரிச் சுவாமி என்றே அறிந்த அடியார்கள் அழைத்தனர். இவருக்குத் தவறாது பால்நினைந்து ஊட்டும் தாய்போல் பரிந்து உணவு அளித்தவர் காந்தி மாஸ்டர். மகாத்மாவைப் போன்று ஒரு நியமத்தை மேற்கொண்டால் அதை ஒழுங்காகச் செய்யும் ஆற்றலைப் பெற்றவர் காந்தி மாஸ்டர்.

## வைர விழா

அவர் ஒரு பெரிய புத்தக வியாபாரி. சான்றவர் ஆய்ந்திடத் தக்கதாம் பொருள் பொதிந்த புத்தகங்களை வருவித்து அளவான விலைக்கு வழங்கிய பெரிய வியாபாரி. சுவாமி விவேகாநந்தருடைய சொற்பொழிவுகள் அடங்கிய ஆங்கில நூல்களையும், தமிழ் நூல்களையும் எனக்குத் தருவித்து உதவினார். இவ்வாறே திருமுறைகளையும் தருவித்து. உதவினார்கள். எங்கு திருவிழா நடந்தாலும் இந்தப் புத்தகக்கடை திறந்திருக்கும் பிள்ளைகளும் வயதானவர்களும் வாங்கிய படிக்கக்கூடிய நூல்கள் இருக்கும்.

பாலாவிக்கரையில் எம்பெருமான் கௌரி அம்பாள் சமேதராய்த் திடமாக உறை கின்ற திருக்கேதீஷ்வரத்தில் திருக்கோணமலைத் திருவிழா உண்டு. பிற இடத்தில் சேவையில் இருந்தநான் இவ்விழாவில் கலந்து கொண்டேன். காந்தி மாஸ்டர் வந்திருக் கிறார் என்று முதல்நாள் இரவு அறிந்தேன். படுத்திருந்தார். இன்னும் நித்திரையாக வில்லை. அவரை எழுப்பி ஆனந்தம் ஆனந்தம் என்ற வார்த்தைகளைக் கேட்டுவிட்டுத் தான் நான் நித்திரை செய்தேன். விடிய திருக்கோணமலைத் திருவிழா. இதே மாதிரிக் கோணேசப் பெருமானின் குடமுழுக்கு விழாவிற்குத் திருக்கேதீஸ்வரத் தீர்த்தம் கொண்டு சென்றவர் சேர் கந்தையா வைத்தியநாதன். இந்த ஆத்மீகப் பிணைப்புக்கள் சிறக்கும் சத்தியயுகம் தோன்றுவதற்கு அதிக காலம் இல்லை.

திருக்கோணமலைத்தாய் என்னை மூன்று தடவை சேவைக்குக் கூவி அழைத்தாள். முதல் 1960 உள்ளூராட்சி ஆணையாளராகச் சேவை செய்தேன். பின்பு 1965 ஒரு தமிழ் அமைச்சர் கௌரவ திருச்செல்வம் அவர்கள் உள்ளூராட்சி அமைச்சரான பொழுது மறு படி என்னை அங்கு சேவைக்கு அமர்த்தினார். அண்மையில் வடகிழக்கு மாகாண சபை யின் பிரதம செயலாளர் என்ற பாத்திரத்தை ஏற்று நடித்தேன். மாஸ்டரும் நானும் அன்றும் இன்றும் என்றும் ஒரே மாதிரித்தான் பழகினோம். கடைசியாக நான் மாஸ்ரர் அவர்களை சுவாமி கெங்காதரரின் இறுதிக் கிரியைகளுக்குச் சென்றபோது சந்தித்தேன். அதை என்னென்று எழுதுவது. காந்தி மாஸ்டரின் பிறந்த நாளைக் கொண்டாடுவது ''ஆனந்தம்'' ''ஆனந்தம்''

ஓம்

# எனது சிந்தனையில் ஐயா அவர்கள்

பண்டிதர் வ. கதிரித்தம்பி.

உத்தமர்களால் உலகம் வாழ்கின்றது. 'உயர்ந்தோர் மாட்டு உலகம்' என்பது உலகமொழி. மக்கள் பண்புகளைத் தெரிந்துணர்ந்து அவற்றைத் தம் வாழ்க்கை நெறியாகக் கொண்டு சமுதாயத்தால் இனிது போற்றப்படும் உத்தமப் பெரியார்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அத்தகைய சான்றோர்களின் வாழ்வை மக்கள் சிந்திக்கவும் சாதிக்கவும் முயல வேண்டிய கடைப்பாடுடையவர்கள்.

(1) ''அன்பர் பணி செய்யவென்னை ஆளாக்கி விட்டு விட்டால்''

(2) ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்று அறியேன் பராபரமே

(3) ''எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே''

(4) ''அல்லலெலாம் நீக்கவெனக் கானந்தமான வொரு
சொல்லை அணித்ததை என் சொல்வேன் பராபரமே''

(5) ''அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு''

(6) ''அன்புக்கு முன்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்''

இந்த அமுத வாக்கியங்களின் உண்மைப் பொருளின் உறைவிடமாகவே காந்தி ஐயா அவர்கள் என் மனக் கண்ணுக்குக் காட்சி தருகின்றார்கள். ஐயா அவர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்தாலும் வாழ்நாளின் பெரும் பகுதியைத் திருக்கோணமலைக்கே அர்ப்பணித்து உடல், பொருள், ஆவி மூன்றினாலும் சமூக, சமயத் தொண்டு புரிந்து வருகின்றார்கள். இது திருக்கோணமலை மக்கள் செய்த தவப்பயன் என்றே கருதவேண்டும்.

நான் திருக்கோணமலையில் பல வருடகாலம் ஆசிரியராகவும், அதிபராகவும் பணி புரிய வாய்ப்புக் கிடைத்தது. அக்காலத்தில் காந்தி ஐயாவின் நெருங்கிய தொடர்பு கிடைத்தது. காந்திய வழியிலும் சமய, சமூகப் பணிகளிலும் ஐயாவும் நானும் சேர்ந்து பணிபுரிந்தோம். சில பாடசாலைகளை நான் புதிதாக அமைத்த பொழுது ஐயாவும் அப்பணியில் பங்குபற்றி என்னுடன் ஒத்துழைத்து உதவினார்.

## வைர விழா

தம்பலகமத்தில் பெண் பிள்ளைகளுக்கென ஒரு பாடசாலை வேண்டியிருந்தது. இராமகிருஷ்ண சங்கத்தினர் இவ்வெண்ணத்தை ஆதரித்தனர் எனினும் அதற்கான நிலம், கட்டிடம் என்பன வேண்டியிருந்தன. திருமதி. காளியப்பு அம்மையார் நிலத்தை அன்போடு தந்துதவினார். மக்கள் உதவியுடன் கட்டிடம் அமைக்கப்பட்டது. இப்பணியில் ஐயாவும் நானும் ஒன்று சேர்ந்து பல பணிகளை மேற்கொண்டு சாரதா வித்தியாலயத்தை அக்கிராமத்தில் கோணேசப் பெருமானின் அருளால் அமைத்தோம். இராமக் கிருஷ்ண சங்கம் சாரதா வித்தியாலயத்தைப் பொறுப்பேற்கும் வரை நிதியுதவியைப் பிறரிடம் எதிர்பார்த்தே செய்ய வேண்டியிருந்தது. அச்சமயத்தில் காந்தி ஐயாவும் தன் பங்கைச் செய்துதவியதை மறக்க முடியாது. அன்றியும் ஸ்ரீ சாரதா வித்தியாலயத்தில் சாந்தி ஐயாவும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இக்காலத்தில் ஐயாவும் நானும் ஒன்று கூடித் தம்பலகமக் கிராமத்தில் சமய, சமுதாயப் பணிகளைச் செய்யக்கூடிய பெரும் வாய்ப்புப் பெற்றோம்.

எனது பணிகளுக்கு ஐயாவும், ஐயாவின் பணிகளுக்கு நானும் என்ற நல்லெண்ணம் நமது பணிகளை விரியச் செய்தது. தொண்டு மனப்பான்மையிலும், கொள்கை ஒற்றுமையிலும் எளிமையான வாழ்விலும் ஒரு முகப்பட்டு இரட்டையர்கள் போல், தொண்டருக்குத் தொண்டராய் சேவையாற்ற வாய்ப்புப் பெற்றோம்.

மக்கள் ஒவ்வொருவரும் ஐயா அவர்களின் சிந்தையும் செயலும் ஒன்றித்த தொண்டுகளின் பெருமையை எண்ணி மகிழ்ந்து தம்மால் இயன்ற பொதுத் தொண்டாற்றிச் சமுதாயத்தின் ஒற்றுமைக்கும், உயர்வுக்கும் பணிபுரிய வேண்டும் என்பது எனது எண்ணமாகும்.

மகாயோகியான கடவுள் தம் தெய்வீகப் பெயரைக் கொண்டே செய்யப்படும் எவ்வளவு வஞ்சங்களையும் அதர்மங்களையும் சகித்துக் கொண்டிருக்கிறார். மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுவடை செய்கிறான் என்று ஆண்டவனே கூறியிருக்கிறார். கருமபலனை அநுபவிக்காமல் யாரும் தப்பிவிட முடியாது.

-மகாத்மா காந்தி-



ஆசிரிய நண்பர்களோடு காந்தி (கந்தையா) மாஸ்டர்

# ஆனந்தம் காந்தி ஐயா.

வ. பு. சிப்பிரியான் பெர்னாண்டோ

எல்லோராலும் காந்தி ஐயா என அழைக்கப்படுகின்ற பொ. கந்தையா ஓய்வு பெற்ற ஆசிரியர். அவர்கட்கு அவரது நண்பர்களாலும், அவர்மேல் ஆர்வங் கொண்ட ஏனைய அறிவுலகப் பெருமக்களாலும் எடுக்கப் படுகின்ற எழுபத்தைந்தாவது பிறந்ததின விழாவிற்கு வெளியிடப்படுகின்ற விழா மலருக்கு காந்தி ஐயா பற்றி எனது அனுபவங்களை எழுத்தில் வடித்துத் தருவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அவர் பற்றி ஒரு கட்டுரை எழுதுவதென்ன - தனி ஒரு புத்தகமே எழுதி விடலாம்.

நான் மூதூர் அந்தோனியார் வித்தியாலயத்திலிருந்து 01-05-59 இல் இடமாற்றம் பெற்று திருக்கோணமலை புனித சவேரியார் வித்தியாலயத்துக்கு வந்தேன். அங்குதான் நான் இந்தக் காந்தி ஐயா அவர்களை நேரில் சந்தித்தேன். அதற்கு முன்பு ஒரு சமூக சேவையாளன் என்பதைப் பலர் வாயிலாகச் சொல்லக் கேள்விப்பட்டிருந்தேன். எல்லோரையும் ''ஆனந்தம்'' என மகிழுரை பகர்ந்து இன்முகத்துடன் பேசி தன் உரையாடலைத் தொடரும் இவரது உயர் பண்பு என்னை மிகவும் கவர்ந்தது. ஒன்று சேர்ந்து உறவாடினாலும் மனித உள்ளங்களிலே, பலரிடம் ஒரு விதமான ''கரவு'' இருப்பதை நாம் கண்ணூடாகக் கண்டிருக்கின்றோம். இவ்வியல்பைத் தன் தூய உள்ளத்தாலும் பேச்சாலும் மாற்றுகின்ற வல்லமை இவரிடம் இருந்தது. இப்பெருங்குணம் இவருக்கு அணி சேர்த்தது என்றே சொல்லலாம்.

எப்பாடசாலையில் கடமையாற்றினாலும், அங்கெல்லாம் அதிபர்களுக்கு இவர் பேருதவியாக இருந்திருக்கிறார். இவ்வுயர் பண்பு இவரது ஆசிரியத் தொழிலை மேலும் தூய்மைப்படுத்தியது. தான் கற்பிக்கின்ற காலங்களில் மாணவர்களை நற்குணமும் நல்லொழுக்கமும் உடைய பண்பாளராக மாற்றுவதற்கு இவர் பெரும் பணியாற்றியிருக்கின்றார்.

அறிவைப் பரப்பும் ஆசிரியப் பணியுடன் இவர் மக்கள் இதயங்களிலே கடவுளைக் காணும் இயல்புடையவராயிருந்தார். துயருறுவார்க்குப் பல வழிகளாலும் பணவுதவி வழங்கி ஆறுதலளித்து வருவதை நான் இவர் வாழ்விற் கண்டேன். ''ஏழைகள் என்றும் எம்முடன் இருப்பர்'' யேசு பெருமான் கூறிய உண்மையை காந்தி ஐயா நன்கறிந்து மற்றோருக்குத் தமது உதவியால் ஆறுதல் அளித்தாரென நான் மிகவும் மகிழ்ந்திருந்தேன். இது மாத்திரமல்லாமல் ஊனமுற்றோருக்கும் தள்ளாத வயதினருக்கும் பலவித உதவிகளைச் செய்தார். பல்வேறு திணைக்களக் காரியாலயங்களுக்குச் சென்று அதிகாரிகளைச் சந்தித்துப் பலருக்கு உதவிகளைச் செய்துள்ளார்.

இவரது வாழ்நாளில் செருப்பணியாமலே வெறுங்காலுடனே நடந்து சென்று சகல சமூகப் பணிகளையும் செய்வார். தன் வாழ்க்கைத் தேவைகளை ஒறுத்தே இப்படியான பணிகளை இவரால் செய்ய முடிந்தது இவருடைய மனைவியும் இவரது சமூகப்பணிகளுக்குப் பெரிதும் உதவிபுரிந்துள்ளார் என்பதைத் திருக்கோணமலை மக்கள் அறிவர்.

'காந்தி ஐயா' என அழைப்பது சரியென ஒரு நாள் என் அனுபவத்தில் உணர்ந்தேன். ஒருநாள் 'சியாமளா' வைத்தியசாலைக்கு நான் சென்றேன். வைத்தியசாலைக்குச் சென்றால் நோயாளருடன் கதைப்பது என் வழக்கம். அவ்வாறு நான் கதைத்துக் கொண்டு வரும்போது எழும்ப முடியாத படுக்கையில் இருந்த சாமியாருக்கு ஒரு தம்பதியினர் உணவூட்டிப் பணிவிடை செய்து கொண்டிருப்பதை நான் கண்டேன். அதன் பின்பு நான் அருகிற் சென்ற பொழுது காந்தி ஐயாவும் அவரது மனைவியுமே அவர்கள் என அறிந்து எனக்குள்ளாகவே நான் சந்தோஷப்பட்டுக் கொண்டேன். நல்ல சமாரியனின் நினைவு எனக்கு வந்து சென்றது. இக்குடும்பத்தினர் தாங்கள் செல்லும் இடமெல்லாம் ஒரேயொரு புதல்வனான முருகனையும் அழைத்துச் சென்றனர். தங்கள் நல்ல பண்புகளைத் தங்கள் புதல்வனிடத்திலும் பதித்து வந்தனர் என்றே சொல்ல வேண்டும்.

நான் அதிபராக இருந்த காலத்தில் எனது உற்ற துணையாக இருந்து செயற்பட்ட இவர் தனது ஆசிரியச் சேவையிலிருந்து ஓய்வு பெற்று முழுநேரச் சமூகசேவை செய்யத் துணிந்த செய்தி கேட்டு நான் மிகவும் வருந்தினேன். இது நிகழும் போது அவருக்கு வயது நாற்பத்தி மூன்று. மாணவர்களை நல்வழிப்படுத்துவதும் அவர்களைப் பூரண மனிதராக்குவதுமே ஒரு ஆசிரியனின் உயரிய சேவையாகும் என்பதனை அவருக்கு விளக்கினேன். அவர் என்னுடைய கூற்றைப் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டார். ஆனால் ''நான் செய்ய நினைக்கும் சமூகசேவை இறைவனுடைய விருப்பம் என நான் உணர்கின்றேன்'' எனக் கூறி அவர் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். நானும் எனது மாணவர்களும் ஆசிரியப் பெருந்தகையினரும் அவருடைய சேவையைப் பாராட்டி நல்ல பிரிவுபசாரத்தை வழங்கினோம். அவருடைய சேவையினால் எங்கள் பாடசாலை சிறப்புப் பெற்றது என மகிழ்ந்தேன். ஓய்வு பெற்ற பின்னரும் தனது கணவனுந் தானும் வேறு வேலை நாடி வருவாய் தேடும் இல்லறத்தார்க்கு அவரது இல்லறம் ஓர் எடுத்துக் காட்டாக அமைந்ததை உணர்ந்தேன்.

## வைர விழா

ஒரு சந்தர்ப்பத்தில் ''காந்தி ஐயா'' நோய்வாய்ப் பட்டிருப்பதையறிந்து கலங்கினேன். பின்பு அவர் சுகமடைந்த போது சந்தித்தேன். அவர் சொல்லுகின்ற 'ஆனந்தம்' என்ற வார்த்தையைக் கேட்டு நான் பெருமகிழ்ச்சியுற்றேன். வயதால் முதிர்ந்த இக் காலத்திலும் அவரது சமூகப்பணி தொடர்கிறது. அதுவும் ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரிக்கும் உயர் சேவையை அவர் தற்போது செய்து வருகின்றார்.

அவரது எழுபத்தைந்தாவது பிறந்த தினத்தில் அவரைப் பாராட்டிக் கௌரவிப்பது மிகவும் பொருத்தமான ஒரு காரியமே. இவருடைய சமூக சேவைகள் இன்னும் பல ஆண்டுகள் தொடர இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கட்டும் 'காந்தி ஐயா' பற்றி அவரது வாழ்க்கையைப் பற்றி எடுத்துக் கூறச் சந்தர்ப்பம் அளித்த விழாக் குழுவினருக்கு என் நன்றிகள்.

சுயநலத்தால் சீரழிந்து நற்பண்புகளையும் பழக்கவழங்கங்களையும் மறந்து போகும் இன்றைய இளம் சந்ததியாருக்கு காந்தி ஐயாவின் வாழ்க்கை அன்னாருக்கு நற்பண்பினையூட்டுவதாக அமையட்டும்.

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று''

**யாத்திரைகள், ஆலயதரிசனம்.**

புனித யாத்திரைகள், ஆலயதரிசனம் போன்றவைகளை இறைவனோடு இணையும் முறையில், திரிகரணசுத்தியுடன் சிறுமைக் குணங்களை நீங்கச் செய். அழுக்காறுகள் நீங்கும் வண்ணம் அது புனிதமாய் இருக்கட்டும்.

-சுவாமி கெங்காதரானந்தஜீ-

ஓம்

# திரு பொன் அம்பலம் கந்தையா.

(காந்தி ஐயா) அவர்கள்

சு. நவரத்தினம்

வீதிவழியே சென்று கொண்டிருக்கிறோம். காற்றில் மிதந்து வந்து நம் செவியை அடைகின்றன. 'ஆனந்தம், ஐயா' என்ற சொற்கள், தலையைத் திருப்பிப் பாராமலே அங்கு காந்தி ஐயா யாருடனோ பேசிக்கொண்டு செல்கிறார் என்பதை உணர்ந்து கொள்கிறோம் இதைச் சாதாரணமாகத்தான் நாம் நினைக்கின்றோம். ஆனால் ''ஆனந்தம்'' ''ஐயா'' இச் சொற்கள் காத்திரமானவை. சத்-சித்-ஆனந்தம். இம்மூன்று சொற்களின் சேர்க்கை சச்சிதானந்தம். மூவர் தந்த அடங்கன் முறையிலும், மணிவாசகனின் திருவாசகத்திலும் மருவி நிற்கும் சொற்கள் ஆனந்தம் என்பதும் ஐயா என்பதும் அவரது வாயிலிருந்து ஓயாது· ஒளியாது ஒலித்துக் கொண்டிருக்கும் ஈஸ்வர நாமங்கள் இவையாகும். சாதாரண மக்கள் இத்னை எங்கே புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

காந்தி மாஸ்டர் குடமுனி அகத்தியர் போல் சிறுவடிவம். இடையில் வெள்ளை வேட்டி மேனியைத் தழுவி மூடி நிற்கும் வெள்ளைச் சால்வை; கையிலே ஒருபை, விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள் என அவர் மதிக்கும் ஆன்மீக நூல்கள்; ஊருக்கு உதவும் காரியங்கள் தொடர்பான தஸ்தாவேஜுகள்; வாயிலே ஆனந்தம் ஐயா எனும் சொற்கள்; கண்களில் ஓர் அசாதாரண ஒளி; காந்தி ஐயாவின் தோற்றம் நம் கண்ணெதிரே நிழலாடவில்லையா?


மேற்சட்டை போடாமல் இந்தக் காந்தீயத் தோற்றத்தை ஐயா 1945 இலேயே ஏற்றுவிட்டார். அப்போது அவர் வயது 27. தனது 15வது வயதிலே காந்தீயத்தில் தொண்டராகச் சங்கமித்து விட்டவர் கந்தையா என்ற எங்கள் காந்திஐயா. இருபது வயதில் அதாவது 1938இல் ஆசிரியப்பணி ஏற்ற காந்திஐயா, வடக்கே வவனியாவிலும் கிழக்கே ஏறாவூர், கிண்ணியா, குறிஞ்சாங்கேணி, தாமரைவில், திரியாய், கக்கல, கொக்குவில், கோணேஸ்வரா, தம்பலகமம் சாரதா வித்தியாலேயம் ஆகிய பாடசாலைகளில் 25 வருட சேவையை ஆற்றியவர் காந்தி மாஸ்டர் என்றால், ஈழத் தமிழ் கூறும் நல்லுலகில் அவரைத் தெரியாதவர் யாரும் இல்லை. இத்தகைய ஒரு மகானின் தனிவாழ்வை எழுதுவதா? பொதுவாழ்க்கையை எழுதுவதா எனப் பலமணிநேரம் சிந்தித்தபோது எனக்கு ஒரு பேருண்மை புலனாயிற்று. ஆம் காந்திஐயாவைப் பொறுத்தவரை அவருக்கு இவை இரண்டும் ஒன்றே.

உலகில் எண்ணிறந்ததாய் வாழும் ஆன்மாக்கள் அனைத்தும், பிரமத்தின் வடிவங்களே என்ற உபநிஷத வாக்கின் உண்மையை நண்குணர்ந்தவர் ஐயா அவர்கள். அதனால்தான் பிறந்த குழந்தை முதற்கொண்டு வயது சென்ற வயோதிபர் வரைக்கும் அனைவரையும் அவர் 'ஐயா' என்று அழைப்பதிலே ஆனந்தம் கொள்பவர்.

''ஈதல் இசைபட வாழ்தல் அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

என்ற குறளின் மகத்துவத்தை உணர்ந்த மகான் காந்தி ஐயா அவர்கள்.

இந்தியாவில் அவதரித்த தத்துவமேதையும் தவஞானியுமாகிய காந்தியடிகளின் வாழ்வினைப் பின்பற்றி வாழ்ந்து கொண்டுவரும் ஒரு மகாஞானி என காந்தி ஐயாவைக் கூறலாம்.



இடமிருந்து வலம்- திருவாளர்கள், ரவிச்சந்திரமோகன், காந்தி மாஸ்டர், டாக்டர் இராமச்சந்திரன், கட்டுரை ஆசிரியர் நவரத்தினம், வைரவிழா மலர் ஆசிரியர் அமரசிங்கம், பாக்கியநாதன், சங்கரதாஸ்.)

1957 இந்த இல்லறத் துறவியை நான் சந்தித்த ஆண்டு ஆகும். பண்டிதமணியின் மாணவனாய் வாழ்ந்து, அன்னார் ஆசியுடன் திருக்கோணமலைக்கு வந்து இந்துக்கல்லூரியில் உதவியாசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையிலே,

பொதுவாழ்வில் என் சிந்தை நாட்டம் வைக்க வழி சமைத்தவர் அவரே; எமது இந்து சமுதாயத்தில், கால கஷ்டத்தால் வீதிகளிலும், சாலைகளிலும் திக்கற்றுத் திரியும் இந்துக் குழந்தைகட்கு, உணவு, உடை, உறையுள் தந்து பராமரித்து, அவர்களையும்

சமுதாயத்திற்குகந்த நற்பிரஜைகளாக வாழவைக்கும் பணியில் என் சிந்தை திரும்பியது இம்மாபெருந் தொண்டிற்காக எனது வாழ்வின் ஓர் பகுதியை அர்ப்பணிக்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார் காந்தி ஐயா. இதன் முதற்படி தான் நீதிபதி திரு. கிருஷ்ணதாசன் அவர்கள் மேற்பார்வையில் சண்முக தர்ம தாபனத்தின் கீழ் 1957 பங்குனி மாதம் ஸ்ரீ சண்முக மாணவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய ஸ்ரீ சண்முக மாணவர் இல்லம் முப்பத்தைந்து வருடகால வளர்ச்சியைக் கொண்டதாய் மூன்றடுக்கு நவீனமான கட்டடத்தில் தலைநிமிர்ந்து, நிலைபெற்று நிற்கிறது.

திருக்கோணமலையில்? ........ஏன்? அகில இலங்கையிலுமே இந்துமதத் தாபனங்கள், பொதுச்சேவைத் தாபனங்கள் எவை எனினும் காந்தி ஐயாவின் அனுசரணையுடன் ஆலோசனை பெற்று வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

சட்டரீதியில்லாத ஓர் நீதிபதியாக திருக்கோணமலை வாழ்மக்களால் மதிக்கப்பட்டு வருபவர் ஐயா. இவர் கூறும் முடிவுகளை, ஓர் தார்மீகத் தீர்ப்பாகவே மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

''அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று''
''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

மேற்படி குறளுக்கியைய வாழ்ந்து கொண்டிருப்பவர், நான் அறிந்தமட்டில் காந்தி ஐயா அவர்களே. இவரைப் பற்றி நான் எழுதும் வேளை, ஐயாவின் தர்மபத்தினியைப் பற்றி இரண்டொரு வார்த்தையேனும் குறிப்பிடாது விட்டால் நான் எனது கடமையைச் சரிவரச் செய்தவனாகேன். 1953 ஆம் ஆண்டு அவரைக் கைப்பிடித்த காலத்திலிருந்து, இற்றைவரைக்கும், தன் கணவர் சொற்படி வாழ்ந்து வரும் ஒரு இல்லத்தரசி; ஆசிரியத் தொழிலேற்றுப் பண்பாக பணியாற்றி வந்த சேவகி;

''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்ற செந்நாப்போதரின் கூற்றுப்படி வாழ்பவர், ஐயா என்றே அவரும் தம் கணவரை அழைத்திடுவார்.

காந்தீயக் கொள்கையில் கொண்ட அளவற்ற ஈடுபாட்டால் கதராடையே அணிபவர்; தூய மரக்கறி உண்பவர்; அவரது நினைவு, சொல், செயல் மூன்றும் தூயவையே இவரது வெள்ளையுள்ளத்தைத் தாக்க முனைந்த புல்லுருவிகள், அள்ளித் தெளிக்கும் சேற்றினால் அவர் வெகுண்டு, வெறுத்து கடும்வார்த்தை கூறியது என்றுமே கிடையாது.

எழுபத்தி நான்கு வருடங்கள் முடிந்து எழுபத்தைந்தாவது வயது ஆரம்பமாகும். இந்த நன்னாளிலே அவர் நூறாண்டு வாழ்ந்து, இந்தச் சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என வாழ்த்தி பொன் அம்பலத்துக் கூத்துடையாள் கழற்கு தலை சாய்த்து வணங்கி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

ஓம்

# தொண்டனுக்குத் தொண்டன்.

**கா. விநாயகசோதி**



(1961 இல் திருக்கோணமலை இராமகிருஷ்ணமிசனினில் வைத்து பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு காந்தி மாஸ்டர் அவர்கள் பொன்னாடை போர்த்தியபோது எடுத்த படம்)

காந்தி ஐயா என்ற பெரியாரை இப்புண்ணிய பூமியில் தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். இவ் அடைமொழிப் பெயர் எப்படி இவருக்கு ஏற்பட்டதென்று பல கோணங்களில் ஆராய்ந்தேன். கந்தையா என்ற பெயர் தாங்கியதனால் காந்தி ஐயா என்று வந்ததா? கதர் உடையணிவதனால் ஏற்பட்டதா? அகிம்சையையே தனது கொள்கையாகக் கருதியதனால் உண்டானதா? அல்லது எங்கெங்கெல்லாம் மக்கள் கஷ்டப்படுகிறார்களோ அங்கங்கெல்லாம் சென்று தொண்டனுக்குத் தொண்டனாகக் கைகொடுத்து நவும் மனப்பாங்கினால் ஏற்பட்டது தானோ? யான் அறயேன்.

என் மனதிற்கெட்டிய வகையில் கடைசியாகக் குறிப்பிட்டதையே சற்று அலசி ஆராய்வது சிறந்ததாக இருக்குமென கருதுகிறேன் கடந்த கால் நூற்றாண்டுகளாக இப்பெரியாரை நன்கு அறிந்துள்ளேன். எங்கெங்கெல்லாம் நன்மையான நிகழ்ச்சிகள் நடக்கின்றதோ அங்கங்கெல்லாம் அவரை கண்ணுற்றேன். அஃதே எங்கெங்கெல்லாம் துயரச்சம்பவங்கள் நடக்கின்றதோ அங்கங்கும் அவர் வீற்றிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அதனால்தான் இவரைப் பற்றி ஆராய வேண்டும் என்ற ஒரு எண்ணம் தோன்றியது.

அப்படி ஆராய்ந்த போது அவரைப் பற்றி மற்றவர்கள் கூறியது "வட்டிக்கு கொடுக்கும் காந்தி மாஸ்டரா?" எனக்கோ! மனம் "திக்" என்றது. வட்டிக்குக் கொடுப்பவராக இருந்தால் ஏன் ஒரு சால்வைத் துண்டைப் போர்த்துக் கொண்டு திரிய வேண்டும்.

கால்களில் செருப்பு அணியாது கொதிக்கும் வெய்யிலிலும் தன்னையே வாட்டி வதைக்க வேண்டும். இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும் என எண்ணி மேலும் ஆராய முற்பட்டேன்.

அழகிருந்தும், படிப்பிருந்தும் தம்மகளைக் கரைசேர்க்க முடியவில்லையே என தினம் தினம் ஏங்கித் தவிக்கும் பெற்றவர்கள் பலர். அதில் ஓர் தாயும், தந்தையும் எவ்வளவோ சிரமப்பட்டுக் கடைசியில் ஒரு வரனைப் பார்க்கிறார்கள். இருந்த எல்லாவற்றையும் விற்றுச் சீதனம் கொடுக்கிறார்கள்; இருந்தும் மணமகனின் பெற்றோர் கேட்ட பணத்தை ஒரே தடவையில் கொடுக்கப்படாவிட்டால் கல்யாணம் இல்லை என்ற நிலைக்கு வந்து விட்டது. பெற்றவர்களோ என் செய்வார்கள்; மேற்கொண்டு எதுவுமே அவர்களிடம் இல்லை கொடுத்துப் பணம் பெறுவதற்கு, சிறிது தொகைப்பணம் குறைவதனால் கன்னியைக் கரை சேர்ப்பதற்கு முடியாமல் தவிக்கிறார்கள் பெற்றோர். இவ்வேளையில் தான் காந்தி ஐயா என்ற பெயர் ஞாபகத்திற்கு வருகிறது. ஓடோடிச் சென்று அவரிடம் தம் மனக் கவலையைக் கொட்டுகிறார்கள். ''எம்மிடம் பொறுப்புத் தருவதற்கு எதுவுமே இல்லை. எல்லாவற்றையும் விற்றுக் காசாக்கி விட்டோம். நீங்கள் தான் உதவி செய்ய வேண்டும்.'' அவர்களுக்கும் தெரியும், காந்தி ஐயாவின் பையில் நாணயமில்லை; அவர் வார்த்தையில் நாணயமுண்டு; அந்நாணயம் எங்கும் செல்லுபடியாகும் என்று மாற்றான் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதும் பெரியவர் இதற்கு என்ன சொல்ல முடியும். 'நீங்கள் போய் எல்லா ஒழுங்குகளையும் செய்யுங்கள்; நான் ஒரு தடவை சுற்றிப் பார்த்து வருகிறேன்.'' பணம் கொடுப்பவனுக்கும் காந்தி ஐயாவின் நாணயத்தில் பூரண நம்பிக்கை உண்டு.

பணமும் கொடுக்கப்படுகிறது. திருமணமும் சிறப்பாக நடைபெறுகிறது. பெற்றோரின் நீண்ட நாள் துயரமும் நீங்குகிறது. சிறிது காலம் செல்ல பணத்தைக் கொடுத்தவன் தன் அவசர தேவையின் நிமிர்த்தம் பெரியவரை நெருக்குகிறான். அவரும் பணம் பெற்றவரிடம் சென்று பணம் கொடுத்தவரின் நிலையை உணர்த்துகிறார். பணத்தைப் பெற்றவர்களிற் சிலர் பணத்தைப் திருப்பிக் கொடுக் முடியாத கஷ்ட நிலையைக் கூறுவர். சிலர் தாம் சேர்த்த பணத்தை எல்லாம் கொடுத்து ''இதில் நீங்கள் கடன்பட்டுத் தந்த முழுப் பணமும் இருக்கிறது. வட்டிப் பணத்தைக் கொடுப்பதற்குத் தற்போது முடியாமல் இருக்கிறது. அதற்கும் சில காலம் தவணை வேண்டித் தரும்படி கேட்கிறார்கள் அதற்குப் பெரியவரோ ''ஆனந்தம், தாருங்கள்'' என்று வாங்கிக் கொண்டு போய் பணத்தைக் கடனாகப் பெற்றவனிடம் கொடுக்கிறார். ஆனால் பணத்தைக் கடன் கொடுத்தவனோ வட்டியில்லாமல் வேண்டுவான? இந்நிலையில் பெரியவர் என்ன செய்ய முடியும்? தனது சம்பளத்தில் மாதாந்தம். சிறிது சிறிதாக தன் பிள்ளையின் பிற்கால வாழ்க்கைக்காக சேமித்த பணத்தை எடுத்துக் கொண்டு போய் வட்டியைக் கட்டி விடுகிறார். இது போன்ற பல அநுபவங்களை சம்பாதித்தும் வைத்துள்ளார். இது தான் காந்தி ஐயா வட்டிக்கு கொடுக்கும் முறை. இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்,

''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது''

இவ்வாறுதான் இப்புண்ணிய பூமியில் வாழும் பற்பல பகுதியினர்க்கும் உதவி புரிந்து வந்துள்ளார். மகன் படித்துவிட்டு வேலையாற்றிருக்கிறானே வெளிநாடு அனுப்பி. சம்பாதிப்போம் என்றாலும் கட்டுவதற்கு பணம் போதாமல் இருக்கிறதே என்ற ஓர் அங்கலாய்ப்பு, ஒரு சிறு வியாபாரம் செய்தாவது வாழ்க்கையைக் கொண்டு செலுத்தலா மென்று இன்னொரு பகுதியினரின் தவிப்பு, மகனை இங்கு வைத்திருந்தால் இழந்து விடுவோமோ என்ற பெற்றவர்களின் துடிப்பு! இப்படி இன்னோரன்ன துன்பங்களை யெல்லாம் தீர்ப்பதற்கு காந்திஐயா தன்உடல், பொருள், அனைத்தையும் அர்ப்பணித்தார் என்பதே சாலப் பொருந்தும்.

இவ்அரும் பெரும் உதவிக்கு அவருக்கு நாம் எதை ஈடாகக் கொடுக்க முடியும். இதைத்தான் உலகப் பொதுமறையை வகுத்த பொய்யா மொழி நாயனார்.

''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது''

என்று இவரைக் குறிகாட்டி கூறினார் போலும்

பெரியவர் காந்திஐயா ஓர் ஓய்வுபெற்ற அதிபர், அவர்துணைவியாரும் ஓர் ஓய்வு பெற்ற அதிபர். இருப்பதோ ஒரேயொரு மகன். இவர்கள் நினைத்திருந்தால் கதர் வேட்டி எதற்கு? காலில் செருப்பு இல்லாமல் தெருத் தெருவாக நடந்து திரிய வேண்டிய சந்தர்ப்பம் எதற்கு? ஆடம்பரமாக வாழமுடியாவிட்டாலும், வசதியாக வாழ்ந்திருக்கலா மல்லவா? தன் அர்ப்பணத்தினால் மக்கள் சேவையே! மகேசன் சேவை!! என்று எமக்கு உணர்த்தினார் போலும். தனது இவ்வரும் பணியால் தலைவரல்லாது, ''தொண்டனுக்குத் தொண்டனாக'!! சேவை செய்வதே உயர்ந்த சேவை என்பதை இந்நாட்டு மக்களுக்கு நிருபித்துள்ளார் எனக் கருதுகிறேன். உள்ளத்தில் ஒரு அவா; ''காந்தி ஐயா''. என்பதை விடுத்து ''திருமலை காந்தி'' என நாமகரணம் சூட்டலாமா? இதை மக்க ளிடமே விடுகிறேன்.

எங்கெங்கெல்லாம் சான்றோர்களையும், உத்தமர்களையும் நாடு போற்றவில்லையோ அங்கங்கெல்லாம் சான்றோர்களும் உத்தமர்களும் தோன்றாமலே போய்விடுவார்களாம்.

''எழுமை எழு பிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு''

திருமலை காந்தி நீடு வாழ்க!
மேன் மேலு சேவையை எமக்கு அர்ப்பனிக்க!!

ஓம்

# வீடும் நாடும் அன்னையரிடத்தில்

பொ. கந்தையா, காந்தி ஆசிரியர்

'வீடு சிறக்க நாடு சிறக்கும்' என்பது பழமொழி. இன்று நாடு சிறக்கவில்லையே. காரணம் வீடு சிறக்கவில்லை என்பதுதான். வீடு வேறு நாடு வேறு என்று வாதித்துக் கொண்டு இரண்டையும் பிரித்துரைக்கும் சுயநலமிகள் கூட்டத்தால்தான் இன்று இத்தனை பிரிவுகளும், துன்பப் பூசல்களும், வறுமையின் கொடுமைகளும் நாட்டில் தாண்டவமாடு கின்றன. நாடு நமது உடலைப் போல என்றால் வீடு உடலின் ஓர் உறுப்புப் போலாகும். உடலின் பிரச்சனை வேறு, உறுப்பின் பிரச்சனை வேறு என்றால், உடலும் அழிந்து உறுப்பும் அழிந்து போக வேண்டியது தான். இப்படியே இன்று நாடும் வீடும் அழிந்து கொண்டேயிருக்கின்றன. இவற்றை ஒன்று படுத்த உவகை உய்விக்க வழியில்லையா? இருக்கிறது. ஒவ்வொரு தனி மனிதரும் ஒழுங்காக வாழ்ந்தால் தான் ஒரு வீடு சிறக்கும் தனிமனிதர் எப்படி ஒழுங்காக வாழ முடியுமென்றும், அதே நேரத்தில் அவர் தனது வீட்டின் பங்கையும் நாட்டின் பங்கையும் எப்படி ஏற்றுக் கொள்ள முடியுமென்றும் காந்தி யடிகளும் அன்னை கஸ்தூரிபாயும் நம்முன் நடந்து காட்டினார்கள். இவர்களது வாழ்க்கை வழியே நமக்குரிய வழியாகும்.

அன்னை கஸ்தூரிபாய் தனது வீட்டில் மட்டுமா அன்னையாக இருந்தார்? இல்லை. உலகிலுள்ள அத்தனை குடிசைகளிலும் அன்னையாக விளங்கினார். அவர்களது தாய்மை யின் கீழ் உலகம் தலை வணங்கி நின்றது. அவர்களது தாயுள்ளம் உலக மக்களைக் குழந்தைகளாகக் கண்டது. அவர்கள் குற்றங்குறைகளைப் பொறுத்து அவர்களுக்கு நற் புத்தி கூறி அவர்களை உய்வித்தது. நாம் கண்டு களிப்பதற்காக, அல்லது சரித்திரம் எழுதி வைப்பதற்காக, அல்லது நாம் கோயில் கட்டிக் கும்பிடுவதற்காக அன்னையார் வாழவில்லை. நாம் எப்படி வாழவேண்டும் என்பதையே நமக்கு வாழ்ந்து காட்டினார். முன்மாதிரியாக வாழ்வதென்பது எல்லாருக்கும் முடியாது. தியாக அக்கினியில் அல்லும் பகலும் தோய்ந்த பரிசுத்த வாழ்வே இலட்சிய வாழ்வு. அங்கு விஷய சுகங்களும், சோம் பேறித்தனங்களும், சுயநலங்களும் இல்லை. ஆத்ம இன்பமும், விடா முயற்சியும், பொது நலமுமே அங்குண்டு. இலட்சிய வாழ்வில் உலகமே ஒரு குடித்தனமாகக் காணப்படும். இத்தகைய வாழ்வில் நாம் துணிந்து இறங்க வேண்டும். கஸ்தூரி அம்மையாரின் வாழ்வு நமது தாய்மார்களுக்குத் தைரியத்தைக் கொடுக்கும். எல்லாரும் சகோதரர்கள், எல் லாரும் உலகமாதாவின் குழந்தைகள் என்ற உள்ள உணர்ச்சி ஒன்றே நமக்கு வேண்டிய தைரியத்தைத் தரவல்லது.

அன்னையர்கள் தமது கையில் வீடும் நாடும் தங்கியிருக்கிறதென்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இந்த உணர்ச்சி இன்றைய தாய்மார்களிடம் குறைவாகவே இருக்கிறது. தன் வீட்டையும் தனது இரண்டொரு குழந்தைகளையும் எப்படியாவது பார்த்துக் கொண்டால் தம்கடமை தீர்ந்தது என்று எண்ணுகிறார்கள். அக்கம் பக்கத்து

வீட்டுப் பிள்ளைகளின், அல்லது அயற்கிராமத்துப் பிள்ளைகளின் குறைபாடுகள் நாட்
டையும் தமது வீட்டையும் பாதிக்கும் என்பது இவர்களுக்குத் தெரிவதில்லை. ஒரு வறிய
வீட்டில் ஒரு குழந்தைக்குத் தொற்று நோய் கண்டால் அது கிராமம் முழுவதையுமே
பாதிக்கக்கூடும். வறுமையாலும் அறிவுக் குறைவாலும் அவர்களுக்கு நோயாளரைப்
பேண முடியாமற் போகலாம். தகுதியுள்ள தாய்மார்கள் இவ்வறிய குடும்பத்தைக்
கவனித்திருந்தால் இந்த ஆபத்திலிருந்து கிராமம் முழுவதுமே தப்பிப் பிழைத்திருக்கும்.
பொதுநல உணர்ச்சியும் அதனாலேற்பட்ட சேவையுள்ளமும் அதற்கு வேண்டிய அறிவுமே
தாயின் தகுதிகளாம். பொருள் அவ்வளவு முக்கியமல்ல. மனத்தூய்மையுடன் சேவை
செய்யும் போது பொருள் தேவைக்கேற்றபடி வந்து சேரும்.

தகுதியுள்ள அன்னையர்கள் தமது அயலிலுள்ள தாய்மார்களையும் குழந்தை
களையும் கவனிக்குமுன் தமது வாழ்க்கையை இன்னும் சீராக்கி, கட்டுப்பாடுகளுக்குட்
படுத்தி எத்தகைய சோதனைகளுக்கும் தயாராக இருக்கப் பிரதிகளை எடுத்துக் கொள்ள
வேண்டும். நேரத்தின் அருமையைப் பேசமுன் தாங்கள் நேரத்தைச் சரியாகப் பயன்
படுத்த வேண்டும். பணத்தின் அருமையையும் சிக்கனத்தையும் உபதேசிக்குமுன் தாம்
பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து காட்ட வேண்டும். பத்து உடைகளின் விலை
யாகிய இருநூறு ரூபாவுக்கு ஒரு உடையை உடுத்திருக்கும் தாய் ஒரு உடைக்கு இருபது
ரூபா போதுமென்று போதிக்கமுடியாது. ஓய்வு நேரங்களில் சீட்டாடும் ஒருதாய் ஏழை
களிடம் போய் ஓய்வு நேரங்களில் படியுங்கள் என்று சொல்வதெப்படி? றிச்சோ வண்
டியில் ஏறிச் செல்லும் தாய் றிச்சோக்களை ஒழிக்க வேண்டும் என்றால் யார் கேட்
பார்கள். எடுத்ததற்கெல்லாம் சீனியை உபயோகிக்கும் தாய் பனங்கட்டியை உபயோகி
யுங்கள் என்று உபதேசிப்பதில் பயனில்லை. வீட்டில் நாலு வேலைக்காரரை வைத்து
மேய்த்து விட்டு உங்கள் வீட்டு வேலைகளை நீங்ககள செய்யுங்கள் காசும் மிஞ்சும்,
உடலும் வலுக்கும் என்றால் உலகம் ஏற்றுக் கொள்ளாது. எதையெதை மற்றவர்களுக்கு
உபதேசிக்கிறார்களோ அவற்றையெல்லாம் கூடியவரை தம் வாழ்வில் கைக்கொள்ள
வேண்டும். "செய்பவர் சொன்னால் செகத்தினர் கேட்பர்"

அன்னையர்கள் இவ்விதம் சேவைக்குத் தயாரானதும் தங்கள் சேவைக்கென ஒரு
வட்டாரத்தை தெரிவு செய்து கொள்ள வேண்டும். அப்பகுதியிலுள்ள குறைபாடுகளைப்
புள்ளிவிபரங்களோடு அறிந்து கொண்டு வேலையைத் தொடங்க வேண்டும். சில வேலை
களில் தனித்தும் சில வேலைகளில் கூட்டமாயும் பொறுப்பேற்க வேண்டி வரும். குறித்த
வீடுகளுக்குச் சென்று அங்குள்ள சுகாதாரக் குறைவுகளைக் கவனித்து உதவி செய்யலாம்.
கர்ப்பிணிகளையும் தாய்மார்களையும் சந்தித்துப் புத்திமதி கூறலாம். இயற்கையாகக்
கிடைக்கக்கூடிய உணவுகளை உபயோகிக்கச் செய்யலாம். விலைகூடிய கோவாவுக்குப்
பதில் மலிந்த சத்துள்ள பொன்னாங்காணி, வல்லாரை போன்றவற்றைப் பழக்கலாம்.
வீட்டுத் தோட்டங்களை உண்டாக்க உதவலாம் பாலுணவுக்குப் பசு வளர்த்தலைத்
தூண்டலாம். தவிட்டரிசியின் மேன்மையைக்கூறி உரல் உலக்கையை உபயோகத்துக்குக்
கொண்டு வரலாம் பல தாய்மார்களை ஒன்று சேர்த்து சுகாதாரம் உணவு சமையல்
விஷயங்களைப் போதிப்பதோடு செய்தும் காட்டலாம். எப்படியும் சந்ததிகளை நாட்டில்
விருத்தி செய்வதில் தாய்மார்களே முழுக்கவனமும் செலுத்த வேண்டும். "தாயைப்
போலத் தானேபிள்ளை"

உடை முக்கியமான ஒரு தேவையாயிருந்தும் அவ்விஷயத்தில் எப்படி நடந்து கொள்ள
வேண்டுமென்பதில் பலதாய்மார்கள் கவலை கொள்வதில்லை. ஏன் உடுப்பது என்பதைக்
கூடமறந்து போகும் அளவுக்கு உடைக் கொள்கை மாறுதலடைந்து வருகிறது. பண்
பாடுகள் கலாச்சாரங்கள்கூட அவமதிக்கப்படுகின்றன. அரைஉடை கால்உடை என்

றெல்லாம் ஆபாசமாக உடுத்துகிறார்கள். உடுப்பு அளவில் குறைவாயினும் செலவு மிகக் கூடுதலாகிறது. செலவு அளவுக்கு மிஞ்சும்போது அது ஆபாச உடுப்பாகிறது. இந்தப் பரிதாபகரமான நிலையிலிருந்து தாய்மார்கள் விடுபடவேண்டும். பழைய தாய்மார்கள் கூட தமது அருமையான குழந்தைகளை நாகரீகத்தின் பெயரால் இப்படிக் கெடுத்து வடிவு பார்க்கிறார்கள். இப்படி ஒரே நேரத்தில் பண்பாடும் பணமும் கொலையுண்ணும் இரட்டைக் கொலைகளை உடனே ஒழிக்க வேண்டும். மானத்துக்கு உடுப்பது மலிவாய் உடுப்பது சுத்தமாய் உடுப்பது அழகாய் உடுப்பது அளவாய் உடுப்பது என்ற கருத்துக் களைத் தாய்மார்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். எத்தனையோ ஏழைகள் உடுத்த துணிக்கு அடுத்த துணி இல்லாது, குளித்துவிட்டு மாற்றிக்கட்ட மறுதுணி இல்லாது தவிக்கையில் சிலபெண்மணிகள், நாலுபத்து அலுமாரிகளில் புடவைக் கடையொவ்வொன்று வீட்டுக்கு வீடு வைத்து மணிக்குமணி மாறிக்கட்டுகிறார்கள். ஒரு ஊருக்குப் போதுமான துணியை ஒரு வீட்டில் வைத்திருப்பது சுயநலத் தடிப்பு மாத்திரமல்ல பாவமுமாகும். தகுதியுள்ள தாய்மார்கள் இவற்றைக் கவனிப்பதோடு ஏழைகளுக்குத் துணிகள் கொடுத்தும் தைத்துக் கொடுத்தும் தையல் பழக்கியும் உதவலாம்.

எல்லாச் சீர்திருத்தத்துக்கும் கல்வியறிவு முக்கியம். குறித்த வட்டாரத்தில் ஒவ்வொரு பெண்பிள்ளையும் படிக்கச் செய்ய வேண்டும். படிக்காத பிள்ளைகளைப் பெற்றோரிடமிருந்து விடுவித்துப் பள்ளிக்கனுப்ப வேண்டும். பதினான்கு வயது வரை கட்டாயக் கல்வி என்ற கொள்கையாவது கைக்கொள்ள வேண்டாமா? அனாதைப் பிள்ளைகளுக்குரிய உணவு, உடை, புத்தகச் செலவுக்கு வழி தேட வேண்டும். வயது குறைந்த பிள்ளைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தும் பழக்கத்தைத் தாய்மார்கள் கண்டிப்பாக நிறுத்த வேண்டும். வளர்ந்தவர்களும் கேள்வியறிவு மூலம் கல்வி கற்க உதவ வேண்டும். விசேட கலைகளையும் வளர்க்க வேண்டும். நிலையான வாசிகசாலைகளையும், சுற்றும் வாசிகசாலைகளையும் ஏற்படுத்தி நல்ல நூல்களை வாசிக்கவும் செய்யலாம். வீட்டு ஆட்சியும் நாட்டு ஆட்சியும் தாய்மார்களிடம் தங்கியிருக்கிறதென்பதை எடுத்துக் காட்ட வேண்டும். பாராளுமன்றமே தாய்மார்களின் எண்ணத்துக்கு நடக்க வேண்டும். தாய்மார்களை நிர்மூலமாக்கும் மதுவைத் பெருக்குகின்ற இன்றைய அரசாங்கம் ஒரு போதும் தாய்மார்களால் ஆக்கப்பட்டிருக்க முடியாது. மது விலக்குக் கொள்கையை அடிப்படையாக வைத்து தமது வாக்குரிமைகளை உபயோகிக்கத் தாய்மார்கள் கற்றுக் கொள்ள வேண்டும். தாய்மார்கள் அறிவற்ற குருட்டுப் பிராணிகளாய் இருக்கும் வரையும் தவறான வழிக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டியவர்களேயாவர்.

சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு. அதிகம் செலவு செய்வதை ஒரு நாகரிகமாகக் கருதும் இக்காலத்தில் உழைப்புக் குறைகிறதென்பதும் கடன் கூடுகிறதென்பதும் ஒவ்வொரு வீட்டிலுங் கேட்கும் இருசத்தங்களாகும். உழைப்பை நேர்மையான வழியில் கூட்டுவதற்கு எல்லாருக்கும் முடியும். குடிசைக் கைத்தொழில்கள் மூலமும் கொஞ்சம் வருவாயை உண்டுபண்ண வேண்டும். குறைத்துச் செலவு செய்வதே நாகரிகம் என்று தாய்மார்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். முக்கியமாகக் கடன்படாமல் சீவிக்கப் பழக்க வேண்டும். சிறு சேமிப்பு இயக்கங்களும் வேண்டும். வட்டிக்கடைகளை வாழ்க்கைக்குதவி என்று வாழ்த்தாது அவை மனிதரை ஓட்டாண்டிகளாக்கும் ஒருவகைப் பொறிகள் என்று கொள்ள வேண்டும். உள்ளவர் இல்லாதவர்க்கு உபகாரமாகவோ கைமாற்றாகவோ

கொடுத்துதவுவது நல்ல விஷயமாகும். ஒவ்வொரு குடும்பமும் மாதாந்த வரவு செலவு களை எழுதி வைக்கப் பழக்கவேண்டும். அப்போதுதான் திருத்தங்களைக் காணமுடியும். சேவை செய்யும் தகுதியுள்ள தாய்மார்கள் தங்கள் சிக்கனமான வரவு செலவுக் கணக்கு களை மற்றைய தாய்மார்களுக்கு முன் மாதிரியாகக் காட்டலாம்.

உலகத்திலுள்ள செல்வங்களெல்லாம் ஆண்டவனுடையவை. அவற்றில் நமது கடமையை உழைப்பாகவும் நமது தேவையை ஊதியமாகவும் கொள்ள வேண்டும். நமது தேவைகளுக்கு மேலாக எதையும் அனுபவிக்க முயல்வது ஆண்டவனிடம் திருட்டுத்தனம் செய்வதேயாகும். ஆதலால் அளவுக்கு மிஞ்சிய சொத்துகளை தாய்மார்கள் ஏழைகளுக்குக் கொடுப்பதன் மூலம் ஆண்டவனிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ஆண்டவனுடைய சொத்துக்களையும் அவனளித்த வசதிகளையும் அவனுடைய பிள்ளைகளாகிய நாம் எமக்குள்ளே பகிர்ந்து கொண்டால் அதுவே காந்தியடிகளும் அன்னை கஸ்தூரிபாயும் விரும்பிய உண்மை வாழ்வாகும். தன் பங்கையறிந்தால் தரணியில் போரில்லை தாய் மார்களின் உண்மையான சேவையே வீட்டிலும் நாட்டிலும் சமாதனத்தைப் பிறப் பிக்கும்.

நன்றி: யாழ்ப்பாணம் தமிழ்மகள் ஆனி 1952

—O—

## காணுவான்

எங்கென்ன நிகழுமோ அங்கிருப்பான் கண்ணுக்
கினிய நன்னூல் களோடே!
எல்லோர்க்கும் நல்லனாய் எவரோடும் பழகுவான்
ஈடிலாப் பழைய வாத்தி!
சங்கங்கள், கூட்டங்கள் தன்னிலே பண்டிதர்
தம்மோடு வீற்றிருப்பான்!
சைவநன்னெறியிலே தவறாமல் ஒழுகுவான்
'தலைப்பாரம்' இல்லாதவன்!
மங்கலத் தமிழிலே மறவாத கதை சொல்லி
மனமீர்க்கு முரை யாற்றுவான்!
மாபெருங் காந்தி போல் மலையிலே எளிமையாய்
மனையோடு வாழுகின்றான்!
இங்கிவன் வைரமாய் எழுபத்தி ஐந்திலும்
இருக்கிறான் 'ஆனந்த' மாய்!
எதிர்நாளில் வருகின்ற நூற்றாண்டும் காணுவான்
எமதருங் கந்தையனே!

'தாமரைத்தீவான்'
10-12-92



# கர்மயோகி காந்தி ஐயா அவர்களோடு சில நிமிடங்கள்

செவ்வி கண்டவர்

திருமுறைச் செல்வன் சைவ சித்தாந்த சிகாமணி

*கதாப்பிரசங்க வாரிதி*

சைவப்புலவர் — பண்டிதர்

ஆர். வடிவேல் அவர்கள்

வைரவிழாக் காணும் திருவாளர் பொ. கந்தையா (காந்தி ஐயா) அவர்களைக் கடந்த நாற்பத்தைந்து வருடங்களாக கர்மயோகியாகக் காண்கிறேன்.

காந்தி ஐயா, காந்தி மாஸ்டர், காந்தி ஆசிரியர் என்று அன்போடும் பண்போடும் பணிவோடும் மக்கள் அனைவரும் மதிக்கின்ற மகானுபவனை நான் கர்மயோகியாகக் காண்கிறேன். இல்லற வாசிகளாகத் திகழ்ந்த இராமரும், கிருஷ்ணரும் சிறந்த கர்ம யோகிகளாக வாழ்ந்தார்கள். பிரசித்தமான கர்மயோக மார்க்கம் இல்லறதர்மத்திற்கு ஒரு அப்பழுக்கற்ற கண்ணாடிபோல் பிரகாசிக்கின்றது. கர்மயோக மார்க்கத்தையறிந்து அதன் வழி வாழுகின்ற இல்லற-தர்மிகள் இந்த விசாலமான சம்சாரசாகரத்தை வெகு சாதுர்யமாகக் கடந்து நற்கதியடைவார்கள்

வாழ்க்கையைக் குறையின்றி நடத்துவதற்காகத் தனக்கென்று ஒருவேலையைத் தேர்ந்தெடுத்துப் பணம் சம்பாதித்துத் தன் மனைவி மக்களைப் பற்றி மட்டும் சிந்தித்துச் செயலாற்றிக் கொண்டு என் கடமைகளைச் செய்கிறேன்; நான் கர்மயோகி என்று கூறுபவர்களுமுண்டு. சுயநலப் பூர்த்திக்காக வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து பர நலம் பேணாது சுயநலத்தையே குறிக்கோளாகக் கொண்டு கர்மம் ஆற்றுபவர்கள் இந்த வகையினர்.

மாதகலிலே பிறந்து மாதகலாத இல்வாழ்க்கையைத் திருக்கோணமலையிலே அமைத்துத் தனக்கென்று ஒரு உத்தமமான வரலாற்றைப் படைத்த காந்தி ஐயா கர்ம யோகியா? ஆம். யார் கர்மயோகி? பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கீதையிலே விளக்கம் தருகிறார்.

கர்மம் என்றால் யக்ஞம் என்று பொருள். யக்ஞங்களில் ஐந்து வகை உண்டு

(1) பித்ருயக்ஞம்:- இவ்வுலகிற் பிறப்பதற்கான உடலைத் தந்துதவிய தாய் தந்தையரைப் பேணுதல், வணங்குதல்.

(2) தேவயக்ஞம்:- அந்த ஊனுடலிலே ஆன்மாவைக் குடியிருக்கச் செய்து அதற்கு உயிர்தந்த கடவுளை வழிபட்டு நன்றி செலுத்துதல்.

(3) ருஷியக்ஞம்:- நல்லறிவைப் பெற்று மனத்தையும் புத்தியையும் பரிசுத்த மாக வைத்துக் கொள்ள நூல்களிலிருந்தும் பெரியோர் களிடமிருந்தும் கற்றும் கேட்டும் ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.

(4) நரயக்ஞம்:- தன்னைப்போலவே பிறமனிதர்களிடத்திலும் அன்பு காட்டி நேசித்து அவர்களுடைய தேவைகளை இரக்கத் தோடும் ஆர்வத்தோடும் பூர்த்தி செய்வதற்கு ஆவன செய்தல்.

(5) பூதயக்ஞம்:- மனிதர்கள் மட்டுமன்றி விலங்கு, பறவைகள் போன்ற ஜீவராசிகளிடத்திலும் கடவுள்தான் இருக்கின்றார் என் பதை உணர்ந்து பரிவோடு அன்பு காட்டுதல்.

இத்தகைய ஐந்து யக்ஞங்களையும் எவனொருவன் அன்றாடம் தவறாது செய்து வருகிறானோ அவனே கர்மயோகி

மேற்கூறிய ஐந்து யக்ஞங்களையும் அன்றாடம தவறாது செய்து கொண்டு பற்றற்ற கர்மங்களைத் தனது வாழ்க்கையை நெறியாக்கிக் கொண்ட கர்மயோகி காந்தி ஐயா அவர்கள் ''யாதுமூரே யாவருங்கேளிர்'' என்ற இலட்சியத்தோடு புறயக்ஞங்கள் புரிவதை அவதானித்தேன். புறவாழ்விலும் புனிதமான பொதுநலங் கனிந்து கசிவதைக் காண் கிறேன். எனவே அகத்தும் புறத்தும் ஐயாவைப் படம் பிடித்துக் காணும் ஆதங்கத்தோடு அகக் கண்ணாற் பார்த்தேன்.

மாதகலிலே தவழ்ந்து விளையாடிய கந்தையாவின் கால்கள் தெரிந்தன. கொக்கு விலிலே நடைபயின்ற கந்தையா ஆசிரியரின் கம்பீர நடைக்கால்கள் தெரிந்தன. திருக் கோணமலையிலே தீவிர நடைபோடும் 'கர்மயோகி' காந்தி ஐயாவின் கால்கள் தெரிந்தன. 'எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்'' என்றுதானே எல்லோரும் கூறுகிறார்கள் பஞ்சபுலன்களுக்கும் யதாஸ்தானமாயிருக்கின்ற தலைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் காந்தி ஐயாவின் கால்களுக்கு மவுஷும் மதிப்பும் கொடுக்கிறேனே ஏன்? எனது வாசகர்கள் எழுப்பும் கேள்வி எனது செவிப்பறையைக் தட்டுகின்றது. வைர விழாக்காணும் இன்றுவரை அவை பாதகை அணியாத பாதங்கள் அல்லவா? இதற்காகத்தான் கால்களை மகிமைப்படுத்துவதாகக் கருதாதீர்கள்

''கோளில் பொறியிற் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை''

என்று திருவள்ளுவரும் இறைவனுடைய தாள்களையே மகிமைப் படுத்துகிறார். தலையைத் தாழ்த்தித் தாள்களை வணங்கி இறையருளைப் பெறும் பத்திநெறி உயர்ந்த பண்பாடு. இத்தகைய பக்தியோடும் பணிவோடும் காந்தி ஐயா அவர்களுடைய சரணங் களையே அரணாகக் கொண்டு செப்பி காணும் முடிவுக்கு வந்தேன்.

## செவ்வி

(1) சத்திய சோதனைக்கோர் சாட்சியாக விளங்கும் தாங்கள் காந்தீயத்தில் கரையத் தொடங்கிய ஆரம்ப அனுபவங்களைத் தயவு செய்து கூறுங்கள்.

1927ம் ஆண்டு மகாத்மா காந்தியடிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். அப்போது எனக்கு எட்டு வயது. நான் சிறுவனாயிருந்ததாலும், நான் பிறந்து வளர்ந்த மாதகல் கிராமத்திலிருந்து யாழ்ப்பாணம் பன்னிரண்டு மைல்களுக் கப்பால் இருந்ததாலும், அங்கு சென்று மகாத்மா காந்தியைத் தரிசிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது எனக்குக் கற்பித்தவர் கரவெட்டி முருகேசு உபாத்தியாயர். அவருடைய கற்பித்தலில் காந்தீயக் கருத்துக்களும் அறிவுறுத்தப்படும். மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒருசாலை மாணவனாகப் பழகிய பெருமையினார் என்னும் மாணவன் "சத்திய சோதனை" என்ற நூலைப் படிக்கத்தந்தார். அதைப்படிக்கத் தொடங்கிய போது சத்திய சோதனை கூறும் தத்துவங்கள் என் மனத்தைக் கவர்ந்து கொண்டது. இதனால் அப்போதிருந்தே நான் காந்தீயத்தில் கரையத் தொடங்கினேன்.

(2) தாங்கள் பிறந்த மாதகல் கிராமத்தில் உங்கள் நெஞ்சைக் கவர்ந்த சம்பவங்கள் சிலவற்றைக் கூறுகிறீர்களா?

மாதகல் கிராமத்தில் கோயில் கொண்டருளும் நுணசை முருகமூர்த்தி எங்கள் குடும்பக் குல தெய்வம். நுணசை முருகமூர்த்தி கோவிலில் நடைபெறும் தேர்த் திருவிழாவில் காணும் காவடிச் சிறப்பை இலங்கையில் எந்த இடத்திலும் காண முடியாது. பக்தி பரவசம் நிறைந்த காவடியாட்டச் சிறப்பை நுணசை முருக மூர்த்தி கோயிலில்தான் காணலாம்.

நுணசை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை படித்தேன். இங்கு பாலர் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது ஒரு சைவப் பெரியார் வந்து சைவப் பிள்ளைகள் சைவ உணவையே உண்ண வேண்டும் என்று பிரசங்கம் செய்தார். அன்று எனது தயாரிடம் இதனைக் கூறி சைவ உணவை உண்ணத் தொடங்கினேன். இப்பாடசாலை இப்போது முருகமூர்த்தி சைவ வித்தியாலயம் என்ற பெயருடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாதகல் விக்னேஸ்வர வித்தியாலயத்தில் பண்டிதர் இராமலிங்கம் என்பவரிடம் இளமைக்காலத்தில் கல்வி பயின்றேன். அவர் என்னை நல்வழிப்படுத்திய அனுபவங்கள் மறக்க முடியாதவை. இவைகளெல்லாம் எனது நெஞ்சைக் கவர்ந்த சம்பவங்களாகும்.

(3) கதர் உடையை அணியவும், காந்தீயக் கொள்கை அடிப்படையில் சேவை செய்யவும் உங்கள் மனதில் சங்கற்பம் செய்து கொண்ட சந்தர்ப்பங்கள் எவை?

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒன்பதாம், பத்தாம் வகுப்புக்களில் படிக்கும் போது பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களிடம் கல்வி பயின்றேன். காந்தீயக் கொள்கையில் இறுக்கமான பிடிப்புடைய பண்டிதர் ஐயா அவர்கள்

கதர் உடைதான் அணிவார். அவரைப் பின்பற்றி அக்காலந் தொடக்கம் கதர் உடை அணியும் பழக்கத்தை மேற்கொண்டேன். அந்தக் காலகட்டத்தில் சத்திய சோதனை என்ற நூலை மீண்டும் ஆர்வத்தோடு ஆழமாகப் படித்தேன். கதர் ஆடை அணிவதையும் கண்டிப்பாக்கிக் கொண்டேன். இதனால் காந்தீயத்தில் பற்று ஏற்பட்டு காந்தீய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தேன். கொக்கு வில் இராமகிருஷ்ண சைவ வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமை புரிந்த காலத்தில் காந்தி வேலாயுதபிள்ளை, ஹண்டி பேரின்பநாயகம், முதலியார் சின்னத்தம்பி, பண்டிதர் துரைசிங்கம் முதலிய காந்தீயவாதிகளுடன் சேர்ந்து அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தை அமைத்துக் காந்தீயப் பணிகளைச் செய்து வந்தோம். இவைகள் காந்தீயக் கொள்கையில் என்னை ஈடுபடுத்திக் கொள்ளச் சங்கற்பம் எடுத்துக் கொண்ட சந்தர்ப்பங்களாகும்,

(4) நீங்கள் எத்தனை வயதில் எந்த ஊரில் முதன் முதல் ஆசிரியப் பணிபுரியத் தொடங்கினீர்கள்?

1938ம் ஆண்டு எனது பத்தொன்பதாவது வயதில் வவுனியா மாவட்டத்திலுள்ள கருங்காலிக்குளம் அரசினர் பாடசாலையில் ஆசிரிய தராதரப் பத்திரத் தகுதி யோடு தலைமை ஆசிரியராக ஆசிரியப்பணி புரியத் தொடங்கினேன். இப்பாட சாலை புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. பொருளாதாரக் கஷ்டத்தினால் வாழ்க் கையில் வேதனைப் படுவோருக்கு உதவுவதற்காக ஐக்கியநாணய சங்கத்தை ஸ்தாபித்தேன்.

(5) கொக்குவில் இராமகிருஷ்ண சைவவித்தியாலயத்தில் பணியாற்றும் போது எதிர் காலத்தில் நல்ல பிரசைகளை உருவாக்குவதில் நீங்கள் மேற்கொண்ட சாதனைகள் எவை?

சைவ உணவுக் கொள்கையைப் பிரசாரஞ் செய்து மாணவர்கள் சைவ உணவ ருந்தும் பழக்கத்தை ஏற்படுத்தினோம். அறநெறி வாழ்க்கைக்கு வேண்டிய அறிவுரைகளை மாணவர்களுக்கும் கூறி தினமும் அந்த அறிவுரைகளை எழுதித் தொகுக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி அவர்களை ஒழுக்க நெறியில் வாழச் செய்தோம். பண்டித வகுப்புக்களையும், சமயபாட வகுப்புக்களையும் நடத்தி மேல் வகுப்பு மாணவர்கள் தமிழ் இலக்கிய அறிவையும், சமய அறிவையும் பெறச் செய்தோம்.

நூல்நிலையம் ஒன்றை அமைத்து மாணவர்களுக்கு வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினோம்.

நந்தாவில் அம்மன் கோவிலில் நடைபெற்றுவந்த சதிர்க்கச்சேரியை (சின்னமேளம்) எதிர்ப்பிரசாரம் செய்து நிறுத்தினோம். நான் கொக்குவிலை விட்டுத் திருக் கோணமலைக்கு வந்தபின் மீண்டும் அங்கு சதிர்க்கச்சேரி நடாத்தியதையறிந்து திருக்கோணமலையில் ஐந்து நாட்கள் உண்ணாவிரதமிருந்தேன்.

(6) திருக்கோணமலையில் உங்கள் வாழ்க்கை அமைவதற்குரிய வாய்ப்பை நீங்கள் தேடிக் கொண்டீர்களா? அல்லது சந்தர்ப்பம் சூழ்நிலையால் அது அமைந்ததா?

சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக எனது வாழ்க்கை திருக்கோணமலையில் அமைந்தது. காந்தீயக் கொள்கையின் ஈடுபாட்டினால் அரசாங்கத்தில் இனிக்

கடமை புரிவதில்லை என்ற முடிவுக்கு வந்து 1946ம் ஆண்டு நோட்டீஸ் மூலம் விளம்பரப்படுத்தி ஆசிரியப் பணியிலிருந்து என்னை விலக்கிக் கொண்டேன். இந்தியாவுக்குப்போய் காந்திய இயக்கத்தில் ஈடுபட்டுப் பயிற்சி பெற்று வந்து இலங்கையில் காந்தியசேவை செய்வது என நோக்கமாயிருந்தது. அக்காலத்தில் கல்வி அதிகாரியாயிருந்த திரு. அ. சந்திரசேகரம் அவர்களின் தூண்டுதலினால் இராமக்கிருஷ்ண சங்கப்பாடசாலைகளின் முகாமையாளரான சுவாமி நடராஜானந்தா அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் கொக்குவில் இராமகிருஷ்ண சங்கப் பாடசாலையில் ஆசிரியப்பணியை மேற்கொண்டேன். அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கும் போது சுவாமியவர்களிடம் மாற்றம் கேட்டேன். இலங்கையில் எப்பகுதியிலுள்ள இராமகிருஷ்ண சங்கப் பாடசாலையிலும் கடமைபுரிய ஆயத்தமாயுள்ளேன் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். சுவாமியவர்கள் திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்கத் தமிழ்ப் பாடசாலைக்கு மாற்றம் செய்தார் இதனால் திருக்கோணமலையில் சூழ்நிலை காரணமாக எனது வாழ்க்கை அமைந்தது. வவுனியாவை சேர்ந்த கருங்காலிக் குளத்தில் படிப்பிக்கும் போது ஒருவிவசாய அன்பர் ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தரின் நூல்களைத் தந்தார். அவற்றைப் படித்ததால் இராமகிருஷ்ண சங்கத்தில் பற்று ஏற்பட்டிருந்தது. இதனால் இச்சங்கத்தில் பணிபுரியச் சம்மதித்தேன். அரசாங்கத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய பத்து வருடங்களில் கருங்காலிக் குளம், தாமரைவில், திரியாய் ஆகிய மூன்று இடங்களில் புதிதாக அரசினர் பாடசாலைகளை அமைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவைகளெல்லாம் சந்தர்ப்பம் சூழ்நிலையால் நிகழ்ந்தன.

(7) தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்திற்கும் திருக்கேதீஸ்வரத்திற்கும் நீங்கள் ஆற்றிய தொண்டுகள் சிலவற்றைக் கூறுங்கள்?

திருக்கோணேஸ்வரத்தில் புனருத்தாரணத் திருப்பணிகள் நிறைவேறி முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்ற போது திருப்பணிச் சபையில் அங்கத்தவனாயிருந்து இலங்கையிலுள்ள சைவ அன்பர்களுக்குப் பத்திரங்கள் அனுப்பிப் பணந்திரட்டிக் கொடுத்தும் மண்டலாபிஷேகத்துக்கு உபயகாரர்களைச் சேர்த்துக் கொடுத்தும் தொண்டு புரிந்தேன்.

ஆத்மஜோதி ஆசிரியரின் உதவியினால் திருக்கோணமலை திருப்பதிக புத்தகங்களையும் கோவிற் படங்களையும் கும்பாபிஷேக மலரையும் வெளியிட உதவி புரிந்தேன். திரு. A. இராஜவரோதயம், சேவையர், திரு. முருகுப்பிள்ளை முதலானவர்களுடன் சேர்ந்து கும்பாபிஷேக நிதிகளை முறைப்படி கணக்கு வைக்க உதவினேன்

திருக்கேதீஸ்வரத்தில் மகோற்சவத் திருவிழா முதலாவது உபயம் திருக்கோணமலை இந்துக்கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்தது. அப்போது கல்லூரி அதிபராயிருந்த திரு. எஸ். அம்பலவாணர் அவர்கள் அந்த உபயத்தைச் சைவ அடியார்களிடம் ஒப்படைத்தார். இதனால் கடந்த முப்பத்தைந்து வருடங்களாக திருக்கோணமலைச் சைவ அடியார்களின் உதவியுடன் திருக்கேதீஸ்வரத்தில் முதல் திருவிழாவைச் செய்வித்து வரும் பாக்கியம் கிடைத்தது. இப்பணியினால்

சேர். கந்தையா வைத்திய நாதனின் அன்பும் ஆதரவும் திருக்கோணமலைச் சைவ அடியார்க்குக் கிடைத்தது.

(8) உங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத பொன்னாள் எது? அதற்குக் காரணம் என்ன!

1953ம் ஆண்டு மே மாதம் 28ந் திகதி எனது வாழ்க்கையில் மறக்கமுடியாத பொன்னாளாகும். அன்றுதான் திருக்கோணமலையில் மாபெரும் பெருவிழாவாகத் திருக்குறள் மகாநாடு நடைபெற்றது. இலங்கையில் முதன் முதல் நடைபெற்ற திருக்குறள் மகாநாடு இதுதான். வள்ளுவர் கழகத்தலைவர் பெ. பொ. சிவசேகரனாரும் (கழகப் புலவர்) சகாக்களும் மாநாட்டுக்கு ஏற்பாடுகள் செய்தனர். சுவாமி சச்சிதானந்தயோகிராஜ், திரு. அ. ச. ஞானசம்பந்தன், சிவஞானக் கிராமணியார் முதலான பேரறிஞர்கள் மகாநாட்டுக்குச் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்திருந்தார்கள். திருக்குறள் மகாநாடும் ''ஓகோ'' என்று சொல்லும் படியாகச் சிறப்பாக நடைபெற்றது. இதே காலகட்டத்தில் செல்வி பொன்னையா இராசநாயகி அவர்களைத் திருமணம் செய்ய ஏற்பாடாயிற்று. எனது திருமணத்தை நடாத்துவதற்கான சுபமுகூர்த்த நன் நாளாக இதே தினத்தை முன்னரே தீர்மானித்திருந்தேன். திருக்குறள் மகாநாட்டிற்குரிய பொன்னாள் இதுதான் என்று நான் திருமண நாளை நிச்சயிக்க முன் அறியவில்லை. திருவள்ளுவர் கழக அன்பர்களுக்கும் தெரியாது. தெரிந்தபின்னர் திருமண விழாவையோ திருக்குறள் மகாநாட்டையோ வேறு நாட்களுக்கு மாற்றி வைப்பது சாத்தியப்படாததால், திருக்குறள் மகாநாட்டுக்கு வந்திருந்த சுவாமிகளும் பேராசிரியர்களும் சான்றோரும் எதிர்பாரத விதமாக எங்கள் திருமண விழாவையும் 'ஜாம் ஜாம்' என நிறைவேற்றி வைத்தார்கள்.

காந்தீயக் கொள்கைப்படியே எங்கள் திருமணம் நடைபெற்றது. ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் திருமுறைகளை ஓதி திருமணத்தை நடத்தி வைத்தார். பண்டிதர் கா. பொ. இரத்தினம் திருமண விழாவுக்குத் தலைமை தாங்கினார். கதர் நூலிலே தாலி கோர்த்து மாங்கல்ய தாரணம் நிறைவேறியது. உபசரணைகளும் காந்தீயக் கொள்கைப்படியே நடைபெற்றன. இவைகள் எனது நெஞ்சை விட்டகலாத மங்கல நிகழ்ச்சிகளாதலால் குறித்த நன்னாள் என்னால் மறக்க முடியாத பொன்னாளாகும்.

(9) திருக்கோணமலையிலிருக்கும் சமய சமூகத் தொண்டர் ஸ்தாபனங்களை கர்மயோகப் பணிபுரியும் களங்களாகக் கருதி நீங்கள் தொண்டுகள் செய்து வருவதைப் பற்றிக் கூறுகிறீர்களா?

1952ம் ஆண்டு சிவானந்த தபோவனம் தொடங்கிய காலத்திலிருந்து திவ்ய ஜீவனசங்கம் நடத்தி வந்த குருபூர்ணிமா, அந்தர் யோகம் யோகாசன வகுப்புக்கள் முதலிய சமய நிகழ்ச்சிகளிலும் இலவச வைத்திய சேவை முதலிய சமூகப்பணிகளிலும் பங்கு பற்றித் தொண்டு புரிந்தேன். இவ்வாறே சிவயோக சமாஜம், திருவள்ளுவர் கழகம், அருள் நெறிமன்றம், சக்தி நிலையம், பகவான்

சத்திய சாயி சேவா சமித்தி, தெய்வீக ஒளிச்சங்கம், ஸ்ரீ இராமக் கிருஷ்ண சேவா சங்கம், திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, தெட்சண கான சபா, திருக்கோணமலை ஓய்வூதியம் பெறுவோர் சங்கம், திருக்கோணமலை மக்கள் சமாதானசபை முதலிய தொண்டர் ஸ்தாபனங்களை கர்மயோகப் பணிபுரியும் களங்களாகக் கருதிப் பங்குபற்றி அறிவுரைகள் வழங்கியும் ஆக்கப் பணிகளுக்கு உதவியும் தொண்டு செய்து வருகிறேன். சுவாமி சிவானந்த சரஸ்வதி மாதாஜி அவர்கள் சிவானந்த தபோவன அனாதை மாணவர் இல்லத்தைக் கண்காணித்து நடத்துவதற்கு ஒரு சபையை அமைத்தார்கள். அச்சபையில் அங்கத்துவனாயிருந்து கொண்டு அனாதை மாணவர் இல்லப் பொறுப்பை ஏற்று நடத்தி வருவது எனது கர்மயோகப் பணியாகும்.

*(10)* உங்கள் குடும்பப் பொறுப்பையும் உங்களுடைய உதவியை நாடிவரும் மக்களின் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு பிரச்சனைகள் நிறைந்த இந்தக் காலத்தில் எவ்வாறு அமைதியாக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்?

''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்''

என்பது வள்ளுவம். மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் தத்தமக்கு இயன்ற அளவில் அற வினைகளை ஓயாது செய்யவேண்டும் என்று கூறுகிறார் வள்ளுவர். வீட்டுக்கும் நாட்டுக்கும் அறவினை புரிவது கர்மயோகம். வீடு சிறிய குடும்பம். நாடு பெரிய குடும்பம். எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பது எனது இலட்சியம். எல்லாரும் நல்லாயிருக்க வேண்டும் என்பது எனது கோட்பாடு எனது குடும்பம் மாத்திரம் நல்லாயிருப்பது எனக்குத் திருப்தி தராது. நாடு முழுவதும் நல்லாயிருக்க வேண்டும் என்பது தான் எனக்குத் திருப்தி தரும். எல்லாரும் கடவுளுடைய பிள்ளைகள் அல்லவா? காந்தியின் கொள்கை சர்வோதயம். சர்வோதயம் என்பது கடையவனையும் கடைத்தேறச் செய்வது. கீழ் நிலையிலுள்ள மக்களை மேல் நிலைக்குக் கொண்டு வர எல்லோரும் எல்லாருக்கும் தொண்டு செய்ய வேண்டும். ஆதலால் குடும்பப் பொறுப்பையும், உதவியை நாடி வருபவர்கள் யாராயிருந்தாலும் அனைவருடைய பொறுப்பையும் சம நோக்கோடு பார்த்து பணிபுரிவதில் ஆனந்தமடைகிறேன். இந்த ஆனந்தத்தால் வாழ்க்கை அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

*(11)* உங்களுடைய தாரக மந்திரமாகிய ''ஆனந்தம்'' பிறந்த வரலாற்றையும் அது உங்களுக்கும் மக்களுக்கும் எந்த வகையில் பயன் படுகிறது என்பதையும் கூறுங்கள்.

எல்லோரும் இன்புற்று ஆனந்தமாக இருக்க வேண்டும் என்பது எனது பெரு விருப்பம். இந்த விருப்பத்தினால் எனது அடியுள்ளத்திலிருந்து இந்த வார்த்தை இயல்பாகவே ஒலித்து வாய் வழியாக வெளிவருகின்றது. எவரை நான் சந்திக்கிறேனோ அவர் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக '**ஆனந்தம்**' 'ஆனந்தம்'

என்று கூறுகின்றேன். இந்தத் தாரக மந்திரம் எப்போது ஒலிக்கத் தொடங்கிய தென்பது எனக்கு நினைவில்லை. மனிதன் அடையும் இறுதிநிலை ஆனந்தம். அதனை மக்களுக்கு நினைவுபடுத்துவது போல் என்னிடமிருந்து 'ஆனந்தம்' என்ற வார்த்தை பிறக்கின்றது.

(12) நீங்கள் நடத்திவரும் புத்தக வியாபாரக் கர்மயோகத்தால் ஏற்படும் ஆத்மீக லாப நஷ்டங்களை அறியக் கூறுங்கள்.

''தந்ததுன்தன்னைக் கொண்டதென்தன்னை, சங்கரா யார்கொலோ சதுரர்'' என்று மாணிக்கவாசகர் இறைவனோடு நடத்திய ஞான வியாபாரம் பற்றித் திருவாசகத்தில் கூறுகின்ற வியாபாரந்தான் எனது வியாபாரத்தின் உள் நோக்கம். பிறவியின் நோக்கம் கடவுளை அடைதல். அதற்குரிய சாதனைகளில் ஆத்மீகக் கல்வியும் ஒன்று. ஆத்மீகக் கல்விக்கு ஆத்மீக நூல்கள் அவசியம். ஆத்மீக நூல்களை மக்களிடையே பரப்புவதினால் அவர்கள் அவற்றைக் கற்று அறநெறியாளர்களாக வாழ்வார்கள். இதற்காகவே சமய நூல்களையும், நீதி நூல்களையும் மக்களிடையே பரப்பப் புத்தக வியாபாரம் செய்கிறேன். இவற்றைப் பரப்புவது நான் பெறும் லாபம். படித்து அறிவைப் பெறுவது மக்களுக்குப் பெரிய லாபம் இந்த வியாபாரத்தில் யாரும் நஷ்டப்படுவதில்லை.

(13) பறறறுப் பணிபுரியும் கர்மயோக சாதனைகளுக்கு உங்களை ஆளாக்கிக் கொண்ட வரலாற்றையும் அதற்கு உறுதுணையாயிருந்த சான்றோர்களையும் கூறுகிறீர்களா?

நான் நல்லவனாக இருந்து நற்பணிகளைச் செய்யவே விரும்பினேன். இதற்காக இளமைக் காலத்திலேயே என்னுடன் படிக்க மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இயன்ற தொண்டுகளைச் செய்தேன். நல்லவர்களை அணுகினேன். நல்லோர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டேன். நல்ல புத்தகங்களை படித்தேன் படிப்படியாக எல்லோருக்கும் எவ்வித வேறுபாடின்றி எவ்வித பலனையும் எதிர்பாராமல் தொண்டு செய்யும் நிலைக்கு என்னை ஆளாக்கிக் கொண்டேன். மக்கள் சேவையே மகேஸ்வரன் பூசை என்பது எனது கோட்பாடு.

இந்த நிலைக்கு அனுபூதிமான்கள், சுவாமிகள், பெரியோர்கள், சான்றோர்களின் சந்திப்பும் சகவாசமும் உறுதுணையாயிருந்தன.

ரமன மகிரிஷை நேரில் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது சுத்தானந்த மகரிஷி, சுவாமி சச்சிதானந்த யோகிராஜ், சுவாமி சிவானந்த சரஸ்வதி மாதாஜி, சுவாமி சிவானந்தா, சுவாமி சைதன்யானந்தா, சுவாமி பிரேமாத்மானந்தா, சுவாமி ஜீவனானந்தா, சுவாமி நடராஜானந்தா, சுவாமி சர்வாதீதானந்தா, சுவாமி ஆத்மஞானந்தா, சுவாமி அஜராத்மானந்தா, சுவாமி ஓங்காரானந்தா, சுவாமி கெங்காதரானந்தா, குன்றக்குடி அடிகளார், சோதிச்சுவாமி, வடிவேல் சுவாமி, செல்லத்துரைச் சுவாமி, ஜேர்மன் சுவாமி முதலிய சந்நியாசிகளின்

ஆசீர்வாதமும் வழிகாட்டலும் எனது கர்மயோக சாதனைகளுக்குப் பேருதவியாயிருந்தது.

இவ்வறே கலைமகள் ஆசிரியர் கி. வ. ஜெகநாதன் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, தொழிலதிபர் கலாநிதி க. கனகராசா, ஆத்ம ஜோதி ஆசிரியர் சிவத்திரு நா. முத்தையா, கிளிநொச்சி குருகுலம் கதிரவேலு (அப்புச்சி) சாது அப்பாத்துரைச் செட்டியார், குணசேகரம் சுவாமி, காந்தி இராஜகோபால், (தியாகி) காந்தி வேலாயுதபிள்ளை, பண்டிதர் அ ஆறுமுகம் (பண்ணாகம்) வித்துவான் நா. சிவபாதசுந்தரம், (தொல்புரம்) திரு. சோ. க. வேலாயுதபிள்ளை, திரு வ. கதிரித்தம்பி, பண்டிதர் சைவப்புலவர் ஆர். வடிவேல், உயர் திரு குமார சுவாமிக் குருக்கள் ஐயா, திரு. சு நவரெத்தினம், கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரனார் போன்ற சான்றோர்களின் சகவாசமும் எனது மனைவி இராசநாயகி அவர்களின் அன்பும் ஆதரவும் கர்மயோக சாதனைகளுக்கு உறுதுணையாயிருந்தன.

(14) கதிர்காம யாத்திரைக்குக் குடும்பத்தோடு கால்நடையாகச் சென்றதில் பெற்ற அநுபவங்கள் சிலவற்றைக் கூறுங்கள்

திருக்கோணமலையிலிருந்து கதிர்காமத்திற்கு கரையோரப் பாதைவழியாக நானும் எனது மனைவி இராசநாயகியும் ஒரே மகன் கதிர்காமநாதனும் (முருகன்) பாதயாத்திரை செய்தோம். யோதிச்சாமியுட்பட பதினேழு பேர் சென்றோம். அப்போது முருகனுக்கு வயது நாலரை. ஐந்து வயதுக்கு முன் முருகனுடன் பாதயாத்திரை செய்து கதிர்காமத்துக்கு வருவதாக கதிர்காமக் கந்தனுக்கு நேர்கடன் வைத்திருந்தோம். தொடர்ந்து நாற்பது நாட்கள் தெய்வ சிந்தனையிலும் பிரார்த்தனையிலும் ஆத்மீக வாழ்விலும் ஈடுபட்டிருந்த எங்களுக்கு பல புண்ணிய தலங்களை தரிசிக்கவும்; உகந்தை குமுக்கன், வியாளை முதலிய பல புண்ணிய தீர்த்தங்களில் ஆடவும், பல சாதுக்களையும் பெரியோர்களையும் தரிசிக்கவும் கிடைத்தது. பெருங்காடுகளில் எழும் ஓங்காரநாதத்தின் அமைதியையும் அனுபவித்தோம்

(15) ''நம்ப நட நம்பி நடவாதே'' என்ற பழமொழியின் தத்துவம் உங்களுடைய வாழ்க்கையில் சத்திய சோதனையாக அமைந்ததுண்டா?

''நம்ப நட நம்பி நடவாதே'' என்பது பழமொழி.
நம்பி நடப்பது எனது இலட்சியம்.

''துணைக்குப் போனாலும் பிணைக்குப் போகாதே'' என்பது பழமொழி.
பிணைக்குப் போய் நின்று சேவை செய்வதே எனது கர்மயோகம்.

''தனக்குக் கண்டு தானம் வழங்கு'' என்பது பழமொழி.
தனக்கின்றித் தானம் வழங்கு என்பது எனது புதுமொழி.

பொருளாதாரத்தில் கஷ்டப்படுகின்றவர்களுக்கு எனது பணத்தையும் கொடுத்தேன். மற்றவர்களிடம் கடன் வாங்கியும் கொடுத்தேன். பலர் என்னை ஏமாற்றி விட்டார்கள். எனது பரிதாப நிலையைப் பார்த்துத் தாராள சிந்தையுள்ள சில அன்பர்கள் எனக்கு உதவி செய்து வருகிறார்கள்.

(16) இன்றைய இளைஞர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் எவை?

பெற்றோரும், ஆசிரியர்களும், குருமாரும், பெரியோர்களும், தலைவர்களும் வாழ்க்கையின் இலட்சியத்தையும் பிறவியின் நோக்கத்தையும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். இவர்களின் வழிநடத்தலில் இளைஞர்கள் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இளைஞர்கள் தமது அறிவையும் ஆற்றலையும் சமுதாய சேவைக்குப் பயன்படுத்த வேண்டும். ஆத்மீக நூல்களையும் நீதி நூல்களையும் கற்பதன் மூலம் கடவுள் பக்தியையும் கடவுள் நம்பிக்கையையும் வளரச் செய்ய வேண்டும்.

ஐயா! கர்மயோகியாகக் காணும் ஆர்வத்துடன் வாசகர்களின் சார்பில் உங்களைச் செவ்விகண்ட எனக்கு உங்கள் பொன்னான நேரத்தைத்தந்து பொறுமையோடு பதிலளித்தமைக்கு நன்றி.

**நடு நாடி**

இந்து ஆலயங்கள் இந்து சமுதாயத்தில் நடுநாடியாகவே இருந்து வந்திருக்கின்றன. இதன் கற்பக்கிரகத்திலிருந்து ஒழுகிவரும் பிராணசக்தி சமுதாயத்தின் நாடித்துடிப்பைச் சீராக்குகிறது. சேத்திரச் சைதன்னியம் இருந்திருக்கா விட்டால் இந்து மதம் வரண்ட பாலைவனம் போன்று சூனிய நிலையை அடைந்திருக்கும்.

வர்ண பேதங்களும், முரன்பாடுகளும்' சம்பிரதாய பேதங்களுமுடைய இந்துக்களெல்லாம் ஆலயத்தின் ஏகசைதன்ய சக்தியில் ஐக்கியப்படுகின்றனர். வெவ்வேறு திசையில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்துக்களுடைய நாடி நரம்புகளை ஒன்றிணைத்துச் சமுதாயத்தின் இரத்தாசயங்களை ஆலயங்கள் சுத்திகரித்துக் கொண்டிருக்கின்றன.

சுவாமி கெங்காதரானந்தஜீ



ஸ்ரீ சண்முக மாணவர் இல்ல 35வது ஆண்டு நிறைவு விழாவின் போது காந்தி மாஸ்டர். பொ. கந்தையா அவர்களுக்கு வடகிழக்கு மாகாண பிரதம நீதியரசர் திரு. பாலவடிவேல் காவியுடை போர்த்தி மாலை அணிந்தபோது எடுத்த படம்.

ஓம்



# கந்தைய ஆசிரியன் கண்டவொரு வாழ்வு முறை

அமரர் அண்ணாவி தில்லையம்பலம்
(சங்கீத) மாஸ்டர்

72ம் ஆண்டு தில்லையம்பலம் மாஸ்டர் அவர்கள் திருக்கோணமலை அரசாங்க மருத்துவ மனையில் நோயுற்றிருந்த போது அவரை நான் இருமுறை சென்று பார்த்திருக்கின்றேன். முதல்முறை என்னைச் சந்தித்தபோது அவர் என்னிடம், நான் இவள் ''கீரவாணியை'' விட்டு விட்டுப் போகப் போகிறேனே என்றுதான் கவலைப் படுகின்றேன். என்று கண்ணீர் மல்கக் கூறினார். மறுநாள் நான் அவரைச் சந்தித்த போது அவர் என்னிடம் சில புத்தகங்களையும் கொப்பிகளையும் தந்தார். நான் அவற்றை வாங்கிக் கொண்டு வந்து வைத்து விட்டேன். அதன்பின் 25-12-72ல் அவர் சிவபதம் அடைந்தார். அன்று என்னிடம் கொடுத்த கொப்பிகளில் ஒன்று தான் காந்தி மாஸ்டரைப் பற்றி எதுதிய இந்த 36 வெண்பாக்களாகும். - ஆ-ர்)

01. அன்பர் பணிபுரிதல் அற்றார்க் குதவி செய்தல்
துன்பந் துடைத்தலே தூயபணி - என்பதுவே
காந்தியெனும் ஆசிரியன் கந்தையன் கண்டவே
தாந்தமிதுவே விரதமும்

02. வான் கொண்ட தொண்டு செய வல்லவனாம் வாழ்வினிலே
நான் கண்ட காந்திநற் கந்தையன் - தேன் கொண்ட
வாசகத்தான் வள்ளல் வரையாது ஈந்தருளும்
தேசகத்தான் திவ்ய குணத்தான்

03. காலையிலும் வேலை கடும்பகலிலும் வேலை
மாலையிலும் வேலை மனிதருள்ளே - கூலி பெறார்
காந்தியென் நற்றொண்டன் கந்தையன் சார்ந்தவர்க்கு
ஆந்துணைவன் யார்க்கு மெளியன்

04 ஏதுமொரு பொல்லாப்பு இல்லாத காந்தியெனும்
போது ஒரு உண்மை புலப்படுதே - சாதுவெனும்
கந்தைய ஆசிரியன் கண்டவொரு வாழ்வு முறை
சிந்தனையும் தொண்டு செயுமே

05 வீட்டிலும் வேலை தான் வீதியிலும் வேலைதான்
நாட்டிலும் வேலை தான் நாளுமதே - நாட்டினிலே
கந்தைய ஆசிரியன் கண்தூங்கும் கையெழுதும்
விந்தையிவர் வாழ்வு விளையாட்டு

06 கந்தைக் கதருடையன் கக்கிற் பழங்குடையன்
சிந்தைத் தெளிவுடையன் சீராளன் - சுந்தரனாம்
காந்தியாம் ஆசிரியன் கந்தையன் நல் ஆத்மன்
சாந்தி நிலவும் சற்குணன்

07 ஐயா அவசியமாய் ஐந்துபத்து வேணுமென்றால்
மெய்யா பொய் யாவெனவும் மேவாமல் - கையில்
இருந்தாற் தருங்காந்தி கந்தையன் என்றும்
மருந்தாவன் மற்றுமுயிர்க்கு

08 கோயினால் வாடியுளம் அல மந்தபோதொருவர்
பாயும் படுக்கையு மாம் போது - தாய்போலும்
சோதரர் போலவும் சுற்றங்கள் போலவுமே
ஆதரிப்பான் காந்தி கந்தையன்

09 சீவிக்கும் போதுதவி செத்தபின் னுமுதவி
ஆவிக்கு மேயுதவி யாய் நிற்பன் - பூமியினில்
எத்தகையோர்க்கும் உதவியே புரிய முன்னிற்கும்
சித்தமே நற்காந்திக்கு உயிர்

10 ஓடியோ டியுதவி ஒன்று பத்து நூறெனினும்
நாடி நாடிப் புரியும் நன் மகனாம் - கோடியினும்
ஓர் மனிதன் இவ்வுலகில் உண்டானால் காந்தியெனும்
சீர் மலிகந் தையனெச் செப்பு

11 தீராத தொல்லையைத் தீர்த்து வைக்கும் வேளையில்
வாராத தொல்லைகள் வந்தாலும் - சீராக
நின்று மெய் நீங்காத நேர்வழியாம் ஏர்பிடித்து
வென்று நல வேள்வி செய் காந்தி

12 போற்றினும் ஒன்றே தான் பொல்லாதவர்கள
தூற்றினும் ஒன்றே தான் தூயமனம் - மாற்றமிரா
காந்தியெனும் ஆசிரியன் கந்தைய னாகுவே
தாந்தியணை யாத விளக்கு

13 குற்றங்கள் கூறும் குறும்பர் வெட்கிக் குனியச்
சற்றுந் தயங்காமல் சாடுவான் - முற்றாக
காந்தியெனும் ஆசிரியன் கந்தையன் சாது தான்
சாந்தி தரும் சற்குணவான் தான

14 காலையிற் காணலாம் மாலையிலுங் காணலாம்
மூலையிற் காணலாம் முக்கிறமாய் - சாலையிற்
காணலாம் பேசலாம் காந்தியாம் கந்தையன்
போனவிட முங் காணலாம்

15 ஒவ்வொருவர் ஒவ்வொன்றைச் சாதித்துளம் மகிழ்வர்
அவ்வரிற் காந்தியெனும் ஆசிரியன் - இவ்வுலகில்
தொண்டு செய்து தூய அறம் நடத்தித் தூயநிலை
கண்ட மகான் கந்தையன் காண்

16 மக்கள் பணியெல்லாம் மாதேவன் நற்பணியாம்
எக்காலும் செய்வர் இவரேதான் - பக்குவத்தால்
காந்தியெனும் பட்டமதைக் கண்ணியவான்கள் கொடுத்தார்
சாந்யுடைக் கந்தையரவர்க்கு

17 பெற்றதோ ஓர் பிள்ளை பேணுவதோ ஆயிரமாம்
அற்றார் அடியார் அவரகத்தார் - முற்றாக
பார்த்தாலிப் பாரதனிற் பற்பலரும் சொந்தம் போல்
ஏற்பாரிக் கந்தையனை

18 சிவனடியார் என்னலுமே சித்திரம் போல் ஆவார்
அவரெங்கே அங்கே சென்றாய்வார் - தவ வடிவாம்
காந்தியாம் ஆசிரியன் காதலொடு சேவையினாற்
சாந்தியுறும் சற்குணவான் தான்

19 நல்லவர்கள்போல நயவஞ்சகர் சிலபேர்
கள்ளக் கதைசொல்லிக் காசுபெற்று - செல்வார் பின்
வந்தவழி வாரார் வழிதவறியும் வாரார்
கந்தையர்க்குக் கடவுள் துணை

20 அச்சமென ஒன்றில் வவனியிலே உண்டென்று
எச்சமய மேனும் இவர் காணார் - நிச்சயமாய்
உண்மையே தொண்டு ஒருவடிவமே காந்தி
அண்ணலாம் கந்தையரவர்க்கு

21 உண்ணார் ஒரு கிழமைக் கோர் நாள் இரவுபகல்
தண்ணீர் தன்னும் பருசிலாரெனினும் - முன்னாட்கள்
போல இரவு பகல் போய் வந்து தொண்டு செய்வார்
சாலவுயர் காந்தியடிகள்

22 சட்டை யணியாமேல் சப்பாத் தணியாக்கால்
பட்டப் பகல் வெயிலும் பாராது - திட்டமுடன்
காற்சூடு மேற்சூடு காற்று மழை வெய்யிலெல்லாம்
நேற்று மின்றும் தொண்டு செய் காந்தி

23 அறிமுகமே அற்றவர்கள் யாவர் போய்க் கேட்டாலும்
மறுமொழியில் மாற்றமிரா மாண்பு - ஒருநாளும்
நேரமிலை என்னார் நெடுநாள் பழக்கம் போல்
வாரவரே காந்தி குணவான்

24 சட்டையிடாது சவுக்காரம் பூசாது
மொட்டையுமில்லை முடியுமிலை - பட்டுமிக
காலில் செருப்புமிலை காந்திக் கந்தையனுக்கு
வேலையிலே நேரமிலையே

25 செருப்பறியாக் கால்களை யென் சீவியத்திற் கண்டேன்
தெருத் தெருவாகத் திரியும் அக்கால் - திருவாளன்
காந்தியார் ஆசிரியன் கந்தையன் கால்களே
ஆந்தொண்டு தான் புரியக் கால்

26 கள்ளர் குடையைக் களவாடி னாரென்று
சொல்ல ஆனந்த மெனச் சொன்னாரே - பல்காலும்
சொல்லிய நா சொன்னதல்லால் சூதறியா வாதறியா
நல்ல நா காந்தி சென்னா

27 அரச கருமஞ் செய் வோரிவர் சொல் முன்னே
சிரசின் மேல் கைகூப்பிச் செய்வர் - தரணிதனில்
சிந்தை செய் தன்பினால் செய்யாத தேதுமிலை
கந்தைய ஆசிரியர் கட்கு

28 எங்கெங்கு சென்றாலும் எவ்வெவரைக் கண்டாலும்
சங்கங்கள் சாதுக்கள் சற்கருமம் - மங்களமாய்
ஓங்கி வளர்ந்திடவே உள்ளத்தால் பாடுபடும்
பாங்கில்வாழ் காந்தியென் பார்

29 உள்ளத்தில் சுத்தமுண்டு ண்மையுண் டன்புண்டு
பள்ளத்தில் பாய்ந்தோடும் பண்போடும் - தெள்ளியநற்
புத்தியுண்டு பத்தியுண்டு புண்ணியமாம் போக்குண்டு
சத்தியுண்டு காந்தியன்பர்க்கு

30 காந்தி சுடுபட்டார் கர்த்தரறை பட்டார்வே
தாந்தி கந்தையன் மேற் தற்குறிகள் - தீந்தொழிலால்
தாம் வாழார் வாழ விடார் தக்கோரைத் தாக்குவதே
தாம் கொண்ட கோலமிதனால்

31 பொல்லாங்கு எல்லாம் புறக்கடையிற் போட்டிடுவார்
நல்லாசிரியர் கந்தையனார் - பல்லாண்டு
சொல்லாண்டு சொல்லின் பொருளாண்டு தொண்டு செய்து
நல்லாண்டு கண்ட கந்தையன்

32 வட்டிக்கு மேல்வட்டி வாங்கும் கந்தை யளென்னும்
பட்டிக்கோ காந்தியெனும் பட்டமென்னும் - திட்டமிட்டு
ஏசுவார் கண்டபடி எல்லாம் பொறாமையினால்
தூசு பெறாத் துட்டருமுண்டு

33 கண்டவுடன் கைகூப்பும் கண்மலரும் வாய்சிரிக்கும்
தொண்டனெனத் தூய நெஞ்சந் தோற்றுவிக்கும் - மண்டலத்தில்
காந்தியெனும் ஆசிரியன் கந்தையன் சாந்தகுணன்
ஆந் துணைவன் அன்றோ சரி

34 எவர்க்குரிய நன்மை எதுவரினு மெல்லாம்
அவர்க்குரிய தாகவே ஆவார் - தவப்புதல்வர்
காந்தியாம் ஆசிரியன் கந்தையன் தொண்டர்க்கு
ஆந்துனைவன் ஆவானவன்

35 அன்பர் பணிபுரிந்து அன்றுமின்று மெந்நாளும்
இன்பமுறும் கந்தையனே புவியில் - பண்புடனே
வாழ்ந்து சிவ நாமத்தோடு வாழ்க மனை மக்களோடு
வாழ்க சுப மங்களமாய் ஓம்

36 ஐய நீ வாழ்க! அடியார்க் கடியவனாம்
மெய்ய நீ வாழ்க!! மிகு புகழ்சேர் - செய்யனே
ஸ்ரீ காந்தி கந்தையன் ஸ்ரீ ராஜநாயகியார்
ஸ்ரீ முருகன் வாழ்க சிறந்து

ஓம்

# தற்கொண்டார்

-திருமதி கந்தையா இராசநாயகி

உள்ளத்தால் பொய்யாத கட்டுரைகள் தெய்வீகமானவை. காந்தி ஐயாவின் பாராட்டு விழாவை அலங்கரிக்கும் கட்டுரைகள் தூயஉள்ளத்தில் மலர்ந்த மலர்கள் தானே. பொய் கலவாத உண்மை உதிர்கள் இவை. மலரின் இதழ்களில் நடுவே அமைந்திருக்கும் மகரந்தம் வேண்டினார். அடியேனைப் பலமுறை. அனுகினார். அடியேனும் பல தடவை தட்டிக் கழித்தேன். கோபம்மும் வெறுப்புங் கொண்டு என்னையணுகமாட்டார். என நம்பினேன். அவர் பொறுமைக்கு அடிபணிந்தேன். ஈற்றில் சம்மதித்தேன். இவ்விடயத்தைத் தட்டிக் கழித்தால் பின் கவலையுற நேரிடும் என்ற அவர் வாக்கியம் எந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டதென அடியேன் ஆராய விரும்பவில்லை. ஆராயவுமில்லை.

அடியேன் எழுதும் இக்குறிப்புரைகள் சத்தியத்தின் அடிப்படையிலே அமைய அவர் தாள் வணங்கி எழுதலுற்றேன். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் காந்தி ஐயாவின் பாதங்களுக்கும் எனது தமையனார் அமரர் கழகப் புலவர் திரு. பெ. பொ. சிவசேகரனார் ஆத்ம சாந்தியின் காணிக்கையாகவும் அன்போடும் பண்போடும் விழாவின் கால் கோளர்களாக அமைந்துள்ள பெரியார்களின் பெரும் பணிக்கும் அடியேன் சமர்ப்பிக்கும் சத்திய காணிக்கையாக அமைய வேண்டி இதனைத் தொடர்கின்றேன்.

## திருமணத்தின் முன்பு

ஆங்கில, தமிழ் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைகளிற்தேறி ஆசிரிய கலா சாலைப் பிரவேச பரீட்சை யெழுதி இருந்த காலம். பெரிய கிண்ணியா அரசினர் பெண்கள் பாடசாலையில் பதில் அதிபராக எதிர்பாராத விதமாக நியமனங் கிடைத்துக் கடமையாற்றினேன். அடியேனின் தமையனார் பெரிய கிண்ணியா அரசினர் ஆண்கள் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த காலம். சாதி, சமய இன வேறுபாடின்றி பழகும் எமது தமையனார் எவரையும் தன் உயிர் நண்பனாக ஏற்றுக் கொள்வதில்லை. அப்படி ஏற்றுக் கொண்டவர்கள் மிகச் சிலரே. அவர்களுள் தலையாய தூய நட்பினனாகத் தன்னுடன் கடமையாற்றிய காந்தி மாஸ்ரரை அமைத்துக் கொண்டதில் வியப்பேயில்லை.

பெரிய கிண்ணியாவில் கடமையாற்றும் போது தூரத்தில் காந்தி ஐயாவைக் கண்டதுண்டு. கதர் வேட்டி, கதர் நஷனல், சிலசமயம் சால்வையுடன் கண்டதுண்டு. தூய உள்ளத்தின் இதய கீதமாயமைந்த ஓங்காரநாதத்துடன் கூடிய அடக்கமான ஆனந்தமான சிரிப்பின் ஒலியைக் கேட்டதுண்டு. இவை நிகழ்ந்தது 1944-45ம் ஆண்டுகள்.

அடியேனும் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை சென்று பயிற்சி பெற்று மீண்டும் அதே பாடசாலைக்குக் கடமையாற்ற நியமிக்கப்பட்டேன். காந்தி ஐயா மாற்றம் பெற்று ஹக்கல அரசினர் பாடசாலைக்குப் போயிருந்தார். பின் அரசினர் பாடசாலை சேவையை இராஜினாமாச் செய்தார். சுவாமி நடராஜானந்தா அவர்கள் ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷனில் அவர் சேவையை வேண்டி கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமித்தார். அப்பொழுது எமது தமையனார் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் இருந்தார். இருவரின் தூய நட்பும் ஒருங்கு கூடியது. தமையனார் மூலம் காந்தி ஐயாவின் சர்வோதய உணவு முறை, எளிய வாழ்வு தன்னலமற்ற தொண்டுகளை கேள்வியுற்ற எங்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவரும் தெய்வாம்சமாக உள்ளத்தில் இருத்தினோம்.

திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயத்திற்கு மாற்றம் பெற்றார் எம் தமையனார் தன் உள்ளத்தில் தெய்வத்திற்குப் பின் வைத்துப் போற்றிய காந்தி மாஸ்ரருக்குத் தனியறையொதுக்கி சகல வசதிகளையும் செய்து கொடுத்தார். தாயார் அவரது அறைக்கு உணவைக் கொண்டு போய்க் கொடுப்பார். தமையனார் வசதி கிடைக்கும் போது சத்சங்கம் வைப்பதுடன் புத்தகங்களுமெடுத்து வருவதுண்டு. அடியேன் கிண்ணியாவில் கடமையையாற்றிக் கொண்டிருந்தேன்.

சந்தர்ப்பம் சூழ்நிலையையொட்டி எமது தாயார் காந்தி ஐயாவின் தூய உள்ள உரையாடலில் அடியேனின் திருமணம் விடயமாக உரையாடியிருக்க வேண்டும். தொண்டில் ஊறிய உத்தமன் தன் பெண்பிள்ளைக்கு ஓர் உத்தம வரன் தேடிக் கொடுப்பார் என்ற பூரண நம்பிக்கையுடன் தயாரின் பரோபகாரம் கருதா வேண்டு கோள் உத்தம மருமகனையே தமக்காக்கிக் கொள்வார் என்பதை அவரும் அறிந்திலர். வீட்டார் யாருமே அறிந்திலர்.

கிண்ணியாவிற்குக் கடிதம் வந்தது. காந்தி ஐயாவின் கடிதம். அடியேன் ஆவலுடன் பிரித்தேன். படித்தேன். தாயார் மேல் பரிதாபத்துடன் கூடிய கோபமே அக்கடிதம் தந்த விளைவு. தாயாரின் உத்தம தொண்டரும் தூய உள்ளத்தினரும் அகம் புறத் தூயத்தினருமான உயர் நிலை மகானுக்கேன் எமது தாயார் லௌகீகத் துயரத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமென்ற காரணத்தினால் ஏற்பட்ட தாக்கம். தாய் உள்ளத்தன்மையை ஒருவாறு புரிந்து ஆற்றிக் கொண்டேன்.

கடிதம் தொடர்ந்தது. இருவரின் தூய வினாவும் விடையும் பரிமாறப்பட்டன. அச்சமயத்தில்கூட காந்தி ஐயா என் வாழ்வில் பங்கு கொள்ளும் தற்கொண்டாராக அமைவாரோ என்ற நம்பிக்கையே இருந்ததில்லை. அடியேனின் உள்ளக் கருத்தை யறிந்த உத்தமர் தன்னை வரனாக ஏற்றுக் கொள்வதில் தயக்கமில்லையோ என்றும் தன்னுடன் கூடி வாழ்வதில் ஏனைய பெண்களுக்கில்லாத கஷ்டங்கள் பல தோன்றலா மென்றும் அதைச் சகித்துத் தம்முடன் வாழவிரும்பினால் நமது திருமண முடிவு நிச்ச யப்படுத்தப்படுமென்றும் குறிப்பிட்டிருந்தார். அடியேனின் தலை சுழன்றது காரணம்:-

(1) தாயார் தமையனாரின் உத்தரவின்றி எவ்விதம் பதில் எழுதலாம் என்பது.

(2) தூய உத்தமரின் ஆத்மீகப் பொதுத் தொண்டுக்கு அடியேன் இடைஞ்ச லாக குறுக்கிடுவது அறமில்லை.

(3) அவரின் பிறந்த நாடும், பெற்றார் உற்றாரும் யாது நினைப்பார்களோ? நாம் திருக்கோணமலையில் மடக்கி விட்டோம் என்ற பழி நமது குடும்பத் திற்கு தூய தமையனாருக்கு அடியேனுக்கு உண்டாகும். வந்து சேரும்.

இக்கருத்தைத் தெரிவித்தேன். தான் நல்லதையே தீர்மானித்து நல்லதையே செய்வதால் எந்த அச்சத்தையும் மேற்கொள்ளும் இறையருள் கொடுத்திருக்கும் தூய துணிவு உண்டென்றும் அடியேனின் எண்ணத்தையறிந்த பின்னர் தமையனாருடனும் தாயாருடனும் தொடர்பு கொண்டு நிச்சயப்படுத்தித் தன் பெற்றோருக்கும் இவ்விடயம் அறிவிக்கப்பட்டு தன்னுடன் பழகிய, பழகும் பெரியார்களுக்கும் நண்பர்களுக்கும் அறிவிப் பதாகவும் உறுதியளித்த கடிதம் வந்தது. தான் அடியேனைத் திருமணம் செய்வதினால் தன் தொண்டு இரு மடங்காகுமேயன்றி இடைஞ்சலாக இருக்காது என்ற நம்பிக்கையுரை யும் ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருந்தார். அன்னை சாரதாதேவி, அன்னை கஸ்தூரிபாய் போன்று இல்லறத்தில் அவருக்குத் தொண்டாற்றி அவரின் தொண்டுக்குப் பரிபூரண ஒத்துழைப்பு நல்குவேன் எனப் பதில் அளித்தேன். சந்திரமதியின் வாழ்வும் தங்களுக்கு ஏற்படக் கூடுமென தீர்க்கதரிசனமாக எழுதியிருந்தார். இம்மூன்று பெண்களின் வாழ்வு அடியேனைத் தற்கொண்டானாப் பேணிப் பொதுத் தொண்டுக்கு அர்ப்பணிக்க முடிந்த தென அவர் தாள் போற்றி வணங்குகிறேன்.

## திருமணம்

நமது தீர்மானத்தை முதலில் தமையனாருக்குக் கூறிய போது உத்தமர் வாழ்க்கை யில் மாற்றம் ஏற்பட்டதே என்ற அதிர்ச்சியுற்றாரெனினும் காந்தி ஐயாவின் தீர்மானம் தெய்வச் செயல் என்று அமைதியுற்றாராம்.

நமது தாயாருக்குத் தெரிவித்தார். அவர் எதுவும் பேசாது இருந்தாராம். அடி யேனின் சகோதரியும் நமது அண்ணியாரும் தாயாரின் பயம் ஏக்கநிலையை அடியேனுக்குக் கூறக்கேட்டேன். எளிமையும் தூய்மையுங் கொண்ட பணிபாளனுக்கு தன் மகன் இடைஞ் சலாக அமையக் கூடாதென்பது, இளமையின் காரணமாய் ஆடை, ஆபரணங்களில் பற்று

வைத்திருக்கும் தன் மகளுக்கு இவை கிட்டுமோ என்ற ஏக்கம். எந்தெந்தக் காட்டில், கிராமத்தில் தன் மகள் வாழப்போகின்றாளோ என்ற பயம். ஒரு தாயாரின் உள்ளம் பளிச்சென்று தெரிந்ததாம்.

கிண்ணியாவில் இருந்து லீவுநாட்களையண்டி அச்சத்துடன் வீடு வந்தேன், வீட்டில் நிசப்தம், அண்ணியாரின் முகத்தில் தெளிவு நிறைந்த புன்னகை என் நெஞ்சத்திற்கு ஆறுதல் அளித்தது. அடியேனுடன் யாருமே எதுவுமே கலந்துரையாடவில்லை. காந்தி ஐயாவின் தூய வார்த்தையில் உள்ள உறுதியான நம்பிக்கை போலும்.

தன் வீட்டார்க்கும் நிச்சாயார்த்தம் பற்றி எழுதிய போது நம்மையோ நம் குடும்பத்தையோ அறியாத அவரது தூய அன்னை மகிழ்ந்தாராம்.

துறவியாக எங்கோ போய் வாழும் தன் மகனுக்கு இல்லறம் வாய்த்துத் தன் கண் குளிர வாழப் போகின்றான் என்ற நம்பிக்கையும் எங்கு சென்றாலும் என் மரணத் தறுவாயில் வந்து நிற்கவேண்டுமென்ற தன் வேண்டுகோள் நிறைவேறப் போகிறதே யென்ற ஆறுதலும் அவருக்கு மகிழ்வூட்டியது. 1943ம் ஆண்டு ஒருவரோடு ஒருவர் உரையாடிப் பழகா விட்டாலும் திருமணத்திற்கான நிச்சயம் 1952 இல் தான் நிறைவு பெற்றது. யாராலும், எம்மனித முயற்சியாலும் ஏற்படுத்தப்படாத இத்திருமணம் தெய்வீக ஆணையின் படியே நிகழ்ந்தது என்பது நமது பூரண நம்பிக்கை.

## இல்லறமல்லது நல்லறமன்று.

1952 நவம்பர் மாதம் 20ந் திகதி விவாகப் பதிவு நிகழ்ந்தது. வசதியற்றோர் கந்தோருக்குச் சென்று பதிவு செய்வது போன்ற நமது விவாகப் பதிவும் நிகழவேண்டுமென்ற தீர்மானம் தாயார் மனநிலை கலங்கியது. எனினும் பதிவுகார உத்தியோகத்தர் திரு. இராசரத்தினம் ஐயாவின் ஒரு அன்பர். கொக்குவிலைச் சேர்ந்தவர். நமது விவாகப் பதிவு தமது இல்லத்தில் நிகழ்த்த ஒழுங்கு செய்து மிகச் சிறப்பாகச் செய்து முடித்தார். திருமணத்திற்கான ஏற்பாடுகளை அடியேனுடனும் கலந்து ஆலோசிக்கும் பொருட்டே விவாகப்பதிவு முதல் நிகழ்ந்தது.

திருமணத்தினம் 1953 மே 08ந் திகதியெனக் குறித்துமாயிற்று இந்தியாவிலிருந்து கதர் நூல் கதர் சேலை வந்தது. திருமணத்திற் கென்றமையால் அவர்கள் மிக அழகான கதர்ப்பட்டுச் சேலை அனுப்பியிருந்தனர். காந்தி ஐயா பட்டில் திருப்தி கொள்ளவில்லை. பூரண கதர் ஆடை வருவித்தார். அண்ணியார் காந்தி ஐயாவை அணுகிக் கதர் பட்டையே கூறையாகக் கொடுக்கும்படி பணிவாக வேண்டினார். பட்டில் ஏழைத் தொழிலாளியின் முயற்சி அரைப்பங்கு, முதலாளியின்பங்கு அரை. எனவே பூரண கதர் இல்லை. பின் எடுப்பித்த கதர் ஆடையே கூறையாயிற்று.

திருமண ஒழுங்கு முழுவதும் காந்தி ஐயாவின் பொறுப்பிலே நிகழ்ந்தன. சர்வோதய முறைப்படி நிகழ்ந்த திருமணக் காட்சியை கண்டு களிக்க ஏராளமானவர்கள் கூடினார். எதிர்பாராத விதத்தில் இலங்கையில் நிகழ்த்த வேண்டிய முதல் திருக்குறள் மகாநாடும் அன்றைய தினமே நிகழவேண்டியதாயிற்று. நமது தமையனார் கழகப் புலவர் பெ. பொ. சி அதற்குப் பொறுப்பானவரும் தலைவரும். அவரைத் திருக்குறள் மகாநாட்டைச் சிறப்பாக நடத்தும்படி கூறித் திருமணவைபவ ஒழுங்கைத் தான் கவனித்தார். திருக்குறள் மகா நாட்டிற்கு வந்த அறிஞர்களும் பெரியார்களும் நமது திருமண வைபவத்தில் கலந்து ஆசியும் கூறி வாழ்த்தினர். ஆத்மஜோதி ஆசிரியர் உயர் திரு. நா. முத்தையா அவர்கள் சுத்தானந்த பாரதியாரின் பாடல்களும், திருமுறைப் பாடல்களும் ஓதிக் கதர் நூலில் தாலி கட்டப்பட்டதுடன் கதர் மாலையும் மாற்றப்பட்டது. காந்தி இராஜகோபால் காரியதரிசியாக இருந்து நிகழ்ச்சிகளை நடத்த வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத் தினமவர்கள் தலைமை தாங்கித் திருமணம் நிறைவேறியது. அன்னதானம், வஸ்திர தானம், கல்வித்தானம் நிகழ்ந்தன. தேநீர், கோப்பி, சோடாபானம் விலக்கப்பட்டுத் தோடம்பழப் பானம் பரிமாறப்பட்டது. ஒரு சுவையான வசனம் இதோ மணப்பந்தலில் யரோ ஒருவர் தலைப்பாகை கட்டும்படி மணமகனை வேண்ட எப்போ "கட்டியாயிற்று" என்று அன்பு ததும்பக் கூறி வைபவத்தில் காந்தி ஐயா ஈடுபட்டார்.

திருமணத்தின் சாயந்தரம் தாயார் ஆயத்தப்படுத்தி வைத்த விலைகூடிய சேலை உடுத்தி அவர் செய்வித்து வைத்த தாலிக்கொடி நகைகள் அணிவித்து தங்கள் கண் குளிரக் கண்டு ஆனந்தப்பட்ட நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இல்லறம் ஆரம்பமாகியது. காந்தி ஐயாவின் கடன்நிலையறிந்து தயங்கவில்லை. சிக்கனமாய் வாழ்ந்து கடனை அழிக்கலாம் என்று நம்பினேன். தன் ஒரு வருடச் சம்பளத் தை சாரதா வித்தியாலய ஆசிரியரின் சம்பளத்திற்காக அர்ப்பணித்தார். கடன் கூடியது எனது மாமியாரின் (கணவனாரின் தாயார்) அடியேனது தாயாரின் செலவுகளை எதிர் கொண்டோம். வீடற்ற நாம் வீடு வாடகைக்கு எடுக்க நேர்ந்தது. உயிரோடு போராடிய மகப்பேற்றினால் ஏற்பட்ட பெருஞ்செலவும் ஏழுமாதம் ஊதியமற்ற லீவும் அடியேன் அனுபவிக்க வேண்டியிருந்தது. இவற்றினால் கடன் கூடியது. ஒன்றரை மாதகாலம் கால்நடையாகக் கதிர்காமம் சென்ற போது இருவரும் எடுத்த சம்பளமற்ற லீவுமுண்டு. செலவுமுண்டு.

### இல்லற அனுபவம்

(1) எளிமையும் தூய்மையும் நிறைந்த வாழ்வில் இனிமை.

(2) கணவனாரின் உத்தரவின்றி எதிலும் ஈடுபடாத கீழ்ப்படிவான இனிய வாழ்வு.

(3) பணம் எத்தகையதென அறியாது வருவாயையும் செலவையும் கணவனார் கையாள்வதில் இன்பங் கொள்ளல்.

(4) நித்திரை நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் கணவனார் பொதுத் தொண்டாற்ற இல்லாள் அகத்திருந்து உறுதுணையாயிருத்தல்.

(5) உடல், பொருள், ஆவி மூன்றையும் கணவனாரின் பொதுப்பணிக்கு அர்ப்பணித்ததுடன் அடக்கமாக இருந்து அடியேனின் சிற்றறிவையும் சிறிய ஆற்றலையும் அவருக்குதவி மகிழ்கின்றேன்.

(6) விருந்தோம்பலை மிக மகிழ்ச்சியுடன் புரிந்து கணவனாரின் விருந்தினரை உபசரித்து நிறைவுறுதல்.

சுருங்கச் சொல்லின் இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை யென்பதையும் தற்கொண்டார் பேணி தகை சான்ற சொற்காத்து சோர்விலாத பெண்ணாக வாழ வைத்திருக்கும் பாக்கியத்திற்கு இறைவனுக்குத்துதி.

**சகிக்க முடியாது கவலையடைந்த சந்தர்ப்பங்கள்**

(1) வட்டி வாங்கித் தம் பணத்தைப் பெருக்க நினைப்பவரிடம் பிணை நின்று பணம் வாங்கிக் கொடுத்து காந்திமாஸ்டர் பெரும் வட்டிக்காரன் என்ற பெயரைச் சம்பாதித்தது.

(2) காந்தி ஐயாவிடம் பண உதவி பெற்றோர் மௌனம் சாதித்தும், தவணை கூறியும் இருக்கத் நாணயத்தைக் காப்பாற்றப் பின்னும் வட்டிக்கு வாங்கித் தன் நாணயத்தைக் காப்பாற்றும் அவஸ்தநிலை.

(3) போலி நகைகளைக் கொண்டு வந்து கொடுத்து நல்லவர்போல் நடித்து வெயில், மழை பாராது அவரை ஓட்டமும் நடையுமாகப் போய்ப் பணம் பெற வைத்து; ஈடுபிடித்தவர் போலி நகையென்று காந்தி ஐயாவைச் சாடித் தம் பணங் கேட்பதுண்டு. போலி நகை கொடுத்தவர் வேறு சாட்டுச் சொல்வார்கள். வட்டிக்குப் பணம் எடுத்து ஈடு பிடித்தவரின் கடனைத் தீர்ப்பது.

(4) காணி, பூமிப் பிணக்குகளுக்கும் இன்ப, துன்ப விஷயங்களுக்கும் கைமாற்றுக் கடன் மாறித்தரும்படி கெஞ்சி உதவி பெற்று வைவிரித்த சிலரின் மனச்சாட்சியற்ற காரியங்கள்.

(5) என்னுடன் கடமையாற்றிய சில ஆண் ஆசிரியர்கள் சம்பள தினத்தன்று சம்பளம் பெறும் காரியாலயத்திற்குப் போகும் போது இச்சம்பளம் வட்டிக்குக் கொடுத்துப் பெருக்கும் பணமென்று கூறியதைக் கேட்ட என் அருமை பெண் ஆசிரியைகள் வருந்துவதும் நான் வீட்டில் வந்து கோவென்று அழுவதும்.

(6) பொதுப்பணிக்கு வெயிலும், மழையும், இருளும் பாராது ஓடித்திரியும் ஐயாவை அறியாத அறிவிலிகள் காந்தி மாஸ்டர் இப்படித் திரிந்து வட்டிக் காசைச் சேர்த்து வந்தாற்றான் முதலாக்கிப் பின்னும் வட்டிக்குக் கொடுக்கலாம் என்று கூறுவதை என் காது கேட்டு கொஞ்சம் வெடிப்பதுண்டு.

அனுபவம் கொஞ்சமல்ல:- இவ்வளவிற்கும் கணவனாரின் வருத்தத்திற்காக யாழ் புறப்படும் போது வீட்டில் காசு இருக்கவில்லை. எங்கள் அருமை மாணவனும் டாக்டர் ஹேமச்சந்திரனும். காந்தி ஐயாவை நடமாடும் தெய்வமாகக் கொண்டிருக்கும் திரு. சு. நவரெத்தினம் ஆசிரியரும் அவர்தம் பாரியார் திருமதி. பராசக்தி நவரெத்தினம் அவர்களும் காந்தி ஐயாவைத் தொண்டனாக மதிக்கும் திரு. கைலாயபிள்ளை, அவரது சகோதரி திருமதி. துரைராசா அவர்களும் அன்பும் ஆதரவும் சகல வசதிகளும் செய்து கொடுத்தனுப்பினர். நாம் போய்ச் சேர்ந்த அடுத்த தினமே ஆசிரியர் திரு. நவரெத்தினம் யாழ்ப்பாணத்திற்கும் ஓடோடியும் வந்துவிட்டார். காந்தி ஐயாவுக்குப் பொருள் உதவியும் பணஉதவியும் புரிந்தனர்.

தாயார் தந்துதவிய முப்பத்தொரு பவுண் நகைகளை விற்று வட்டியும் ஒரு சிறு பகுதி கடனும் கொடுத்தோம். தயாரின் தென்டிப்பால் வங்கிக்கடன் எடுத்து வாங்கிய காணியை விற்றுக் கடன் கொடுத்தோம்.

தாயார் தனது இருபிள்ளைகளும் சொந்த இடத்தில் இருக்க அடியேன் பிறர் வீட்டில் பல வசதியீனங்களை அனுபவித்து வீடு வீடாகத் திரிவதைப் பொறுக்காது குடில் அமைத்து வாழும் பொருட்டு மிக்க மனவருத்தத்துடன் வேண்டினார். அதற்குத் தனது நகைகளை விற்று உபயோகிக்கும்படியும் வேண்டினார். அவரின் மரணத்தின் பின் தான் அச்சிறு காணியை விற்று சில வட்டிக்கடன்களைக் கொடுத்தோம்.

**உயர் மொழிகள்:**

''கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்'' என்று எடுத்துக்காட்டிய அடியேனுக்கு ''என்னை இலங்கை வேந்தனுக்கு ஒப்பிடுகிறீர்களா?'' என்று வினாவெழுப்பித் தன் உயர்நிலையை உணர வைத்தார்.

''ஊசியின் காதில் ஒட்டகம் புகுந்தாலும் வட்டிக்காரனின் பிடியில் இருந்து தப்ப முடியாது'' என்று நமக்கு ஏளனம் தெரிவிக்கும் இளைஞர் உலகமும், வளர்ந்தவர் உலகும் கூறும் அபாண்டமான வார்த்தைகளைக் கேட்டுக் கலங்கிய எனக்கு ''அவ்வசனம் அவர் களது அளவுகோள்'' எனக் கூறிச் சமாதானப் படுத்துவதுண்டு.

அவ்வப்போது அவரை நாடிவரும் விருந்தினரை உபசரித்து உணவு, உறையுள் அளித்து அன்போடு உபசரிப்பதில் பெருமையடைந்தேன். விருந்தோம்பல் அடியேனுக்குத் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாத பெண் உரிமையையளித்தது.

இருமுறை நாய்கடிக்கு இலக்காகினார். நாம் வேதனையடைய ''நாய் தன் கடமையைச் சரிவரச் செய்தது. அதில் எவ்வித தவறும் இல்லை'' என்ற உயர் கருத்தை உணர்த்தியவர்.

தனது புத்திரனுக்கு அடியேனின் சகோதரரும் தாய்மாமனாரும் செய்து கொடுத்த தங்க ஆபரணங்களை அணிந்து அழகுபார்க்க விரும்பி எனது தாயார் முனைந்தபோது ''உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஆபரணங்களை அணிந்து அழகு பார்த்துக் கொண்டிருப்பது உங்கள் உரிமை. 'முருகன்'ஆ என்பிள்ளை ஆபரணம் என்னும் விலங்கைப் பூட்டி என் குழந்தையும் நானும் துன்பமடைய விரும்ப வில்லையென்று தீர்ப்பளித்தார்.

முருகனின் குழப்படியை அடக்குவதற்கு நமக்கு உதவியாக இருந்த பிள்ளையிடம் கொடுத்து நாம் நமது கடமையைச் செய்வோம் என்று கூறினால் ''பெறுவது பெற்றார் கடமை. குழந்தையின் குழப்படியைத் தாங்குவது உதவியாக இருப்போர் கடமையா?'' என்ற மேலான தத்துவத்தை வழங்கினார்.

காந்தி ஐயாவின் உயர்மொழிக்கு ஒருமலர் வேண்டும்.

**கண்ணீர் சொறிந்த சம்பவங்கள்**

பலரிடம் பன்முறை உதவி வேண்டியும் கிடைக்காத நிலையில் அடியேன் அறிந்தவர்களிடமும் எனது பழைய மாணவர்களிடமும் உதவி கோரி இரந்து எழுதும்போது கண்ணீர் சொட்டும் ''இரப்பது இகழ்ச்சி; ஏற்பதுவும் இகழ்ச்சி'' என்னும் உண்மையறிந்து

ஒரே மகனின் பிற்கால நிலைக்கு எவ்வித ஆதாரமில்லையேயென உள்மனம் தூண்டக் கண்ணீருடன் பிரார்த்தித்த நிலையுண்டு. தந்தையாரைப் போன்றே எவ்வித கள்ளங் கபடமற்றவரும், ஆடம்பரத்தில் சிக்காதவருமே முருகன். மனத்தாலும் பிறரிடம் குறை காணாதவர். கடவுளால் ஆசிர்வதிக்கப்படுவார் என்ற நம்பிக்கையில் ஆறுதலடைவேன்.

சிறு தொகையாகவும் பொருளாகவும் தந்துதவிய பலருண்டு. ஆனால் சிலரைக் குறிப்பிடாமல் இருக்கவும் முடியாது, 'செய்நன்றி' மறந்த குற்றத்திற்கு ஆளாக வேண்டி வரும். எனது கண் சத்திர சிகிச்சைக்கு உதவிய எமது மருமக்கள் இருவருடன் எமது அன்பு மாணவன் ச. செல்வச்சந்திரனையும் பண்டிதர் ஆறுமுகம் அவர்களின் மகன் முருகானந்தனையும் நினைவு கூர்கிறோம். பெரும் கடன்களை ஒருவாறு ஒதுக்குவதற்கு ஏதுவாக அமைந்தேன்.

(1) காந்தி ஐயாவின் சகோதரி மகன் எங்கள் மருமகன் திரு அ. கந்தசாமி ஒருபெரும் கடனைப் பொறுப்பேற்றுள்ளார். நடைமுறைப்படுத்துகின்றார். 'செல்வர்க்கழகு செழுங்கினை தாங்குதல்' அவர் இலட்சியம்.

(2) காந்தி ஐயாமேலும் அவர் குடும்பத்தினர்மேலும் அன்பும் பக்தியும் கொண்ட திரு. நா. சீவரெத்தினம் (A C A, A C H A) அவர்கள் ஒரு பெரும் கடனைப் பொறுப்பேற்றமை.

(3) உயர்திரு. வ. கதிரித்தம்பி அதிபரின் மகன் க. சிவானந்தன் ஒரு பெரிய கடனுக்குதவியது.

இத்தகைய சிறிய பெரிய உதவிகளை அளித்து அடியேனின் மனநிலையால் ஏற்பட்ட இரத்த அமுக்கத்தைச் சீராக்கி வைத்த சகலருக்கும், காந்தி ஐயாவும் அடியேனும் எமது முருகனும் நன்றிப் பெருக்கால் சிரந்தாழ்த்துகின்றோம்.

1943ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை காந்தி ஐயாவை அறிந்தும் கேட்டும் 1953ம் ஆண்டு தொடக்கம் அவரைத் தற்கொண்டராக ஏற்றுக் கூடி வாழ்ந்தும் அனுபவித்தும் அடியேனின் குறிப்புரையைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

ஈன்று, சான்றோனாக்கி மனங்குளிர வாழ்ந்து அமரத்துவம் எய்திய அன்பும் பண்பும் நிறைந்த என் மாமியாரினதும் (ஐயாவின் தயார்), அருள் உலகில் அறிவு ஆற்றல் செருக்கற்று, நல்ல இல்லாளாக இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை உடையவராக அடியேனைத் தற்கொண்டாராகப் பேணி வாழுந் தகைமையிற் பெருமை கொண்ட அடியேனின் அன்புத் தாயாரினதும் திருத்தாள்களைப் போற்றி வணங்குகின்றேன்.

அன்றியும் இக்குறிப்புரை கட்டாயம் இடம் பெற வேண்டுமென்று அடியேனின் தட்டிக் கழிப்புக்கு இடங்கொடாது அன்புடனும் பண்புடனும் வாதாடி எழுதத்தூண்டிய எமது மகன் திரு. அமரசிங்கத்திற்கு எவ்விதம் நன்றியைத் தெரிவிக்கலாம்?

''தாரமுங் குருவும் தலையில் எழுத்து.''

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்து பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கு அவனருளால் அவன் தாள் வேண்டி அமைகிறேன். ஆனந்தம்.

என் மகனே! மரணம் நேருவதைத் தடுப்பதற் இல்லை. கறக்களைப் போலவும் கட்டைகளைப் போலவும் செத்து மடிவதை விட, வீரர்களைப் போல இறப்பது மேலானதல்லவா? நிலையில்லாத இந்த உலகிலே இரண்டொருநாள் அதிகமாக வாழ்ந்து விடுவதனால் பெறப் போகிற பயன் என்ன? வாழ்க்கை என்ற கத்தி துருப்பிடித்து அழிந்து போவதைவிட, தேய்ந்து அழிவதே மேலானது. அதிலும் மற்றவர்களுக்கு ஒரு சிறிதளவிற்கு நன்மை செய்வதற்காக அழிந்து போவது மிகவும் நல்லது.

— இராம கிருஷ்ணரின் அருளுரைகள் —

ஓம்

ஔவையார் அருளிய

# ஆத்திசூடி

கடவுள் வணக்கம்

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

1. அறஞ் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண்ணெழுத் திகழேல்
8. ஏற்ப திகழ்ச்சி
9. ஐய மிட்டுண்
10. ஒப்புர வொழுகு
11. ஓதுவ தொழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகம சுருக்கேல்
14. கண்டொன்று சொல்லேல்
15. ஙம்போல் வளை
16. சனி நீ ராடு
17. ஞயம்பட வுரை
18. இடம்பட வீடெடேல்
19. இணக்க மறிந் திணங்கு
20. தந்தை தாய் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர் செய்
23. மன்று பறித்துண்ணேல்
24. இயல்பலா தன செயேல்
25. அரவ மாட்டேல்
26. இலவம் பஞ்சிற்றுயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகலாதன செயேல்

29. இளமையிற் கல்
30. அறனை மறவேல்
31. அனந்த லாடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிடிமைப் படவாழ்
35. கீழ்மை யகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்ப தொழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட் டொழி
43. சக்கர நெறிநில்
44. சான்றோ ரினத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. சுளிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச் செய்
50. சேரிட மறிந்து சேர்
51. சையெனத் திரியேல்
52. சொற்சோர்வு படேல்
53. சோம்பித் திரியேல்
54. தக்கோ னெனத்திரி
55. தானமது விரும்பு
56. திருமாலுக் கடிமை செய்
57. தீவினை யகற்று
58. துன்பத்திற் கிடங்கொடேல்
59. தூக்கி வினைசெய்
60. தெய்வ மிகழேல்
61. தேசத்தோ டொத்துவாழ்
62. தையல் சொற்கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடொப் பனசெய்
67; நிலையிற் பிரியேல்
68. நீர்விளை யாடேல்

69. நுண்மை நுகரேல்
70. நூல் பலகல்
71. நெற்பயிர் விளை
72. நேர்பட வொழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய வுரையேல்
75. நோய்க்கிடங் கொடேல்
76. பழிப்பன பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடுபெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
81. பூமி திருத்தியுண்
82. பெரியாரைத் துணைக்கொள்
83. பேதமை யகற்று
84. பையலோ டிணங்கேல்
85. பொருள்தனைப் போற்றிவாழ்
86. போர்த்தொழில் புரியேல்
87. மனந் தடுமாறேல்
88. மாற்றானுக் கிடங் கொடேல்
89. மிகை படச் சொல்லேல்
90. மீதூண் விரும் பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோ டிணங்கேல்
93. மெல்லினல்லாள் தோள் சேர்
94. மேன்மக்கள் சொற்கேள்
95. மைவிழியார் மனையகல்
96. மொழிவ தறமொழி
97. மோகத் தைமுனி
98. வல்லமை பேசேல்
99. வாதுமுற் கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடு பெற நில்
102. உத்தம னாயிரு
103. ஊருடன் கூடிவாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வினை செயேல்
106. வைகறைத் துயிலெழு
107. ஒன்னாரைத் தேறேல்
108. ஓரஞ் சொல்லேல்

ஓம்

# காந்திய வழியில் நின்ற காந்தி மாஸ்டர்

**ஆத்மஜோதி நா. முத்தையா**



சுவாமி கெங்காதரானந்தாவுடன் காந்தி மாஸ்டர்

காந்தி மாஸ்ரர் என்றால் பொ. கந்தையா மாஸ்ரரையே குறிக்கும் என்பது, திருக்கோணமலை யில் உள்ளவர்களுக்கு மாத்திரம் அன்று, உலகிலுள்ள தமிழர்கள் எல்லாரும் அறிந்த ஒன்றாகும்.

நாவலர் என்றால் ஆறுமுகநாவலரைக் குறிப்பது போன்று காந்தி மாஸ்ரர், கந்தையா அவர்களையே குறிக்கும். இப்பெயரை இரண்டாவது ஒருவர் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை.

இரண்டு கதர் வேட்டிகளை எடுத்து ஒன்றை உடுத்திக் கொண்டு மற்றதால் உடம்பை மறைத்துக் கொள்வதே அவரது உடை.

அவர் மிதித்த இடத்துப் புல்லுஞ் சாகாது என்பதற்கு இலக்கியமே அவரதுதோற்றம்.

உடம்பில் சட்டையைச் சட்டை செய்யாதமனிதர் என்றால் அவர் ஒருவரைத் தான் கூறலாம்.

அவர் விடுகிற மூச்சும் காந்தீயம் என்றே உயிர்க்கும். எதற்கும் நல்லது கூறும் வழக்கம் அவரிடம் உண்டு. சீனாவில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் எதற்கும் நல்லதும் எனறு கூறுவதே வழக்கம். அவரது மகன் ஒருமுறை ஒரு மரத்தில் ஏறி விழுந்து காலை முறித்துக் கொண்டான். அவரது மனைவி அழுது கொண்டு ஓடிவந்து மகனது பரிதாப நிலையைக் கூறினாராம். நல்லதும் என்றாராம் அப்பெரியவர். மனைவிக்குக் கோபம் தலைக்குமேல் வந்து விட்டதாம்.

கணவனைத் திட்டு திட்டென்று திட்டினாராம். அவர் எதுவுமே பேசவில்லையாம் மகனுடைய கால் எடுக்கப்பட்டு விட்டது நொண்டியாகவே மகன் காணப்பட்டான்.

30 வயதுக்குட்பட்டவர்கள் எல்லோரும் கட்டாய இராணுவ சேவையில் சேர வேண்டும் என்று அறிவித்தல் வந்தது.

இப்பொழுது பெரியவர் கூறினார். அன்று மகனுடைய கால் முறிந்தபோது நல்லது என்றேன். அந்த நேரத்தில் திட்டினாய். மகன் நொண்டியானாலும் எங்கள் முன்னே உயிரோடு இருக்கிறானே. யுத்தத்திற்குச் சென்றிருந்தால் அவனுக்கு என்னாகும் என் பதை யாரறிவார்?

இதே போன்ற செயலையுடையவர்தான் காந்தி மாஸ்ரர். பிறர் துன்பங் கண்டு சகிக்காதவர். பிறன் ஒருவனுடைய துன்பங் கண்டு எவனுடைய மனம் இரங்குகின்றதோ அவன்தான் உண்மையான இந்து என்று காந்தி கூறியிருக்கிறார். இதற்கு இலக்கிய புருஷனாக விளங்குபவர்தான் காந்திமாஸ்ரர்.

பிறருக்குப் பணமுடை ஏற்படும்போது, தானே தன்னுடைய நகையை அடைவு வைத்து தன்பணத்தில் வட்டியும் கொடுத்து உதவி செய்வார். ஆனால் உதவி பெற்ற வர்கள் அவருடைய இளகிய மனத்தை அவரது பெலவீனம் என்று கருதி அவரை ஏமாற்றி யவர்களும் உண்டு.

தமிழிலே எல்லாம் நடைபெற வேண்டும் என்று மேடைகளிலே பேசுவார்கள் ஆனால் நடைமுறை வேறாக இருக்கும். இவரது திருமணம் ஒரு நிறைகுடத்தோடும் ஒரு குத்துவிளக்கோடும் மாத்திரம் தமிழ் முறைப்படி திருமுறைக் கலியாணமாக நடை பெற்றது. அதனை நடத்தி வைக்கும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. அத்திரு மணத்திலே குன்றக்குடி அடிகளார், பண்டிதர் கா. பொ. இரத்தினம் போன்றவர்கள் சமூகம் அளித்து ஆசியுரை வழங்கினார்கள்.

இவரை நடைமுறை வேதாந்தி என்றும் கூறலாம். நல்லதை நினைப்பவர். நல்ல தையே சொல்லுவார். சொல்வதையே செய்வார். நலமே நினைந்து நலமேபேசி நலமே செய்பவர். இதற்கு உதாரண புருஷராகத்திகழ்பவர்.

இவருடைய இச்சிறந்த வாழ்க்கைக்கு மூலகாரணர் இவருடைய அன்பு மனைவியார் ஆவர் இவர் நினைப்பதை மனைவியார் செய்து முடிப்பார். பிறருக்குதவி செய்து கெட்டவர்களில் முதன்மையானவர் காந்தி மாஸ்ரர்.

''கெடுவாக வையாதுலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு''

என்ற வள்ளுவன் குறளுக்கு உதாரண புருஷர் காந்தி மாஸ்ரரேதான்.

நடுநிலைமை தவறாமல் எப்போதும் நடந்து கொள்ளுகிறவனுடைய தரித்திரத்தை ஒரு குற்றமாக உலகத்தினர் கருத மாட்டார்கள்.

நன்றிக் கட்டங்கியான் என்பதற்கு நேர்மை என்ற நல்ல குணத்திலேயே எப் போதும் தங்கி இருப்பவன் என்று பொருள் அதனால் எப்போதும் நேர்மை தவறாமல் வாழ்க்கை நடத்துகிறவன் ஏழையாகவே இருக்க நேர்ந்தாலும் உலகம் அவமதித்து விடாது. மேலும் அவனுடைய ஏழ்மையினால் அவனுக்குத் துன்பம் வந்து விடாமலும் உலகத்தார் கவனிப்பார்கள் என்பதும் தோன்றுகிறது.

காந்தி மாஸ்ரர் ஒரு சத்தியவந்தன். மறந்தும் பொய்பேசாதவர்

''உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாமுளன்''

என்ற வள்ளுவன் வாக்கிற்கு உருவங் கொடுத்தால் அது காந்தி மாஸ்ரராகும். மனச்சாட்சிக்குப் பொய்யனாகாமல் நடந்து கொள்ளுகிற ஒருவன் உலகிலுள்ள மற்றெல் லாராலும் மதிக்கப்படுவான்.

மனச்சாட்சிக்குப் பொய்யனாகாமல் நடந்து கொள்ளக் கூடியவன் வாயால் ஒரு பொய்யே சொன்னாலும் பிறருக்குப் பகைதீர்ந்து நன்மை உண்டாக்கும் நோக்கத்தோடு தான் சொல்லுவான். பலருக்கும் தீமை உண்டாக்கக் கூடிய எதையும் சொல்ல மாட்டான். ஆதலால் அவன் என்ன சொன்னாலும் அது சத்தியம் என்று மற்றவர்கள் பாராட்டி அவன் சொன்னதை ஒத்துக் கொள்வார்கள். உலகத்தார் எல்லாம் என்பது அவனை அறிந்த மற்ற எல்லாரும் என்பதுதான்.

காந்தி மாஸ்ரருடைய வாழ்க்கையே ஒரு புராணம் தான். அதைப்பற்றி எழுத முனைந்தால் பலபக்கங்கள் நீளும். விரிவஞ்சி இத்துடன் நிறைவு செய்கிறோம்.

ஓம்

# ஆனந்தம் ஆனந்தம் ஐயா வணக்கம்

எம், தேவன்

திருக்கோணமலையில் தனசக்தி இல்லம் அன்புத் தாயான அவரது துணைவியார், அன்புத் திருமகன் முருகன், சேவையே உருவாக காந்தி ஐயா அவர்கள், அவரது இதய நாதம் ஆனந்தம்! ஆனந்தம் ஐயா! வணக்கம், என்பதேயாகும்.

மகாத்மா காந்தியடிகளின் அஹிம்சை, சத்தியம் ஆகியவற்றின் வழியிலே என்றும் வாழ்ந்து தன்னலமற்ற சேவையாற்றி வருகின்ற நடமாடும் நூலகம் காந்தி ஐயா அவர்கள்.

அவர் முகத்தில் கவலை என்பதே கிடையாது. என்றும் எப்போதும் பேரானந்தம் உடையவராக இருப்பார். கோபம் என்பதை அறியாதவர். ஏழைகளின் துயர் கண்டு கண்ணீர் சேர்பவர். பிறருக்கு உதவி செய்வதற்கென்றே பிறந்த ஒரு சாரணர் சத்தியம் ஏவஜயதெ என்ற மகா வாக்கியத்தில் அசையாத நம்பிக்கை கொண்டு காரியமாற்றும் கரும வீரர். முயற்சியைச் செய்து அதற்கான பலனை இறைவனிடம் ஒப்படைத்துத் திடசித்தத்துடன் இருக்கும். கீதையின் போதனைகட்கு உதாரண புருஷர். இருபதாம் நூற்றாண்டிலே இலங்கையிலே காந்திய சிந்தனைகளிலே முழுமையாக வாழ்கின்ற பேறு பெற்ற ஒருவர். அவரது தொண்டனாக 32 வருடகாலம் பழகிப் பணி செய்கின்ற வாய்ப்புக் கிடைத்தமை, யான் பெற்ற பாக்கியம் என்றே கருதுகிறேன்.

சுவாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களின் அன்பையும் பாராட்டும் பத்திரத்தையும் பெற்றவர். இலங்கையிலும் சிறப்பாகத் திருக்கோணமலையிலும் சுவாமிஜியின் போதனைகள், நூல்கள் ஆகியவற்றைப் பரப்புகின்ற பாரிய தொண்டினை ஆற்றி வருபவர். மாதாஜி அவர்களின் தபோவனத் தொண்டை ஏற்று நடத்தும் அரும்பணியைச் செய்து வரும் தியாக சீலர்.

காந்திய வழியிலே தாழ்த்தப்பட்டோருக்கும், ஏழைகட்கும், ஏனைய எல்லா மக்களுக்கும் காலநேரம் பாராது. சேவை செய்பவர். திருக்கோணமலை மாவட்டத்திலே அமரர் இராஜவரோதயம் அவர்கள் தலைமையில் இலங்கையிலேயே முதன் முதலாக அரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேசம் செய்வதில் அயராது உழைத்து வெற்றிகண்டவர். அபிவிருத்தியடையாத கிராமங்களின் முன்னேற்றத்துக்குத் தம்மாலான உதவிகள் அனைத்தையும் அவர் செய்து வந்தார். பட்டித்திடல் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் அமைப்புக்கு வழிகாட்டியாக இருந்து அதன் கும்பாபிஷேக நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார். திருக்கோணமலை பத்தாம் குறிச்சி கடற்கரைப் பிள்ளையார் ஆலயத்தின் னரமைப்புச் சபையை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார். கந்தளாய் போன்ற குடியேற்றத் திட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கு ஏற்பட்டு வந்த காணிப் பிரச்சினை,

பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அதிகாரிகளின் உதவியைப் பெற்று உடனுக்குடன் காரியமாற்றினார்.

ஆசார்ய வினோபாஜியின் நூல்கள், கிராமராஜ்ய சஞ்சிகை ஆகியவற்றை ஐயா அவர்கள் மக்களிடையே பரப்பிவந்தார். பூதானக் கொள்கையைத் தாமும் முன்னெடுத்தும் செயற்பட்டு நிலப்பங்கீடு, காணி, வீடு இல்லாதோருக்கு அவற்றை வாங்கிக் கொள்ள உதவி செய்தல் ஆகிய தன்னலமற்ற கைம்மாறு கருதாத தொண்டுகளாகச் செய்து வருகின்றார். நியாயமான வாடகைக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் தம்மாலான சேவைகளைச் செய்து வருகின்றார். இத்தகைய சேவைகளை மனித நேயத்துக்காகவன்றி வேறு எதையும் எதிர்பார்த்து ஐயா அவர்கள் செய்யவில்லை. பல நூறு மக்களுக்குக் காணிகளையும் வீடுகளையும் உரிமையாக்கிய அவர் உலகம் இன்புறுவதைக் கண்டு மகிழ்ந்தாரேயன்றித் தமக்கென ஒரு வீட்டையோ, காணியையோ திருக்கோணமலைப் பகுதியிலோ வேறு எப்பகுதியிலோ சொந்தமாக்கி வைக்கவில்லை. அவரது வேண்டுதல் வேண்டாமையற்ற மனப்பாங்குக்கு இதுவே ஒரு பெரிய எடுத்துக் காட்டாகும்.

இனம், மதம், மொழி ஆகிய பேதங்களைக் கடந்த சர்வசமய சமரச ஞானியாகிய திரு. அருட்பிரகாச வள்ளலாரின் அன்பு நெறியிலே காந்தி ஐயா அவர்களும் 'எம்மதமும் சம்மதம்' என்ற உயரிய சிந்தனையில் வாழ்ந்து வருகின்றார் வள்ளலாரின் பாடல்கள், சிந்தனைகள் ஆகியவற்றைப் பரப்பி வருகின்ற அருந்தொண்டினையும் செய்து வருகின்றார்.

இராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் போதனைகளில் ஐயா அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை உண்டு ஆவரின் வாழ்வும் தொண்டுகளும் பரமஹம்சரின் போதனைகட்கேற்ப அமைந்து காணப்படுகின்றன. பரமஹம்சர், அன்னை சாரதாதேவியார் ஆகியோரின் உயர்ந்த போதனைகளையும், இராமகிருஷ்ண மிஷன் வெளியீடுகளையும் இலங்கையிலும், சிறப்பாகத் திருக்கோணமலை மாவட்டத்திலும் பரப்பி வருகின்ற பெரியார் காந்தி ஐயா.

சுவாமி விவேகானந்தர், சுவாமி சிற்பவானந்தர் ஆகிய மகான்களின் நூல்களையும், 'தர்மசக்கரம்' சஞ்சிகையையும் பரப்புவதில் தமது காலத்தையும், பொருளையும் தியாகம் செய்வதில் அவர் பின்னிற்பதில்லை.

சைவத்திருமுறைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள், சித்தர் ஞானநூல்கள், தேவ, ஆகம நூல்கள், புராணங்கள், சமய சஞ்சிகைகள் ஆகிய யாவற்றையும் தாமாகவே சுமந்து சென்று மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் அவற்றைப் பரப்புவார்.

சங்க இலங்கியங்கள், இலக்கண நூல்கள், சோதிடம், வைத்தியம் ஆகிய பலதரப்பட்ட நூல்களையும் தமிழ் மக்களிடையே ஆண்டாண்டு காலமாகப் பரப்பி வருகின்ற பான்மையில் ஐயா அவர்கள் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர். அவர்களின் தமிழ்த் தொண்டுக்கு ஒப்பான உயரிய பணியைச் செய்து வருவது புலனாகிறது.

ஒரு பொல்லாப்புமில்லை, 'எப்பவோ முடிந்தகாரியம்' 'சும்மா இரு' என்ற யோகர் சுவாமிகளின் மகாவாக்கியங்களுக்கமைய ஐயா அவர்களின் செயற்பாடுகள் அமைந்து காணப்படுகின்றன. அவரது மனம் சும்மா இருந்தாலும் உடல் எப்போதும் நேரசூசிக்கமையத் தொழில் செய்து கொண்டே இருக்கும். காலமும் கணக்கும் அவரது வாழ்வின் இருகண்கள் போல் விளங்கின. கால் நடக்க முடியாமல் வைத்தியம் செய்து கொண்டிருந்த வேளைகளிலும் குறிப்பிட்ட காரியங்களை முடிக்க மற்றவர் உதவியுடன் துவிச்சக்கரத்தில் சென்றாயினும் முடிக்கவே செய்வார். 'நோய்க் கிடங்கொடேல்' என்ற முதுமொழிக்கு ஐயா ஒரு எடுத்துக் காட்டாக விளங்கி வருகிறார்.

இலங்கையிலே பாடல் பெற்ற தலங்களின் சேவைக்கும் தம்மை ஈடுபடுத்திப் பல காலமாக ஐயா உழைத்து வருகிறார். திருக்கேதீச்சரத்தில் நடத்தப்படும் திருக்கோணமலைச் சைவ அடியார்களின் திருவிழாவுக்கு ஐயா அவர்களுடன சேர்ந்து செயற்படக் கூடிய வாய்ப்பு எனக்கும் சில வருட காலம் கிடைத்தது என் பாக்கியமே.

ஆத்மஜோதி வெளியீடுகள், சிவதொண்டன் வெளியீடுகள் மட்டுமன்றி இலங்கையில் பல பாகங்களிலும் வெளியிடப்படும் நூல்களையும் ஐயா அவர்களிடம் பெறலாம்.

சுவாமி விபுலானந்தர் ஆறுமுகநாவலர், சுத்தானந்த பாரதியார் போன்ற ஞானிகளின் நூல்களையும் பரப்பி வருகின்றார்.

ஐயா அவர்கள் ஈடுபாடு கொள்ளாத சமய, சமூக அமைப்புக்கள் இல்லை. எனலாம். அவரின் சேவைகள் அளப்பரியன அவர் பொருளாதாரச் சூழலில் அகப்பட்டு நீந்திக் கரையேறத் தவித்த வேளைகளில் அவருக்கு உயிர்காப்புப் பட்டி கிடைக்கவில்லை. கரையேறும் சமயத்திலாவது ஒரு உதவி கிடைத்தது கடவுள் சித்தமே.

காந்தி ஐயா அவர்களின் தன்னலமற்ற சேவைகளைப் பாராட்டித் தேசிய மட்டத்தில் அவர் கௌரவிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது ஓவ்வொரு ஓவ்வொருவரதும் கடமையாகும்.



காந்தி மாஸ்டர் மகன் (முருகன்)

காந்தீயத்துக்கும், சர்வ சமய சமரசக் கொள்கைக்கும், சமாதானத்துக்கும் அவர் ஆற்றி வரும் அருள் தொண்டுகளை இந்தியப் பெருமக்களின் கவனத்துக்குக் கொண்டுவரச் செய்து இந்திய அரசின் கௌரவத்தையும் பாராட்டையும் ஐயா அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க விழாக் குழுவினரும் பெரியார்களும், கல்விமான்களும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும் எனது பணிவான கருத்தாகும்.

காந்தி ஐயா அவர்கள் உலகத்தின் சொத்து. அவரது சேவைகள், சிந்தனைகள் முன்மாதிரியாக மற்றவர்களால் பின்பற்றப்பட வேண்டியவை. ஐயா அவர்களின் 75ஆவது வருட சேவை நலன் பாராட்டு விழாக் கண்டு பேரானந்தம் அடைந்தேன். காந்தி ஐயா அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மக்களுக்குச் சேவை செய்ய இறையருள் வேண்டுகின்றேன்.

பேரானந்தம் பெற்றேன். ஆனந்தம்! ஆனந்தம்! ஐயா வணக்கம்.

ஓம்

## யாரால் முடியும் இந்தச் செயல்
## சுவாமி சைத்தன்யானந்தாவுக்கு சேவை

சுவாமிசைத்தன்யானந்தா ஓய்வு பெற்ற தபால் அதிகாரி. பிரம்மச்சாரி. தெய்வீக
வாழ்க்கையில் தீவிர ஈடுபாடு கொண்டு ரிசிகேசம் சென்று, தெய்வநெறிப் பயிற்சி பெற்று,
ரிஷிகேசம் தெய்வீக ஒளி. சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான சுவாமி சிவாநந்த
சரஸ்வதி மகாராஜிடம் சன்னியாசம் பெற்று துறவியானார். தாயகம் திரும்பி தெய்வீகத்
தொண்டு செய்தார். சுவாமி சிவாநந்தரின் அரும் பெரும் பொக்கிஷங்களை ஆங்கிலத்
திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து விநியோகித்து தொண்டாற்றினார். அவர், தன்
சேவையை விரைவாகச் செய்யும் நோக்குடன் துவிச்சக்கரவண்டில் ஒன்றினைப் பெற்று
அதில் ஓடத்தொடங்கினார். அன்னார்மீது அன்பு கொண்ட யாழ்ப்பாணம் யோகர் சுவாமி
அவாகள், ''சைதன்யானந்தா ஏண்டா உனக்கு இந்தச் சைக்கிள். விட்டுடடாஇதை''
என்று கூறினாராம். விடமுடிந்ததா அவரால்! எத்தனையோ விடயங்கள் காத்திருக்
கின்றதே! சைக்கிளில் ஓடினார், ஓய்வின்றி ஓடினார், மோதுண்டார் மோட்டார் காரில்
விபத்து! யோகர் சொல்லி ஒருவாரம்தான். பாவம் சைத்தன்யானந்தரின் முதுகு எலும்பு
முறிந்து விட்டது. வைத்தியத்துக்குக் கட்டுப்படவில்லை படுத்த படுக்கையாகி விட்டார்.
யார் அறிவார் எப்பவோ முடிந்த காரியம். பத்து வருடங்களாக படுத்த படுக்கையிலேயே
இருந்து பரனை அடைந்தார்.

நேர்ய்வாய்ப்பட்டிருந்த பத்து வருடங்களில் இரண்டரை வருடங்களை காந்தி
ஐயாவுக்குக் கொடுத்து விட்டார் சுவாமிகள். ஆம், தனக்கு, திருக்கோணமலையில் தன்
அன்பன், தொண்டன் காந்தி மாஸ்டர் இருக்கின்றார். உடனடியாக என்னைக் கொண்டு
சென்று அவரிடம் ஒப்படையுங்கள் என்று கட்டளையிட்டாராம். கட்டளை நிறைவேறி
யது அந்தத் தெய்வீகத் தொண்டனை, சுவாமி சைத்தன்யானந்தாவை ஏற்றுக் கொண்
டார் காந்தி ஐயா மற்றுமொருசிவத்தொண்டன் டாக்டர் ராமநாதன் கடமையாற்றிக்
கொண்டிருந்த உப்புவெளி சியாமளா ஆஸ்பத்திரியில் சுவாமி சேர்க்கப்பட்டார். படுக்கை
யில் இருந்ததினால் ஏற்பட்ட படுக்கைப் புண்களுக்கு ராமநாதனால் பல தடவைகள்
ரணசிகிச்சை செய்யப்பட்டது. புண்களும் ஆறின.

காந்தி ஐயாவும் அவரது மனைவியாரும் அல்லும் பகலும் சுவாமிக்கு சேவை
ஆற்றினார்கள். உணவுவகைகள் எல்லாமே சுடச்சுட இருக்கவேண்டும் சுவாமிக்கு, சுடு
தண்ணீர் போத்தலில் வெந்நீர் சிறிது ஆறியிருந்தாலும் திருப்பி அனுப்பிவிடுவாராம்.
எவ்வளவு பொறுமை வேண்டும் இப்படியான வேலையில் ஈடுபட தினமும் மூன்று மைல்
தூரமுள்ள சியாமளா ஆஸ்பத்திரிக்கு. செருப்புக்கூட அணியாமல் கால்நடையாகவே
உணவை எடுத்துக் கொண்டு காலையும் மதியமும் செல்வார் காந்தி ஐயா. மாலை
உணவை அவரது துணைவியார் எடுத்துச் செல்வார் ஒரு நாள்கூட அந்தத்தாய் உணவு
டன் போகாவிட்டால், வேறு யார் கொண்டு போனாலும், ஏன் எனக்கு உணவு கொண்டு
வருவதில் அந்தத் தாய்க்கு ஏதாவது நஷ்டமா என்று கேட்டு, பிறர் கொண்டு சென்ற
உணவை உண்ணவே மாட்டாராம். சுவாமிகள் இப்படி ஒரு நாளா? இரண்டு நாட்களா?
915 நாட்கள். இரண்டரை வருடங்கள். நடந்தே சேவை செய்தார் காந்தி ஐயா. எதற்
கும் ஒரு எல்லை உண்டு. ஆனால் காந்தி ஐயா சளைக்கவே இல்லை. இது அவரது
வாழ்வில் ஒரு பூரண சத்திய சோதனை.

சாதாரண மனிதர்களாகிய நாம் பெற்று பேணிக்காத்த பெற்றோர்களுக்கோ,
தாலி கட்டிய மனைவிக்கோ முகமலர்ந்து இப்படியாகச் சேவை செய்வோமா? என்பது
சந்தேகமே! யாரால் முடியும் இந்தச் செயல்? தெய்வீகத் தொண்டனால் மட்டுமே
செய்ய முடியும். இச்செய்தியை கேட்டுத் தெரிந்து கொண்டபோது எமது உள்ளம்
எம்மை அறியாமலே நெகிழ்ந்தது.

**கணபதிப்பிள்ளை அமரசிங்கம்.**

# சமூக சேவையாளர் காந்தி ஐயா

## திரு. பொ. கந்தையா (ஆசிரியர்)

திரு. செல்லப்பா சிவபாதசுந்தரம்

திருக்கோணமலையில் வாழ்ந்து வருகின்ற பிரபல சமய, சமூகசேவையாளர் மதிப்புக்குரிய திரு. பொ. கந்தையா, காந்தி ஆசிரியர் (காந்தி ஐயா) அவர்களை அறியாதார் எவரும் இருக்க மாட்டார்கள் என்றே நினைக்கின்றேன். ஏனெனில் காந்தி மாஸ்டர் என்ற பெயர் பச்சிளம் குழந்தைகள் முதல் என்போன்ற இளைஞர்கள், மற்றும் பெரியோர்கள் மத்தியில் நன்கு பிரபல்யம் பெற்றிருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

இப்பெரியாரை நான் எனது சிறுவயது முதல் நன்கு அறிவேன். ஏனெனில் பத்தாவுக்கேற்ற பதிவிரதையான அன்னாரின் அன்பு மனைவி திருமதி இராசநாயகி கந்தையா அவர்களுடைய மாணவர்களில் நானும் ஒருவன். அதனால்தான் எனது பாடசாலைக் காலங்களில் இவருடைய வீட்டுக்கு அடிக்கடி சென்று வருவேன். அப்போதெல்லாம் இவருடைய இல்லம் ஒரு தர்ம சத்திரமாக விளங்கியதை நான் அறிந்தேன். அதைப் பற்றி இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட இப்பெரியார், திருக்கோணமலைப் பெண்ணைத் திருமணம் புரிந்து திருக்கோணமலையில் வாழவும் சேவையாற்றவும் திருக்கோணேஸ்வரப் பெருமான் திருவருள் பாலித்தது திருவருட் செயலென்றே உணர்கின்றேன். அன்னார் இங்கு ஆற்றியுள்ள அருஞ்சேவைகளை எண்ணிப்பார்க்கின்றேன். இச்சந்தர்ப்பத்தில் செயற்கரிய செய்வார் பெரியர் என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கு எவ்வளவு தூரம் இவருக்குப் பொருத்தமானது என்பதை அனுமானிக்கிறேன். ஆம் இவர் பெரியவர் தான். அதை எவரும் மறுக்க இயலாது. அண்ணல் காந்திஜியின் வழியைப் பின்பற்றி இன்றுவரை கதராடையுடன் காட்சியளிக்கும் காந்தி ஐயா இன்னும் பல்லாண்டுகள் சுகமாகவும் வாழ்ந்து இம்மண்ணில் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது வேணவாவாகும். பல அறச் சிந்தனையுள்ள அமைப்புக்கள் இன்று அன்னாரால் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை அறிந்தவர்கள் தான் அறிவார்கள். அறியாதார் அறியாதாரே. திருக்கோணமலையில் நிகழ்கின்ற மரண வைபவங்களில் எல்லாம் சங்கு, சேமக்கலம் சகிதம் ஐயா அவர்கள் ஆற்றிவருகின்ற பெரும் பணியை எம்மால் மறக்க இயலுமா? அகில இலங்கைக் காந்தி சேவா சங்க உபதலைவராக இருக்கின்ற இவர் திருக்கோணமலையிலுள்ள சைவ அடியார்கள் திருவிழாச் சபையின் உறுப்பினராக இருந்து திருக்கேதீஸ்வரத் தலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற எமது மண்ணின் திருவிழாவை பல தசாப்தங்களாக நெறிப்படுத்தி வருகின்றார் இச் சபையில் திருவிழாவை பல தசாப்தங்களாக நெறிப்படுத்தி வருகின்றார். இச்சபையின் பதவிகளை வகிப்போர் அக்கறையில்லாமல் இருக்கின்றபோதும் வெறுங்காலுடன் நடந்து திரிந்து சைவ அன்பர்களிடம் பணத்தைச் சேர்த்து திருவிழாவைப் பக்தி சிரத்தையுடன் பொலிவாக நடத்துகின்றார் என்றால் இவருடைய தொண்டுள்ளத்தை எவ்வாறு எடுத்தியம்பலாம். இது மட்டுமா, ஆதரவற்ற குழந்தைகளுக்காக சமாதி அடைந்த வணக்கத்துக்

குரிய ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜி அவர்களால் உருவாக்கப்பட்ட சிவானந்த தபோவனம் இன்று அக்குழந்தைகளை வைத்துப் பராமரித்து வருகின்றதென்றால் அதற்கு அச்சாணியாக இருந்து இயக்கி வருபவர் இவரே. இதற்காக இவர்பட்ட கஸ்டங்கள் பல இருந்த போதிலும் சுமைதாங்கியாக இருந்து இதனை இயக்கி வருகின்றார். மேலும் இவர் இங்குள்ள பல சமயஸ்தாபனங்களில் முக்கியஸ்தராக இருந்து அவைதியான முறையில் தனது பங்களிப்பினை நல்கி வருகின்றார். எவர் எப்படித் தன்னைப் பற்றி விமர்சித்தாலும் அதற்காக எவ்வித பதட்டமோ ஆத்திரமோ அடையாது எல்லாவற்றிற்கும் ஆனந்தம் ஆனந்தம் என்று அன்புடன் கூறிச் செயற்பட்டு வருகின்ற இவர் பல இளைஞர்களுக்கு மட்டுமல்லாமல் அதிகாரிகள், ஆசிரியர்கள் நிறுவனங்களின் நிருவாகிகள், தொண்டர்கள், ஆலய முகாமையாளர்கள் போன்றோர்களுக்கு வேண்டிய நல்ல ஆலோசனைகளை அவ்வப்போது அளித்து அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கின்றார்

இப்பெரியாரின் மிக முக்கியமான ஒரு செயல்பாட்டையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவர் பல அரிய நூல்களை சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் வழிகாட்டக்கூடிய அரிய நூல்களையெல்லாம் பல விற்பனையாளர்களிடமிருந்து வரவழைத்து அவற்றை ஆலயங்களிலும், பொது ஸ்தாபனங்களில் நிகழும் விழாக்களிலும் வைத்து அறிமுகப்படுத்தி விற்பனை செய்து அனைவரையும் வாசிப்பின் முக்கியத்துவத்தை அறியச் செய்வதில் காட்டும் அக்கறை மிக உன்னிப்பாகக் கவனத்திற்கெடுக்கப்பட வேண்டியதாகும்.

எமது அமைப்பு போன்ற பல அமைப்புகளுக்கு இவர் நல்கும் ஆலோசனைகள் பயனுள்ளவாய் அமைந்துள்ளன. இப்பெரியாரிடம் ஆலோசனை கேட்டு இணக்கம் காண்பவர்கள் பலர் இங்கு உள்ளார்கள். எனவே, இப்பெரியாரைப் பாராட்டி அவருடைய எழுபத்தைந்தாவது ஆண்டு பிறந்த நாள் விழாவினை எடுக்க முன் வந்த விழா ஏற்பாட்டாளர்களை மனமாரப் பாராட்டுகிறோம். வாழும் காலத்திலேயே சேவையாளர்களைக் கௌரவிக்க வேண்டும் என்ற நோக்கில் இவர்கள் செயற்படுவதை நினைத்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

எனவே, இவ்வேளையிலே பெரியார் கந்தையா அவர்களின் (காந்தி ஐயா) சமூக சேவைத் தன்மையைக் நாம் எல்லோரும் உளமாரப் பாராட்டுவதோடு திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர்கள் சார்பில் அன்னாரை நெஞ்சார வாழ்த்துவதில் மனநிறைவடைகிறோம்.

எமது பெருமதிப்புக்கும், அன்புக்கும் அபிமானத்துக்கும் உரிய காந்தி ஐயாவும் அவருடைய அன்பு மனைவி இராசநாயகி அம்மையார், அன்பு மகன் முருகன் எல்லோரும் இன்புற்று வாழப் பரம்பொருளைப் பிரார்த்தித்து வணங்குகின்றோம்.

# காந்தி ஐயா

சி. க. வேலாயுதபிள்ளை

காந்தி ஆசிரியர் திரு. பொ. கந்தையா அவர்களுடைய எழுபத்தைந்தாவது பிறந்த தினம் 19-12-92 இல் கொண்டாடப்படுவது அறிந்து மிக மகிழ்ச்சி. அவரது வாழ்நாள் ஆனந்தமான அற்புதமான சம்பவங்கள் நிறைந்த, செறிந்த காலமாகும். இன்பமே எந் நாளும் துன்பமில்லாதவர். கொக்குவில் கலைவாணி சபா, இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை, சேவா நிலையம் முதலியன ஞாபகத்துக்கு வருகின்றன. அந்தக் காலத் தில் அவரிடம் வரும் விருந்தினர்கள் மிக அதிகம். இரவில் தூங்குவதற்கு தலையணை யாகப் பழைய 'பேப்பர்க்' கட்டுக்களைத் தந்து மகிழ்வார். உப்பு, மிளகாய் அவர் விரும் பாதவை. அவரது சமையலும் ஆனந்தமானது. அந்தக் காலத்தில் நாம் அவரது விருந் தாளிகள். காய்ந்த பாண் துண்டுகளை வீசமாட்டார். நீரில் ஊறப்போட்டு விருந்தாளி களுக்கும் தருவார். பலரகமான உணவு வகைகளை எள்ளென்றாலும் ஏழாப் பங்கிட்டுத் தாய் போல் ஊட்டுவார்.

கொக்குவில் சேவா நிலையத்தில் தான் அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் மலர்ந்தது. இதன் பொதுச் செயலாளராக ஆரம்பத்தில் சில வருடங்கள் இருந்து நெறிப் படுத்தினார். அவர் எங்கு போனாலும் ஆனந்தம் ஆனந்தமாகவே இருப்பார். பிறந்த குழந்தை முதல் வயோதிபர் ஈறாக அவருக்குக் கூட்டாளிகள் உறவினர்களாக இருப்பார் கள். படிப்பாளிகள் பாமரர் எனப் பல நூற்றுக்கணக்கான உறவினர்கள் நாடெங்கும் பரந்து இருக்கின்றார்கள். இவரது ஆனந்தக் கூத்து எல்லோரையும் கவர்ந்து விடும்.

இமயம் போன்ற மிக உயர்ந்த பண்பு நெறிகளையும், கங்கை போன்ற, என்றும் வற்றாத அன்பு நெறிகளையும் உடையவர். எந்தக் கூட்டம், எந்த மகாநாடு நடந்தாலும் அவர் புத்தகக் கட்டுக்களுடன் சென்று விடுவார். நிறையக் கடன் கொடுப்பார். ஒப்புர வான கணக்குகளும் வைத்து, வருடந்தோறும் ஐந்தொகை அறிக்கையும் அச்சிட்டு விடு வார். கடனைத் திருப்பிக் கொடாதவரையும் ஆனந்தமாகவே நோக்குவார். இவருடன் ஒரு காந்தீய சர்வோதயத்தின் கூட்டமே தொடர்பு கொண்டிருந்தது. இருக்கிறது. எப்படிச் சொன்னாலும் ஆனந்தம்; எங்கும் சிரிப்பொலியை எழுப்பி விடுவார்.

## வைர விழா

தமிழ்த் தந்தை சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் வாழ்த்துரையுடன் காந்தி ஆசிரியர் கந்தையாவுக்கும், ஆசிரியை செல்வி இராசநாயகி பொன்னையாவுக்கும் திருமணம் நடந்தது.

இந்தவருடம் நாம் சென்னை சென்றிருந்தபோது சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களைச் சந்தித்தோம். காந்தி ஆசிரியர் குடும்ப நலன் பற்றி விசாரித்து அறிந்து கொண்டார். தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கச் சொன்னார். முதல் முறை யாழ்ப்பாணத்துக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்கம் தமிழ்த் தந்தை ம. பொ. சி அவர்களை அழைத்திருந்தது. ம. பொ. சியின் சுற்றுப் பிரயாணத்துக்கு ஒரு 'கார்' ஒழுங்கு படுத்தப்பட்டது புங்குடு தீவுக்குச் செல்லும் வழியில் 'கார்' பழுதடைந்தது. இரவு நேரத்தில் 'கார்' திருத்த யார் வரப்போகிறார்கள்? இரவில் காவல் காத்துப் பின் யாரையோ பிடித்து காரைச் சரிசெய்து மறுநாள் பிரயாணம் செய்து முடித்து அந்த விருந்தாளியைச் சமாதானப் படுத்திக் கொண்டார் எனத் தெரியவந்தது. இப்பசயான நெருக்கடிகளைச் சமாளிக்கும் அதிசயமானவர்.

இப்படியாக காந்தி ஆசிரியர் சிரிப்பின் செல்வர். திரு. பொ. கந்தையா (காந்தி ஆசிரியர்) அவர்களைப் பற்றிச் சிந்திக்கும் போது வரும் நினைவுகளை எழுதினால் அது பெரிய சரித்திர வரலாறு ஆகிவிடும் அவரது அன்புத் துணைவியாரை அன்புடனும் பண்புடனும் 'அக்கா' என்றே நான் அழைப்பதுண்டு. காந்தி ஆசிரியரும் அக்காவும் மகன் முருகனும் நல்லாரோக்கியத்துடன் வாழ்ந்து வளம்பெற எல்லாம் வல்ல இறைவனைச் சிந்தித்து வாழ்த்துகின்றோர்;

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தம்!!!

நாம் உயிர்வாழ்வதற்கென்று மேற்கொள்ளும் சாதனங்களுக்கும் ஓர் எல்லை இருக்க வேண்டும். உயிர் வைத்திருப்பதற்கு அவசியம் என்றாலும் சில காரியங்களை நாம் செய்யக்கூடாது.

- மகாத்மாகாந்தி -

ஓம்

# உள்ளத்தால் பொய்யாத ஐயா

**அ. சிவலோகநாதன்**

காந்தி அடிகள் போன்ற எளிமையான தோற்றம். அமைதியும் சாந்தமும் தவழு முகம். இனிமையான கருத்துடைய பேச்சு, இவற்றைத் தன்னகத்தே கொண்டு சமய, சமூகத் தொண்டு புரிந்து வரும் திருவாளர் கந்தையா (காந்தி மாஸ்டர்) அவர்களின் எழுபத்தைந்தாவது பிறந்த தினத்தையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரில் எனது கருத்தையும் வெளியிடச் சந்தர்ப்பங் கிடைத்ததையிட்டு ஆனந்தம் அடைகிறேன். பிறரது இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டு அவர்களது வைபவங்களைச் சிறப்பிக்கும் ஐயா அவர்களின் வாயில் மலரும் முதற் சொல் 'ஆனந்தம்' 'ஆனந்தம்'. இந்தச் சொல் லுக்கே உரியவராக ஆகிவிட்டார் காந்தி ஐயா அவர்கள்.

இப்பெரியாரை 1958ம் ஆண்டு முதல் நான் அறிவேன். கோணேஸ்வரா வித்தியா லயத்தில் ஆசிரியராகக் கடமை புரிந்து கொண்டிருந்த இவரை, அறியும் வாய்ப்பு இந்துக் கல்லூரியில் நான் முதன்முறை ஆசிரியனாக நியமனம் பெற்றபோதே எனக்குக் கிடைத்தது அவருடைய எளிமையான வாழ்க்கை, தன்னலமற்ற சேவை, தெளிவான சிந்தனை, இனி மையான பேச்சு, எல்லோருடனும் அன்பாகப் பழகும் தன்மை, நேரம் காலம் பாராது எல்லோருக்கும் எந்நேரமும் உதவும் மனப்பான்மை, இவையெல்லாம் என்னைப் பெரிதும் கவரும் இவரது பண்புகளாகும்.

சமயத்துக்கு இவர் ஆற்றும் சேவை அளப்பரியது. சமயச் சடங்குகளில் கலந்து கொள்வது மாத்திரமன்றி, சின்னஞ்சிறிய உள்ளங்களுக்கு ஏற்ற சமய, நன்னெறி நூல் களை வெகுதூரத்திலிருந்து எடுப்பித்துப் பிள்ளைகளுக்கு மிகக் குறைந்த விலையில் வழங்கி, சமய அறிவைப் பெருக்குகின்றார். எந்தக் கோயில் திருவிழாக்களிலும் ஐயாவின் சமயப்புத்தகங்கள் விற்பனைக்குக் கிடைக்கும். இவ்விதம் மக்களின் அறியாமை என்னும் இருளைப் போக்க அரிய நூல்களை விநியோகித்து சிறப்பான சேவையை ஆற்றி வருகின்றார்.

சிவானந்த தபோவனப் பிள்ளைகளின் நலன் காக்கும் அரிய தொண்டினையும் ஐயா சிறப்புற ஆற்றி வருகின்றார். ஆதரவற்ற பிள்ளைகளுக்கு அன்பு உள்ளத்தோடு நல்ல வழிகாட்டியாக, இல்லத்தை நடாத்தும் பொறுப்பேற்று, அதற்கென அயராது உழைத்து வரும் ஐயாவின் தொண்டினைப் பாராட்டாது இருக்க முடியாது. பெற்றோர் களை இழந்து தவித்த பிள்ளைகள், கல்வியைத் தொடர்ந்து பெறப் பாடசாலை வசதி களை ஏற்படுத்திக் கொடுத்தும், தம்மால் இயன்றளவு உதவிகள் செய்து கொடுத்தும் வருகின்றார். துறவி போல் தோற்றம் அளிக்கும் ஐயாவின் பணிகள், தொண்டுகள் எல்லோராலும் மெச்சக்கூடிய தொன்றாகும்.

திருக்கோணமலையில் இவரையறியாதவர்கள் இல்லை. இப்புண்ணிய பூமியில், இப்புண்ணிய செயல்களையும் தொண்டுகளையும் ஆற்றி வரும் காந்தி ஐயா அவர்கட்கும், அவரது தொண்டுகள் நிறைவு பெற அவருக்குத் துணையாக நின்று அயராது உழைக்கும் அவரது இல்லத்தரசிக்கும், எல்லாம் வல்ல கோணேசப் பெருமான் ஆசியும் ஆரோக்கிய மும் நல்கி பல்லாண்டு காலம் வாழ அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம்

# எனது ஆசிரியர்

நா. புவனேந்திரன்

கொக்குவில் இராமகிருஷ்ண மிஷன் சைவ வித்தியாசாலையில் காந்தி மாஸ்டர் ஆசிரியராகப் பணியாற்றிய கால கட்டங்களில் அங்கு கல்வி பயிலும் பாக்கியம் எனக்கும், கிடைத்திருந்தது. இளம் சிறார்களாக கட்டுப்பாடற்று அங்கும் இங்கும் ஓடித்திரிந்த கால கட்டங்களில்; கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்து எம்மை எல்லாம் சரியான வழியில் இட்டுச் சென்ற காந்தி மாஸ்டரை இன்றும் எங்களால் நினைவு கூற முடிகின்றது. அன்று பாலர்களாக அவரிடம் அ, ஆ படித்த பொழுது அவருக்கு வைர விழா எடுத்து பாராட்டு விழா எடுக்கும் கால கட்டங்களில் அவரோடு இருந்து அந்த விழாவிலும் கலந்து, அந்த மகிழ்ச்சியிலும் கலந்து கொள்வேன் என்று நான் அன்று நினைத்துக் கூட பார்த்திருக்கவில்லை: கொக்குவில் கிராமத்தில் அன்று எமது பாடசாலை அதிபராக இருந்த இ. கந்தையா அவருக்கு உதவியாக பாடசாலையை வளர்த்தெடுத்த பெரியார் ஓய்வு பெற்ற தபாலதிபர் இ. தம்பித்துரை போன்றவர்களுடன் காந்தி மாஸ்டர் ஒரு குடும்பம் போல் பழகி எங்களை எல்லாம் ஒவ்வொரு நிமிடமும் அக்கறையோடு அவ தானித்து பாடசாலையில் படிக்கும் அத்தனை மாணவர்களும் சமுதாயத்தின் மேல் நிலையை அடைய வேண்டும் என்று அன்று அவர்கள் கனவு கண்டதை இன்றும் எம்மால் பசுமையோடு நினைவு கூற முடிகின்றது.

சுவாமி விபுலானந்தர் எமது பாடசாலைக்கு வரும் கால கட்டங்களில் தங்கும் ஒரு சிறிய ஓலைக் குடிசையிலேயே காந்தி மாஸ்டரும் அங்கு ஆசிரியராகக் கடமையாற்றிய பொழுது தங்கியிருந்தார். மிக எளிமையான புனிதமான அக்குடிசையை நாம் சமீப காலங்கள் வரை பயபக்தியோடு பராமரித்து வந்தோம். காந்தி மாஸ்டர் பாடசாலையை விட்டு மாற்றலாகி திருக்கோணமலைக்கு வந்த பின்னரும் கூட மாணவர்களாகிய எங் களுக்கு அக்குடிசையைப் பார்க்கும் போது மதிப்பும் மரியாதையும் பக்தியும் சேர்ந்தே வரும்.

என்றும் சிரித்த முகம், ஆனந்த மயமான அமைதியான வார்த்தைகள், தூய கதர் உடை, செருப்பற்ற கால் தூய வெண்மையான தாடி, வரலாறு கூறும் ஓலைப்பை, தூய்மையான உள்ளம், கடுகளவும் கோபம் வராத இனிய சொற்கள், எல்லோருக்கும் உதவ வேண்டும் என்று அங்கலாய்க்கும் மனம் இவைகளின் கூட்டுத் தொகுப்பே காந்தி ஐயா.

காந்தி ஐயாவிடம் காணும் மிகப் பெரிய ஆழமான ஒரு பண்பு அணுவளவும் அவரிடம் அகங்காரம் அற்ற தன்மை. இந்த உலகில் எவ்வளவுதான் கல்வி பயின்றாலும் ஆத்மீக விஷயங்களில் மிகச் சிரத்தையுடன் ஈடுபட்டாலும் வேதங்கள் உபநிஷதங்களைக் கசடறக் கற்றாலும் எத்தனையோ பெரியவர்கள் தம் அகந்தையை அகற்ற அவலப்பட்டு தோல்வியுற்றதை நாம் காண்கின்றோம். எல்லாம் இருந்தும் அகங்காரத்தை அகற்ற முடியாததினால் அவர்கள் பூரணமான மனிதர்களாக மாற முடியாமல் போனதையும் அதன் மூலம் அவர்கள் சமநிலை இழந்து தவித்ததையும் நாம் பல உதாரணங்கள் மூல மாக பல புராணங்களிலும் காண்கின்றோம். ஆனால் எமது காந்தி ஐயாவோ எப்படித் தான் தன் அகங்காரத்தை பூரணமாக அளித்தாரோ யாம் அறியோம். அவரது பூரண மான அகங்காரம் அற்ற நிலையே அவரை, பூரணத்துவமான, புனிதமான ஆத்மாவாக அவரை அகில உலகமும் இன்று தொழவைக்கின்றது. என்னுடைய சிரம் தாழ்ந்த அன்பு வணக்கத்தையும், ஆனந்தத்துடன் ஏற்றுக் கொள்ளுங்கள் ஐயா.

உ

# நான் அறிந்த காந்தி ஐயா

சேவைகள் மூப்பதில்லை செய்தவரும் சாவதில்லை
உதவி பெற்றோர் உள்ளத்தில் என்றுமவர் "சிரஞ்சீவி"
ஊரெல்லாம் அவர் சொந்தம் உலகெல்லாம் அவர் புகழ்
தன்னலத்தை விட்டெறிந்து வாங்கிக்கொண்ட சொத்தது

கர்ணன் கொடுத்தான் இருந்ததை மட்டுமே
கடன்பட்டுக் கொடுப்பார் காந்தி ஐயா மட்டுமே
அன்னார்க்கு விழாவெடுப்பின் விழாவிற்குப் பெருமையது
எந்நாளும் சுகத்தோடு நீண்டகாலம் வாழ்வாராக

சித்தர்களும் முனிவர்களும் தவமிருந்த திருமலையில்
பத்தர்களும் முத்தர்களும் பரவிநின்ற திருத்தலத்தில்
இணையில்லாத் தொண்டராக நலம்புரியும் கர்மஜோதி
காந்தி ஐயாவின் விழாக்கோலம் ஆனந்தம் ஆனந்தம்

சிரித்த முகமும் சீரிய கண்களும்
வெண்தாடி மீசையும் வெள்ளைக்கே தகும்
திறந்த நெஞ்சும் ஆனந்த வார்த்தையும்
நடைநடையாய்த் தொண்டும் என்றென்றும் வாழ்க.

சந்திரசேகரம்பிள்ளை பாலச்சந்திரன்,
கனடா.

## நன்றி

"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
இவ்வுலக மில்லாகி யாங்கு"

வைரவிழா மலரை மலரச் செய்ய பொருள் வழங்கிய நல்ல உள்ளங்கள்.

| | |
|---|---|
| திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை | 10000/- |
| திரு. கா. வினாயகசோதி | 5000/- |
| திரு. சு. நவரத்தினம் | 5000/- |
| திரு. S. P. இராமச்சந்திரன் குடும்பத்தினர் | 5000/- |
| பிரம்ஸ்ரீ. சோ. ரவிச்சந்திரக்குருக்கள் | 5000/- |
| M/S கணேச அச்சகம் | 5000/- |
| டாக்டர். ஹேமச்சந்திரா | 5000/- |
| டாக்டர். சி. சிவசேகரம் (லண்டன்) | 5000/- |
| ரா. ரவிச்சந்திரமோகன் (Pvt) Ltd. | 5000/- |
| திரு. த. சிவரெட்டினராசா | 5000/- |
| M/S டொலர் ஏஜன்சிஸ் | 5000/- |
| நியூ கோபால் கம்பனி | 5000/- |
| சுவாமி தந்திரதேவா | 5000/- |
| தங்கம்மா அப்பாக்குட்டி தெல்லிப்பழை | 5000/- |

நன்றி

# நன்றி

**இந்த மலர் தனிப்பட்ட ஒருவரது**
**எண்ணத்தாலோ, செயலாலோ ஆனதல்ல.**

கள்ளமில்லா உள்ளத்தின், பலன் கருதா சேவையால், தன் நலம் குன்றியும் - உளம் குன்றா உத்தமனின் நிலைகண்டு உளம் நொந்து மனம் நெகிழ்ந்து, விந்தை மனிதனை இந்த உலகிலேயே, அவர் கண்டு மனம் குளிர, நன்றிக் கடன் செய்ய எண்ணிய உள்ளங்களின் எண்ண அலைகள் அமைத்த களத்தில் ஏற்பட்ட விளைவே இந்த மலர்.

எனவே, இந்த மலரை மலரவைக்கக் களம் அமைத்த நல்ல எண்ணங்கொண்ட உள்ளங்களுக்கு முதற்கண் எம் நன்றி.

மற்றும் இம்மலரின் வித்தைநடப் பாதித்காலிய உத்தமர்களான திருவாளர்கள் கா. வினாயகசோதி, சு. நவரத்தினம் ஆகியோருக்கும்

இம்மலர் விரிவடைய கவிதை கட்டுரைகளான உங்களை மனமுவந்து அளித்த ஆன்றோர் சான்றோர் மற்றும் அன்பர்கட்கும்.

இம்மலர் அழகுற புகைப்படங்களை நல்கிய திரு. நா. கணவதிப்பிள்ளை - தமிழ்மணி தொல்புரக்கிழார் சிவபாதசுந்தரனார் ஆகியோருக்கும்,

புகைப்படங்களோடு காந்தி மாஸ்டரின் நல்ல பழைய கட்டுரைகளையும் நகல் எடுத்து அனுப்பியதோடு, எங்கிருந்த போதும், அவ்வப்போது, கடிதமூலம் பல அறிவுரைகளையும் நல்கி வழிநடத்திய பண்ணாகம் பண்டிதர் ஆறுமுகம் ஐயா அவர்களுக்கும்,

குறுகிய காலத்தில் அத்தனை புகைப்படங்களையும் புளக் (BLOCK) ஆக்கி உரிய நேரத்தில் இங்கு கிடைக்கும்படி செய்த நண்பன் கந்தசாமிக்கும், சகோதரன் ஹரிகரன் (ராஜன்) அவர்களுக்கும்,

இம்மலரைச் சிறப்புற அச்சேற்றிய கணேசா அச்சகத்திற்கும் குறிப்பாக அச்சக ஊழியர்கட்கும்.

என்னை நெறிப்படுத்திய உதவி அரசாங்க அதிபர் நா. புவனேந்திரன் அவர்கட்கும்.

இவற்றிற்கு மேலாக மலரை மலரவைக்க பொருள் உதவி நல்கிய பண்பான உள்ளங்களுக்கும்,

மற்றும் பல் வழியில் பங்கு கொண்டு உதவிய நல்லோர்கள் அனைவருக்கும்.

எமது நன்றி